# எல்லாம் இன்பமயம்

பி. வி. ஆர்.

கங்கை புத்தகநிலையம்

13, தீனதயாளு தெரு, தி. நகர், சென்னை-600 017

முதற் பதிப்பு : பிப்ரவரி 1994

விலை : ரூ. 26-00

18601

3514168

நேரு அச்சகம், 43, அம்மையப்பன் தெரு, சென்னை—600 014.

# பதிப்புரை

தினமலர் நாளேட்டின் வாரமலரில் இருபத்திரண்டு வாரம் தொடராக வெளிவந்த நாவல் திரு. பி. வி. ஆரின் 'எல்லாம் இன்பமயம்'.

ஒரே குடும்பத்தைச் சேர்ந்த உடன்பிறந்த சகோதரிகள் நான்குபேர், தங்கள் சொந்தக் காலில் நின்று, சிலவகை உணவுப்பொருள்களை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் வியாபாரம் தொடங்கி, வெற்றிகரமாக முன்னேறி, தங்கள் கணவர்களைத் தாங்களே தேர்ந்தெடுத்து, ஒரே நாளில் ஒரே மேடையில் திருமணம் செய்து கொண்டு இன்பமயமாக இல்லற வாழ்க்கையைத் துவக்கும் கதை 'எல்லாம் இன்ப மயம்.'

நான்கு பெண்களும் தங்கள் கணவர்களைத் தாங்களே தேர்ந்தெடுக்கக் கையாளும் வழிமுறைகள் தான் நாவலின் சுவாரஸ்யம்.

பெண்களுக்கு தன்னம்பிக்கையையும், தைரியத்தையும் ஊட்டும் வகையில் இந்நாவலைப் படைத்துள்ளார் ஆசிரியர் பி.வி.ஆர்.

**கங்கை புத்தக நிலையத்தார்**

18601
3514168

# எல்லாம் இன்பமயம்!

## 1

நவநீத பாகவதருக்கு இந்த மார்ச் மாதம் ஐம்பத்திரண்டு வயது ஆரம்பமாகப் போகிறது. மற்ற எல்லாருடைய பிறந்த நாட்களையும் வடை, பாயசத்துடன் விமரிசையாகக் கொண்டாடும் அவர் தம் பிறந்த நாளை அதி விமரிசையாகக் கொண்டாடுவார். காலையில் கற்கண்டு சாதம், நெய் பளபளக்கும் வெண் பொங்கல், பன்னிரண்டு மணிக்கு தயிர் பச்சடியில் ஆரம்பித்து, இரண்டு கரி, ஒரு கூட்டுடன் தொடர்ந்து ஊறுகாயுடன் முடியும் விசயங்கள், நீண்ட பரந்த நுனி இலையின் மேல் பக்கத்தை ஆக்கிரமித்துக் கொள்ளும். இடதுபுற ஓரத்தில் வீட்டிலேயே தயார் பண்ணிய (இது பற்றிய அறிக்கை பின்னால் வரும்) அப்பளங்கள் பூரண சந்திரனைப் போல பொலிவுடன் அலங்கரிக்கும்.

சனோலா, சபோலா என்ற பாட்டில் எண்ணைகளெல்லாம் வாசற்படி மிதிக்கக்கூடாது. அயனான தேங்காய் எண்ணை மட்டுமே கொடிகட்டிப் பறக்க வேண்டும். அதில் பொரித்த அப்பளங்களுக்குத்தான் பாகவதர் இடம் கொடுப்பார். பருப்பு, சாதம் இவைபற்றி கூறவே வேண்டாம். இரண்டாந்தரத்தை அவர் கண்டதே இல்லை.

கத்தரிக்காய் ரசவாங்கி, வெள்ளரிப்பழ மோர்க் குழம்பு. அப்புறம் எலுமிச்சம்பழ ரசம். ரசமா அது? பன்னீர் தக்காளி சிறுசிறு துண்டுகளாகக் கூட்டம் போட வேண்டும். பச்சை கொத்தமல்லியின் மணம் மூக்கை ஒரு அங்குலம் தூக்கி நிறுத்தும். இளம பச்சை மிளகாய்களை நீட்ட வாக்கில் முக்கால்வாசி நீளத்துக்குக் கத்தியால் கிழித்துப் போடவில்லை என்றால் பாகவதர் கோபத்தில் மிளகாயைத் தாமே கடித்துவிடுவார்.

இந்தக் காலை உணவுக்கும் மதியஉணவுக்கும் இடையிலுள்ள நேரத்தை பாகவதர் சாய்வு நாற்காலியில் சாய்ந்து உட்கார்ந்து, கண்களை லேசாக மூடி பகல்கனவுகள் காண்பார். விழிப்பு வந்தால், மேலும் தொடர்ந்து இன்பமாகத் துயில, அரையே அரை தம்ளர் டிகிரி காபி குடித்துவிட்டு அதன் காரணமாக கைச் சீவலையும் கும்பகோணம் வெற்றிலையையும் எடுப்பார். பன்னீர் புகையிலை பின் தொடர்ந்து வரும்.

இத்தகைய கஷ்ட ஜீவனம் கடந்த முப்பது ஆண்டுகளாகத் தவறாமல் நடந்து வருகிறது. நவநீத பாகவதருடைய தந்தை நீலகண்ட பாகவதரும் அவருடைய தகப்பனார் பரசுராம பாகவதரும் இப்படிப்பட்ட கஷ்ட ஜீவனங்களைத்தான், தங்களுடைய காலங்களில் நடத்தினார்கள். (மன்னிக்கவும், தந்தை நீலகண்ட பாகவதர் கும்பகோணத்தில் இன்னமும் நடத்திக் கொண்டிருக்கிறார்.)

பரம்பரை ராஜ பரம்பரை. முன்னூறு வேலி நிலத்தோடு இருந்த சொத்து. நீலகண்ட பாகவதர் நிலத்தை ஆளவந்தபோது எஞ்சியிருந்தது நூறு வேலி. இந்த பாகவதருக்கு நிலத்தை உழுகிறவனுக்குத்தான் நிலம் என்ற தத்துவம் ரொம்பவும் பிடித்துப் போயிற்று. வீட்டைத் துடைப்பதால் பெருக்குகிறவருக்கு வீடு, பாத்திரம் தேய்ப்



பவருக்கு பாத்திரம், துணியை வெளுக்கிறவனுக்கு துணி, தலைமுடியை வெட்டுகிறவனுக்குத் தலை என்ற தத்துவங்கள் நல்லவேளையாக வராததால் அவர் ஆனந்தப்பட்டு, எல்லா உழவர்களிடமிருந்தும் குத்தகையை வாபஸ் வாங்கி, சொந்தத்தில் பண்ணையாக மாற்றினார். புதிதாக வந்த சர்க்கரை மில்லில் நிறைய முதலீடு செய்து, டைரக்டராகி, மில்லுக்கு இன்றியமையாத கரும்பை விவசாயம் செய்தார். இப்போது கிட்டத்தட்ட அறுபது வேலி நிலம் எஞ்சியிருக்கிறது. (இரண்டு பிள்ளைகள் பாகப்பிரிவினை செய்துகொண்டு போய்விட்ட காரணத்தால்) பாகப்பிரிவினை செய்துகொள்ளாத நவநீத பாகவதர் சென்னைக்குப் பெயரவே நீலகண்ட பாகவதர் தம் ஏஜன்டின் உதவியுடன் கும்பகோணத்தில் வருடத்துக்கு ஒரு புது கார் என்று மாற்றிக்கொண்டு கஷ்டப்படுகிறார்.

நவநீத பாகவதர்!

பாகவதர் பட்டம் சங்கீதத்தின் காரணமாக ஏதோ ஒரு தலைமுறையில் உண்டானது. அது இப்போதும் தொடர்கிறது. நவநீதம் அந்தக் காலத்து பி. ஏ. (ஹானர்ஸ்) திருச்சியில் இருபதாவது வயதில் பட்டத்தை தாங்கி, அந்த சூட்டிலேயே குஞ்சராம்பாள் என்கிற குஞ்சரத்தின் கழுத்தில் தாலியைக் கட்டி, முதலிரவிலிருந்து குஞ்சு என்று செல்லமாக அழைத்தார்.

தம்முடைய வாழ்க்கை முறைக்கு ஏற்ற இடம் சென்னை நகரம்தான் என்று நவநீதத்துக்குத் தோன்றவே, அப்பாவை அழைத்துக்கொண்டு வீடு வாங்க வந்தார். இது 1961ஆம் ஆண்டு முதல் பிரசவத்துக்காகக் குஞ்சரம் பிறந்த வீடு இருக்கும் மன்னார்குடிக்குப் போயிருந்த வருடம்.

சென்னையில் ராஜா சர் அண்ணாமலைச் செட்டியார் பெயரில் விளங்கிய பெரியதோர் இடத்தில் ஒரு பங்களா

விலைக்கு வந்தது. அதுவும் மலிவாக. லட்சத்து முப்பதாயிரத்தைத் தூக்கி எறிந்து நீலகண்ட பாகவதர் வீட்டை தம் பிள்ளையின் பெயரில் கிரயம் செய்துவிட்டு ஊர் திரும்பினார்.

அந்த தினத்திலிருந்து இந்த நாள் வரை நவநீத பாகவதர் ஹாலில் அமர்க்களமாய் தொங்கிய ஊஞ்சலிலிருந்து இறங்கவில்லை. சென்னை, பம்பாய் ஷேர் மார்க்கெட்டுகளை ஆராயத் தவறியதில்லை. அவரிடம் இல்லாத கம்பெனி ஷேர்கள் இல்லை. தினசரி இருபது பேர்களாவது ஸ்டாக் மார்க்கெட் பற்றி அறிந்துகொள்ள வருவார்கள். எந்த ஷேர்களை எப்போது வாங்கலாம் எப்போது விற்கலாம் என்பதை ஒரு பிரத்யேக ஞான திருஷ்டியுடன் தீர்மானம் செய்யும் வல்லமை படைத்த நவநீத பாகவதர் இன்னும் கோடீஸ்வரன் ஆகவில்லை. ஏழெட்டு லட்சம் பாக்கியிருக்கிறது.

இந்த ராஜ பரம்பரை அவருடன் முடிந்துபோய் விடுவதற்கான லட்சணங்கள் தோன்றிவிட்டன.

முதலாவது பெண்—அபயாம்பாள் என்கிற அபயம்.

இரண்டாவது பெண்—ஆனந்தலட்சுமி என்கிற ஆனந்தி.

மூன்றாவது பெண்—ஈசுவர மகேஸ்வரி என்கிற ஈஸ்வரி.

நான்காவது பெண்—உத்திராம்பாள் என்கிற உத்யா.

பிள்ளை பிறக்கவில்லையே, பரம்பரை அவருடன் அற்றுப் போகப்போகிறதே என்று பாகவதர் மனம் கலங்கவில்லை. நான்கு பெண்களுமே ஆண்களின் வீர சாகசத்தோடு விளங்கும்போது, ஏன் ஒரு ஆண் மகனுக்காக அவர் கவலைப்பட வேண்டும்?



குடும்பம் அமோகமாக எவ்வித குறைவுமில்லாமல் வளமையுடன் ஓடியது.

ஒரே ஒரு துரதிர்ஷ்டம். எந்தப் பெண்ணுக்கும் கல்யாணம் ஆகவில்லை. மூலம் மற்றும் பூராட நட்சத்திரங்களில் முதல் இரண்டு பெண்கள் ஜனித்ததுதான் காரணம் என்று குஞ்சரம் நொந்துகொண்டாள். இரண்டு அக்காக்களுக்கே திருமணம் ஆகாதபோது எப்படி இரண்டு தங்கைகளை மனையில் உட்கார்த்துவது?

ஒருநாள்—

நவநீத பாகவதர் குளியலறையிலிருந்து வெளி வந்தார். வாட்டசாட்டமான உடல்வாகு. ஆறு அடி உயரத்துக்கு மிஞ்சி மிஞ்சிப்போனால் அரைக்கால் அங்குலம் குறைவாக இருக்கலாம். நல்ல சிகப்பு நிறம். உருண்டையான தலை. பூங்காவின் புல்தரைபோல மண்டையோடு மண்டையாக வெட்டிவிட்டிருந்தார். அடர்த்தியான புருவங்கள். வெற்றிலைச் சிகப்பு உதடுகளில் பளிச்சிட்டது.

நவநீதம் பூஜை அறைக்குச் சென்றார். மூன்றே மூன்று நிமிடங்கள். பத்து பதினைந்து தடவை காயத்ரி. இரண்டு மூன்று விநாயகர். ஓரிரண்டு கபாலீசுவரர் மற்றும் குருவாயூரப்பன். பூஜை இவ்வளவுதான். பிறகு இரண்டாவது டோஸ் காபி. அதன் ருசி நாவில் தவழ்ந்துகொண்டிருக்க அவர் ஊஞ்சலுக்கு வந்தார், உட்கார்ந்தார். சீவலை வாயில் போட்டுக்கொள்ள செல்லப் பெட்டியை எடுத்தார். அந்த சமயம் பார்த்து அவருடைய மனைவி குஞ்சரம் என்கிற குஞ்சு எதிரே வந்து நின்றாள்.

"என்ன குஞ்சு?" என்று நவநீதம் கேட்டார், செல்லப் பெட்டியை திறந்து சீவலை எடுத்துக்கொண்டே.

"சீவலை முதல்ல அங்கேயே வையுங்கோ."

"சரி வைக்கிறேன், சொல்லு."

"நேத்து ருக்குவைப் பார்த்தேன்."

"எந்த ருக்கு? ஜோசியர் பெண்டாட்டியா?"

"அவளே தான்"

"முப்பத்துநாலு வயசான ஒரு எம் எஸ்.சி. அம்மா இல்லை, அப்பா இல்லை."

"அப்ப எப்படிப் பிறந்தானாம்?"

"விளையாடாதீங்க..."

"எட்டு வயசுல அம்மா... பதினஞ்சு வயசுல அப்பா..."

"இந்த சின்ன வயசுல எப்படி முப்பத்துநாலு வயசுப் பிள்ளையைப் பெத்தா?"

"உங்க கேலியை அப்புறமா வெச்சுக்குங்க... அவனோட இந்த வயசுகள்ளே ரெண்டுபேரும் போய்ச் சேர்ந்தா..."

"ஹங்... இப்பப் புரியுது."

"சொந்தமா பிசினஸ் நடத்தறான்."

"எம் எஸ்.சி. படிச்சுட்டு பிசினசா?"

"ஆமாம். ஊறுகாய், பிசினஸ்... பருப்புப்பொடியும் உண்டு. எல்லாம் வெளிநாட்டுக்குப் போறது."

"அப்ப இவனால் நம்ப நாட்டுக்குக் கொஞ்சம் டாலரும், ஸ்டர்லிங்கும் கிடைக்கிறதுன்னு சொல்லு."

"ஜோசியர்ட்டதான் நம்ப அபயத்தோட ஜாதகம் இருக்கே? அவரே பொருத்தம் பார்த்துட்டார்."

"பொருந்தியிருக்கு!"

"எப்படித் தெரியும்?"

"இல்லாமப்போனா இவ்வளவு விஸ்தாரமா என்கிட்ட சொல்ல வந்திருப்பியா?"



"நீங்க என்ன சொல்றீங்க?"

"நான் என்ன சொல்றது? அபயம் என்ன சொல்றா?"

"இன்னும் அவகிட்டே பேசலே."

"மொதல்ல பேசு."

"அப்புறம்..."

"அப்புறம்?"

"வயசு முப்பத்திரண்டு பீ.காம்., வீட்டுக்கு ஒரே பிள்ளை. அப்பா துணிக்கடை முதலாளி."

"இது ஆனந்திக்கா?"

"ரெண்டுபேர் கல்யாணத்தையும் ஒரே நாள்ளே ஒரே மேடையில நடத்தணும்னு ஆசைப்படறேன்."

"ரெண்டு பெண்கள்ட்டேயும் பேசிப்பாரு குஞ்சு."

"அவங்க சரின்னா?"

"நான் குறுக்கே நிக்கமாட்டேன். ஆனா, அவங்க சரின்னு சொல்லமாட்டான்னு நினைக்கிறேன்."

"பார்க்கிறேன்..."

"ஈசுவரிக்கும் கிடைக்கலியே... கிடைச்சுட்டா அவளும் சம்மதிச்சாள்னா, ஒரே நாள்ளே ஒரே மேடையில மூணு பேருக்கும் கல்யாணமாயிடும்."

"ஏன் உத்யா என்ன பாவம் பண்ணினா?"

"அவளைப்பத்தி நான் கவலைப்படவே இல்லை. அவளுக்கு லவ் மேரேஜ்லதான் நம்பிக்கை. இதுவரை ரெண்டுபேரை லவ் பண்றமாதிரி பண்ணித் துரத்தி அடிச்சுட்டாளே!" என்றார் நலநீதம்.

"இனிமே நீங்க உங்க வெத்தலை சீவல் புகையிலையை குதப்ப ஆரம்பிக்கலாம்," என்று சொல்லிவிட்டு குஞ்சரம் நகர்ந்தாள்.

''ரொம்ப தாங்க்ஸ்,'' என்றார் பாகவதர்.

குஞ்சரம் உள்ளே சென்றபிறகு நவநீதம் யோசனையில் சிறிதுநேரம் வீணாக்கலாம் என்ற முடிவுக்கு வந்தார்.

கும்பகோணத்திலிருக்கும் அம்மாவும் அப்பாவும் வாரத்துக்கு ஒரு தடவையாவது தொலைபேசியில் அவரை ஒரு பொறுப்பில்லாத மனிதன் என்று நிந்திக்கிறார்கள். நான்கு பெண்கள் கல்யாணம் ஆகாமல் நிற்கும்போது எப்படித் தூக்கம் வருகிறது என்று குத்திக் கேட்கிறார்கள். நவநீதம் என்ன பதிலைத்தான் சொல்லட்டுமே, அம்மாவும் சரி அப்பாவும் சரி காதில் போட்டுக்கொள்ளுவதில்லை.

நேற்று முன்தினம் இரவு டெலிபோன் வந்தது. அப்பா பேசினார்.

''என்னடா வேளா வேளைக்கு வயிறு முட்ட தின்னுட்டு வாய் நிறைய வெத்தலையை அடைச்சுட்டிருக்கியா?'

''இல்லேப்பா இப்பத்தான் வாயைக் கொப்புளிச்சேன்.''

''மடையா! குதிரை குதிரையா நாலு பொண்ணு நிக்கறதே... கொஞ்சமாவது கவலை இருக்காடா?'

''கவலைப்பட்டா தாலி ஏறும்னு கியாரண்டி கொடுங்கோ அப்பா... இப்பவே கவலைப்பட ஆரம்பிக்கிறேன்...''

''டேய் நான் உன் அப்பன் பேசறேன். எங்கிட்டயாடா எகத்தாளமா பேசறே?''

''ஒருத்திக்கு மூலம். இன்னொருத்திக்கு பூராடம். ஜாதகத்தைக் கொடுக்கப்போனாலே கதவைச் சாத்தறா.''

''முட்டாள். ஒரு வழி இருக்கு!''

''என்ன அது எனக்குத் தெரியாத வழி, அப்பா?''



''ஜாதகங்களை மாத்துடா. பணத்தைத் தூக்கி எறிஞ்சா மூலம், உத்திராடமா மாறும். பூராடம் திருவோணமா மாறும்டா.''

''அது தப்பில்லையா அப்பா?''

''உன் பெண்டாட்டி குஞ்சரத்போட நட்சத்திரம் என்ன தெரியுமா உனக்கு?''

''மகம்.''

''அப்படீன்னுதான் எல்லாரும் நினைச்சுட்டிருக்கா. அவ நட்சத்திரம் மூலம்டா.''

''அப்பா!''

''கத்தாதடா.''

''இது பொய்.''

''நானும் அவளோட அப்பா ராஜாமணி அய்யருமாகத்தான்டா லால்குடி சிவராம ஜோசியர்ட்ட போனோம்.''

''அவ அப்பன்—என் மாமனார்...!''

''என்னடா பண்ணுவே இப்ப...! அவன் உன் அத்தை புள்ளை. குஞ்சு பொறந்த பத்தாம் நாளே ஜாதகம் கணிச்சு, மூலத்தை மகமா மாத்தியாச்சு. இப்ப என்னடா குறை? மூலத்து மாமியார் மூக்கிலேயே இருக்கா... இப்ப அவ மாமியார்—உன் அம்மா 'டிவி' பார்த்துட்டிருக்கா.''

''அப்ப ஏன் அபயம் பொறந்த உடனே அவ ஜாதகத்தையும் மாத்திக்கக் கணிக்காம விட்டீங்க?''

''அது என் தப்புதான்டா... டேய், எல்லாரும் இருபத்தேழு நட்சத்திரங்கள்ளே எதானும் ஒரு நட்சத்திரத்தில பொறந்துதான்டா ஆகணும்... சீக்கிரம் அபயத்தோட கல்யாணத்துக்கு ஏற்பாடு பண்ணு. இன்னும் ரெண்டு மாசத்திலே அவ கழுத்தில தாலி ஏறியாகணும்.'' சொல்லிவிட்டு அவர் டெலிபோனை வைத்தார்.

இப்போது நவநீதம் மூச்சு விட்டார். ஊறுகாயும், பருப்புப்பொடியும் ஏற்றுமதி செய்கிற, அம்மா அப்பா இல்லாத ஒரு எம்.எஸ்.சி. மாப்பிள்ளையாக வர ஒரு வாய்ப்பு இருக்கிறது.

ஆனால், அபயம் என்ன சொல்லப் போகிறாள்? யாரால் அவளுடன் பேசி ஜெயிக்க முடியும்?

நிச்சயமாக அவர் அபயத்தின் ஜாதகத்தை மாற்றி அமைக்கப்போவதில்லை.

அவளுக்கு வருகிற ஆனியில் இருபத்தொன்பது முடிந்து முப்பது புறப்பட்டு விடும். ருக்கு சிபாரிசு செய்கிற பிள்ளைக்கு வயது முப்பத்து நாலு. எம்.எஸ் சி. ஊறுகாய் ஏற்றுமதி செய்வதில் தப்பு இல்லை. அபயம் ஏற்றுமதி தொழிலில்தான் இருக்கிறாள். நல்லபொருத்தம். ஆனால் அபயம் சம்மதிக்கணுமே. அப்பா அம்மா இல்லாத பிள்ளை என்றால் இன்னொரு சவுகரியமும் இருக்கிறது. தாலி கட்டிய கையோடு அவர் வீட்டிலேயே குடியேற்றிவிடலாம். அபயம் புகுந்த வீடு என்று சிரமப்பட வேண்டாம். பிள்ளைதான் பிறந்த வீட்டுக்கு வந்து ஊறுகாய் போல ஊற வேண்டும்.

அபயம் மட்டும் சரியென்று சொல்லிவிட்டால் அதுவே ஆனந்தியை சம்மதிக்க வைக்க எளிதாகிவிடும். ஆனால், அவருடைய எல்லாப் பெண்களுமே தத்தம் சொந்த கால்களில் நிற்கிறவர்கள். அவர் என்னதான் கோடீஸ்வரன் பதவியை நெருங்கிக்கொண்டிருந்தாலும், ஒருத்திகூட இதுவரை பண உதவி கேட்டு வந்ததில்லை. இதனாலேயே அவருடைய அதிகாரம் அவர்களிடம் பலிக்காமல் போகும்.

என்ன செய்ய?

குஞ்சரத்திடம் கலந்து பேசுவதில் ஒரு புண்ணியமும் இல்லை. அவளால் குறைகளைத்தான் வெளியிட முடியும். ஆக்கப்பூர்வமாக எதையும் அவள் செய்து அவர் பார்த்ததில்லை.



அபயத்திடம் அந்தரங்கமாகப் பேசுவதைத் தவிர வேறு வழி தோன்றவில்லை.

அதற்காக நவநீத பாகவதர் காத்துக்கொண்டிருந்தார்.

## 2

ஆறு கிரவுண்ட் நிலப்பரப்பில் பாகவதருடைய பங்களா நட்ட நடுவே இருந்தது. 1916ஆம் ஆண்டு வாங்கும்போது ஒரு மாடிதான் இருந்தது. இப்போது இரண்டாவது மாடியும் இருக்கிறது. இது தவிர, பின்புறத்தில் கார்ஷெட்டுக்கு மேல் இரண்டு மாடிகள். ஒரு மினி தியேட்டர் போல மாடிகளில் ஹால்கள் மட்டுமே இருக்கின்றன.

பங்களாவுக்குச் செல்ல இரண்டு பெரிய கேட்டுகள். ஒரு கேட் அருகே இருபத்து நாலுமணி நேரமும் காவலாளி உண்டு. அவனைத் தாண்டித்தான் பணிபுரியும் ஆண்-பெண்களும், வயதான ஸ்திரிகளும் செல்ல வேண்டும். காலை ஆறு மணிக்கு ஒரு கூட்டம் வந்து இரண்டு மணிக்கு வெளியேறும். இன்னொரு கூட்டம் இரண்டு மணிக்கு வரும். மாலை நான்கு மணிக்கு சிற்றுண்டி மற்றும் காபி. ஏழே முக்கால் மணிக்கு பிசைந்த சாம்பார் சாதம் மற்றும் மோர் சாதம், பத்து மணிக்கு ஒரு வேன் தயாராக நிற்கும். வேலைக்கு வந்தவர்களை விட்டு வாசலிலேயே விட்டுவிட வேண்டும். இது அபயம்—ஆனந்தியின் ஏற்பாடு.

அபயம் ஹோம் சயன்சில் பட்டம் வாங்கியவள். படிப்புக்கு ஏற்ற வேலை கிடைக்குமா என்ன? அதுவுமில்லாமல் பரம்பரையில் மருந்துக்குகூட ஒருவர்

இன்னொருவரிடம் கைகட்டி வேலை செய்து பிழைத்த தில்லை. அதற்கு அவசியமில்லாதபடி மகாலட்சுமி தாண்டவமாடினாள்.

அபயம் என்ன செய்வாள்?

அப்பாவிடம் எது கேட்டாலும் கிடைக்கும். 'லட்சம் ரூபாயா? இந்தா பிடி!' என்று கூறுகிற தகப்பனார்.

ஆனால் அபயத்துக்கு அப்பாவிடம் கேட்பது மனதுக்கு கஷ்டமாக இருந்தது.

நேராக 'உங்களது' வங்கியான இந்தியன் பாங்குக்குச் சென்றாள். ஒரு உதவி ஜெனரல் மானேஜரை அணுகினாள். அவர் அவளுடைய கோத்திரத்தைக் கேட்கவில்லை என்றாலும், அப்பாவைப் பற்றி விசாரித்தார். பாகவதருடைய பெயரைக் கேட்டதுமே உதவி ஜெனரல் ஒரு தடவை இருக்கையிலிருந்து எழுந்து உட்கார்ந்தார்.

'பரசுராம பாகவதருடைய குடும்பமா? நீலகண்ட பாகவதருடைய பேத்தியா? நவநீத பாகவதருடைய பெண்ணா...என்னம்மா, நீ போய் கேவலம் ஒரு வங்கியில் கடன் உதவி கேட்டுட்டு வர்றே? உன்னைப் போல வசதி படைத்தவங்களுககு கடன் கொடுக்கவா வங்கிகள் இருக்கு?'

'உங்க வங்கிகள் எதுக்கு இருக்குன்னு ஆராய நான் வரலே சார்! சுயவேலை வாய்ப்பு திட்டத்தில் வங்கிகள் கடன் கொடுக்கிறதுன்னு இந்திரா காந்தி காலத்திலிருந்தே ஒரு வழக்கம் இருக்கு.'

'சுயமா நீ என்னம்மா வேலை எடுத்துக்கப்போறே...'

'இதோ புராஜக்ட் ரிப்போர்ட் எல்லாம் விபரமா இருக்கு...'

''ஏம்மா எக்ஸ்போர்ட்டா...?'



'அப்படித்தான் அதில இருக்கு. தயவு செஞ்சு கடிகாரத்தைப் பாராம என் ரிப்போர்ட்டை படிச்சுப் பாருங்க... உங்களால முடியாதுன்னா சொல்லுங்க, சேர்மனைப் பார்த்துக்கறேன். எப்படியும் அவரோட எனக்கு ஒரு அப்பாயின்மென்ட் இருக்கு.'

'கொஞ்சம் இரும்மா! பயமுறுத்தாதே...' சொல்லி விட்டு உதவி ஜெனரல் மானேஜர் ரிப்போர்டை படிக்க ஆரம்பித்தார்.

'இதுக்கு லட்சம் ரூபாய் போதுமா, மிஸ் அபயம்?'

'போதும்.'

'எப்படிச் சொல்றே...!'

'ஏற்கனவே டிரயல் பார்த்து தயார் பண்ணிய சரக்கோட சாம்பிள்களைக் குறிப்பிட்ட சில அயல்நாட்டு ஊர்களுக்கு அனுப்பி 'ஓகே' வாங்கியாச்சு... சில இடங்களிலிருந்து ஆர்டர்களும் வந்திருக்கு...'

'அப்படியா?'

'இந்தப் பணம் மூலப் பொருள்கள் வாங்கறதுக்கும் முதல் நாலஞ்சு மாசச் சம்பளப் பட்டுவாடாவுக்கும்தான். இவை தவிர பேக்கிங் லேபலிங் எல்லாம் வேற இருக்கு.'

'நான் ஒண்ணு சொன்னா கோபப்படமாட்டீங்களே?'

'மொதல்ல சொல்லுங்க.'

'புராஜக்ட் ரிப்போர்ட் ரொம்ப தெளிவா இருக்கு. ஆனா, பினான்சியல் சைட்தான் சரியில்லே. நாம எந்த தொழிலுக்கான புராஜக்ட் ரிப்போர்ட் தயார் செய்தாலும், 'எதிர்பாராத செலவுகள்' செய்தாலும், 'எதிர்பாராத செலவுகள்'னு ஒரு அயிட்டத்தை சேர்த்துக்கணும்.

'அது என் விசயத்திலே தேவையில்லை சார்.'

'கடனை ஒரு லட்சத்தோடு நிறுத்தாதீங்க மிஸ். அபயம். ரெண்டு லட்சமா உசத்துங்க...'

'இப்ப அவசியமில்லை சார். அப்படி ஒரு அவசியம் ஏற்பட்டா மறுபடியும் உங்ககிட்ட தானே வருவேன்.'

'உங்க வீட்டுக்குப் பக்கத்திலேயே ஒரு கிளை இருக்கு. அதன் மானேஜர்ட்ட உங்க அப்ளிகேசனை கொடுங்க... அவர் தம்மோட சிபாரிசுகளை அனுப்புவார்.'

'அதாவது ரெட் டேப் இல்லாம முடியாதுங்கறீங்க...'

'என்ன மிஸ் அபயம் சொல்றீங்க?'

'நீங்க சொல்ற பிராஞ்ச்லே கொடுத்தா மானேஜர் அதை அக்கவுண்டன்கிட்ட அனுப்புவார். அக்கவுண்டன்ட் கிளார்க் வசம் ஒப்படைப்பார். படி இறங்கிட்டு வந்த இது மறுபடியும் படி ஏறும். மானேஜர், ரீஜனல் மானேஜருக்கு அனுப்புவார். ரீஜனல் மானேஜர் ஆபிசில் ஒரு மாசம் தூங்கிட்டு ஒரு நாள் இங்கே வரும். உங்க கீழே வேலை செய்யற குமாஸ்தாக்களும், ஆபிசர்களும் பார்த்துட்டு, அவங்க போக்குல குறிப்புகள் எழுதுவாங்க. இன்னும் ஒரு மாசம், அப்புறம் உங்க மேஜை. அது மேலே எத்தனை நாள் இருக்குமோ, யார் கண்டாங்க? அப்புறம் நீங்க டெபுடி மானேஜருக்கு அனுப்புவீங்க... அவர் ஜி.எம்.க்கு அனுப்புவார். அவருக்கு சாங்ஷன் அதிகாரம் இருந்தா யோசிப்பார்... அவசியமில்லாத கேள்விகளெல்லாம் கேட்பார். மறுபடியும் பைல் இறங்கி வரும்...சார், என் அப்ளிகேசனோட கதை முடியறதுக்குள்ளே எனக்கு வயசாகிடும்.'

'இப்ப என்ன வயசு?'

'அவசியம் தெரிஞ்சுக்கணுமா?'

'ஆட்சேபணை இல்லேன்னா சொல்லலாமே?'

'இருபத்து அஞ்சு முடிஞ்சாச்சு.'

'இந்த வயசில ஒரு பாங்க்ல எது எது எப்படி எப்படி நடக்கறதுன்னு இவ்வளவு கரெக்டா சொல்றியே, ரொம்ப ஆச்சரியமா இருக்கு.'



'அதிருக்கட்டும் சார். 'உங்க பாங்க் எங்களது பாங்க்'னு விளம்பரம் செய்யறீங்க... உங்க பாங்க்மேல எனக்கு ரொம்ப மதிப்பு இருக்கற காரணத்தால நான் வந்தேன். இதை இங்கேயே பரிசீலனை செய்து சாங்க்ஷன் வாங்கித்தர உங்களாலே முடியுமா? முடியலேன்னா சொல்லிடுங்க, நான் சேர்மனை இன்னும் பதினைஞ்சு நிமிசத்திலே மீட் பண்ணியாகணும்.'

'சேர்மனை உனக்கு ஏற்கனவே தெரியுமா அபயம்?'

'அவசியம் தெரிஞ்சுக்கணுமா?'

'சொல்லப்படாதா?'

'தெரியும்.'

'எப்படின்னு நான் கேட்கப்படாது. அது அநாகரிகம்.'

'கேளுங்களேன்... அவரோட பெண்ணும் நானும் அஞ்சு வருசம் ஒண்ணாப் படிச்சவங்க.'

'நீ இதுபத்தி சேர்மன்ட்ட பேச வேண்டாம்.'

'அவசியமில்லேன்னா பேசமாட்டேன்.'

'அவசியமில்லை' என்ற உதவி ஜெனரல் மானேஜர். 'உனக்கு நிச்சயமா பாங்க்ல கணக்கு இருக்கணுமே?' என்றார்.

'புராஜக்ட் ரிப்போர்ட் ஆரம்பத்திலேயே எழுதியிருக்கேன்.

'இன்னும் ஒரு வாரத்தில முதல் தவணையா இருபத்தஞ்சாயிரம் உன் கணக்குல க்ரெடிட்டாகும்.'

'தாங்க் யூ...'

'அடுத்த இன்ஸ்டால்மென்ட் எப்ப வேணும்?'

'அடுத்த மாசம்.'

'நோ ப்ராப்ளம்.'

'எகெய்ன் தாங்க்ஸ்.' அபயம் எழுந்தாள்.

மூன்று மாதங்களுக்கு முன் ஒரு ஐம்பது வயது மதிக்கத் தகுந்த ஒரு சுமங்கலி குஞ்சரத்தைப் பார்க்க வந்திருந்தாள்.

'என்ன கோமதி மாமி, சவுக்கியமா?'

'ஏதோ இருக்கேன் குஞ்சரம்.'

'ஏன் அலுத்துக்கறீங்க.'

'என் புருசன் இன்கம்டாக்ஸ் கமிஷனர் வீட்ல கார் டிரைவராகவும் சமையற்காரராகவும் வேலை செய்து வந்தார் இல்லியா?'

'ஆமாம், தெரியும். இப்ப வேலை இல்லியா?'

'கமிஷனருக்கு மாத்தலாச்சு.'

'அடப்பாவமே!'

'அவர் வாலைப் பிடிச்சுட்டு இவரும் கல்கத்தாவுக்குப் போயிட்டார்.'

'இது என்ன கூத்து கோமதி?'

'என்னையும் கூட வான்னார். சரின்னு போனேன். அலிப்பூர்னு ஒரு இடம். அங்கே பெரிய பங்களா. நான் தன்னந்தனியா அவுட் ஹவுஸ்ல இருந்தேன். நம்ப மனுஷா எல்லாம் தொலை தூரத்துல ராஷ்பிகாரி அவென்யூல இருக்கா... பிடிக்கலே... திரும்பிட்டேன்...'

'அதான் ரெண்டு மூணு மாசமா அப்பளம், வடாம், அரிசி அப்பளம் இதெல்லாம் கொண்டு வரலியா...?'

'ஆமாம்.'

'சரி, இனிமே கொண்டு வருவீங்க இல்லியா?'

'சாத்தியம்னு தோணலே.'

'ஏன்?'



'முன்னே கமிஷனர் வீடு இருந்தது. பெரிசா மொட்டை மாடி இருந்தது. நான் என் பாட்டுக்கு ரெண்டு மாமிகளை ஒத்தாசைக்கு வைச்சுட்டு தினசரி இருநூறு முன்னூறுன்னு அப்பளம் இட்டுக் காயப் போட்டுட்டிருந் தேன். இப்ப இருக்க இடம்கூட இல்லே... பக்கிங்ஹாம் காவாய் நாத்தத்தைச் சகிச்சுகிட்டு மயிலாப்பூர்ல பல்லக்கு மான்யத்தில ஒரு குடிசையில இருக்கேன்.'

'இதுக்கு நீங்க கல்கத்தாவிலேயே இருந்திருக்கலாம். அங்கே அப்பளம் இட முடியாதா? காயப்போட முடி யாதா? வாரத்துக்கு ஒருநாள் ராஷ்பிகாரி அவென்யூ வுக்குப் போய் வந்திருக்கலாம்,' என்றாள் குஞ்சரம்.

'நீ சொல்றதும் நன்னாத்தான் இருக்கு. நான் கேட்கற துக்கும் நன்னாதான் இருக்கு குஞ்சு. ஆனா, மயிலாப்பூர் மயிலாப்பூர்தான். ஒரு பக்கம் கற்பகாம்பாள், இன்னொரு பக்கம் ஆஞ்சநேயர். பஸ் ஏறி இறங்கினா பார்த்தசாரதி.

'சரி, இப்ப என்ன செய்யறதா உத்தேசம்?'

'கொண்டு வந்த பணமெல்லாம் கரைஞ்சாச்சு. ஒரு நல்ல இடமா இருந்தா சொல்லேன். ரெண்டு வேளை சமைச்சுப் போடறேன். சாப்பாடும் போட்டு மாசம் முன்னூறாவது கிடைக்காதா?'

'இப்பவெல்லாம் யார் கோமதி சமையலுக்கு ஆள் வைச்சுக்கறா? 'திடீர்' யுகமாய்ப் போயிட்டது. திடீர் இட்லி, திடீர் வடை, திடீர் சேவைன்னு எல்லாம் திடீராப் போயாச்சு. சாம்பார்ப் பொடி, ரசப்பொடி எல்லாம் பாக்கெட்ல கிடைக்கிறது. அரிசி களையவும் குக்கர்லே போடவும்தான் மெஷின் வரலே.'

'தெரிஞ்சா சொல்லேன் குஞ்சு.'

'அவசியம் சொல்றேன்.'

இத்தனை நேரமும் ஹாலில் ஒரு மூலையில் உட்கார்ந்து பத்திரிகை ஒன்றைப் புரட்டிக்கொண்டிருந்த அபயம், கோமதியின் அபயக் குரலைக் கேட்டுக்கொண்டிருந்தாள்.

அம்மாவின் பேச்சு முடிந்தது. 'மாமி! ஒரு நிமிஷம், உங்ககிட்ட பேசணும்!' என்றாள்.

'உனக்கு தெரிஞ்ச இடம் இருக்கா அபயம்?'

'பேசணும்னு சொன்னேன் இல்லியா?'

'சரி.'

'என்கூட மாடிக்கு வாங்கோ.'

'எதுக்குடீ அபயம், கோமதியை மாடிக்கு அழைச்சுட்டுப் போறே?' என்று குஞ்சரம் கேட்டாள்.

'கோமதி மாமி நம்ம வீட்டு மொட்டை மாடியை இதுவரை பார்த்ததில்லையாம். அந்தக் குறை இருப்பானேன் அம்மா? காட்டலாம்னு அழைச்சுட்டுப் போறேன். நீங்க வாங்க மாமி.'

அபயம் எழுந்து மாடிப்படியை நோக்கி நடக்க, கோமதி சாதுவாய் பின்தொடர்ந்தாள்.

இருவரும் அபயத்தின் அறைக்கு வந்தார்கள்.

'உட்காருங்கோ கோமதி மாமி.'

நாற்காலியை சுட்டிக்காட்டினாள் அபயம்.

'இதிலேயா?'

''ஏன் சேர்ல உட்கார்ந்ததில்லையா? உட்காருங்க, எனக்கு பேசணும்.'

கோமதி உட்கார்ந்தாள். நாற்காலி முழுதும் உட்கார்ந்தால் அது அவமரியாதை ஆகிவிடுமோ என்ற பயத்தில், ஒட்டில் உட்கார்ந்தாள்.

அபயம் ஆர்ம்பித்தாள்.



'முன்னொரு காலத்தில உங்க ஜில்லாவில இருக்கிற, கல்லிடைக்குறிச்சியிலிருந்து 'அம்மாமி' அப்பளம்னு ஒண்ணு ரொம்ப பிரபலமா இருந்ததாம் அப்பா, தாத்தா பாட்டி இவங்களெல்லாம் சொல்லக் கேட்டிருக்கேன். இப்ப அது இந்த மெட்ராஸ்ல கிடைக்கறதில்லே.'

'ஆமாம்.'

'நீங்க முன்னெல்லாம் வீட்ல பண்ணிக் கொண்டு வந்த அப்பளம் ருசியா இருந்தது. எண்ணையில போட்டா தாமரை இலை மாதிரி நன்னா விரிஞ்சு போகும். பத்து இருபது நாள் ஆனாலும் சீக்கிரத்தில சிவந்து போயிடாது.'

'இப்பத்தான் செய்ய முடியலையே!'

'ஒரு பெரிய கூட்டு அப்பளம் இப்ப பதினஞ்சு ரூபா பதினாறு ரூபான்னு விக்கறா.'

'நான் பன்னண்டு ரூபாய்ன்னு கொடுத்துட்டிருந்தேன். ஆனா அதுவே கொள்ளையடிப்பதாய்ப் பட்டது உண்டு.

'உங்களுக்கு அடக்க விலை என்னாச்சு.'

'நான் சில்லரையில உளுந்து வாங்கினா ஏழுரூபாய் எட்டு ரூபாய் ஆகும்.'

''அப்ப மொத்தத்தில வாங்கினா இன்னும் குறையும் இல்லியா?'

'மண்டியில போய் வாங்கினா ரொம்ப லாபமாச் செய்யலாம்.''

''அப்பளம் பண்ண என்னென்னவெல்லாம் தேவைன்னு எனக்கு ஓரளவுக்குத் தெரியும். முக்கியமா உளுந்து. அப்புறம்?''

''பிரண்டை.''

''பிரிண்டையா?'' பெத்த வயத்தில கட்டிக்க பிரண்டைதான் வேணும்னு சொல்லுவாங்களே, அந்தப் பிரண்டையா?''

''அதுவேதான். அதை நன்னா அரைச்சு, துளியூண்டு மாவில சேர்த்தாத்தான் ருசிக்கு ருசியும் மணத்துக்கு மணமும் இருக்கும்.''

''அப்புறம்?''

''சோடா உப்பு. சின்னதா இருக்கிற அப்பளம் எண்ணையில போட்டதும் பெரிசா தட்டு மாதிரி விரிஞ்சுடறதே அதுக்கு.''

''சரி, அப்புறம்?''

''மாவைப் பிசையறப்ப அது நைசா இருக்கக் கொஞ்சம் எண்ணை... அப்புறம் என்ன கொஞ்சம ஜீரகம்...''

''எதுல இடுவீங்க...''

''வழ வழன்னு இருக்கிற நீளமான பலகையில இட்டுட்டு பாயில போடணும். ஓலைப் பாய்ன்னா விசேஷம்.''

''ஒரு நாள்ளே எத்தனை அப்பளம் இடமுடியும்.''

''முன்னாடியே மாவைப் பிசைஞ்சு கிள்ளிக் கிள்ளி உருண்டையா வைச்சுட்டா, அனுபவமுள்ளவா—ஒரு மணி நேரத்தில இருபது இருபத்தஞ்சுக்குக் குறையாம இடுவா... எனக்குத் தெரிஞ்ச ஒரு பாட்டி முப்பதுகூட இட்டிருக்கா.''

''ஒருநாள் வெய்யில்ல காய்ஞ்சா போதுமா?''

''அது வெய்யிலைப் பொறுத்திருக்கு. மாசி, பங்குனி, சித்திரை, வைகாசின்னா போதும்.''



''உங்களலே ஒரு பத்து மாமிகளைத் தயார் செய்ய முடியுமா? போகப் போக பத்து இருபதாகும். இருபது நாற்பதாகும். எட்டு மணி நேரம் வேலை. அதில ஒருமணி நேரம் ஓய்வு. காபி, டிபன், ராத்திரி சாப்பாடுன்னு எல்லாம் உண்டு.''

''பத்து இருபது பேர்ன்னா, ஒரு நாள்ள ஆயிரக் கணக்கில அப்பளம் இட முடியுமே.''

''அதான் உத்தேசம்.''

''காய வைக்க இடம்?''

''இந்த வீட்டு மொட்டை மாடி.''

''போதாது.''

''பங்களாவுக்குப் பின்னால ஒரு டென்னிஸ் கோர்ட் இருக்கு அதில இப்ப யாரும் ஆடறதில்லை''

''காயப்போட்டா ஒருத்தர் கவனிச்சுக்கணும். அப்பளத்தைத் திருப்பிப் போட்டுட்டே இருந்தாத்தான் சிக்கிரம் காயும். எடுக்கறப்ப ஓரங்கள் உடையப்படாது.''

''இதெல்லாம் உங்க மேற்பார்வையில இருக்கும். தற்போதைக்கு உங்க மாச சம்பளம் ஐநூறு ரூபா.''

''அவ்வளவுதானா?''

''அவ்வளவுதான். அப்பளம் இடற மாமிகளுக்கு, நூத்துக்கு மூணுரூபா.''

''ரொம்பக் குறைச்சல்.''

''நீங்க எவ்வளவு கொடுத்துட்டிருந்தீங்க... உண்மையைச் சொல்லுங்க.''

''ரெண்டு ரூபா.''

''அதைவிட ஒரு ரூபாய் அதிகம்னா இப்ப அது குறைச்சலாப் படறதா?''

''இப்போதைய கால அவஸ்தை உனக்குத் தெரியாது அபயம்.''

''எல்லாம் தெரியும்'' என்ற அபயம், ''உங்களாலே முடியுமா?'' என்றாள்.

''சொர்ணம், தைலா, வேம்புப் பாட்டி, பார்வதி, அலமேலு, சின்னி இவங்க ஆறுபேரும் நான் சொன்னா தட்டமாட்டா'' என்ற கோமதி, ''இன்னும் தெரிஞ்சவா இருக்கா. ஏற்பாடு செய்யறேன்!''

''ஒரு கண்டிஷன்.''

''கண்டிஷனா...என்ன அது?''

''விவரமாச் சொல்றேன். நல்லா காது குடுத்துக் கேக்கணும்.''

''சொல்லு அபயம்.''

அபயம் பேச ஆரம்பிப்பதற்கும் போன் அடிப்பதற்கும் சரியாக இருந்தது.

''ஒரு நிமிஷம் கோமதி மாமி...போன் எனக்குத்தான் இருக்கும். பேசிட்டு வந்து என்ன கண்டிஷன்னு சொல்றேன்!''

அபயம் எழுந்து டெலிபோன் இருக்கும் இடத்தை நோக்கி நடந்தாள்.

அவள் திரும்பி வரும்வரை ஒருவித பயத்துடன் கோமதி காத்திருந்தாள்.

## 3

அபயம் டெலிபோன் ரிசீவரை எடுத்தாள்.

'அபயம் ஹியர்...'



மறுபக்கத்தில் பேசுவது தங்கை ஆனந்தி என்று தெரிந்ததும்—

'என்னடீ?' என்று கேட்டாள்.

'அரக்கு நிறத்தில ஒண்ணு செலக்ட் பண்ணி வைச்சிருக்கேன் அக்கா.

'நிறைய ஜரிகை இருக்கா?'

'ஆஷாட பூதியா கண்ணை அடிக்கறமாதிரி இல்லாம ஒரு சாணுக்குக் கொஞ்சம் குறைச்சலா, கண்ணுக்கு இதமா இருக்கு கரையும் பாந்தமா பளிச்சுன்னு இருக்கு.'

'சரி வாங்கிடு.'

'அம்மாவுக்கும் பிடிக்கணுமே?'

'உனக்குப் பிடிக்கிறதாடீ?'

'ரொம்ப.'

'அப்ப எனக்கும் பிடிச்சாச்சு. எனக்குப் பிடிச்சுப் போயிட்டா அம்மாவுக்கும் பிடிச்சாகணும். மேட்சிங்கா சோளி பீசும் வாங்கிடு.'

'சரி அக்கா...'

'வாங்கிட்டு அங்கே இங்கேன்னு அலையாம நேர வீடு வந்து சேரு.'

'லேடீஸ் கார்னர் டெய்லர்ட்ட சோளி தைக்க துணியைக் கொடுத்துட்டுத்தான் வரணும்.'

'அளவு?'

'புறப்படறப்பவே அம்மாவுக்குத் தெரியாம அவ சோளி ஒண்ணை பையில போட்டுக்கிட்டேன். சின்னாஜி நாளைக்கு சாயங்காலத்துக்குள்ளே, ஸ்பெசலா தைச்சுக் கொடுத்துடுவான்.'

'குட். வெரிகுட்... போனை வைக்கிறேன்.'

அபயம் ரிசீவரை வைத்துவிட்டு மெதுவாக கோமதி இருக்கும் இடத்துக்குத் திரும்பினாள்.

'எங்கே நிறுத்தினேன் கோமதி மாமி?' என்றாள்.

'ஒரு கண்டிஷன். அதை விபரமாச் சொல்றேன், நன்னாக் காது குடுத்துக் கேட்கணும்னு சொன்னே. அப்பத்தான் போன் அடிச்சுது... யார்ட்டேந்து போன். புடவை ரவிக்கை வாங்கறியா... அம்மாவுக்கா... என்ன விசேஷம்?'

'இந்த விபரமெல்லாம் உங்களுக்கு அவசியமில்லை கோமதி மாமி. இப்ப என்ன கண்டிஷன்னு சொல்லிடறேன்.'

'சொல்லு... என்னியிலிருந்து என் சம்பளம் ஆரம்பமாகும்?'

'அதிலேயே குறியா இருங்கோ!' என்று சொல்லிச் சிரித்த அபயம், 'நான் இப்பப் போட்டிருக்கிற பிளான் நல்லவிதமா ஆரம்பிச்சு, நல்லவிதமா நடக்கறமாதிரிப் பட்டா, உங்க சம்பளம் இன்னியிலிருந்தே ஆரம்பமாயிடுதுன்னு வைச்சுக்கலாம். ஆனா, கண்டிஷன் என்னன்னு நான் இன்னும் சொல்லலே.'

'சொல்லுடீ அம்மா அபயம்.'

'நான் உங்களுக்கு சம்பளம் கொடுக்கிறவளா இருக்கறப்ப, நான் ஒரு முதலாளி நாற்காலியில உட்கார்ந்துடறேன், இல்லியா கோமதி மாமி?'

'இதிலென்ன சந்தேகம்?'

'அப்ப நீங்க என்னை 'டீ' போட்டுப் பேசப்படாது.'

'தப்புத்தான்... ஏதோ பழக்க தோஷம். இனிமே 'டீ' வராது.'

'போனாப் போகட்டும்!' என்ற அபயம் நிபந்தனைகளை ஆரம்பித்தாள்.



'முதல் ஒரு மாசத்துக்கு எட்டுமணி நேர வேலைதான். இந்த ஒரு மாசத்துக்கு உங்களைத் தவிர அஞ்சே அஞ்சு பேர் வந்தாப் போதும். கார்த்தால எல்லாரும் சாப்பிட்டுட்டு சரியா பத்தரை மணிக்கு வரணும். எல்லாரும் நீட்டா, நல்ல புடவை கட்டிட்டு வரணும். வந்ததும் கைகால் அலம்பிட்டு வேலையை ஆரம்பிக்கணும். கைகளைச் சுத்தம் செய்ய ஆளுக்கு ஒரு லைப்பாய் சோப்பும், சோப்புப் பெட்டியும் தருவேன்.

'ஒருத்தி சோப்பை இன்னொருத்தி தொடவும் கூடாது. முகத்தில வியர்வை கொப்புளிக்காம இருக்க லேசா ஃபேன் சுத்தும். அப்படியும் வியர்வை துளிர்த்தா நான் தர்ற டவலாலதான் துடைச்சுக்கணும். முக்கியமா, மாசா மாசம் மூணு நாள் தனியா உட்கார்ற சின்ன மாமிகள் வேலைக்கு வரக்கூடாது. எதிர்காலத்தில தவிர்க்க முடியாம அப்படிப்பட்டவர்கள் வந்தா அஞ்சாம் நாள் குளிச்சுட்டுதான் வேலைக்கு வரலாம். இதன் காரணமா அவங்களுக்கு முழுச் சம்பளம் கிடைக்காமப் போயிடும். அதை ஈடு செய்ய ஞாயித்துக்கிழமை லீவுன்னு சொல்லு.'

மத்தவங்களுக்கு லீவு. உங்களுக்குக் கிடையாது' ஆனா, அதுக்கு பதிலா ரெண்டு நாள் சம்பளம் ஓவர்டைமாகக் கிடைக்கும்.'

'மாசம் ஐநூறு. முப்பது நாள். ஒரு நாளுக்கு... ஒரு நாளுக்கு...'

'ஓவர்டைம் கிட்டத்தட்ட முப்பத்துமூணு ரூபா.'

'சில மாசங்கள்ளே அஞ்சு ஞாயித்துக்கிழமை வர்றது... அந்த மாசமெல்லாம் எனக்கு அறுநூத்து எழுபத்தஞ்சுக்கு பக்கத்தில வந்துடுமே!'

'கோமதி மாமி, பணம் பணம்னு பேயாப் பறக்காம நான் சொல்றதைக் கேட்டுட்டு வாங்க...' என்ற அபயம் தொடர்ந்தாள்.

'மத்தியானம் இரண்டு மணிக்கு டீ. நாலரை மணிக்கு டிபன், காபி. சரியா ஏழு மணிக்கு எல்லாரும் புறப்பட்டுப் போயிடலாம்'—அபயம் நிறுத்தினாள்.

'இல்வளவுதானா இல்லே இன்னும் ஏதானும் இருக்கா?'

'இப்போதைக்கு இவ்வளவுதான். அப்பளம் ஹை ஜூவாலிட்டியில இருக்கணும். அதுக்கு நீங்கதான் பொறுப்பு. அப்பளத்தின் வட்ட வடிவத்துக்கும், விளிம்பு ரொம்ப கனமா இல்லாம இருக்கறதுக்கும் நீங்கதான் ஜவாப்... என்ன, இதுக்கெல்லாம் ஒத்துக்கறீங்களா?'

'நீதான்... டீதான் சொல்லப்படாது. 'நீ' போட்டுப் பேசலாமோ இல்லியோ? நீதான் எல்லாத்தையும் ஒண்ணு விடாம சாங்கோ பாங்கமா சொல்லிட்டியே, அப்பீல் ஏது. தான் வரேன். இன்னிக்கு அஞ்சு பேரைப் பாத்துடறேன்.''

''நானு.''

''அஞ்சுன்னியே அபயம்?''

''உங்களையும் சேர்த்து மாவு பிசைஞ்சு, கிள்ளிக் கிள்ளி உருண்டையா வைக்கிற வேலை உங்களோடது. இது தவிர, நீங்களும் ஒரு நாளுக்கு அம்பது அப்பளம் இட்டாகணும்...''

''நான் வெறும் மேற்பார்வை மட்டும்தான்னு நினைச்சுட்டிருந்தேன் அபயம்!''

''அந்த வேலை மட்டும்னா, அதை எங்க வீட்டு வேலைக்காரியே செய்வா. என்ன சொல்றீங்க?'

''செங்கோலுக்கு முன்னாடி சங்கீதம் பாட முடியுமா சொல்லு... நான் வரேன்!''

''சரி.''

''பஸ் சார்ஜுக்கு...''



''நானா உங்களை வரவழைக்கலையே மாமி? வேலை தேடி நீங்கதானே அம்மாவைப் பார்க்க வந்தீங்க. புறப்படறப்பவே திரும்பி வர்றதுக்கும் பஸ் சார்ஜ் உண்டுன்னு தெரியுமே.''

''உன்னோட பேசி என்னால ஜெயிக்க முடியாதுமடீ அம்மா... மன்னிச்சுக்கோ... பாழாய்ப் போற 'டீ' வந்துட்டுது!''

அபயம் சிரித்தாள்.

**ம**றுநாள் முதல் அபயம் தன் ஆராய்ச்சியில் இறங்கினாள்.

அமெரிக்கா—

நியூயார்க்கில் அவளுடன் படித்த சுலோவுடன் பேசினாள். திட்டத்தைக் கூறினாள். சாப்பிடக்கூடிய பொருள்களை அமெரிக்காவுக்கு ஏற்றுமதி செய்வது அவ்வளவு சுலபமான காரியமல்ல என்பதை அபயம் அறிந்தவள்தான். அவர்கள் தரத்தை மட்டும் பார்க்கமாட்டார்கள். ரசாயன குணங்கள் என்னென்ன, அவற்றினால் என்னென்ன பாதகங்கள் விளையக்கூடும் என்றெல்லாம் ஆராய்ச்சி செய்வார்கள். ஆயிரம் நல்ல அம்சங்கள் இருந்து ஒரு சிறு, கண்ணுக்கும் புலப்படாத குறை அவர்களுடைய மைக்ராஸ்கோப்பில் விசுவரூபம் எடுத்துவிட்டால், அவ்வளவுதான். முதலீடெல்லாம் நஷ்டம்தான். சுலோ தைரியம் கொடுத்தாள். ஏற்கனவே குஜராத்திக்காரர்கள் 'பப்பட்' அனுப்புகிறார்கள் என்றும், என்னென்ன பரிசோதனைகள் நடத்துவார்கள் என்றும் கூறினாள். தான் அமெரிக்கா திரும்பும்போது ஆயிரம் அப்பளத்துடன் சென்று ஆவன செய்வதாகக் கூறினாள்.

**ப**த்து நாட்களில் ஆயிரம் தயாராகியது சுலோ நியூயார்க்கை அடைந்து ஒரு வாரத்தில் நல்ல செய்தியைச் சொன்னாள். சரக்கை அமெரிக்கா ஏற்றுக்கொண்டு

விட்டது. ஆனால், ஒவ்வொரு தடவை இறங்கும்போதும் பரிசோதனை நடக்கும் என்று எச்சரித்தாள். அவளே மற்ற நகரங்களுடன் தொடர்பு கொள்ளுவதாகவும் வாக்களித்தாள்.

லண்டன்.

ஒன்றுவிட்ட அத்தையின் பிள்ளை, ராஜா என்கிற ராஜாராமன். அவளுடைய தாத்தா நீலகண்ட பாகவதருடைய தயவு கிடைத்திருக்காவிட்டால் காலேஜ் வாயிற்படியையே பார்த்திருக்கமாட்டான். அவனுடன் தொலைபேசி மூலம் தொடர்பு கொள்ள, தென்னிந்தியர்களின் சிறப்பு அங்காடிகள் ஏழெட்டு இருக்கின்றன என்றும், தன்னால் இயன்றதைச் செய்யத் தயார் என்றும் கூறினான்.

துபாய், மஸ்கட் மற்றும் சிங்கப்பூர் எளிதாக அபயத்தின் அப்பளத்தை ஏற்றுக்கொண்டு, மாதா மாதம் எத்தனை ஆயிரம் தேவைப்படும் என்பதை அறிவித்தார்கள்.

இதன் பிறகுதான், பெரிய அளவில் தொழிலை நடத்துவது என்று அபயம் தீர்மானித்து, 'உங்களது பாங்க்' கான இந்தியன் வங்கியின் அசிஸ்டென்ட் ஜெனரல் மானேஜரைப் பார்த்தாள்.

கோமதி அன்று விடைபெற்றுச் சென்ற சில நிமிடங்களுக்கெல்லாம் தங்கை ஆனந்தி வீடு திரும்பினாள்.

அவள் வாங்கி வந்த புடவை கண்ணைப் பறித்தது.

''டீ நாளை மறுநாள் சண்டே. நம்ப அம்மாவோட நட்சத்திரப் பிறந்த நாள். நாம நாலுபேரும் ஒரே மாதிரி புடவை கட்டிக்கொண்டு—கச்சேரியின்போது பாம்பே சிஸ்டர்ஸ், ஒரேமாதிரி கட்டிக்கிறாங்களே, அதுமாதிரி அம்மாவை நமஸ்காரம் செய்யணும். ஒரு



தட்டுல மஞ்சள், குங்குமம், வெற்றிலை பாக்கு, பழம் அப்புறம் இந்தப் புடவை சோளி எல்லாம் வைச்சு, எட்டு கைகளால அம்மாட்ட குடுக்கறோம், என்ன?''

''கார்த்தால எத்தனை மணிக்கு?''

''எட்டு.''

''ஈசுவரி தூங்கிட்டிருப்பா... உதயா டென்னிஸ் ஆடப் போயிடுவா...''

''ரெண்டுபேரையும் நான் கவனிச்சுக்கறேன்.'' என்ற அபயம், 'நம்ம பிளான் நன்னா வரும்னு தோன்றதுடீ... அம்மாவோட ஆசீர்வாதம் நிச்சயமா பலன் தரும், பாரேன்!'' என்றாள்.

அந்த ஞாயித்துக்கிழமை காலை எட்டு மணிக்கு கிளிப் பச்சையில் நான்கு பெண் கிளிகள் அம்மா எதிரே நின்றார்கள். விழுந்து நமஸ்கரித்தார்கள். தட்டை அளித்தார்கள்.

குஞ்சரத்தின் கண்கள் கனத்தன.

''என்னடீ இதெல்லாம்? நான்தானே உங்களுக்கெல்லாம் தரணும்... என்ன இப்படிப் பண்ணிட்டீங்க...''

''அம்மா உன்னாலதான் நாங்களெல்லாம் இன்னிக்கு இப்படி இருக்கோம். உன் ஆசீர்வாதம் எங்களுக்கு வேணும்.'' அபயம்.

''மனசாரச் சொல்றேண்டீ... நீங்க எல்லாரும் அமோகமா இருப்பீங்க...'' என்ற குஞ்சரம், ''இந்தாங்கோ... இப்படி வாங்கோ!'' என்று கணவர் நவநீத பாகவதரை அழைத்தாள்.

ஒரு காலை மடக்கி ஊஞ்சல் மீது போட்டு வலது கையால் சங்கிலியைப் பிடித்து உல்லாசமாய் ஆடிக்கொண்டிருந்த பாகவதர்—

''நான் பார்த்துட்டுதாண்டீ இருக்கேன்... ஜமாய்...''

''மொதல்ல வாயைக் கொப்புளிச்சுட்டு வாங்க... என் பொறந்த நாளுக்கு நம்ப குழந்தைகள் என்ன செய்திருக்கான்னு பாருங்கோ...''

''பார்த்தாச்சுடீ...''

பாகவதர் பன்னீர் புகையிலையின் சாற்றில் மெய் மறந்து போயிருந்தார். ஊஞ்சலை விட்டு இறங்கவில்லை.

இப்போது—ஐந்து வருடங்களுக்குப் பிறகு நினைத்துப் பார்த்தபோது அபயத்துக்கு வியப்பாகவும், மகிழ்ச்சியாகவும் இருந்தது. இப்போது நாற்பது பெண்கள் அவளைத் தெய்வமாக மதிக்கிறார்கள். தீபாவளிக்கு போனஸ் மட்டுமல்ல, விலை உயர்ந்த துணிமணிகளும் அவர்களுக்குக் கிடைக்கின்றன.

சாதி, மத வித்தியாசமில்லாத ஒரு கூட்டம். எல்லா சாதிகளிலும் ஏழைகள் இருக்கிறார்கள். சொல்லப் போனால் எல்லா ஏழைகளையுமே ஒரே ஒரு சாதியில் கொண்டு வரவேண்டும். ஆனால், அரசியல்வாதிகளுக்கு இது உடன்பாடாக இராது. அதனால் என்ன, தன் குறுகிய வட்டத்தில் அபயம் இதைச் செய்யலாமே? செய்தாள்.

அன்று ஞாயிற்றுக்கிழமை.

ஏழெட்டுப் பெண்கள், தான் வராத ஐந்து நாட்களை ஈடுசெய்ய வேலைக்கு வந்திருந்தார்கள்.

அபயம் தன் அறையில் உட்கார்ந்து ஒரு பைலில் மூழ்கியிருந்தாள்.

''அபி.''

ஏறிட்டுப் பார்த்தாள்.

''என்னம்மா?''



''டிஸ்டர்ப் பண்றேனா?''

''டிஸ்டர்ப்தான் பண்றே... ஆனாலும் பரவாயில்லே. என்ன? சொல்லு...''

''ஒரு கால் மணி நேரம்...''

''என்ன விசயம், அதைச் சொல்லு.''

''கோவிச்சுக்கப்படாது.''

''நான் என்னிக்கு உங்கிட்டக் கோவிச்சிருக்கேன்... எப்பவாவது ஆபீஸ் வேலையில மும்முரமா இருக்கறப்போ குறுக்கே வந்திருப்பே... நானும் எரிஞ்சு விழுந்திருப்பேன்... ஆனா, சத்தியமா உன்மேல கோபப்பட்டதே இல்ல.''

''சொல்லட்டுமா?''

''சொல்லு''

''கல்யாண விசயம்.''

''யாருக்கு?''

''என்னடீ அபி, இப்படிக் கேக்கறே?''

''என் கல்யாணத்தைப் பத்தி இதுவரை இந்த வீட்ல பேச்சே எழுந்ததில்லையே, அதனால கேட்கிறேன்.''

''உன் நட்சத்திரம் மூலம்...''

''பெண் மூலம் நிர்மூலம்... மூலத்து மாமியார் முக்குல! பூராடம் கழுத்தில நூலாடாது... ஆயில்யத்து மாமனார் ஆசந்தியில... கிராமத்தில பொழுது போகாம வம்பு பேசறவர்கள் கற்பனை செய்து உதிர்த்த பொன்மொழிகள்... சரி, என்ன, மேல சொல்லு...''

''நீ பெண் மூலம் இல்லே அபி! நீ பொன் மூலம்... உன்னோட 'மாட்டாடர் வேன்'ல பின் கண்ணாடியில 'அபயம் அப்பளம்'னு தங்க நிறத்தில பதிஞ்சிருக்கு... உன்னால யாரும் நிர்மூலமாக மாட்டா...''

''யாரு வரன்?''

''நல்ல பிள்ளை. அவனோட அம்மா மூலையில உட்காரமாட்டா. அவளோட அப்பா உன் நட்சத்திரத்துக்காக ரெண்டாம் தடவையா கண் மூடமாட்டார். அம்மா அப்பா ரெண்டுபேரும் காலமாயாச்சு. எம்.எஸ்.சி., ரொம்ப சாதுன்னு சொல்றா. பார்க்க லட்சணமாகவும் இருப்பானாம்.''

''எந்த ஆண்பிள்ளையும் சாது இல்லை அம்மா.''

''சாதுன்னா கோழைத்தனம்னு அர்த்தம் இல்லே அபி.''

''என்ன பிசினஸ்?''

''எக்ஸ்போர்ட்.''

''எதை?''

''ஊறுகாய். அவன் ஏற்றுமதி செய்யாத ஊரே இல்லையாம். ஆனா, எதையும் அவன் உள்ளூர்ல விக்கறதில்லை.''

''ஊறுகாய் பிசினஸ்காரங்க ரொம்பப்பேரை பாத்திருக்கேன். அமெரிக்காவில இறங்கினதும் மொதல்ல லேபரட்டரிக்குத்தான் போறது... அப்புறம் அவ்வளவுதான். மத்த ஊர்களுக்குப் போறதா இல்லே. பசிபிக், அட்லாண்டிக்ல விழறதான்னு கடவுளுக்குத்தான் வெளிச்சம்.''

''எந்த சமுத்திரத்துல இந்தப் பிள்ளை செய்யற ஊறுகாய் விழறதுன்னு எனக்குத் தெரியாது அபி! நாலஞ்சு வருசத்தில லட்சக்கணக்கா சம்பாதிச்சுட்டான்னு ஜோசியர் சொன்னார்.''

''ஜோசியரை விடு... சான்ஸ் கிடைச்சா அவர் புளுகுகளை எக்ஸ்போர்ட் செய்துடுவார்.''

''எல்லாம் சொன்னே, வயசைச் சொல்லலே...''



''முப்பத்து நாலு.''

''உனக்கும் அப்பாவுக்கும் பிடிச்சிருக்கு இல்லே.''

''என்னையும் அப்பாவையும் விடு, நீதானே சொல்லணும்?''

''ஏன் அவனும் சொல்லணும்.''

''கரெக்ட். அப்பப் பார்க்க வரச்சொல்லட்டுமா?''

''நான் இந்த வாரம் பூரா பிசி.''

''என்னிக்கு முடியும்?''

''கொஞ்சம் இரு.''

அபயம மேஜைமீது இருந்த நீள அகலமான காலண்டரைப் பார்த்தாள். ''அம்மா! உன் அதிர்ஷ்டம், இந்த செவ்வாய் மத்தியானம் ப்ரியா இருக்கேன். மூணுலேர்ந்து நாலு நாலரை வரை...''

''செவ்வாயா? கொழுத்த ராகு காலத்திலா? அபி, ஏண்டி இப்படி வக்கிரமா...''

''அம்மா, அன்னிக்கு வர்றவன் என்ன தாலியா கட்டப்போறான்...''

''எனக்கு உன் கிழமையிலும், காலத்திலும் நம்பிக்கை இல்லை அம்மா... அன்னிக்கு வர்றதானா வரட்டும், பார்க்கிறேன், பேசறேன்.''

''வேற நாள்...?'' குஞ்சரம் தயக்கத்துடன் இழுத்தாள்.

''சாரி அம்மா... இந்த செவ்வாய் விட்டா அடுத்த மாசம்தான். அன்னிக்கு ராத்திரி சிங்கப்பூர் போறேன்... அப்புறம் கோலலாம்பூர்... ஹாங்காங்... அதோட நிக்கலே, டோக்கியோவும் இருக்கு. யார் கண்டா அப்படியே ஸ்டேட்ஸ் போய் லண்டன் வழியாத் திரும்பினாலும் திரும்புவேன். பெரிய பிசினஸ் டூர்...''

''ஜோசியர்ட்ட சொல்றேன். அந்தப் புள்ளை என்ன சொல்லுவானோ!''

''என்ன சொன்னாலும் ஐ டோண்ட் கேர் அம்மா.''

''அதான் தெரியுமே.'' என்ற குஞ்சரம், ''செவ்வாய் அன்னிக்கு பெண் பார்க்க வந்தாலும் வரட்டும், சனி ப்ரீ, செவ்வாய் ப்ரீ, அன்னிக்கு கல்யாணத்தை நடத்திடலாம்னு மட்டும் சொல்விடாதே...''

அபயம் சிரித்தாள். பிறகு, ''இந்த ஆள் பெயரென்ன, அவன் எந்தப் பெயரில் ஊறுகாய் பிசினஸ் நடத்தறான்?''

குஞ்சரம் விழித்தாள்.

''தெரியலேடீ... கொஞ்சம் இரு, ஜாதகத்தைப் பார்த்துட்டு வந்து சொல்றேன்...'' என்றாள். ''நல்ல அம்மா!''

அபயம் மறுபடியும் சிரித்தாள்.

# 4

அம்மா குஞ்சரத்தின் தலை மறைந்ததுமே கல்யாண விசயத்தை அபயம் மறந்துவிட்டாள். இப்போது அவள் வெளிநாட்டுப் பயணத்துக்காகத் தன்னைந் தயார் செய்து கொள்ள வேண்டும். 'அபயம் அப்பளம்ஸ்' நிறுவனம் பற்றி அவள் துளியும் கவலைப்படவில்லை. சமையலறை இருக்கும்வரை அப்பளமும் இருக்கும் என்பது அவளுடைய அசையாத நம்பிக்கை. இப்போது அவள் ஆனந்தி மூலம் நிறுவப்பட்ட புது வியாபாரம் பற்றி யோசித்துக்கொண்டிருந்தாள். இருவரும் சற்று அவசரப்பட்டுவிட்டார்கள். விரலுக்கு மேல் வீங்கினாலும் சமாளித்துவிடலாம். அகமதாபாத் மில்லை நம்பி அயல்நாட்டு வியாபாரிகளுக்கு தேதி கொடுத்தது முட்டாள்தனம். கடந்த சில மாதங்



களாக அந்த ஆலை தொழிலாளர்களின் ஆர்ப்பாட்டத்தில் அலைபாய்ந்து கொண்டிருக்கிறது. தீபாவளிக்கு முன்பாகவே சச்சரவு தீர்ந்து, அவர்கள் கேட்ட போனசைப் பெற்றுக்கொண்டு வேலைக்குத் திரும்புவார்கள் என்று மில்லின் நிர்வாகம் கற்பூரம் ஏற்றி சத்தியம் செய்வது போல உறுதி செய்தது. இதை நம்பி, சிங்கப்பூர் மற்றும் ஹாங்காங் வியாபாரிகளிடமிருந்து முன்பணம் வாங்கி, சரக்கு அனுப்பும் தேதிகளையும் சொல்லிவிட்டாள். ஒப்பந்தத்தின் ஷரத்துப்படி குறிப்பிட்ட தேதிக்குள் சரக்கு வராவிட்டால், ஒப்பந்தம் ரத்து ஆகும் முன்பணத்தை இருபத்துநாலு சதவீத வட்டியுடன் திருப்பிக் கொடுக்க வேண்டும். எல்லாவற்றிற்கும் முத்தாய்ப்பாக அவர்களுக்குக் கிடைக்க இருந்த லாபத்தை அபயம் கொடுக்க வேண்டும்.

சிங்கப்பூருக்கு இன்றையிலிருந்து இருபதாம் நாள்—

கோலாலம்பூருக்கு முப்பதாம் நாள்—ஹாங்காங்குக்கு நாற்பதாம் நாள்—முடிவதற்குள் சரக்கு போயாக வேண்டும்.

அயல்நாட்டு வியாபாரிகள் அவ்வளவு சீக்கிரத்தில் தாங்கள் விதித்த நிபந்தனைகளை தளர்த்தமாட்டார்கள்.

இப்போது என்ன செய்ய? ஆனந்தி ஏன் இன்னும் திரும்பவில்லை? போன இடத்தில் ஏதேனும் நேர்ந்துவிட்டதா?

ஆனந்தியின் நினைவு வந்தபோது கண்களில் நீர் கரைகட்டியது. அக்காவின் வெற்றிக்காக தங்கை எப்படியெல்லாம் அலைந்திருக்கிறாள்! உளுந்தும் பிரண்டையும் பேரம் பண்ணி வாங்க ஒரு தடவை போனபோது ஒரு ஆட்டோ அவள்மீது மோத, அவள் பிரக்ஞை இழக்கும் நிலைக்கு வர, அச்சமயம் பார்த்து ஒரு கயவன் அவளுடைய கழுத்துச் சங்கிலியைப் பற்றி இழுக்க, அவள்

திடீரென்று விழித்துக்கொண்டு அவனிடமிருந்து விடுபட முயல, இதைப் பார்த்த சிலர் அந்தக் கயவனைப் பிடித்து போலீசாரிடம் ஒப்படைக்க—

கொத்தவால்சாவடி அருகே ஒரே அமளி

முழங்காலில் அடிபட்டிருந்தால் என்ன, வலது காதோரத்திலிருந்து ரத்தம் வழிந்தால் என்ன? உளுந்து வாங்கியே ஆக வேண்டும். ஏற்கனவே சொல்லி வைத்த காய்கறி வியாபாரி ஒருவனிடமிருந்து பத்து கிலோ பிரண்டையைப் பெற்றுக்கொண்டே ஆக வேண்டும்.

ஆனந்தி இதை வெற்றிகரமாகச் செயலாக்கிவிட்டு வீட்டை அடைந்த ஐந்தாம் நிமிடம் படுக்கையில் படுத்துக் கொண்டாள். இரவு ஜுரம் நூற்று மூன்றுக்கு ஏறியது. மறுநாள் காலையிலிருந்து வைத்தியம்.

ஒரு வாரத்துக்குப் பிறகுதான் ஆனந்தியால் வேலைக்கு திரும்ப முடிந்தது.

பழைய நினைவுகளின் சுமையில் அபயம் நிகழ் காலத்தையே மறந்துபோனாள். முழுக்க முழுக்க ஆனந்தி மட்டுமே மனதில் நிறைந்து நின்றாள் நினைவுகள் நெஞ்சில் மோதினபோது சிரிப்பு தானாக வந்தது. ஆதங்கம் உண்டாயிற்று. ஏமாற்றம் பிறந்தது. ஏன் ஆனந்தி நவரசங்களையே அபயத்துக்கு அளித்திருக்கிறாள். மூன்று தங்கைகள் மீதும் அன்பும், பாசமும் ஒரே அளவில் இருந்தாலும் அவளைவிட இரண்டு வயது சிறியவளான ஆனந்திக்கு அபயத்தின் மனத்தில் ஒரு தனி இடம் உண்டு.

இந்த ஆனந்தி, இப்போது இருபத்தெட்டு வயதில் அக்காவுக்காக எந்தத் தியாகத்தையும் செய்யத் தயாராக இருக்கிற ஆனந்தி—



பல வருடங்களுக்கு முன் தட்டுத் தடுமாறி பி.யூ.சி., படித்து மயிரிழையில் தேறினாள். தேறியதே தனது துர்பாக்கியம். தெய்வம் செய்த சதி என்று நினைத்தாள். தேர்வு கிடைக்காமலிருந்தால் வீட்டிலேயே அம்மாவுடன் உட்கார்ந்து பொழுதை போக்கலாம். இந்த அதிர்ஷ்டம் அவளுக்கு அமையவில்லை.

அபயம் மிகவும் சிரமப்பட்டு தங்கையைக் கல்லூரியில் கொண்டுபோய்ச் சேர்த்தாள். பி. ஏ., பொருளாதாரம். முப்பத்தேழும் முப்பத்தெட்டுமாக மதிப்பெண்கள் வாங்கி ஆனந்தப்பட்ட ஆனந்தி ஒரு வழியாக விடுதலை பெற்று கல்லூரியிலிருந்து திரும்பி வந்தாள்.

பரீட்சைகளை எழுதி முடித்த மறு நாளிலிருந்தே, ஆனந்தி மிகவும் மகிழ்ச்சியுடன், மூன்று ஆண்டுகளாக எந்தப் பொருளாதாரத்துடன் போர் நடத்தினாளோ அந்தப் பொருளாதாரத்தை மறந்துபோனாள். ஆனால், படிப்பில்தான் இப்படி. மற்றபடி உலக ஞானத்திலும், மனிதர்களைப் புரிந்துகொள்ளும் சக்தியிலும் ஆனந்தி பல சர்வகலாசாலைகளில் டாக்டர் பட்டம் வாங்கத் தகுதி பெற்றவள். சமத்காரமாகப் பேசுவதில் அவளுக்கு நிகர் அவளேதான். ஆடிக் கறக்கவேண்டிய பசுவை ஆடிக் கறப்பாள். பாடினால்தான் பால் சுரக்குமா? பாடுவாள். ஆட்களை அதிகாரம் செய்து வளைப்பதில் அவள் ஒரு அசகாயசூரி. (சூரன் என்றால் ஆண்—ஆனந்தி ஒரு பெண்) அபயத்தால் திமிருடன்தான் பேச முடியும். ஆனால், ஆனந்தியால் தந்திரமாகவும், பொய்மையான புகழ்ச்சி மாலை அணிவித்தும் அலங்காரமாகவும் பேச முடியும். இத்தகைய குணங்கள் கொண்ட ஆனந்தியை அபயம் தன்னுடைய அப்பள வியாபாரத்தில் ஈடுபடுத்தினாள். ''அபயம் அப்பளம்ஸ்'' என்ற தனியார் நிறுவனத்தின் மானேஜிங் டைரக்டர் என்றால் ஆனந்தி ஒரு டைரக்டர். அதே சமயத்தில் கம்பெனியின் ஜெனரல் மானேஜரும் கூட.

இந்த ஐந்து ஆண்டுகளில் ஏற்றுமதியின் விளைவாகக் கிடைத்த இறக்குமதி லைசென்சுகளின் மொத்த மதிப்பு ஏறக்குறைய ஆறு லட்சம் ரூபாய். எளிதாக இவற்றை மற்ற நிறுவனங்களுக்கோ, தனியாக வியாபாரம் செய்பவர்களுக்கோ இஷ்டப்பட்ட விலைக்கு விற்றிருக்கலாம். கூடிய வரையில் கறுப்புப் பணத்தை உருவாக்காமல் இருப்பதுதான் தனக்கும் நல்லது, நாட்டுக்கும் நல்லது என்று இரு சகோதரிகளும் நினைத்தார்கள். ஆனால்' லைசென்சுகளை வைத்துக்கொண்டு என்ன செய்வது?

இந்த சமயத்தில்தான் அவர்களுடைய கேள்விக்கு பதிலாக அமையும் வண்ணம் அம்மாவின் ஒன்றுவிட்ட அண்ணாவின் பிள்ளை குடும்ப சகிதமாக சிங்கப்பூரில் இருந்து வந்தான் வந்தவன் சும்மா வரவில்லை. நான்கு பெண்களுக்கும் அமெரிக்கன் ஜார்ஜட் மற்றும் ஷிபான் புடவைகளும், பலதரப்பட்ட ரெடிமேட் ஆடைகளும் வாங்கி வந்தான். சோளிகள்கூட ரெடிமேடாக, அளவுகளைத் தையற்காரர் துணையின்றி மாறறக்கூடிய விதத்தில் வந்தன. இவை தவிர, மாக்சி, மிடி, சூரிதார், சல்வார்கமிஸ், ப்ரா என்று எத்தனை எத்தனையோ. கடைத் தங்கை போன ஜென்மத்தில் துணிக்கடைக்காரனாகவும், அதற்கு முன் ஜென்மத்தில் தையற்கடைக்காரனாகவும், அதற்கும் முந்தைய ஜென்மத்தில் பருத்திச் செடியாகவும் பிறந்திருக்க வேண்டும்.

ஒன்றுவிட்ட மாமா கொண்டுவந்த துணிமணிகளில், அமெரிக்கன் ஜார்ஜட் ஒன்றைத் தவிர மற்றவை எல்லாமே இந்தியாவிலிருந்து ஏற்றுமதியாகி பற்பலப் பெயர்களை அணிந்துகொண்டு இந்தியாவுக்கே திரும்பி வந்திருக்கிறது. தன்னுடைய கூற்றை நிரூபிக்க, உத்யா சென்னையிலுள்ள தலைசிறந்த ரெடிமேட் ஆடைகள் கடையிலிருந்து, ப்ரா, மாக்சி மற்றும் சல்வார்கமீசை வாங்கி வந்தாள்.



அதைப் பார்த்த உடனேயே பொறிதட்டினாற்போல ஒரு எண்ணம் பொருளாதாரத் துறையில் பலவீனமான ஆனந்தியின் மண்டையில் உதித்தது.

கிடைத்திருக்கிற இறக்குமதி லைசென்சுகளுக்கு சிறந்ததோர் வடிகால் கிடைத்துவிட்டதாக நினைத்தாள்.

ஒருநாள், ''அக்கா! எனக்கு பத்து நாள் லீவு வேணும்!'' என்றாள்.

''எதுக்கு?'' என்று அபயம் கேட்டாள்.

''பம்பாய், அகமதாபாத் அப்புறம் டில்லி போறேன்.''

''ஊர் சுத்திப் பாக்கவா?''

''இல்லை, வியாபார விசயமாக...''

''என்னடீ புதுசா இருக்கு. நாமதான் நம்ப அப்பளத்தை உள்ளூர் மார்க்கெட்ல விக்கிறதில்லையே?''

''ஏற்றுமதி வியாபாரம்!''

''என்ன புராடகட்?''

''சொன்னான்.''

''ஆனந்தி, உனக்கு என்ன பைத்தியமா, இப்ப எத்தனை ரூபாய்க்கு இம்போர்ட் லைசென்ஸ் இருக்கோ அதுக்கு நான்கு மடங்கா லைசென்ஸ் கிடைக்க நாம ஏற்றுமதி செய்வோம்... ''அபய ஆனந்தி எக்ஸ்போர்ட்ஸ் ப்ரைவேட் அண்ட் கோ''—எப்படி இருக்கு பேர்?''

''ஓகே. ஆனா, எதுக்கு பாம்பே அகமதாபாத் எல்லாம்?''

''பாம்பேயிலதான் ரெடிமேட் கார்மெண்ட்ஸ் ஆடைகள் தயார் செய்யற நிறுவனம் நிறைய இருக்கு... நல்ல துணி தயாராகற மில்களெல்லாம் அகமதாபாத்ல இருக்கு. எங்கெங்கே எதை எதை எப்படியெப்படி செய்யறாங்கன்னு பார்த்துட்டு வர்றேன்.''

"உனக்கு அங்கெல்லாம் யாரையும் தெரியாதே."

"தெரியறதுக்கு வழி வைச்சிருக்கேன்."

"எப்படி?"

"நாம எக்ஸ்போர்ட்டர்ஸ் அசோசியேஷன்ல மெம்பர். ரெடிமேட் ஆடை தயாரிக்கிறவங்க நேரடியா ஏற்றுமதி செய்யறதில்லே... பல கம்பெனிகளின் ஆர்டர்களைத்தான் அவங்க எடுத்து நடத்தறாங்க... நம்ப விசிட்டிங் கார்டை வைச்சுட்டு தயாரிப்பாளர்களை சந்திச்சுடலாம். அவங்க மூலமாகவே எந்தெந்த மில்லுக்குப் போக வேண்டும்னு தெரிஞ்சுக்கலாம். அப்புறம், பேக்கிங், லேபலிங், எந்தெந்த பாரின் கண்ட்ரீஸ் இது பத்தி எல்லாம் தெரிஞ்சுக்கலாம்..."

"ஓகே... ஜமாய்!"

"தாங்க்யூ அக்கா..."

"ஆனா, ஒண்ணு. உன் செலவுகளை இந்த அப்பளக் கம்பெனி மேல திணிக்கப்படாது."

"அந்த உத்தேசமே இல்லை. இதுவரை ஜி. எம்.-மா சம்பாதிச்ச பணம் அப்படியே இருக்கு."

"ஆல் தி பெஸ்ட்!"

பத்து நாட்களுக்குப் பிறகு ஆனந்தி ஊர் திரும்பினாள். வெறும் கையுடன் திரும்பவில்லை. ஐந்து பெட்டிகள் நிறைய ரெடிமேட் ஆடைகள், அவை தயார் செய்ய துணி அனுப்பிய மில்களிலிருந்து சாம்பிள் துணிகள், தையல் மெஷின்கள், ஊசி, நூல் இவைபற்றிய விவரங்கள் எல்லாவற்றையும் கொண்டு வந்தாள். வேலை நேரம் போக எஞ்சிய நேரத்தில் ஆராய்ச்சியில் மூழ்கினாள்.

பாம்பே காட்கோபரில் ஒரு நவீனமான தையலகம் இன்னும் மனத்தில் உறைந்து போயிருந்தது.



ஒரு நீண்ட கூடம். இருமருங்கிலும் ஆண்களும், பெண்களும், தையல்மிஷின் கீதத்தில் மிதந்து கொண்டே தையலில் ஈடுபட்டிருந்தார்கள். இந்தக் கூடத்தை அடுத்து பல அறைகள். ஒவ்வொன்றிலும் ஒரு தையல் விற்பன்னர். சிற்பியின் கவனத்தோடு துணிகளுக்கு வடிவங்கள் கொடுத்துக் கொண்டிருந்தார். ஒவ்வொரு அறையின் முகப்பிலும் ஒரு சிறு பெயர்ப் பலகை. பலகைகளில், ப்ரா, மாக்சி, பெட்டிகோட், சூரிதார், ஷர்ட், பேண்ட், நிக்கர், ஷார்ட்ஸ், வெஸ்ட்ஸ் டி ஷர்ட் என்று எழுதப்பட்டிருந்தன. அவள் விவரங்களை அறிந்துகொண்டாள். தையலகத்தின் உரிமையாளர் ஒரு மலையாளி. இருபது பெண்கள் எட்டுமணி நேர ஷிப்டில் வேலை செய்கிறார்கள். ஒவ்வொரு ரக ஆடைக்கும் ஒரு தனி மாஸ்டர் டெயிலர். காஜா எடுக்க பத்து சிறுமிகளும், சிறுவர்களும். இஸ்திரி போட ஏழு பேர். ஒரு குஜராத்திக்காரர் மொத்தமாகத் துணி வாங்கி தையலகத்துக்கு அனுப்புகிறார். தயாரானதும் குஜராத்திக்காரர் பாக்கிங் செய்ய எடுத்துக் கொண்டுபோய்விடுகிறார். அதன்பிறகு ஏற்றுமதி. இந்த குஜராத்திக்காரருடைய பெயர் சிமன்பாய்.

ஏற்றுமதி செய்யும் குஜராத்திக்காரரை ஆனந்தி சந்தித்தாள் தன் நோக்கத்தை வெளியிட்டாள்.

"எனக்கு மேலும் விஸ்தரிக்க வேண்டும் என்றுதான் ஆசை. ஆனால் என் பிள்ளைகள் மூணுபேரும் அமெரிக்காவில் இருக்கிறாங்க. அவர்களுக்கு இதில இஷ்டமில்லை. நீங்கள் ஏன் என்னுடைய ஆர்டர்களை மெட்ராசில் இருந்துகொண்டு நிறைவேற்றக்கூடாது? என்று கேட்டார் அவர்.

"அப்புறம் நான் எப்படி சார் எக்ஸ்போர்ட் பண்ண முடியும்?"

"என் மூலயாகச் செய்தால் என்ன நஷ்டம்? நீங்க என்ன லாபம் எதிர்பார்க்கறீங்களோ அதை நான் தர்றேன் போதாதா!" என்றார் சிமன்பாய்.

''போதாது சார். எனக்கு வரக்கூடிய இம்போர்ட் லைசன்ஸ் நஷ்டமாகிவிடுமே! அதுவுமில்லாம மெட்ராஸ்ல லேபர் காஸ்ட் குறைச்சல். நான் நேரடியாக ஏற்றுமதி செய்தால் லாபமும் அதிகம்.''

''உங்க சரக்கை எங்கெங்கெல்லாம் அனுப்புறதாக உத்தேசம், மிஸ். ஆனந்தி?'' என்று சிமன்பாய் கேட்டார்.

''நீங்க ஒரு யானை. நான் ஒரு பூனை. நிச்சயமா நமக்குள்ளே போட்டிக்கு இடமில்லே. அதனால ஒரு சின்ன ரிக்வெஸ்ட். எந்தெந்த நாடுகளுக்கு நீங்க எக்ஸ் போர்ட் செய்யறீங்கன்னு சொல்லுங்க. அப்புறம் அங்கே உங்களுடன் தொடர்பு வைச்சுட்டிருக்கிற கம்பெனிகளின் பெயர்களைக் கொடுங்க... இந்த அணிலும் புரண்டு புரண்டு ஏதோ கொஞ்சம் மணலை உதறிப் போடட்டும்!'' என்றாள் ஆனந்தி.

''மிஸ் ஆனந்தி, எனக்கு அடுத்த வருசம் வயசு எழுபதாகப் போகிறது. இந்த ரெடிமேட் பிசினஸ்ல பதினஞ்சு வயசில ஒரு எடுபிடி ஆளா இருந்தேன். பம்பாய் நெருக்களிலெல்லாம் ஒரு கைவண்டியில் ஏழைகளுக்காக தைச்ச ஆடைகளை வைச்சு அலைஞ்சிருக்கேன். இப்படி ஆரம்பிச்சவன் மெல்ல மெல்ல, உழைச்சு உழைச்சு முன்னுக்கு வந்திருக்கேன். இந்த காலக்கட்டத்தில எத்தனையோ பிசினஸ்மேன்களைப் பார்த்திருக்கேன்; பேசியிருக்கேன். ஆனா, என் முகத்தைப் பார்த்து எந்தச் சூதும் வாதும் இல்லாம கபடம் இல்லாம இப்ப விவரங்கள் கேட்டாயே, அது என்னை ரொம்பவும் நெகிழ வைச்சுட்டுது ஆனந்தி. இன்னொருத்தனா இருந்தா, என் கம்பெனியில வேலை செய்யிற ஆள் யாராவது ஒருவனுக்கு லஞ்சம் கொடுத்து விவரங்களைத் திரட்டியிருப்பான்... எல்லா டீடெயிலும் தர்றேன். அப்புறம் நான் அனுப்பற ஆடைகளோட சாம்பிள்களும் தர்றேன்.''



''ரொம்ப தாங்க்ஸ் சார்.''

''முக்கியமா ஒண்ணு இருக்கு.''

''என்ன சார் அது?''

''தையல் மிஷின்கள்.''

''ஜெர்மன் மிஷின்தானே உசத்தி சார்.''

''நீ இப்போதைக்கு எத்தனை வாங்கறதா இருக்கே?''

''பத்து.''

''போதாது. இருபதா வாங்கு.''

''நிதி வசதி அவ்வளவு இல்லையே? இம்போர்ட் லைசென்ஸ் பல லட்சங்களுக்கு இருக்கு. ஆனா, உடனடியா முதலீடு செய்ய...''

''டோன்ட் வொர்ரி... கத்தரிக்கோல் பல இனுசுகள் தேவைப்படும். இங்கிலாந்தில்தான் ரொம்ப பிடித்தமான கலர் நூல் கிடைக்கிறது. ஜெர்மனியில மிஷின். காஜா எடுக்கறப்ப ஆள்காட்டி விரல்லே இருக்கிற திம்பிளைக் கூட நீ வெளிநாட்டுல வாங்க நான் உதவி செய்யறேன்... பதிலுக்கு...''

''பதிலுக்கு என்ன சார்...''

''எனக்காக சில ரெடிமேட் ஆடைகள் தயார் செய்ய நீ ஒத்துக்கணும். உன் ஆடைகள் உன் இஷ்டம்போல மானுபாக்சர் ஆகட்டும். சில சமயங்களில் சில நெருக்கடிகள் ஏற்படும். அதை சமாளிப்பது ரொம்பக் கடினமா இருக்கும். அப்ப நீ எனக்கு உதவியா இருப்பாய்.''

''நோ ப்ராபளம் சார்.''

''ரொம்ப தாங்க்ஸ்... இன்னும் ஒரு மாதத்தில் மிஷின் வரும். இடத்தைத் தயார் செய்துகொள்.''

''இடம் ஏற்கனவே ரெடி!'' என்ற ஆனந்தி தன் வீட்டுக்குப் பின்னால் கார் ஷெட்டுக்குமேல் கட்டியிருக்கும் இரண்டு மாடிக் கட்டிடத்தை வர்ணித்தாள்.

''ஒருநாள் வந்து பார்க்கிறேன்.''

''அதோடு நிற்கக் கூடாது சார்! எங்க வீட்லேயே கெஸ்டா தங்கவும் தங்கணும்.''

சிமன்பாய் சிரித்தார்.

நான்கு ஆண்டுகளுக்கு முன் இப்படி ஆரம்பித்த ரெடி மேட் ஆடை ஏற்றுமதி வியாபாரம் ராட்சசன்போல வளர்ந்தது.

ஆனால் இப்போது, திடீரென ஒரு பிரச்னை.

சிங்கப்பூர் ஹாங்காங் மற்றும் கோலாலம்பூருக்கு குறித்த நாட்களுக்குள் ஆடை போய்ச் சேர்ந்தாக வேண்டும். ஆனந்தி தைரியமாக இருந்தாள். அபயம் அரண்டு போயிருப்பது அவளுக்கு ஆச்சரியமாகவும் இருந்தது.

திடீரென்று ''அக்கா'' என்ற குரல் கேட்க, அபயம், திடுக்கிடாமல் முகத்தை உயர்த்திப் பார்த்தாள். சுவர்க் கடிகாரம் மணி ஐந்தரை என்று காட்டியது. எப்படி அபயம் காபி, டிபனைக்கூட மறந்தாள்.

''என்ன ஆனந்தி?''

''நாம ஜெயிச்சுட்டோம், அக்கா.''

''விவரமாச் சொல்லு.''

''மெட்ராஸ்ல ஒரு ஹோல்சேல் துணிக்கடைக்காரர் பத்தில ஒரு பங்கு உதவி செய்யறார். சிமன்பாய் தொண்ணூறு சதவீதம் உதவி செய்ய ஒத்துக்கிட்டார். என்னை உடனே பாம்பே வரும்படி சொல்லியிருக்கார்.''

''அப்ப... நான் அவசரப்பட்டு சிங்கப்பூர், ஹாங்காங் எல்லாம் போய் அவங்க காலைப் பிடிக்க வேண்டாம்னு சொல்லு.''



''நான் நாளைக்கு மார்னிங் ப்ளைட்ல பாம்பே போறேன். அங்கிருந்து மறுபடியும் இதுபத்தி டெலி போன்ல பேசறேன் அக்கா.''

''யூ ஆர் க்ரேட் ஆனந்தி!'' என்ற அபயம், ''இங்கே யார் பத்து சதவீத உதவி செய்யறாங்க!''

''காபி, டிபன் சாப்பிட்டுவிட்டு சொல்றேன்... உனக்குக் கேட்க சுவாரசியமா இருக்கும்!'' என்றாள் ஆனந்தி.

அபயம் கண்களெல்லாம் அன்பு சொரிய தங்கை யையே பார்த்தவளாய் உறைந்துபோனாள்.

## 5

இரண்டாவது உலக யுத்தம் ஐரோப்பாவில் 1939ஆம் ஆண்டு தொடங்கினாலும் அதனுடைய கடுமையான விளைவுகள் இந்தியாவில் 1942க்குப் பிறகுதான் எதி ரொலிக்கலாயின. ஒரு பக்கம் ஜப்பானுடைய அச் சுறுத்கல். இன்னொரு பக்கம் உள்நாட்டுப் பூசல்கள். ஆங்கிலேயனால் கால் ஊன்றி நிற்கவும் முடியவில்லை; கையை உதறி ஓடிவிடவும் முடியவில்லை.

காசு கொடுத்தாலும் அத்தியாவசியப் பண்டங்கள் தேவைக்கேற்றபடி கிடைக்கவில்லை. கள்ள மார்க்கெட் அவதாரம் செய்த இந்த பொற்காலத்தில் ரேஷன் பிடியில் மக்கள் கட்டுண்டார்கள். பெட்ரோல் வேண்டுமா? ஒரு மாதத்துக்கு இவ்வளவு காலன். சர்க்கரையா? இத்தனை ராத்தல். அரிசியா? இத்தனை பட்டணம் படி.

துணிகளுக்கும் பஞ்சம்.

பின்னி மில் தயாரித்த ஷர்ட் மற்றும் பேன்ட் துணிகள் எளிதில் கிடைக்காது. வெள்ளை வெளேரென்ற மேட்டூர் மல்லைப் பார்ப்பது அரிதாகியது. ஒரு கெஜம் மல் வாங்க வேண்டுமா? கூட நாலு கெஜம் காடா துணி வாங்கினால் கிடைக்கும்!

இந்தக் கால கட்டத்தில் பாய்க்கடையைத் தாண்டி, துணிக்கடைகள் ஆரமபிக்கும் இடத்தில், ஒரு சிந்திக்காரனிடமிருந்து மிகவும் தைரியமாக காலியாகக் கிடைத்த கடை ஒன்றை லால்குடி சாம்பசிவம் வாங்கினார். பக்கத்திலிருந்த கடைகளில் சிலவும் விலைக்கு வரவே, மலிவான விலையில் வாங்கிப் போட்டார்.

1942ஆம் ஆண்டு இறுதியில் அவர் வாங்கிய ஐந்து கடைகளுக்கும் செலவு செய்த தொகை பன்னிரெண்டாயிரம் மட்டுமே. சென்னை குண்டு வீச்சு பயத்தில் காலியாகிக்கொண்டிருக்கிறது. தைரியமற்றவர்கள் ஓடிக்கொண்டிருக்கிறார்கள். கிடைத்த வரையில் போதும் என்று வீடு, நிலம், கடைகள் எல்லாம் விற்றுப் போகின்றன.

லால்குடி சாம்பசிவத்துக்கு அப்போது வயது இருபத்திரண்டு. காவிரிப் படுகையில் முதன் முதலாக, திருச்சி ஜில்லாவில் கரும்பு பயிரிட்ட முக்கிய நிலச் சுவான்தார்களில் ஒருவர் லால்குடி சாம்பசிவத்தின் தந்தை. இரண்டாவது பிள்ளையாகப் பிறந்த சாம்புவை தாய்வழிப் பாட்டியும், தாத்தாவும் கொள்ளி போடப் பிள்ளை இல்லை என்ற ஒரே காரணத்துக்காக சுவீகாரம் எடுத்துக் கொண்டார்கள். தத்து எடுத்துக்கொண்ட வேளை சாம்புவைப் பொறுத்தமட்டில் பொன்னான வேளையாக இருந்தது. மறுமாதமே புது அம்மா, வாழைத் தோட்டத்தில் பாம்பு தீண்டி காலமானாள். இது நடந்த ஆறாம்



மாதம். திடீரென்று ஒருநாள் தாத்தாவின் (அதாவது புது அப்பா) வயிறு கர்ப்பிணியின் வயிறு போல காட்சியளித்தது.

இங்கிலீஷ் டாக்டர்கள் ட்ராப்சி என்றார்கள். சிர்ராசிஸ் என்றார்கள். லால்குடி மக்கள் மகோதரம் என்று சொல்லி தினசரி செம்பு செம்பாக நீரை வெளியே எடுத்துக் கொட்டினார்கள்.

வயிற்றில் ஓட்டை போட்டு நீரை எடுத்ததுதான் மிச்சம். ஒரு நல்ல நாளாகப் பார்த்து சுவீகாரம் எடுத்துக் கொண்ட தந்தை கண் மூடினார்.

அவர் போவதற்கு முன்னால் வெறும் நிலமும் வீடும் மட்டும் வைத்துவிட்டுப் போகவில்லை. லேவாதேவி வியாபாரத்தில் கிடைத்த லாபத்தையும் இரும்புப் பெட்டியில் நோட்டு நோட்டாகக் கட்டி வைத்திருந்தார்.

இருபது வயது முடிந்த சாம்பு எண்ணிப் பார்த்தான். மொத்தம் நாற்பத்திரண்டாயிரம். இருபத்திரண்டாயிரத்தை எடுத்து ஒரு பையில் போட்டான். மீதியை இம்பீரியல் பாங்கியில் முதலீடு செய்தான்.

மறுநாள் அவன் சென்னையில் இருந்தான். சொந்த தம்பி சட்டக் கல்லூரியில் படித்துக் கொண்டிருக்கவே தங்குவதற்கு சவுகரியமாக இடம் கிடைத்தது.

சாம்பு பி. ஏ. படித்தவன். எளிதாக மிலிடரியில் கணக்குப் பிரிவில் நாற்பத்தைந்தோ அல்லது அறுபதோ ரூபாயில் குமாஸ்தா வேலை கிடைக்கும். ஆனால் நிச்சயமாக சென்னையில் இராது. கோவை அருகே மதுக்கரை அல்லது பெங்களூர், ஜால்னா, ஹரிஹர், பூனா போன்ற இடங்களுக்குத்தான் போகவேண்டி வரும்

கைகட்டி சேவகம் செய்ய சாம்புவுக்குப் பிடிக்கவில்லை.

தத்து எடுத்துக்கொண்டவருடைய லேவாதேவித் தொழிலும் கசந்தது. மற்றவர்களை வயிற்றில் அடித்துக் கிடைக்கும் பணம் செரிக்காது என்று நினைத்தான்.

சிறு வயதிலிருந்தே துணிக்கடை என்றால் அவனுக்குப் பிடிக்கும். ஏன் அந்த வியாபாரம் செய்யக்கூடாது?

ஐந்து துணிக்கடைகளில் நான்கைப் பூட்டிப் போட்டுவிட்டு ஒரு கடையில் வியாபாரத்தை சாம்பு தொடங்கினான்.

பணபலம் இருந்ததால் பின்னி காலிகோ, அர்விந்த், மேட்டூர் மற்றும் மதுரை மில்துணிகளை விற்க ஏஜன்சி உரிமை கிடைக்கலாயிற்று.

யாரிடமும் நிர்ணயித்த விலைக்குமேல் ஒரு காலணா அதிகம் வாங்காதவர் என்ற பெயரை சாம்பு அதி சீக்கிரத்தில் சம்பாதிக்கவே, வியாபாரம் பெருகியது.

யுத்தம் முடிவதற்குள் அவர் ஒரு லட்சாதிபதி ஆனார். ஐந்து கடைகளை தம் ஐந்து பிள்ளைகளுக்குப் பகிர்ந்து கொடுத்துவிட்டு, இப்போது எழுபத்தைந்தாவது வயதில் நிம்மதியாக இருக்கிறார்.

இந்த சாம்பசிவத்தின் ஒரு பேரன் சிவா. மற்ற பேரன்களைப் போல அவன் ஒரே மில்லில் தயாராகும் துணிக்கு ஏகபோக உரிமை வாங்கிக் கொள்ளவில்லை. ஒருநாள் திடீரென்று பம்பாய்க்கு ரயிலேறுவான். அங்கிருந்து அகமதாபாத்துக்கு பஸ்ஸிலோ அல்லது ரயிலிலோ செல்வான். மில் மில்லாக அலைந்து, மலிவான விலைக்கு ரொக்கம் கொடுத்து வாங்குவான். அவனுடைய இந்தப் போக்கை பார்த்த சில மில் அதிபர்கள் சிவாவுக்கு தனி சலுகைகள் அளித்தார்கள்.



தந்தை ராமாமிர்தம் கடையில் உட்கார்ந்திருக்க, ஒரே பிள்ளை சிவா பாம்பே, அகமதாபாத் என்று அலைந்து திரிந்து கொண்டிருந்தான். வியாபாரம் தலைகால் புரியாமல் வளர்ந்தது.

ஒருநாள் காலை பத்து மணி.

ராமாமிர்தம் கடையில் உட்கார்ந்திருந்தார். சிவா மொத்த வியாபாரத்தில் மட்டுமே கவனம் செலுத்தியதால், கடையில் ஆள் கூட்டம் இல்லை

ஒரு பெண் அவரை நோக்கி முன்னேறி வந்தாள்.

ராமாமிர்தத்துக்கு எதிரே இருந்த காலி நாற்காலியில் உட்கார்ந்தாள். இதை அவர் ரசிக்கவில்லை. இருப்பினும் பொறுத்துக்கொண்டார்.

''சார், உங்ககிட்ட நான் நேரடியா வர்றது இதான் முதல் தடவை. சாதாரணமா என்னுடைய ஆள் கோபாலி வருவான்...''

''அப்படீன்னா...நீ...நீ நவநீதத்தோட பொண்...! அபயம் அப்பளம்ஸ்... அபயம் அண்ட் ஆனந்தி எக்ஸ்போர்ட்டர்ஸ் லிமிடட்...டேய் கஜபதி, ஜில்லுன்னு ஒரு பெப்சி வாங்கிட்டு வாடா...''

''சார்...பெப்சி இப்ப வேண்டாம்... சாம்பிள் துணியெல்லாம் கொண்டு வந்திருக்கேன். என்னென்ன மில்லும் எழுதியிருக்கேன். உங்களால சப்ளை செய்ய முடியுமான்னு பாருங்க...''

''எல்லாம் பேல் பேலா அடுக்கி வைச்சிருக்கும்மா... உன் பேரு...?''

''ஆனந்தி...எந்த பேல்ல என்ன துணி இருக்குன்னு தெரியாதா சார்?''

''எனக்குத் தெரியாதேம்மா...கொஞ்சம் இரு...இந்தா சிவா...இங்க வாயேன்...''

''என்னப்பா...''

''இவ அபயம் அண்ட் ஆனந்தி எக்ஸ்போர்ட்டர்ஸ் லேர்ந்து வந்திருக்கா... என்னமோ துணியெல்லாம் வேணு மாம்... நீ பாரேன்...''

''நான் சிவா... நீங்க அபயமா இல்லே ஆனந்தியா அல்லது அந்தக் கம்பெனியில வேலை செய்யிற பெண்ணா?''

''வேலை செய்யிற பெண்ணுன்னே வைச்சுக்குங்க மிஸ்டர் சிவா. இப்ப அர்ஜென்டா தேவைப்படுற துணி கள் இருக்கா இல்லியான்னு நீங்க பார்த்துச் சொல்லிட்டா நான் இடத்தைக் காலி பண்ணிடுவேன்...''

''சரி, சாம்பிளைக் கொடுங்க.''

ஆனந்தி நீட்டினாள்.

''கொஞ்சம் உட்காருங்க...''

உட்கார்ந்தாள்.

அரைமணி நேரத்துக்குப் பிறகு சிவா வந்தான்.

''எல்லா சாம்பிள் துணிகளுமே இருக்கு மேடம்... ஆனா, நீங்க கேட்கிற க்வான்ட்டிட்டி இராது...''

''ஓகே, தாங்க்யூ... இருக்கறதுக்கு பில் போடுங்க...''

''தாங்க்யூ... ஒரு வாரம் வெயிட் பண்ண முடியும்னா நான் மீதிக்கும் ஏற்பாடு செய்துடுவேன்...''

''அவசியம் ஏற்பட்டா ஷ்யூரா இன்னிக்கு சாயங் காலமே வருவேன். இப்ப சரக்கை உடனடியா அனுப்ப ஏற்பாடு செய்கிறீர்களா?''

''ஷ்யூர்...''



18601
3514168

''தாங்க்யூ...''

சொன்னவள் வெளியே வந்தாள்.

சிங்கப்பூருக்கு அனுப்ப வேண்டிய ரெடிமேட் ஆடை கள் குறித்த நேரத்தில் போய்விடும்.

இப்போது கிடைத்திருக்கும் துணியை வைத்துக் கொண்டு பாதி அளவுக்குமேல் கோலாலம்பூரையும் திருப்தி செய்துவிடலாம். ஆனால், ஹாங்காங்?

என்ன செய்ய?

உடனே விரைந்தாள். ஜி. பி. ஓ.வில் எஸ். டி. டி வசதி எளிதாகக் கிடைக்கும்.

சிமன்பாய் உடனே கிடைத்தார்.

ஆனந்தி தன் நிலைமையை விவரித்தாள்.

''உடனே சாம்பிளோட புறப்பட்டு வா ஆனந்தி.''

''சாம்பிளை கூரியர்ல அனுப்பிட்டா பத்தாதா?''

''நோ...நீ உடனே வா... எங்கெங்கெயெல்லாம் அலையணுமோ யார் கண்டாங்க...''

''ஓ கே சார்...நாளை மார்னிங் ப்ளைட்ல வர்றேன்.''

''நான் காரை அனுப்பறேன். நேரா ஜு ஹூவுக்கு வந்துடு என் ஒய்புக்கு உன்னைப் பார்க்கணுமாம் போன வாட்டி வந்தப்ப நீ அவகிட்ட சரியா பேசலேன்னு குறை...''

''ஓ கே தாங்க்யூ...''

ஆனந்தி தான் ஜெயித்துவிட்டதான எண்ணத்தில் பூரித்துப்போய் வீடு திரும்பினாள்.

''இதான் அக்கா நடந்தது.''

''குட்...நாளைக்கு நீ பாம்பே போ...நான் என் டூரை கான்சல் செய்யறேன்...''

"அவசரப்படாதே அக்கா...ஒரு வேளை பாம்பேயில கிடைக்கலேன்னா?"

"எப்படியும் இப்ப சிங்கப்பூர் வரை ஓகே தானே? அப்புறம் மலேசியா கொஞ்சம் பாக்கி. ஹாங்காங் பத்தி இப்பவே ஏன் கவலைப்படணும்...அதான் நாப்பது நாள் இருக்கே?"

"பாம்பேயும் இருக்கு. அங்கே சிமன்பாயும் இருக்கார்." என்றாள் ஆனந்தி.

அன்று இரவு ஏழு மணிக்கு அபயத்தின் தாயார் குஞ்சரத்தை அவளுடைய நீண்ட நாளைய சிநேகிதி ருக்கு பார்க்க வந்தாள். கூடவே அவளுடைய கணவர் ஜோசியர் கிட்டாமணியும் வந்தார்.

கிட்டாமணிக்கு ஜாதகப் பொருத்தம் மட்டுமே பார்க்கத் தெரியும். அனாவசியமாக ஜாதகம் பார்த்து, கடந்த காலத்தைப் பற்றிக் கூறமாட்டார். ஏனெனில் தெரியாது. ஆனால் எதிர்காலத்தில் எந்தெந்த கிரகங்கள் என்னென்ன விஷமங்கள் செய்யக்கூடும் என்பதை ஒருவாறு ஊகித்துச் சொல்லுவார். ராமாமிர்தத்தின் பிள்ளை சிவாவின் ஜாதகம் அபாரமாகப் பொருந்தி உள்ளது என்றார் அவர்.

"உங்க பொண் ஆனந்தியை ராமாமிர்தத்துக்கு பிடிச்சுப் போயாச்சு பாகவதர் சார்!"

"ரொம்ப சந்தோஷம். என் பொண்களை எந்த கழுதைக்கும் பிடிக்கும். அது சரி, என் பொண்ணைப் பார்க்காமலேயே எப்படிப் பிடிச்சுது கிட்டாமணி?"

"இன்னிக்கு ஆனந்தி அவங்க கடைக்குப் போயிருக்கா ...எக்கச்சக்கமா, ரெண்டு லட்சம் ரூபாய்க்கு துணி வாங்கியிருக்கா..."



"அப்படியா, எனக்குத் தெரியாதே!" என்றாள் குஞ்சரம்.

"உனக்கு எப்படித் தெரியமுடியும் குஞ்சு? அவதான் உன்கிட்ட சொல்லலியே!"

"ஆனா ஆனந்திக்கு இந்த சிவாதான் புள்ளைன்னு தெரிய நியாயமில்லை!" என்றாள் ருக்கு.

"அதுவும் வாஸ்தவம்தான்."

"ஆனந்திக்கு பிடிச்சுப் போனாலும் இப்ப என்ன செய்ய முடியும் குஞ்சு? அபயத்தை அந்தப் பிள்ளை இன்னும் பார்க்கவே வரலே..."

"செவ்வாய்க்கிழமை மத்தியானம் வரலாம்னு அபயம் சொல்லிட்டா..."

"அப்படியா? பரவாயில்லையே...ஊறுகாய் வியாபாரியை அப்பள வியாபாரிக்கும் பிடிச்சுட்டா கல்யாணத்தை ஜாம் ஜாம்னு நடத்திடுவோம். அப்பாவும் வாரா வாரம் கும்பகோணத்திலேர்ந்து டெலிபோனில் தொண தொணக்கமாட்டார்..." என்ற பாகவதர். "புள்ளை பேர் என்னன்னு சொன்னே கிட்டாமணி?" என்றார்.

"சிவா..."—கிட்டாமணி.

"நான் அவனைச் சொல்லலே."

"ரவிசந்திரன்."

"பேர் அழகா இருக்கு. ஆள் எப்படியோ?"

"ராஜகுமாரன் மாதிரி இருப்பான்."

"உன் கண்ணுக்கு நீ கொண்டுவர்ற வரன் எல்லாம் ராஜகுமாரன் மாதிரித்தான் இருப்பான். அபயம் சரின்னு சொல்லணுமே!"

"என்னப்பா என் பெயர் அடிபடறது?"

கேட்டுக்கொண்டே அபயம் வந்தாள். பிறகு "அம்மா, நான் என் மனசை மாத்திக்கிட்டேன்!", என்றாள்.

"என்னடீ, இப்படி திடீர்னு குண்டைத் தூக்கிப் போடறே?" என்றாள் குஞ்சரம்.

கிட்டாமணியும் ருக்குவும்கூட அயர்ந்துபோனார்கள்.

# 6

அந்த செவ்வாய்க்கிழமை பிற்பகலில் பிள்ளை வந்து பார்க்கத் தடையில்லை என்று அம்மாவிடம் கூறிய அபயம், தங்கை ஆனந்தியுடன் தனியாகப் பேசினாள்.

"உனக்கும் எனக்கும் அம்மா அப்பா ரொம்ப சீரியசா வரன் பார்க்கிறதா ஆனந்தி." என்றாள் அபயம்.

"தெரியுமே, உனக்கு ஊறுகாய் ரவி, எனக்கு துணிக் கடை சிவா" சொல்லிவிட்டு ஆனந்தி சிரித்தாள்.

"இந்த ரவி என்னைப் பெண் பார்க்க இந்த செவ்வாய் வரப்போறான்."

"அதுவும் தெரியும்."

"உன்னை எப்ப அந்த சிவா பார்க்க வர்றானாம்?"

"சிவா செவ்வாய்க்கிழமை வருவான். உன் இஷ்டம் போல நீ அவனைக் கல்யாணம் பண்ணிக்கணும்.' என்றாள் ஆனந்தி.

"ஆனந்தி, நானும் சிவாவும் அஞ்சு வருசமாப் பழகிட்டு வர்றது இந்த வீட்ல உனக்கு மட்டும்தான் தெரியும். ஈசுவரி, உத்யாவுக்குக்கூடத் தெரியாது."



"இனிமேலும் பகிரங்கமாச் சொல்லணும்ங்கிற அவசியம் இல்லே அக்கா."

"நீதான் சிவாவின் துணிக்கடைக்குப் போயிருக்கியே, ஆள் எப்படி?"

"உன் பேச்சுக்குக் கட்டுப்பட்டு நடக்கிற பிள்ளையாப் படறான்..."

"விளையாடாதே ஆனந்தி. அவன் பெரிய செஸ் பிளேயர். இன்டர்காலேஜ் செஸ் போட்டிகளில் மூணு வருசம் அவன்தான் சாம்பியன்."

"நம்ப ரெண்டுபேர் கல்யாண விசயமும் ஒரு செஸ் போர்ட் மாதிரி ஆகியிருக்கு பார்த்தாயா?"

"எப்படிச் சொல்றே ஆனந்தி?"

"இந்த சிவா என் கழுத்தில தாலி கட்டணும்னு அம்மா துடிக்கிறா. ஆனா என் இடத்தில நீ உட்காரப் போற... செஸ் பலகையில ராணி இடம் மார்றது!"

"எல்லாம் சரிதான்... ஆனா எப்படி ரவி வராம பார்த்துக்கறது? ரெண்டுபேரும் ஒரே சமயத்துல வந்துட்டா?"

"அது எப்படி சாத்தியம் அக்கா?"

"ஏன் சாத்தியம் இல்லை? இந்த ஜோசியர் கிட்டாமணி ரவியோட மாமாவைப் பார்த்துச் சொல்லிடுவார். அவரும் அவர் மனைவியும் ரவியை அழைச்சுட்டு வந்துடுவாங்க... நீ ருக்கு மாமியைப் பார்த்து சிவா வர்றதுக்கு ஏற்பாடு பண்ணப்போற..."

"கவலையை விடு. ரவி மூணு மணிக்கு வரும்படி ஏற்பாடு செய்கிறேன். அவனைப் பத்தின தகவல் எல்லாம் சேகரித்து வைத்தாச்சு. அவன் உன்னை பார்க்க வர்றபடி வரட்டும். அதாவது ராகு காலத்தில் இல்லாம, செவ்வாய்க்

கிழமை இல்லாம புதன் அன்னிக்கு வரட்டும். நானும் பாம்பேயில இருப்பேன். சிவா அதே புதன்கிழமை சாயங் காலம் ஆறு மணிக்கு வருவான். உன் சிங்கப்பூர் ட்ரிப் தான் கான்சலாகிவிட்டதே...''

''எதுக்கும் நீ சிவாகிட்ட முன்கூட்டி ஒரு வார்த்தை சொல்லி வைச்சுடு''

''ஷ்யூர். இன்னிக்கு சாயங்காலமே மறுபடியும் பார்த்துடறேன்... கார்த்தால போனப்ப நான் யார்னு அவன்ட்ட சொல்லிக்கலே...''

''ஆமா சிவாவுக்கு உன்னைத் தெரியும். தெரிஞ்சதாக் காட்டிக்கலை, அவ்வளவுதான்!'' என்றாள் அபயம்.

இந்தப் பேச்சு முடிந்த பிறகுதான் கிட்டாமணி தம் மனைவி ருக்குவுடன் வந்தார்.

குஞ்சரம் இரண்டாவது தடவையாக, ''என்னடீ, இப்படி ஒரு குண்டைத் தூக்கிப் போடறே?'' என்று கேட்டாள். அவளுக்கு ஒரு குண்டு போதவில்லை.

''நான் என்ன சொல்லிட்டேன் அம்மா! என் மனசை மாத்திக்கிட்டேன்னேன் அவ்வளவுதானே?'' என்றாள் அபயம்.

''எளிதா சொல்லிட்டே... படாதபாடு பட்டு, உன் மூல நட்சத்திரத்துக்கு ஏத்தபடி சல்லடை போட்டு சலித்து ஒரு அழகான பிள்ளையை கண்டுபிடிச்சு கொண்டு வந்திருக்கோம். நீ என்னடான்னா, மனசை மாத்திக்கிட்டேன்னு பல்லிலே நாக்கு படாமச் சொல்றே... இது உனக்கே நன்னா இருக்கா அபயம்?'' என்றாள் குஞ்சரம்.

''இதப்பாரு குஞ்சு! அபிக்கு இஷ்டமில்லேன்னா நாம அவளை வற்புறுத்தப்படாது... அபி நீ உன் இஷ்டம் போல...''



''கொஞ்சம் நிறுத்துங்கோ... இருபத்தொம்பது நிறைஞ்சு முப்பது ஆரம்பிக்கப் போறது. இதுவும் கை நழுவிப் போயிட்டா நூறு கிட்டாமணி வந்தாலும் இப்படிப்பட்ட இடம் கிடைக்காது!''

''சரியாச் சொன்னே குஞ்சு!'' என்றாள் ருக்கு.

''ரவி ராஜகுமாரன் மாதிரி இருப்பான்னேன். அது மட்டுமில்லே, சாமர்த்தியத்துல அவன் ஒரு ஆஞ்சநேயன்: ஞானத்தில விதுரன். சாதுரியத்தில சாணக்கியன்...''

''அவ்வளவுதானா கிட்டாமணி சார்? பராக்ரமத்தில பீமன், ஓட்டப்பந்தயத்தில பி.டி. உஷா, கிரிக்கெட்ல கவாஸ்கர்... இதெல்லாம் இல்லியா?'' என்று சொன்ன அபயம் சிரித்தாள்.

பிறகு, ''நான் என்ன சொன்னேன் அம்மா? என் மனசை மாத்திக்கிட்டேன்னுதானே? ஆனா எந்த விசயத்திலேன்னு சொன்னேனா?'' என்றாள்.

''என்னடீ புதிர் போடறே?''

''நான் சிங்கப்பூர் போகலே... அதனால புதன்கிழமை ப்ரீ... அன்னிக்கு மூணு மணிக்கு என்னைப் பார்க்க வரட்டும்.''

''கார்த்தால மூணு மணிக்கு இல்லியே?'' என்றார் பாகவதர்.

''சொஜ்ஜி பஜ்ஜி என்ன வேணும்னாலும் பிள்ளைக்கும் கூட வர்றவங்களுக்கும் கொடு. ஆனா, நாலரை மணிக்குள்ளே அவங்க இடத்தைக் காலி பண்ணிடணும்.''

''அதை நான் பார்த்துக்கறேன்!'' என்றார் நவநீத பாகவதர்.

''அப்பாடீ, இப்பத்தான் எனக்கு போன உசிரு திரும்ப வந்தது!'' என்றாள் குஞ்சரம்.

''எல்லாம் என் போதாத காலம்'' என்றார் பாகவதர்.

''ஜோக் அடிக்கறீங்களா?' என்ற குஞ்சரம், ''கிட்டா மணி, அப்ப நீங்க அங்கே போய்ச் சொல்லிடுங்க... புதன் கிழமை மூணு மணிக்கு வரட்டும்.''

''அன்னிக்கு பஞ்சமி, சுவாதி. ரொம்ப விசேஷமான நாள். நான் இன்னிக்கே அங்கே போய்ச் சொல்லிடறேன்!'' என்ற கிட்டாமணி, பாகவதரைப் பார்த்து, ''ஆனந்தியை எப்ப பெண் பார்க்க ராமாமிர்தத்திடம் சொல்றது?'' என்று கேட்டார்.

''அவனும்—அதான் சிவாவும அன்னிக்கே வரட்டுமே... தனியா இன்னொரு நாள் சொஜ்ஜி பஜ்ஜி பண்ணுவானேன்?'' என்றார் பாகவதர்.

''சிவா ஆறு மணிக்கு வரட்டும் அப்பா!'' என்றாள் அபயம்.

''குட்... வெரிகுட்... கிட்டாமணி, அபி சொன்னாப்ல ராமாமிர்தம் ஆறுமணிக்கு வரட்டும் ''

''ரொம்ப சந்தோஷம் பாகவதர் சார். அப்ப நான் உத்தரவு வாங்கிக்கறேன்...''

''ஆகா.''

கிட்டாமணி நகரவில்லை.

''என்ன நிக்கறே கிட்டாமணி?''

''ரெண்டு வீட்டுக்கும் ஆட்டோவிலதான் போயாகணும்.''

''ஏன் பஸ் சவுகரியமில்லியோ... சரி சரி... குஞ்சு கிட்டாமணி கையில ஒரு நூறுரூபாய் கொடு. பாவம் ரொம்ப சிரமப்பட்டிருக்கான். கிட்டாமணி, பாக்கியை கல்யாணம் நிச்சயமானதும் ஜமாய்ப்போம்!'' என்றார் பாகவதர்.



மறுநாள் காலையில் ஆனந்தி பம்பாய்க்கு புறப்பட்டுச் சென்றாள்.

''எப்படீ திரும்புவே?''

''சொல்ல முடியாதும்மா. ஒருவேளை நாளை மறு நாளே வந்துடுவேன். காரியம் நினைச்சபடி முடிய லேன்னா நாலஞ்சு நாள் ஆனாலும் ஆகும்.''

''உன்னைப் பெண் பார்க்க புதன்கிழமை வரப் போறங்களே... நீ அப்ப இல்லாமப்போனா எப்படியடீ?''

''அபிட்டே சொல்லியிருக்கேன்.''

''புள்ளை உன்னைப் பார்க்கத்தானேடீ வர்றான்.''

''நீ வேலையை விடும்மா. நான் புதன்கிழமைக் குள்ளே வரப் பார்க்கிறேன். தவறினா, அவங்க வர்றபடி வந்து போகட்டும். அபி சமாளிப்பாள்.''

''நீங்களும் உங்க பிசினசும்!'' என்றாள் குஞ்சரம். அவளுடைய அலுப்பு முதலிலேயே பிரதிபலித்தது.

புதன் பிறந்தது. பெண் பார்க்கும் வைபவத்தைக் கண்டு கண்குளிர, தங்கைகள் ஈசுவரியும், உத்யாவும் வீட்டி லேயே இருந்தார்கள். இன்னும் பம்பாயிலிருந்து ஆனந்தி ஊர் திரும்பவில்லையே என்ற தாபத்தில் குஞ்சரம் ஆழ்ந்து போனாள்.

''ஏண்டீ அபயம், ஆனந்தி மத்தியானம் ப்ளைட்ல யாவது வருவாளா?''

''அவகிட்டேந்து போன் கூட இல்லை அம்மா.''

''இப்ப என்னடீ செய்யறது? அவளைப் பார்க்க அவங்க சாயங்காலம் ஆறு மணிக்கு வந்துடுவாங்களே. என்ன காரணத்தைச் சொல்லி சமாளிக்கறது?''

''நான் பார்த்துக்கறேன் அம்மா.''

சரியாக பிற்பகல் மூன்று மணிக்கு ஒரு கார் வந்து நின்றது.

"அவா வந்தாச்சு!" என்று குஞ்சரம் பரபரத்தாள்.

ஊஞ்சலில் அமர்ந்து, பன்னீர் புகையிலையை ரசித்துக் கொண்டிருந்த நவநீத பாகவதர், "கார்ல வர்றவா இறங்கி படியேறி வரட்டுமே!" என்றார்.

"உத்யா, அக்கா மாடியில இருக்கா. அவளைத் தயாரா இருக்கச் சொல்லு. போன தீபாவளிக்கு வாங்கின பட்டுப்புடவையை கட்டிக்கச் சொல்லு" என்றாள் குஞ்சரம்.

"இப்ப தான் மாடியிலேர்ந்துதான் அம்மா வர்றேன். அவ ஆபீஸ் ரூம்லே இல்லே. தன்னோட பெட்ரூம்லதான் இருக்கா. ட்ரஸ் பண்ணிட்டிருக்கான்னு நினைக்கிறேன்"

"நீ எதுவும் நினைக்க வேண்டாம். வேறு என்னத்தை யாவது கட்டிட்டு வந்து என் மானத்தை வாங்கப் போறா! நீ போய்ச் சொல்லு."

"சரிம்மா."

உத்யா மாடி ஏறுவதற்கும் ரவியும், அவனுடைய மாமா மாமியும் படி ஏறி வருவதற்கும் சரியாக இருந்தது. கூடவே கிட்டாமணியும் வந்தார்.

"வாங்கோ... வாங்கோ கடிகாரத்தில மூணு அடிச்சது, உங்க காரும் வந்து நின்னுது." என்றாள் குஞ்சரம்.

"எங்க ரவிக்கு பங்க்சுவாலிட்டின்னா உசிர். என் பேரு தங்கம்மா. ரவிக்கு மாமி." என்றவள், "இவர் தான் மாமா." என்றாள்.

நவநீத பாகவதர் இன்னும் ஊஞ்சலை விட்டு எழுந்திருக்கவில்லை

"வாங்கோ... வாங்கோ... உட்காருங்கோ."



"சார் தான் ரங்கராஜன்... ரவியோட மாமா..."

"நமஸ்காரம் சார்!" என்றார் ரங்கராஜன்.

"அய்யர் பேரு மாதிரி இல்லியே? அய்யங்கார் பேரு மாதிரி படறது?"

"அய்யங்கார் தான். ஆனா, தங்கம்மா அய்யர்."

"என்ன கிட்டாமணி இதை நீங்க சொல்லவே இல்லியே?" என்றாள் குஞ்சரம், அவளுடைய முகம் தளர்ந்துபோயிற்று.

"நம்ப பிராமின்சுக்குள்ளே இந்த அய்யர், அய்யங்கார், ராவ்ங்கற பேதமெல்லாம் இருக்கப்படாது. குஞ்சு! எல்லாம் சிவமயம், விஷ்ணுமயம்தானே? சிவன் யாரைக் கல்யாணம் பண்ணிண்டார்? பார்வதியை! அவ விஷ்ணுவோட தங்கை. விஷ்ணு தன்னோட ரெண்டு பொண்களையும் யாருக்கு தாரை வார்த்துக் கொடுத்தான்? நாமம் போடற புள்ளைகளுக்கா? இல்லியே? விபூதி பூசற முருகனுக்கு. சார் ரங்கராஜன், நான் உங்களை ரொம்ப பாராட்டறேன். அது சரி, நம்ப ரவி அய்யங்கார் பிள்ளை அவனோட அப்பா!" என்றார் பாகவதர்.

"சரியான ஸ்மார்த்தன் திருவாரூர் நீலகண்ட சாஸ்திரியோட பிள்ளை. பாவம் அகாலத்தில் காலமாயிட்டான். அவனோட தங்கைதான். இந்த தங்கம்மா!" என்றார் ரங்கராஜன்.

"புரியுது. ஒரே குடும்பத்தில கொடுத்து வாங்கிட்டிருக்கீங்க!" என்றார் பாகவதர்.

"கரெக்ட்... நானும் பிசினஸ்லதான் இருக்கேன்!"

"என்னவோ?"

"எக்ஸ்போர்ட்..."

"ஊறுகாய் தானே?"

''நோ... நோ... அது ரவியோட பிசினஸ்...''

''அப்ப உங்க பிசினஸ் என்னவோ?''

''ஹேர்.''

''ஹேர்னா... முயலா?''

''நோ நோ... தலைமுடி. முன்னெல்லாம் திருப்பதியிலேந்து நிறைய கிடைச்சுட்டிருந்தது. இப்ப பழனியோட மட்டும் நிறுத்திட்டிருக்கேன். அதுவும் வர வர டல்லாயிட்டு வர்றது.''

''எதானா என்ன, பணம் வந்தா சரி...'' என்றார் பாகவதர்.

''உங்க பெண்ணும் எக்ஸ்போர்ட் பிசினஸ்ல இருக்கான்னு கிட்டாமணி சொன்னார். அதுவே சரியான ரொம்ப நல்ல பொருத்தமாகப் பட்டது.''

''மொதல்ல எல்லாரும் டிபன் சாப்பிடலாம்!'' என்றாள் குஞ்சரம். என்னதான் பாகவதர், அய்யர் அய்யங்கார்களுக்குள் பேதம் இருப்பது சரியில்லை என்றாலும், அவளுடைய மனம் சஞ்சலப்பட்டது. அபயமாக ஒரு பிள்ளையை விரும்பி முன்வந்தால், அவளுடைய ஆசைக்கு குறுக்கே நிற்கக்கூடாது என்று ஜாதி வித்தியாசம் பாராமல் இருக்கலாம். ஆனால், முறையாக பெண் பார்த்து நிச்சயிக்கப்படுகிற கல்யாணத்தில், அதுவும் முதன் முறையாக குடும்பத்தில் நடக்கிற கல்யாணம் இப்படியா அமைய வேண்டும்? நிச்சயமாக வந்தவர்கள், அபயமாக மறுத்தால்தான் விமோசனம் உண்டு. ஆனால், அவள் மறுப்பாளா? பிள்ளை, கிட்டாமணி கூறியது போல, ஒரு ராஜகுமாரனைப்போலத்தான் இருக்கிறான். வயது முப்பத்துநாலு ஆகியும் முகத்தின் இளமை வாடவில்லை. தலை கரு கருவென்றிருக்கிறது. ஒருவேளை வெள்ளை நார்களை கறுப்பாக்கி வைத்திருக்கானோ?



உத்யாவும் ஈசுவரியும் டிபன் கொண்டு வந்தார்கள்.

''எங்கே உங்க பெண் அபயத்தைக் காணோம்?'' என்றார் ரங்கராஜன்.

பிள்ளை, ரவி மவுனமாக உட்கார்ந்திருந்தான். அவன் அபயத்தை ஏற்கனவே ஏற்றுமதியாளர் சங்கத்தின் பொதுக் குழுவில் ஒருமுறை பார்த்திருக்கிறான். அவளுடன் பேசவில்லை என்றாலும், அவள் தனக்கு மனைவியாக வாய்த்தால் எதிர்காலம் மிகவும் சிறப்பாக அமையும் என்று கணக்கு போட்டிருந்தான்.

''என்ன குஞ்சு, அபயம் இன்னுமா ட்ரஸ் பண்ணிட்டிருக்கா?'' என்று பாகவதர் கேட்டார்.

''உத்யா, அக்காவை அழைச்சுட்டு வா!''

போனவள் இரண்டாம் நிமிடமே திரும்பி வந்தாள்.

''அக்கா சிங்கப்பூரோடு பேசிட்டிருக்காப்பா... இதோ வர்றேன்னு கையைக் காட்டி கண்ணால சமிக்ஞை செய்து சொன்னா.''

''என் பொண்ணுக்கு எப்பப் பார்த்தாலும் பிசினஸ் பிசினஸ்தான். அவ மூச்சு விட்டாக்கூட அமெரிக்காவில கேட்கும்.'' என்றாள் குஞ்சரம். பிறகு, ''தங்கம்மா இன்னும் கொஞ்சம் அல்வா போடட்டுமா? நீ இன்னும் போண்டாவைத் தொடவே இல்லை!'' என்றாள்.

''உங்க பெண் எங்க வீட்டுக்கு வந்துட்டா அப்புறம் அவளோட வியாபார சுமையில பாதியை ரவி தாங்கிப்பான்.''

''அது பத்தி இப்ப என்ன ரங்கராஜன். ஒரு பிசினஸ் இன்னொரு பிசினஸ் கழுத்திலா தாலி கட்டப் போறது? மொதல்ல ரெண்டுபேரும் ஒருத்தரை ஒருத்தர் பார்த்துக் கட்டும். சம்மதம் தெரிவிக்கட்டும். யார் கண்டா, என் பெண் அபயம் இந்த பிசினசை மூடினாலும் மூடலாம்.

இல்லாமப் போனா தங்கைகள்ட்ட ஒப்படைக்கலாம்!'' என்று கூறிவிட்டு பாகவதர் ரங்கராஜன் மற்றும் ரவியின் முகங்களைப் பார்த்தார்.

சின்ன முகம் வெளுத்து வெளிறிப் போயிற்று.

பெரிய முகம் திடுக்கிட்டது.

திடீரென்று மாடிப் படியில் காலோசை கேட்டது.

பெண் பார்க்க வந்த மூன்றுபேரும் தலை நிமிர்ந்து பார்த்தார்கள்.

ஒருத்தி திடுக்கிட்டாள்.

ஒருவர் உள்ளே குமுறினார்.

ஒருவன்—ஆச்சரியமும் திகைப்பும் மேலிட உறைந்து போனான்.

அபயம் வந்து ரவிக்கு எதிரே ஒரு சோபாவில் உட்கார்ந்தான்.

## 7

அக்கா அபயம் ஐந்து ஆண்டுகளாக சிவாவுடன் பழகி வருவதை தங்கை ஆனந்தி ஒருத்தி மட்டுமே அறிவாள். மற்றவர்களுடைய அறியாமை காரணமாகத் தான், அவளுக்கும், ஆனந்திக்கும், வாழ்க்கை முடிச்சுப் போட ஏற்பாடுகள் நடந்துகொண்டிருக்கின்றன. சிவா, அந்த புதன்கிழமை மாலை ஆறு மணிக்கு ஆனந்தியை 'பெண் பார்க்க' வருவதாக முடிவாகிவிட்டது. அவனுடைய தந்தை ராமாமிர்தத்துக்கோ அல்லது தாயார் மதுரத்துக்கோ தங்களுக்கு மருமகளாக வரப்போகிறவள் நவநீத பாகவதருடைய மூத்த பெண் அபயம்தான், ஆனந்தி அல்ல என்று தெரியாது.



சிவாவை முன்கூட்டியே சந்தித்து தக்கபடி பேசி விடுவதாக அபயத்துக்கு ஆனந்தி வாக்களித்திருந்தாள். அதுவும் அன்று மாலை ஆறு மணிக்கு! காலையில் துணி வாங்கச் சென்றபோது, 'அவசியம் ஏற்பட்டா ஷ்யூரா இன்னிக்கு சாயங்காலமே வருவேன்' என்று வியாபார ரீதியில் சிவாவிடம் ஆனந்தி கூறியிருந்தாள். சிவாவுக்கு அவள் யார் என்று தெரிந்தும், ''நீங்க அபயமா அல்லது ஆனந்தியா அல்லது பணிபுரியும் சிப்பந்தியா'' என்று கேட்டிருக்கிறான். ஆனந்தியும் சளைக்காமல் பணிப் பெண் என்று கூறியிருக்கிறாள்.

இப்போது அவள் சிவாவை பணிப்பெண்ணாக சந்திக்கப் போவதில்லை. அவனுடைய எதிர்கால மைத்துனியாகப் பார்க்கப் போகிறாள்.

எதற்கும் போன் செய்துவிட்டுச் செல்லலாம் என்ற எண்ணத்தில் ரிசிவரை எடுத்தாள். டயல் செய்தாள்.

''ராமாமிர்தம் பேசறேன்... என்ற பதில் வந்தது.

''மிஸ்டர் சாம்பசிவம் இருக்காரா?''

''கொஞ்சம் இரும்மா... டேய் சிவா, யாரோ ஒரு பொண்ணு... உன்னை விசாரிக்கிறா...''

''இங்கே கனெக்ஷன் கொடுங்கோ... அலோ, சாம்ப சிவம் பேசறேன்.''

''உங்களை உடனடியா மீட் பண்ணணும்...''

''யார் நீங்க?''

''தெரிஞ்சவதான்...''

''எனக்கு ஆயிரம் பேரைத் தெரியும்.''

''நான் ஆயிரத்தையும் தாண்டியவ.''

''நீங்க யார்னு சொல்லலேன்னா போனை வைச்சுடுவேன்...''

''செஸ் விளையாடறவங்களுக்கு விசேசமான குணம் பொறுமைன்னு சொல்லுவாங்க... பாவம், உங்களுக்கு அது இல்லை போலிருக்கு... இன்னிக்கு கார்த்தால வந்தேனே, நினைவு இருக்கா, மிஸ்டர்...''

''அதாவது... அதாவது...''

''எஸ்... அபயம் அண்ட் ஆனந்தி எக்ஸ்போர்ட்ஸ்ல வேலை செய்யற ஒரு பெண்...''

''இன்னும் துணி தேவைப்படறதா?''

''நேரில் பார்த்து சொல்றேனே...''

''எப்ப வர்றீங்க...''

''இப்ப மணி அஞ்சரை... ஆறு மணிக்கு?''

''ஒகே...''

''என் ஆர்டர்சை நீங்க கவனமா செயல்படுத்தணும்.''

''மொதல்ல நீங்க வாங்க...''

ஆனந்தி ஆறு மணிக்குக் கடையை அடைந்தாள். சிவா அவளுக்காகவே காத்திருந்தவன் போல வாயிலைப் பார்த்த வண்ணம் அமர்ந்திருந்தான். தந்தை ராமாமிர்தம் ஐந்து நிமிடங்கள் முன்புதான் வீட்டுக்குப் புறப்பட்டுப் போனார்.

''என்ன கடையில யாருமே இல்லியா?'' என்று கேட்டுக்கொண்டே ஆனந்தி பிரவேசித்தாள்.

''ஏன் நான் இருப்பது தெரியலையா?''

''காலையில ஒரு பெரியவர் உட்கார்ந்திருந்தார். ரெண்டு மூணு சிப்பந்திகள் இருந்தாங்க. வியாபாரம் என்ன டல்லாயிடுத்தா?''

''இதப் பாருங்க மேடம், என் துணி வியாபாரம் டல்லா இருக்கா இல்லே ஜில்லுன்னு இருக்காங்கறது என் கவலை. நீங்க வந்த விசயத்தைச் சொல்லுங்க.''



''கார்த்தால ரெண்டு லட்சம் ரூபாய்க்கு ஆர்டர் கொடுத்திருக்கேன்... அதுக்காகவாவது இப்ப ஒரு வாய் காபி உபசாரம் செய்யலாம்.''

''நீங்க காபி சாபிடாமலா வந்திருப்பீங்க... வந்த விசயம்...''

''சரி, காபி வேண்டாம்... விசயத்துக்கு வர்றேன்... நீங்க யார்னு எனக்குத் தெரியும். நான் யார்னு உங்களுக்கும் தெரியும்... ஆனா, கண்ணாமூச்சி விளையாடறோம்...'' என்றாள் ஆனந்தி.

''கார்த்தால என்னோட அப்பா நீங்க யார்னு புரிஞ்சு கிட்டப்புறம் வீட்ல ஒரே கூத்தும் கும்மாளமும்தான்... அவருக்கு உங்களைப் பிடிச்சுப் போயிடுத்து. நானும் அதே மாதிரி சொல்லணும்னு எதிர்பார்க்கிறார்...''

''என் அப்பா வாய்க்கு வாய் சொல்லுவார், 'என் பெண்களை எந்தக் கழுதைக்கும் பிடிக்கும்'னு. ஆனா, புதன்கிழமை அன்னிக்கு நீங்க என்னைப் பெண் பார்க்க வர்றப்ப, நான் பாம்பேயில இருப்பேன்.''

''அபி சொன்னா.''

''எப்ப?''

''அஞ்சு மணி சுமாருக்கு.''

''அப்ப அவளே எல்லாத்தையும் பேசித் தீர்த்திருக்க வேண்டியதுதானே? என்னை ஏன் இப்ப இங்கே ஸ்பெசலா அனுப்பணும்...''

''நான் அவளுக்கு போன் பண்ணினப்ப அவ சொன்னா... நாங்க பிசினஸ் விசயமாப் பேசினோம்... பாம்பேயில சிமன்பாயை சந்திச்சு அவர் மூலமா பாக்கி துணியை வாங்கிட்டு வர நீங்க நாளைக்கு...''

''ஓகே...இப்ப நான் எதுக்கு வந்திருக்கேன்னா...''

''சொல்லுங்க...''

''என் அக்காதான் புதன்கிழமை அன்னிக்கு உங்க முன்னால நிப்பா... அபயத்தைப் பிடிச்சுடுத்துன்னு எல்லார் முன்னிலையிலேயும் அப்பவே சொல்லிடணும்.''

''சொல்லலேன்னா?''

''உங்க ரெண்டுபேர் கலியாணமும் நடக்காது.''

''அது எப்படி மிஸ் ஆனந்தி?''

''என் அப்பா தாம்தூம்னு குதிப்பார். நாங்க இப்படி ஒரு டிராமா போடறது அவருக்குத் தெரியாது. நீங்களும் அபயமும் பரஸ்பரம் பிடிச்சுடுத்துன்னு சொல்லிட்டா, அப்புறம் அப்பா குறுக்கே வரமாட்டார். உங்க பக்கத்தி லேயும் யாரும் குறுக்கே வராம பார்த்துக்குங்க...''

''எப்படி உங்க அப்பா ஒத்துப்பார்னு சொல்றீங்க? பெண் நீங்க பார்க்க வர்ற பிள்ளைன்னுதானே அவர் நினைச்சுட்டிருக்கார்...''

''இதை அபயம் பொறுப்பா கவனிச்சுப்பா... நீங்க வரவேண்டியது... அபியை பார்க்க வேண்டியது...டிபன், காபி ஏதேனும் தந்தா அதை சாப்பிட வேண்டியது... அப்புறம், 'ஓகே'ன்னு சொல்லவேண்டியது... புரிஞ்சுதா... எனக்கு டயமாறது...''

''ஓகே... ஆனா, ஒரு சந்தேகம்...''

''என்ன?''

''அபயமும் நானும் ரொம்ப நாளாப் பழகிட்டு வர்றது இதுவரை உன் அப்பாவுக்கு தெரியாது. அன்னிக்கு சொல்லிடலாமா?''

''இதையும் அபயம் கவனிச்சுப்பா...''

''அப்ப நான் கவனிப்பதற்கு என்னதான் இருக்கு மிஸ் ஆனந்தி?''



''டிபன், காபி தந்தா அதை நல்லா கவனிச்சுக்கலாம்... அப்ப நான் வர்றேன்...''

ஆனந்தி எழுந்தாள்.

''கொஞ்சம் இருங்க, மிஸ். ஆனந்தி!'' என்று சிவா நிறுத்தினான்.

''என்ன சார்?''

''டிபன், காபி தந்தா, டிபன், காபி தந்தா'ன்னு ரெண்டு வாட்டி சொன்னீங்க... இதுக்கு என்ன அர்த்தம்? ஒருவேளை டிபன், காபி தராமலும் இருக்கலாம்தானே? என் அம்மா, அப்பா ரெண்டுபேருக்கும் முறையா நான் ஸ்வீட் காரத்தோட உபசாரம் செய்யலேன்னா எங்க எதிர்காலமே இருட்டிப் போயிடும்...''

''வெளிச்சமா இருக்க வழி பண்றேன், போதுமா சார்.''

''எனக்கும் ஸ்வீட் பிடிக்கும்.''

''இங்கே ஒரு காபிக்கு வக்கு இல்லே, வழி இல்லே... எங்க வீட்ல ஸ்வீட் மட்டும் வேணுமாக்கும்?''

சிவா சிரித்தான்.

''ஸ்வீட் மட்டுமில்லே மிஸ். ஆனந்தி! அபயமும் தான்...''

ஆனந்தி மறுநாள் காலை பம்பாய்க்கு விமானம் ஏறினாள். போவதற்கு முன் குஞ்சரம், ''நீ உன் பிசினசை முடிச்ச கையோட திரும்பிடணும், ஆனந்தி... அந்தப் புள்ளை புதன்கிழமை சாயங்காலம் பொண் பார்க்க வர்றப்ப நீ இல்லேன்னா நம்ப குடும்ப மானம் மரியாதை எல்லாம் போயிடும்'' என்றாள்.

ஏம்மா எத்தனைவாட்டி இதையே நீ சொல்லிச் சொல்லிப் புலம்புவே... அந்தப் பிள்ளை வர்றப்ப நான் இல்லேன்னா எல்லாம் நல்லபடியா முடியும் அம்மா. அக்கா பார்த்துப்பா...''

''என்னடீ நீயும், திரும்பத் திரும்ப இதையே சொல்றே... அவன் பார்க்க வர்றது உன்னை...நீ இல்லாமப்போனா உடனே எப்படி தன்னோட முடிவை அவன் சொல்லுவாண்டீ...''

''நீ கவலையை விடும்மா. எனக்கு டயமாறது...'' சொல்லிவிட்டு ஆனந்தி விரைந்தாள்.

புதன்கிழமை பிறந்தது.

குஞ்சரம் ஒரு மணி நேரத்துக்கு ஒரு தடவை அபயத்தைத் தேடி வந்தாள்.

''ஏம்மா நீ ஏன் கவலைப்படறே... பாம்பேயிலிருந்து புதுசா ஒரு ப்ளைட் இந்த மாசத்திலேர்ந்து ஆரம்பிச்சிருக்கா... அது சரியா பன்னிரண்டு மணிக்கு அங்கேயிருந்து புறப்படறது. இங்கே ஒண்ணு முப்பத்தஞ்சுக்கு சேர்றது. ஆனந்தி அதில வந்துடுவா நீ வேணும்னா பாரு.''

''எல்லாரும் என்னை சமாதானப்படுத்தறதிலேயே இருங்கோ... நான் சும்மா சும்மா இதுபத்தி மனசை அலட்டிக்கிறதில் அர்த்தமில்லே. ராமாமிர்தத்துக்கு போன் மூலமா இன்னொரு நாள் வந்தாப் போதும்னு சொல்லிட ஏற்பாடு பண்றேன்...''

''கொஞ்சம் பேசாம இரும்மா.''

''அவங்க ஆறு மணிக்கு வர்றப்ப ஆனந்தி இல்லேன்னா? இதை நான் அவ கேட்டப்ப, நீ பார்த்துப் பேன்னு சமாதானப்படுத்தினா... நீ என்னடான்னா பாம்பே பிளேன் மத்தியானம் ஒண்ணு முப்பத்தஞ்சுக்கு வர்றதுன்னு என் வாயை அடைக்கப் பார்க்கிறே...''

''ஆனந்தி எப்படியும் வந்து சேருவா!'' என்ற அபயம், ''ஏம்மா அவளைப்பத்தி இப்படி வியர்த்து விறுவிறுத்துப் போறியே, என்னைப்பத்தி ஒரு கவலைகூட உனக்கு இல்லையே?'' என்றாள்.



''உன்னைப்பத்தி நான் ஏண்டீ அபி கவலைப் படணும்? வெட்டிட்டு வான்னா கட்டிட்டு வந்து நிக்கற பெண் சிங்கமாச்சே நீ?'' என்றாள் குஞ்சரம்.

''அப்ப ஆனந்திமேல உனக்கு நல்ல அபிப்பிராயம் இல்லேன்னு சொல்லு!''

''அது இல்லே...''

''என்ன இழுக்கிறே... மனசில உள்ளதைச் சொல்லு.''

''ஒண்ணுமில்லேடீ...''

''ஏதோ இருக்கு. அம்மா நீ எதையோ மறைக்கிற?''

''வந்து... வந்து... ஆனந்திக்கு கல்யாணத்திலேயே இஷ்டம் இல்லாத மாதிரி படறதுடீ அபி.''

அபயம் அம்மாவை ஏறிட்டுப் பார்த்தாள்.

''ஏம்மா, நீ என்ன சொல்ல வர்றே?''

''அவ இந்த சிவா விசயத்தில சிரத்தையே காட்டலே. அவனைப்பத்தி ஒரு வார்த்தை பேசலே...''

''ஒருவேளை...''

''ஒருவேளை? என்னடீ அபி சொல்றே?''

''நம்ப ஆனந்தி வேறு யாரையானும் மனசில வைச்சிட்டிருக்காளோ என்னமோ?''

''சீச்சீ...''

''என்ன சீச்சீ... அப்படி அவ ஆசையா இருந்தா...''

''இருக்கவே இருக்காதுடீ...''

''சரி, ஆனந்தியைப்பத்தி நீ இப்படி ஒரு அபிப்பிராயம் வைச்சிருக்கியே... என்னைப்பத்தி என்ன ஒப்பினியன்ம்மா உனக்கு...''

''நீயும் சரி, ஆனந்தியும் சரி, நான் பெத்த தங்கக் கட்டிகள்...''

''தங்கக் கட்டின்னா அதன் மனசு எந்த ஆண்பிள்ளை மேலும் ஆசை வைக்காதா...''

''நீ அப்படிப்பட்ட பொண்ணா இருந்தா, இன்னிக்கு மத்தியானம் மூணு மணிக்கு ஒருவன் பெண் பார்க்க வர நீ சம்மதிச்சிருப்பியா...''

''தாங்க்யூ... அம்மா...''

''தாங்க்ஸ் இருக்கட்டும்டீ அபி... இப்ப ஆனந்தியைப் பத்தி என்ன முடிவு எடுக்கிறது?''

''ரெண்டரை மணி வரை வெயிட் பண்ணுவோம்...''

''வரலேன்னா?''

''ஒரு சிங்கப்பூர் ஏர்லைன்ஸ் லண்டன்லேர்ந்து மெட்ராஸ் வழியா போறது. பாம்பேயில இடம் கிடைச்சா, மெட்ராஸ் வரை டிக்கட் கொடுத்தாலும் கொடுப்பா. அது இங்கே நாலேமுக்காலுக்கு வர்றதுன்னு நினைக்கிறேன்...''

''அதிலேயும் வரலேன்னா? அவங்களை வரவேண்டாம்னு சொல்றதுக்குக்கூட டயம் இல்லாமப் போயிடுமேடீ...''

கவலைப்படாதேன்னு நான் ஆயிரம் வாட்டி சொல்லியாச்சு அம்மா... நான் எப்படி நிலைமையை சமாளிக்கறேன்னு பாரு... அந்த ராமாமிர்தம் பிள்ளை சிவா அசந்து போய் என் கழுத்தில தாலி கட்ட ரெடின்னு சொல்லிடுவான் பாரு!''

''சிவ சிவா... அவன் ஆனந்தி கழுத்திலதாண்டீ...''

திடீரென்று டெலிபோன் மணி அடித்தது...

''பார்டீ பாம்பேயா இருக்கும்!'' என்றாள் அம்மா.

''எஸ்... அபயம் ஹியர்... யாரு, மிஸ்டர் ரவிச்சந்திரனா... இங்கே இன்னும் வரலையே... ஆமாம் கரெக்ட்... நீங்க யாருன்னு சொல்லலியே... ஓ ஐ சீ... சரி,



அவர்ட்ட நான் எதுவும் பேசலே... நீங்க எனக்கு மறுபடியும் போன் பண்றதானா ராத்திரி எட்டு மணிக்கு மேலே பண்ணுங்க... தாங்க்யூ!''

''யாரு டீ அபி... ரவிச்சந்திரனைப்பத்தி இங்கே போன் பண்றான்?''

''பிசினஸ் விசயம் அம்மா... எல்லாம் ஏற்றுமதி வியாபாரம் சம்பந்தமா...''

குஞ்சரம் மெதுவாக வெளியேறினாள்.

அபயம், ஒரு புது சுவாரசியத்துடன் கையிலிருந்த பைலைப் படிக்க ஆரம்பித்தாள்.

நேரம் அவ்வளவு விரைவாக ஓடியதை அபயம் உணரவே இல்லை.

திடீரென்று தங்கை உதியாவின் குரல் அவளை எழுப்பியது.

''என்ன டீ உதி...''

'என்ன அக்கா நீ மசமசன்னு உட்கார்ந்திருக்கே... கடிகாரத்தைப் பாரு, மூணேகால். அவங்களெல்லாம் வந்தாச்சு...''

''சரி, நான் வர்றேன். நீ போ!''

''தீபாவளிக்கு வாங்கின புடவையை கட்டிட்டு வரணும்னு அம்மா சொன்னா...''

அபயம் பதில் சொல்ல வாயெடுக்கவும், டெலிபோன் அடிக்கவும் சரியாக இருந்தது.

''அலோ... ஜஸ்ட் எ மோமன்ட் ப்ளீஸ்... உதி, சிங்கப்பூர் கால்... நீ போ... இதைப் பேசி முடிச்சுட்டு வர்றேன்...'' என்ற அபயம் சிங்கப்பூருடன் பேசலானாள்

அவர்கள் எல்லாரும் மேலும் காத்துக்கொண்டிருக்கையில் திடீரென்று அபயம் மாடிப்படிகளில் மெலிதான ஒலியை எழுப்பிக் கொண்டு இறங்கி வந்தாள்.

அவளைப் பார்க்க வந்திருக்கும் மூன்று பேருடைய முக பாவங்களையும் உன்னிப்பாகக் கவனித்தாள்.

உள்ளூர சிரிப்புதான் அபயத்துக்கு வந்தது.

## 8

அபயம் நிதானமாக மாடிப்படிகளை எண்ணி எண்ணி கடந்து வரும் காட்சி அம்மாவுக்குக் கண் கொள்ளாக் காட்சியாகத் தோன்றியது. இதுவரையில் அவள் சொல்லி அபயம் எதைக் கேட்டிருக்கிறாள். கல்யாணத்துக்கு பெண் பார்க்க வரும்போது பட்டுப் புடவை கட்டி, தலைநிறைய பூச்சூடி, நெற்றியில் குங்குமப் பொட்டு பளிச்சென்று துலங்க, குனிந்த தலை நிமிராமல் ஒருத்தி வரவேண்டாமோ? உஹூம். அவளுடைய பெண் அபயம் இந்தத் தப்பையெல்லாம் செய்யமாட்டாள். வேறு எந்த வீட்டு சம்பந்தமாக இருந்திருந்தால், அபயத்தின் வயது முப்பதைத் தொடப் போகிறது என்பதையும் கணக்கில் வைத்துக்கொள்ளாமல் அவளுடைய முதுகில் குஞ்சரம் 'பொத்து' 'பொத்'தென்று கை வலிக்கிறவரையில் சாத்தியிருப்பாள். வந்திருக்கிறவன் ஒரு அய்யங்கார். குஞ்சரத்தைத்தவிர மற்றவர்கள் யாருக்கும் இதுபற்றி ஆட்சேபணை இல்லை. சொல்லப்போனால் அவளுடைய கணவர் நவநீத பாகவதர் இந்த மாதிரி இணைப்புகளை ஆதரிக்கிறவர்.

ஒரு வகையான திருப்தி குஞ்சரத்தின் மனதில் நிலவத் தொடங்கியது. அபயம் புடவை கட்டிக் கொள்ளாமல், தலைகுனிந்து நடக்காமல், நிறம் வெளிறிப்போன ஹவுஸ் கோட் அணிந்து, நிமிர்ப்பார்வை பார்த்தவளாய், யாரையுமே லட்சியம் செய்யாத பாவனையில் வருகிறாள். இப்படிப்பட்ட பெண் தங்கள் வீட்டில் ஒரு அடங்காப் பிடாரியாக இருப்பாள் என்று ரங்கராஜனும் அவனுடைய மனைவி தங்கம்மாவும் பயந்து அபயத்தை ஒதுக்கிவிடுவார்கள். இது குஞ்சரத்தைப் பொறுத்தவரை நல்லதோர் முடிவு.



குஞ்சரம் இன்னும் ஊஞ்சலிலேயே நங்கூரம் போட்டிருக்கும் கணவர் நவநீத பாகவதரைப் பார்த்தாள். அவர் பன்னீர் புகையிலையின் ரசத்தில் மெய்மறந்து போய், மாறாத, வாடாத புன்முறுவலுடன் அமர்ந்திருந்தார். அவருக்குப் பின்னால், அக்காவின் கோலத்தைக் கண்டு தங்கைகள் ஈசுவரியும், உதியாவும் வாய்க்குள் சிரித்தபடி நின்றார்கள்.

நீண்டநேரம் ஹால் மவுனத்தில் உறைந்துபோய் விட்டதான பிரமை உண்டாகியது.

கலியாணப் பிள்ளை ரவிக்கு எதிரே சோபாவில் அபயம் உட்கார்ந்து, அவனையும் அவனை அழைத்து வந்த இருவரையும் பிரதட்ணப் பார்வை பார்த்தாள். பிள்ளையின் கண்களில் ஒருவித பயம் பிரதிபலிப்பதாகத் தோன்றியது. ரங்கராஜன் வெறுப்பை உமிழ்ந்துகொண்டிருந்தார். அவருடைய மனைவி தங்கம்மா ஏறெடுத்தும் பார்க்கவில்லை.

முதலில நவநீத பாகவதர் ஆரம்பித்தார். "என் பொண்களுக்கு இந்த பார்மாலிடீஸ் எல்லாம் பிடிக்காது. ரொம்ப மாடர்ன்...அதான் புடவை கட்டிக்கொள்ளாம சகஜமா வீட்ல போட்டுக்கற ஹவுஸ் கோட்ல இருக்கா."

''அதனாலென்ன, பரவாயில்லே. நாம வேற யுகம் இதுகள் வேற யுகம்!'' என்றார் ரங்கராஜன், உள்ளூர வெடித்துக் கொண்டிருக்கும் ஆத்திரத்தை மூடிமறைத்துக் கொண்டு.

''கூரைப் புடவைக்கு பதிலா சல்வார்கமீஸ் போட்டுக் கிட்டு தாலியை வாங்கிக்க கழுத்தை நீட்டற காலம் இது... அந்த ஒருநாள் அரையே அரைமணி நேரம் கட்டறதுக்கு ஏன் ரெண்டாயிரம் மூவாயிரம் செலவு பண்ணி கூரை வாங்கணும்னு ரொம்ப பேர் நினைக்க ஆரம்பிச்சுட் டாங்க!'' என்ற பாகவதர் ''அடடா...ஐம் சாரி, நீங்க பெண் பார்க்க வந்திருக்கீங்க, நான் ஏதேதோ பேசிட்டே போறேன்...'' என்றார்.

''ரவி!'' என்றாள் தங்கம்மா.

''என்ன அத்தே!''

''மாமின்னு சொன்னாப்ல இருந்தது?'' என்றாள் குஞ்சரம்.

''மாமி, அத்தை ரெண்டு உறவும் ஒண்ணா சேர்ந்து இருக்கு குஞ்சு. ரவியோட அம்மாவின் அண்ணா ரங்க ராஜன். அப்பாவோட தங்கை மிசர்ஸ் தங்கம்மா. புரியறதா...'' என்றார் பாகவதர்.

''நீ ஏதாவது அபயத்திடம் கேட்கப் பிரியப்பட்டா கேட்டுக்கொள்...'' என்றாள் தங்கம்மா.

ரவி அபயம் இருக்கும் திசை தவிர மற்ற எல்லா திசை களிலும் கண்ணை சுழலவிட்டான். திடீரென்று அபயத் தின் குரல் இதமான இசையாகக் கேட்டது. அனைவரும் அவள் பக்கம் முகத்தைத் திருப்பினார்கள். அவளுடைய கண்களை சந்திக்க முற்படவில்லை என்றாலும் ரவியின் முகமும் அவள்பால் திரும்பி நின்றது.



''மிஸ்டர் ரவிக்கு என்னிடம் கேட்க கேள்வி ஏதும் இல்லைன்னு அவருடைய மவுனமே சொல்றது. அதனால நான் சில கேள்விகளைக் கேட்கலாம்னு இருக்கேன்... ஆட்சேபம் இருந்தா கேட்கலே...'' என்றாள்.

ஆத்திரம் தீர, தங்கம்மா, ''என்ன வேணும்னாலும் கேளும்மா அபயம்!'' என்றாள்.

அபயம் அவளைப் பார்த்துச் சிரித்தாள். பிறகு ரங்க ராஜனைப் பார்த்தாள்.

''ஏன் சார், இப்ப உங்க எக்ஸ்போர்ட் பிசினஸ் எப்படி இருக்கு?'' என்று கேட்டாள்.

ரங்கராஜனை பதில் சொல்ல பாகவதர் விட்வில்லை

''திருப்பதி கைவிட்டுப் போயிடுத்தாம். பழனிதான் இருக்காம். ஆனா, அதுவும் இப்ப டல்லாயிருக்குன்னார் அபயம்!''

''அவர் என்னப்பா பண்ணுவார், பாவம் அஞ்சாறு மாசம் முன்னாடி தானே எரவாடாவிலேர்ந்து வந்தார்... இந்த எக்ஸ்போர்ட் பிசினஸ்ல தொடர்ந்து இருக்காமப் போனா அவ்வளவுதான். விட்ட இடத்திலேர்ந்து பிடிச்சு முன்னேர்றது ரொம்ப கஷ்டம்!'' என்ற அபயம், ''என்ன சார் நீங்க ரெண்டு ரெண்டரை வருசம் மெட்ராஸ்ல இல்லே போலிருக்கு?'' என்றாள்.

''உனக்கு எல்லாம் தெரியும் போலிருக்கு.''

''ஓ.''

''என்னை அநியாயமா மாட்டி விட்டாங்க... எனக்கு சாதகமா சாட்சி சொல்ல யாரும் இல்லாமப் போயிட் டாங்க...''

திடீரென்று பாகவதர் குறுக்கே பாய்ந்தார்: ''அபயம், நீங்க ரெண்டுபேரும் என்ன பேசிக்கறீங்க?''

''இவரோட பிசினஸ் பத்தி அப்பா...''

''எரவாடான்னியே... அங்கேதானே எப்பவோ மகாத்மா காந்தி கொஞ்சகாலம் இருந்தார்?''

''ஆமாம்ப்பா... ஆனா, இவர் வேற காரணத்துக்காக இருந்தார். ஆனா, இவர்பேர்ல தப்பு இல்லையாம் அப்பா. யாரோ மாட்டி விட்டுட்டாங்களாம்... இப்பத்தான் மெட்ராசுக்கே வந்துட்டாரே...''

''தமிழ்நாட்ல வேலூர்ல இருந்தேன்னா, ஒரு மாதிரியா பார்ப்பா... அதேமாதிரித்தானோ இந்த எரவாடாவும்?''

''ஆமாம்ப்பா...ஆனா ஒரு சின்ன வித்தியாசம். புனாவில எரவாடா இருக்கு. ஒரு சின்ன இடம். அதே மாதிரிதான் வேலூர்ல ஒரு சின்ன இடத்தில பலர் இருக்கா ...ஆனா மொத்தமா வேலூர்னு சொல்லிடறா...இதில நியாயமே இல்லேப்பா...'' என்றாள் அபயம்.

பாகவதர், ''என்ன ரங்கராஜன் எழுந்து நின்னுட்டீங்க...உங்க மருமகப்பிள்ளைக்கும் என் பொண்ணுக்கும் தானே கல்யாணம் பண்றதா பேச்சு. நீங்க எங்கே, எதுக்காக எத்தனை வருசம் இருந்தா எங்களுக்கு என்ன... சும்மா உட்காருங்கோ...''

''ப்ளீஸ் உட்காருங்க மிஸ்டர் ரங்கராஜன்...'' என்ற அபயம், ''என்ன மிஸ்டர் ரவி... நீங்க இப்பவெல்லாம் ஏற்றுமதியாளர் சங்கத்தோட மாசாந்திர கூட்டங்களுக்கு வர்றதில்லே...ரொம்ப பிசியா?'' என்றாள்.

''வளவளன்னு எல்லாரும் பேசறதோட சரி... டைம் வேஸ்ட்...''

''நீங்க ஒரு எம். எஸ். சி., இல்லே?''



''ஆமாம்...''

''அதான் பாம்பே கிரிநாத் ஊறுகாய் பிசினஸ் ஆரம்பிச்சதும் ரசாயனப் பரிசோதனை நடத்த உங்களை நியமனம் செய்தார் இல்லியா? அப்புறம் அவருக்கு தெரியாமலே, அவர்ட்ட வேலை செஞ்சுட்டே, நீங்க தனியா ஒரு எக்ஸ்போர்ட் பிசினஸ் ஆரம்பிச்சீங்க...இல்லியா?''

''அப்படி ஆரம்பிச்சதில தப்பு இருக்கறதா எனக்குப் படலே... கிரிநாத்தும் அதுக்காக என்னை வேலையை விட்டு வெளியே அனுப்பிவிடலே...''

''அதுக்குக் காரணம் என்னன்னு அவருக்குத் தெரியும். உங்களுக்கும் தெரியும், ஏன் எனக்கும் தெரியும்...''

''என்ன சொல்றீங்க மேடம்!'' என்றான் ரவி.

''கோபப்படாதீங்க மிஸ்டர் ரவி. பிசினஸ்னா அதில ஆயிரம் இருக்கும். அதுவும் எக்ஸ்போர்ட் பிசினஸ்னா பத்தாயிரம்கூட இருக்கலாம். ஊறுகா பாட்டில்கள்லே பிரவுன்சுகர் எப்படி வந்ததுன்னு நான் கேட்கலியே, அமெரிக்கன் கஸ்டம்ஸ் அப்புறம் போதைப் பொருள் அதிகாரிகள்தானே கேட்டாங்க? அது எப்படியோ போகட்டும், மிஸ்டர் ரவி! இப்ப வைதேகியும், குழந்தையும் மன்னார்குடியில சவுக்கியமாத்தானே இருக்காங்க? குழந்தையை எல் கே. ஜி.யில சேர்க்கணும் இல்லே?''

அபயம் முடித்தாள்.

''வாடீ தங்கம் போலாம்'' என்றார் ரங்கராஜன்.

''இவ ரொம்ப ஒழுங்கா பிசினஸ் நடத்தறா...எங்க பிசினஸ் பத்திப் பேசறா...வாடா, ரவி!''

ரவி மவுனமாய் நடந்தான்.

''அப்பா, இந்த மூணுபேர்ல மிஸ்டர் ரவி ஒருத்தர் தான் ஜென்டில்மேன்...வாய் திறந்தாரா ஒரு வார்த்தை பேச!'' என்றாள் அபயம்.

''எனக்கு தலை சுத்தறது அபயம்!'' என்ற குஞ்சரம், ''இங்கே ஒரு பாரதமே நடந்துட்டதே!'' என்றாள்.

''நம்ப அபயம்தான் பீமன். கீசகவதம் நடத்திட்டா!'' என்றார் பாகவதர். பிறகு, ''எப்படியம்மா அபி, நீ இவங்களைப் பத்தி இவ்வளவு விவரங்களை தெரிஞ்சு வைச்சுருந்தே?'' என்று கேட்டார்.

''இதை என்கிட்ட கேட்கறதுக்குப் பதிலா, கிட்டாமணியும், ருக்குவும் ஏன் இதையெல்லாம் உங்களுக்குத் தெரிவிக்கலேன்னு கேளுங்க அப்பா!''

''கிட்டாமணி வரட்டும், அவன் காலை ஒடிக்கறேன்.''

''அதே கிட்டாமணிதான், ராமாமிர்தம் பிள்ளை சிவாவையும் நம்ப வீட்டுக்கு அறிமுகப்படுத்தி இருக்காங்கிறதை மறந்துடாதீங்க அப்பா... பாவம் கிட்டாமணி! அவர் என்ன செய்வார்? ரங்கராஜனும் அவர் மனைவி தங்கம்மாவும் போட்ட வாய்ப்பந்தலில் எல்லாத்தையும் நம்பிட்டார். ஆனா ஒண்ணு. அவர்கிட்டே எல்லாத்தையும் நாம சொல்லிடணும்...இல்லாமப் போனா எதானும் ஒரு நல்ல பொண்ணு இந்த ரவிகிட்ட மாட்டிப்பா...''

''சொல்லிடுவோம்... அது சரி, இந்த விவகாரங்களையெல்லாம் எப்படி இவ்வளவு விதரணையா துப்புத் துலக்கினே?'' என்றார் பாகவதர்.

''இதில என் பங்கு பூஜ்யம் அப்பா...ஆனந்தி வந்ததும் அவளைக் கேளுங்கோ...''

''ஐய்யோ நான் இந்தக் கூத்தில அவளை மறந்தே போயிட்டேனே? டீ அபயம், ஆனந்தியை இன்னும் காணோமேடி...மணி அஞ்சு அடிக்கப்போறது. ராமாமிர்தமும அவர் பெண்டாட்டியும் பிள்ளையோட ஆறு மணிக்கு வந்துடுவாங்களே...டீ ஈசுவரி, வெங்காயம் உருளைக்கிழங்கை நறுக்கித் தாடீ... பஜ்ஜி போடணும்'' என்று குஞ்சரம் பதறினாள்.



''அங்கே மாருதியிலிருந்து யார் வந்து இறங்கறாங்கன்னு பாரும்மா!'' என்றாள் அபயம்.

குஞ்சரம் பார்த்தாள்.

பாகவதர் பார்த்தார்.

ஆனந்தி ஒரு சிறு பெட்டி கையிலும், ஹாண்ட பேக் தோளிலும் தொங்க மாருதியிலிருந்து இறங்கி முன்னேறி வந்தாள்.

''அப்பாடீ, நான் பொழைச்சேன்!'' என்றாள் குஞ்சரம்.

''என்னடீ... என்னாச்சு...எல்லாம் ஓகேதானே...''

''பின்னே? ஓகே ஆகாமப் போனா ஸ்பெசல் ப்ளைட்ல வந்திருப்பேனா?''

''ஸ்பெசல் ப்ளைட்டா?''

''ஆமாடீ... பாம்பே—பெங்களூர் ப்ளைட் கான்சல்ட். அதுக்கு பதிலா மூணரை மணிக்கு ஒரு ஏர்-பஸ் விட்டா. பாம்பே-பெங்களூர்-மெட்ராஸ். நிறைய காலி சீட். வந்துட்டேன்... சிமன்பாய் எல்லா பொறுப்பும் ஏத்துகிட்டார். சொன்ன டயத்தில, கோலாலம்பூர், ஹாங்காங் ரெண்டும் போயிடும்... அது சரி, உன்னைப் பார்த்துட்டு அவங்க போயாச்சா?'' என்று ஆனந்தி கேட்டுச் சிரித்தாள்.

''அவங்க அபயத்தைப் பார்த்துட்டுப் போகலே, ஆனந்தி! அபயம்தான் அவங்களைப் பார்த்து அனுப்பி வைச்சா!'' என்றார் பாகவதர்.

''சரி சரி, அவ மசமசன்னு நிக்கறா...நீங்க தொணதொணன்னு பேசிட்டிருக்கிங்க... ஆனந்தி, உன்னைப் பார்க்க சிவாவும், அவனோட அம்மா அப்பாவும் சரியா ஆறு மணிக்கு வர்றா...இப்ப மணி அஞ்சேமுக்கால்...

சீக்கிரம் குளிச்சு டிரஸ் பண்ணிட்டு வா... அபயம் ஹவுஸ் கோட்ல வந்து நின்ன மாதிரி நீயும் வந்து நிக்காதே... தீபாவளிக்கு எடுத்த புடவையைக் கட்டிட்டு வா. ஒரு பொண்ணா, அடக்க, ஒடுக்கமா குனிஞ்ச தலை நிமிராம வந்து எல்லார்க்கும் நமஸ்காரம் பண்ணனும், தெரிஞ்சதா?''

''எல்லாம் தெரியும்மா!'' என்றாள் அபயம்.

''நான் ஆனந்திட்ட சொன்னேன். நீ ஏன் பதில் சொல்றே. நீ வந்து நின்ன லட்சணத்தைப் பார்த்தேனே!'' என்றாள் குஞ்சரம்.

''இனிமே அது மாதிரி நடக்காது. நீ வேணும்னா பாரேன், அம்மா!'' என்றாள் அபயம்.

''இனிமே எந்தப் பிள்ளை எங்கேர்ந்து வந்து உன்னை பார்க்கப் போறானோ, நீயும் சரின்னு சொல்லப் போறியோ!'' என்ற குஞ்சரம் பெருமூச்சு ஒன்றை உதிர்த்தாள். பிறகு எதையோ நினைத்துக் கொண்டவளைப் போல, ''அடடா, ஒரு முக்கியமான விசயத்தை மறந்துட்டேனே!'' என்றாள்.

''என்ன அது?'' என்று அபயம் கேட்கவில்லை.

''அம்மா, மணி ஆறு அடிக்க பத்து நிமிஷம். பஜ்ஜி போடறதானா சீக்கிரம் போய் போடு. எனக்கு மாடியில வேலை இருக்கு!'' என்றாள் அவள்.

குஞ்சரம் அவசரமாய் சமையலறையை நோக்கி விரைய, பாகவதர் வாயை சுத்தம் செய்து காபிக்கு தயாராக, அபயம் மாடிக்கு மெல்ல மெல்ல படிப்படியாய் ஏறிச் சென்றாள்.

# 9

லால்குடியிலிருந்து வியாபார நிமித்தமாக வந்த சாம்பு, இரண்டாவது உலக மகா யுத்தத்தின் போதும், அதன்பிறகு பல ஆண்டுகளும் பணம் சேட்டுவதிலேயே குறியாக இருந்து வெற்றியும் கண்டுவிட்டார். இப்போது 1991ஆம் ஆண்டு, வியாபாரத்தில் இருந்து முற்றிலும் தம்மை விடுவித்துக்கொண்டு, வருமான வரி, விற்பனை வரி போன்ற கொடுமைகளிலிருந்து விடுதலையாகி நிம்மதியுடன் இருக்கிறார். அவருடைய எழுபத்தைந்தாவது வயதில் எந்தக் கவலையும் அவருக்கு இல்லை. என்றாலும் வியாபாரத் திறமையிலும், புத்தி தீட்சண்யத்திலும் தம்மையே உரித்து வைத்திருக்கும் சிவா என்கிற ஒரு பேரன் மட்டும் இன்னும் கிரகஸ்தனாகவில்லையே என்கிற தாபம் அடிக்கடி ஏற்படும். ஆனால் வெளியே காட்டிக் கொண்டது கிடையாது.

அவருடைய மனைவி இரண்டு ஆண்டுகளுக்கு முன் சிவலோகப் பிராப்தியோ வைகுண்ட பதவியோ அடைந்தாள். அதன்பிறகு, அபிராமபுரத்தில் தமக்கும் தம் ஐந்து பிள்ளைகளுக்கும் ஒரு காலனி போல கட்டியிருந்த ஆறு வீடுகளில் அவர் மாறி மாறி காலத்தை ஓட்டி வருகிறார்.

ஐந்து மருமகள்களில் மூத்தவள் பெயர் தைலா. ராமாமிர்தத்தின் மனைவி. பூர்வீகம் பாலக்காடு. சாப்பாட்டில் பாலக்காடு மணம் கமழும். சாம்புவுக்கு மிகவும் பிடித்த அவியல், எரிசேரி, நேந்திரம் பழ அல்வா, இன்னும் பலாப்பழம் போட்ட இலைஅடை போன்ற வகையறாக்

களை நைலா மிகவும் எளிதாக செய்து மாமனாருக்கு அனுப்புவாள். அவளுடைய பால்பாயசத்துக்கு இணை வேறு எங்கும் இல்லை என்பார் சாம்பு. பாலக்காட்டு சமையல்மீது எப்படி ஒரு தனி ருசியும் ரசனையும் இருந்ததோ அதேபோல, நைலா பெற்றெடுத்த சிவாமீதும் தனி அன்பும், வாத்சல்யமும் அவருக்கு இருந்தது.

இரண்டாவது பிள்ளை சுந்தரேசனுக்கு கல்லிடைக் குறிச்சியில் இருந்து அன்னபூரணி மனைவியாக வந்தாள். வாரத்தில் நான்கு நாட்களாவது கொத்தவரங்காய் உசிலி இருந்தாக வேண்டும் என்ற பிடிவாதம் அன்னத்துக்கு பரம் பரையாக வந்த ஒன்று. அவளாலேயே கடையில் துவரம் பருப்பின் விலை ஏறுவதாக காசை எண்ணி எண்ணிச் செலவு செய்யும் சுந்தரேசன் நொந்துகொள்ளுவான்.

மூன்றாமவன் மார்க்கபந்து. லால்குடிப் பெண்ணே மனைவியாக வரவே, சாம்புவால் சில உரிமைகளை நிலை நாட்ட முடிந்தது. மார்க்கபந்துவின் மனைவி லலிதா— சாம்புவின் அத்தை பேத்தி. சொல்லப்போனால் அவரு டைய தயவால்தான் கலியாணமே நடந்தது. இந்த நன்றியை லலிதா என்றும் மறந்தவள் அல்ல. மாமனார் நாக்குக்கு எதெது பிடிக்கும் என்பதை நன்றாக அறிந்து வைத்திருந்தாள். கோதுமை அல்வா என்றால் உயிர் என்று தெரியும். மற்ற ஓரகத்திகளுடன் போட்டி போட்டுக்கொண்டு மாமனாரை திருப்தி செய்து வருகிறாள்.

நாலாவது கணேசன். மனைவி சுசீலா.

ஐந்தாவது ஜெயராமன். வாய்த்தவளுடைய பெயர் சுகன்யா.

இந்தச் சிறு ஆலமரக் குடும்பத்தில் சாம்பு இன்னும் மதிப்பும் மரியாதையுமாக வாழ்ந்து வருகிறார் என்றால், அதற்குக் காரணம் அவர் எல்லா பிள்ளைகளையும் மரு



மகள்களையும் பேதமின்றி நடத்தி வருவதுதான். ஒரு மருமகளுக்கோ பேத்திக்கோ இன்னொரு மருமகள் பேத்திக்கு செய்ததைவிடக் குறைவாக செய்துவிட்டதான சரித்திரமே இல்லை.

அன்று இரவு சாம்பு தம் வீட்டு ஹாலில் ஒரு சோபாவில் இரு கால்களையும் தூக்கிப்போட்டு அமர்ந்து 'டிவி' பார்த்துக்கொண்டிருந்தார். அன்று செவ்வாய்க் கிழமை. விளம்பரதாரர்களால் மட்டும்தான் தொல்லை கொடுக்க முடியுமா, அவர்களைவிட ஆயிரம் மடங்கு எங்களால் முடியும் என்று சவால் விட்டபடி, தொலைக் காட்சியே தயார் செய்த செவ்வாய் நாடகம் பிதற்றிக் கொண்டிருந்தது. அதைப் பார்த்து சகித்துக்கொண் டிருந்தார் சாம்பு. சொல்லப்போனால் அவருடைய சகிப்புத்தன்மை, கடந்த பதினைந்து ஆண்டுகளில் சென்னை தொலைக்காட்சி நிலையம் தயாரித்துக் கொட்டிய நாடகங்கள் மூலமாகவே பெருகிவிட்டது என்று கூறினால் அது பொய்யாகாது. 'ஏன் கஷ்டப்பட்டு இந்த இழவை வாரா வாரம் பார்க்கறீங்க அப்பா?' என்று எந்தப் பிள்ளையோ, மருமகப் பெண்ணோ கேட்டால், அவர் அமைதியாக ஒரே பதிலைத்தான் சொல்லுவார். 'நம்ப மெட்ராஸ் 'டிவி' ஒரு வாரமாவது ஒரு நல்ல நாடகம் தயார் செய்யமாட்டாங்களான்னு ஏங்கறேன்... செய்வாங்கன்னு நம்பறேன்... திறமையான ஆள்களெல் லாம் இருக்காங்க. ஆனா, ஏன் இப்படிச் செய்யறாங் கன்னு வருத்தமா இருக்கு!''—இதுதான் பதில்.

அந்த செவ்வாய் நாடகத்தை அவர் சகித்துக்கொண் டிருக்கும்போதுதான், ''தாத்தா!'' என்று குரல் கொடுத் துக்கொண்டே சிவா பிரவேசித்தான்.

''வாடா சிவா... வா...''

''தாத்தா, உங்க அட்வைஸ் வேணும்!'' சொல்லிவிட்டு அவர் அருகே உட்கார்ந்தான் சிவா.

"நிச்சயமா உன் பிசினஸ்பத்தி இல்லே... கரெக்ட் தானே?"

"கரெக்ட் தாத்தா... நாளைக்கு சாயங்காலம் நான் பெண் பார்க்கப் போறேன்..."

"நவநீத பாகவதரோட பொண்தானேடா? அவளோட அப்பா பரசுராம பாகவதரையே எனக்குத் தெரியும். கும்பகோணத்திலே கொடி கட்டிப் பறக்கிற குடும்பம்டா. இந்த நவநீதம் மகா சூரன். ஆனா, சோம்பேறி. ஆனா, நாலு பொண்களும் ஏ கிளாஸ்!"

"இதெல்லாம் தெரிஞ்சுக்கவா தாத்தா நான் இப்ப வந்திருக்கேன்?"

"பின்னே என்ன விசயம், அதைச் சொல்லுடா!"

"ஒரு ப்ராப்ளம்."

"என்ன... சொல்லு கேட்போம்."

"நீங்க ஹெல்ப் பண்றதா பிராமிஸ் பண்ணினா சொல்றேன்..."

"அப்படிச் சொல்லலேன்னா?"

"இப்போதைக்குக் கல்யாணம் நடக்காது."

"பிளாக்மெயில் பண்றியாடா சிவா?"

"இல்லே தாத்தா... உங்ககிட்ட நான் அப்படியெல்லாம் செய்வேனா?"

"ப்ராப்ளத்தைச் சொல்லு."

"இந்த கிட்டாமணி ஜோசியர் இருக்காரே, அவர் சிபாரிசு பண்ணியிருக்கிற பெண்ணோட பேரு ஆனந்தி."

"ஆமாம், தெரியும். தைலா சொன்னா, உன் அப்பாவும சொன்னான். ஆனந்தமான பேரு. இப்ப அவளுக்கு என்ன?"



"எனக்கு அவளைத் தெரியும். அவளுக்கும் என்னைத் தெரியும்."

"அதனாலே...? பெண் பார்க்கப் போகவே தேவை இல்லைன்னு சொல்ல வர்றியா சிவா?"

"அதில்லே தாத்தா."

"பின்னே எதுடா?"

"நாங்க ரெண்டுபேரும் பரஸ்பரம் கல்யாணம் பண்ணிக்க முடியாது."

"ஏன்... ஏண்டா...?"

"இந்த ஆனந்திக்கு ஒரு அக்கா இருக்கா. பேரு அபயம். இந்த அபயம், ஒரு பிள்ளையோட நாலஞ்சு வருசமா பழகிட்டு வர்றா..."

"அதனால உனக்கு என்னடா?"

"பிரச்னையே அதுதான் தாத்தா."

"என்ன அதுதான்?"

"இந்தப் பிள்ளை அபயத்தைக் கல்யாணம் பண்ணிக்க ஆசைப்படறான். ஆனா, ரெண்டு பக்கத்துக்காரர்களுக்கும் இந்த விசயம் தெரியாததாலே வேறு பெண்ணைப் பார்த்து வைச்சிருக்கா."

"புரியறதுடா, படவா... நீயும் இந்த அபயமும் நாலஞ்சு வருசமாப் பழகிட்டுவர்றீங்க... கரெக்ட்தானே?"

"கரெக்ட் இல்லேன்னு எப்படி பொய் சொல்ல முடியும் தாத்தா."

"உன் அம்மா அப்பாவுக்கும் இது தெரியாது. அந்த நவநீதத்துக்கும் தெரியாது. ஆனா நீ, ஆனந்தியைப் பெண் பார்க்கப் போறே... இதானே பிரச்னை?"

''சொல்லப் போனா, எனக்கோ அபயத்துக்கோ ஒரு பிரச்னையும் இல்லே தாத்தா... நாளைக்கு அங்கே போறப்ப, என் முன்னால வந்து நிக்கப்போற பெண் அபயம்தான். ஆனா, இது எல்லாருக்கும் ஒரே ஷாக்காப் போயிடுமே...எப்படிச் சமாளிக்கிறதுன்னு குழப்பமா இருக்கு. அம்மா, அப்பா ரெண்டுபேரும் ஜாதகப் பொருத்தம் இருக்கான்னு கேட்டா என்ன செய்யறது அபயத்தோட நட்சத்திரம் மூலம்...''

''இது பத்தியெல்லாம் நீ ஏண்டா கவலைப்படறே... மனப்பொருத்தம் ஒண்ணு இருந்தா வேறு எதுவும் பார்க்க வேண்டாம்னு பெரியவங்க சொல்லுவா. நீ உன் இஷ்டப் படி அபயத்தின் கழுத்தில தாலி கட்டுடா. நான் அட்சதை போடறேன்...''

''நான் தனியா நின்னு நிலைமையைச் சமாளிக்கிறதை விட, நீங்களும் வந்தால் எனக்கு ஒரு பலமா இருக்கும்.''

''அதெல்லாம் நான் வரமாட்டேன்.''

''என்ன தாத்கா நீங்க...''

'சரி, நீ இப்பப் போய் உன் அம்மாவை வரச் சொல்லு.''

''சரி தாத்தா...''

''நிக்காதே போ!''

சிவா வெளியேறினான்.

ஐந்தாவது நிமிடம் தைலா, புடவைத் தலைப்பை இழுத்துப் போர்த்தியவளாய் சாம்பு முன் நின்றாள்.

''எதுக்கு வரச்சொன்னேள்?''

கடந்த முப்பத்தைந்து ஆண்டுகளாக தைலா சென்னையில் இருந்தால்தான் என்ன, அவளுடைய பேச்சின் மலையாள வாடை இன்னும் அகலவில்லையே?



''நாளைக்கு பொண் பார்க்கப் போறீங்க இல்லியா?''

''ஆமாம், போறோம்.''

''சிவா இஷ்டப்படி கல்யாணம் நடக்கணும்னு நான் ஆசைப்படறேன்.''

''நம்ப எல்லாருடைய ஆசையும் அதுதானே? எதுக்கு இப்ப வந்து நீங்க புதுசா சொல்றேள்?''

''சிவா இஷ்டப்படின்னு நான் சொன்னது, அவன் ஆசைப்படற பொண்ணுன்னு அர்த்தம்.''

''எனக்குப் புரியலை.''

' நாளைக்கு பெண் பார்க்கறப்ப புரியும்...''

''ஜோசியர் கிட்டாமணி இன்னிக்குகூட வந்திருந்தார். அவங்களோட மூத்த பொண் பேரு அபயம், ரெண்டாவது பொண் ஆனந்தி அப்படீன்னார். நம்ப சிவாவுக்குப் பார்த்திருக்கிற பொண் ஆனந்தி...''

''இந்த இடத்திலதான் கிட்டாமணி ஒரு தப்பு செய்திருக்கான்.''

''என்ன தப்பு?''

''அதை விவரமாச் சொல்ல எனக்குத் தெரியலேம்மா... ஆனா, உன்னிடம் ஒண்ணே ஒண்ணு கேட்டுக்கறேன். ரசாபாசம் ஏதும் இல்லாம, நல்லபடியா பெண் பார்த்துட்டு வந்து சேருங்கோ...''

''நீங்க சொல்றதைப் பார்த்தா ஏதோ விபரீதமோ அனர்த்தமோ நடக்கப்போறது போலிருக்கிறது.''

''பேசினால்தான் விபரீதம். அனர்த்தம் எல்லாம்'' என்றார் சாம்பு.

''சரி, நாங்க பேசலை. அவங்க ஏதாவும் பேசினா...''

''பேசமாட்டா...அதுக்கு நான் காரண்டி...''

''இப்ப விசயம் ஒரு மாதிரிப் புரியறது...சிவா ஆனந்தியை பண்ணிக்கொள்ள ஆசைப்படலை...''

''கரெக்ட்.''

''அப்ப ஏன் நாளைக்கு பெண் பார்க்கப் போகணும்... அனாவசியமா அவங்க மனசையும் புண்படுத்தணுமா?''

''அவா மனசு புண்படாது.''

''எப்படிச் சொல்றேள் அப்பா?''

''நாளைக்கு உனக்கே தெரியும் தைலா.''

''இந்த விசயமெல்லாம் அவருக்கும் தெரியுமா?''

''யாரு, ராமாமிர்தத்துக்கா?''

''பின்னே வேற யாரு, எனக்கு 'அவர்'னா?''

''தெரியாது.''

''அந்தப் பொண்ணு துணி வாங்க நேத்துக் கார்த்தால கடைக்கு வந்திருந்தாளாம். ரொம்ப துடுக்கா இருக்காளாம். நல்ல லட்சணம்...நம்ப வீட்டுக்கு ஏத்த பொண் அப்படீன்னார்.''

''நவநீதத்தோட எல்லா பொண்களுமே ரொம்ப துடுக்கோடதான் இருப்பான்னு எனக்குத் தெரியும். அழகாவும் இருப்பா... இப்ப நீ தெரிஞ்சுக்க வேண்டியது ஒண்ணே ஒண்ணுதான் தைலா. நம்ப சிவா இந்த ஆனந்திக்குதான் தாலி கட்டமாட்டான்...''

''அப்ப அவன் ஆசைப்படற பொண் யார்னு சொல்லட்டும்... அங்கே போய் பேசி முடிப்போம்...''

''அவசரப்படாதே... மொதல்ல நாளைய கதை முடியட்டும். அதுவரை நீயும் மூச்சு விடாம இரு. ராமாமிர்தத்திடம் எதுவும் சொல்லிடாதே... பெண் பார்க்கப் போகிற புரோகிராமையும் கான்சல் பண்ணாதே. கிட்டாமணியோட மல்லுக்கும் நிக்காதே.''



''என் மண்டை குழம்பறது!'' என்றாள் தைலா.

''நாளைக்கு இந்த நேரம் உன் வாயெல்லாம் பல்லாயிருக்கும். எனக்குக்கூட ஒரு நப்பாசை, ஏன் பெண் பார்க்க சிவா போறப்ப நானும் அங்கே இருக்கப்படாதுன்னு!''

''வாங்கோ அப்பா... சபை நிறைஞ்சிருக்கும். நீங்க இருந்தாலே களை கட்டும். என்ன விபரீதமும், அனர்த்தமும் ஏற்படாது. இது உங்களுக்கு நப்பாசையா இருக்கலாம். ஆனா, எங்களுக்கு பெரிய ஆசை நிறைவேறின மாதிரி இருக்கும்.''

''அவ உசிரோட இருந்திருந்தா, நீ இவ்வளவு பேசவே தேவையிருந்திருக்காது தைலா. நானாகவே அவளையும் அழைச்சுட்டுப் புறப்பட்டிருப்பேன்!'' என்ற சாம்புவின் தொண்டை கனத்தது.

''சரி நான் வரேம்ப்பா.''

''சஞ்சலப்படாம போ! எல்லாம் நல்லபடியா நடக்கும்! சிவா என்னை மாதிரி ஒரு சூரன்.''

தைலா மவுனமாக வெளியேறினாள்.

மறுநாள் மாலை ஆறு அடித்தது. ராமாமிர்தமும், தைலாவும், பிள்ளை சிவா பின்தொடர நவநீத பாகவதர் வீட்டினுள் பிரவேசித்து, பெரிய சோபாவில் சவுகரியமாக உட்கார்ந்து, பெண்ணின் வருகைக்காகக் காத்திருந்தார்கள்.

பெண்ணும் குனிந்த தலை நிமிராமல், வாய்க்குள்ளே சிரித்துக்கொண்டு மாடிப்படி இறங்கி வந்தாள்.

# 10

நவநீத பாகவதருடைய பெண் அபயம் குனிந்த தலை நிமிராமல், சென்ற தீபாவளிக்கு வாங்கிய பட்டுப் புடவையை கட்டிக்கொண்டு, மாடிப்படிகளை ஒவ்வொன்றாகக் கால்கள் ஓசையின்றி விழுங்கி இறங்குவதைக் கண்ட போது—

பிள்ளை சிவாவுக்கு புல்லரித்துப் போயிற்று.

அவனுடைய அம்மா தைலா முந்தின நாள் மாலை சாம்பு அவளிடம் கூறிய வார்த்தைகளை நினைவுகூர்ந்து பயமும், தைரியமும் ஒரேசமயத்தில் ஒன்றாகக் குழைய, சலனமும், சங்கடமும் இல்லாமல் கணவர் ராமாமிர்தம் பக்கம் திரும்பினாள்.

சிவாவின் தகப்பனார் ராமாமிர்தம் இதுவரையில் சோபாவில் சாய்ந்து அமர்ந்திருந்தவர் திடீரென்று, ஷாக் அடித்தாற்போல நிமிர்ந்து உட்கார்ந்து, சினிமா காமிரா போல மாடிப்படி, சிவா, மனைவி தைலா, கடைசியாக பாகவதருடைய ஊஞ்சல் எல்லாவற்றையும் மாறி மாறிப் பார்த்தார்.

மாடி அறை ஜன்னலிலிருந்து பார்த்த ஆனந்தி ஒரு வித பயத்துடன் நின்றாள்.

பெண் அபயம் உள்ளூர சிரித்துக்கொண்டாள்.

பெண் அபயம் தங்கை ஆனந்தியுடன் சேர்ந்து ஏதோ நாடகம் நடத்துகிறாள், அதை வேடிக்கை பார்க்கலாம் என்று நவநீத பாகவதர் ஆவலையோ ஆர்வத்தையோ வெளிக்காட்டாமல் புகையிலையை சுவைத்தபடி உட்கார்ந்திருந்தார்.



குஞ்சரம் கதிகலங்கிப் போனாள்.

அபயம் கடைசிப் படியையும் தாண்டி முன்னேறி வரும்போது, மாமனார் சாம்பு முந்தின நாள் மாலை அளித்த தைரியத்திலும், தன் பிள்ளை சிவா தாலியைக் கட்டினால் இந்த அபயத்தின் கழுத்திலதான் கட்டுவான் என்கிற உறுதியிலும் தைலா—

''குழந்தே எல்லாருக்குமா சேர்த்து சபைக்கு நமஸ்காரம் பண்ணும்மா, போதும்!'' என்றாள்.

''அதுக்கு முன்னாடி...'' ராமாமிர்தம் இழுத்தார்.

''பொண்ணு வந்தாச்சு. அல மொதல்ல நமஸ்காரம் பண்ணட்டும். நீங்க கொஞ்சநேரத்துக்கு சும்மா இருங்கோ!'' என்று தைலா அவருடைய காதில் மட்டுமே படும்படி குரலை தாழ்த்திப் பேசினாள். ஆனால், அது சபைக்கே கேட்டது.

''யார்டீ நமஸ்காரம் பண்ண வேண்டாம்னு சொன்னா? நூத்தியெட்டு நமஸ்காரம் வேணும்னாலும் பண்ணட்டும். நான் என்ன சொல்ல வர்றேன்னா...''

ராமாமிர்தத்தை முடிக்கவிடவில்லை தைலா.

இப்போது குஞ்சரம் தலையிட்டாள்.

''இவதான் அபயம். எங்க மூத்த பொண்ணு. உங்க பிள்ளை சிவாவுக்கும் எங்க ரெண்டாவது பொண்ணு ஆனந்திக்கும்தான் ஜாதகப் பொருத்தம் பார்த்திருந்தது. அவளைப் பொண் பார்க்கத்தான் உங்க வீட்டுப் பிள்ளை இன்னிக்கு வரவும் ஏற்பாடாகி இருந்தது. ஆனா, உங்களுக்கு தெரிஞ்சிருக்கிற மாதிரி எங்களுக்கும் இப்பத்தான் தெரிஞ்சது, எங்க பொண் அபயம், சிவாவைக் கல்யாணம் பண்ணிக்க ஆசைப்படறான்னு.''

''இதை இதுகள் ரெண்டும் நம்மகிட்ட முன்னாலயே சொல்லியிருக்கலாம்... அனாவசியமா கிட்டாமணி ஜோசியருக்கு ஆட்டோ சார்ஜ், ஆட்டோ சார்ஜ்னு ஒரு ஆட்டோவின் விலையையே கொடுத்திருக்க வேண்டாம்'' என்றாள் தைலா.

''பொண்ணை பெத்தவா நாங்கதான் கிட்டாமணி ஜோசியருக்குக் கொடுத்தோம். நீங்களுமா?'' என்றாள் குஞ்சரம்.

''நீங்க ரெண்டுபேரும் விசயத்தை விட்டு வேறு எங்கேயோ ஆட்டோவில போறீங்க... எனக்கு இப்ப ஒரே ஒரு விசயம் தெரியணும் பாகவதர்! உங்க பெண் அபயத்தின் ஜாதகத்தை என் பிள்ளை சிவாவோட ஜாதகத்தோட ஒப்பிட்டுப் பார்க்கவே இல்லை!'' என்றார் ராமாமிர்தம்.

''மனப் பொருத்தம் இருந்தா வேறு எதுவும் பார்க்க வேண்டாம்னு சொல்லியிருக்கா!'' என்றாள் தைலா.

''யாரு அப்படிச் சொன்னா?''

''பெரியவங்க சொல்லியிருக்காங்க. நேத்து உங்க அப்பாவும் சொன்னார்!''

''பாகவதர் நீங்க என்ன சொல்றீங்க?''

''இதப் பாருங்கோ ராமாமிர்தம்! நாலு பொண்களை பெத்திருக்கிறவன் நான். காலா காலத்தில் அதுகளுக்கு கல்யாணம் செஞ்சு வைக்காதவன். ஆனா, அதுக்கு நான் மட்டும் காரணம் இல்லை!''

''நானும் காரணம்னு சொல்ல வர்றேளா?'' என்றாள் குஞ்சரம்.

''இல்லே... நம்ப பொண்களும் காரணம்னு சொல்ல வந்தேன். காலேஜ் படிப்பு முடிஞ்சதும் மேலே படிக்கறேன், வேலைக்குப் போறேன், பிசினஸ் பண்றேன்னு



அடம்பிடிச்சா நான் என்ன செய்வேன்? இதெல்லாம் போதாதற்கு பொண்களோட நட்சத்திரங்கள் வேறே!'' என்றார் பாகவதர்.

''ஏன், என்ன நட்சத்திரம்?''

''அபயத்துக்கு மூலம்!''

''அடப்பாவமே!'' என்ற ராமாமிர்தம், மனைவி தைலாவைப் பார்த்து, ''கேட்டாயா மூலமாம், உன்னை பாதிக்கும்!''

''நாமதான் பொருத்தம் பார்க்கலையே.''

''நட்சத்திரப் பொருத்தமே சரியில்லையே தைலா...''

''என் ஜாதகப்படி நான் தீர்க்க சுமங்கலியாத்தான் போவேன்... நீங்க பேசாம இருங்கோ...'' என்ற தைலா, ''இதப் பாருங்கோ குஞ்சரம்! எனக்கு என் புள்ளையோட ஆசைதான் முக்கியம். நாங்க சம்பந்தியாக ரெடி! நீங்க ரெடியா?'' என்று கேட்டாள்.

குஞ்சரம் கணவரைப் பார்த்தாள்.

நவநீத பாகவதர், ''எங்க பொண் அபயமும், உங்க வீட்டுப் பிள்ளை சிவாவும் என்னிக்கோ ரெடியாயிட்டான்னு தெரிஞ்சப்புறம், நாங்க ரெடியில்லேன்னா ரெண்டுபேரும் சும்மா இருப்பாங்களா! ஆனா, எங்களுக்கு ஒரு ஆஸ்தை... ஆஸ்தைன்னா, ஆசைன்னு அர்த்தம்... அபயம், ஆனந்தி ரெண்டுபேர் கல்யாணங்களையும் ஒரே நாளில் ஒரே பந்தலில் நடத்தறதுன்னு...''

''எனக்கு இப்ப உங்க பொண் ஆனந்தியைப் பார்க்கணும். நேத்து எங்க கடைக்கு வந்திருந்தா...'' என்றார் ராமாமிர்தம்.

''எதுக்கு இப்ப பார்க்கணும்?'' என்றாள் தைலா.

''நீ கொஞ்சம் சும்மா இரு.''

''ஆனந்தி, ஆனந்தி, நீ இங்கே கொஞ்சம் வா!'' என்று உரத்த குரலில் அழைத்தாள் குஞ்சரம். பிறகு, ''அபயம், நீ இன்னும் நமஸ்காரமே பண்ணலே...'' என்றாள்.

''பரவாயில்லே அபயம், வா என் பக்கத்தில வந்து உட்காரு!'' என்றாள் தைலா.

ஆனந்தி வெகு வேகமாக இறங்கி வந்து, ''என்ன அம்மா கூப்பிட்டே?'' என்றாள்.

''என்னைத் தெரியறதாம்மா?'' என்றார் ராமாமிர்தம்.

''என்ன சார் இப்படிக் கேட்டுட்டீங்க... எத்தனை வாட்டி உங்க கடைக்கு வந்திருக்கேன்...''

''நேத்து வந்தப்பகூட நீ இதுபத்திச் சொல்லலே...''

''அதை மனசில வைச்சுக்காதீங்க சார்... உங்க குடும்பத்துக்கு ஒரு நல்ல பெண் வேணும். அவ்வளவு தானே! என் அக்கா அபயம் மாதிரி ஒரு நல்ல பெண் கிடைக்கமாட்டா... வாட் மிஸ்டர் சிவா... நீங்க என்ன சொல்றீங்க?''

''இதுவரையில் நம்ப வீட்டு வருங்கால மாப்பிள்ளை ஒரு வார்த்தை பேசவில்லை ஆனந்தி!'' என்றார் பாகவதர்.

''பேசறதுக்கு சான்சே கிடைக்காமப் போனா நான் என்ன செய்யறதாம்!''

''ஆனந்தி, ஒரே ஒரு கேள்வி மட்டும் கேட்டுடறேன்'' என்றார் ராமாமிர்தம்.

''ஜமாய்ங்க சார்...''



''உன் அக்காவும் என் பிள்ளையும்தான் கல்யாணம் பண்ணிக்கப் போறவங்கன்னு ஏற்கனவே உனக்குத் தெரியும். அப்படி இருந்தும் ஏன் என்னிடம் மொதல்லயே சொல்லலே...''

''நீங்க ரொம்ப கண்டிப்பு, கறார்னெல்லாம் கேள்விப் பட்டேன் சார்.''

''நானா... கண்டிப்பா... கறாரா? என்னை மாதிரி ஒரு சாது இந்த மெட்ராஸ் முழுதும் தேடிப் பார்த்தாலும் கிடைக்காது சரி, இப்ப நான் கேள்வியை கேட்கிறேன்.''

''ரெடி.''

''உன் அக்கா மாதிரி நீயும் யாரையாவது மனசில வைச்சிருக்கியாம்மா?''

ஆனந்தி சிரித்தாள்.

''நீங்க ரொம்ப வெகுளிதான் சார்! இல்லாமப் போனா ஒரு பிரைவேட் சமாச்சாரத்தை பப்ளிக்கா கேட்பீங்களா?''

''அப்போ...''

''நான் அடுத்தவாட்டி உங்க கடைக்கு வர்றப்ப அவசியம் இந்தக் கேள்விக்கு பதில் சொல்றேன் சார்!''

''அதுவரையில் சஸ்பென்சா?'' என்று சிரித்தார் ராமாமிர்தம்.

''அப்ப நாங்க உத்தரவு வாங்கிக்கறோம். என்னிக்கு நிச்சயதார்த்தம் வைச்சுக்கறதுன்னு நான் என் தகப்பனாரைக் கேட்டுட்டு போன் பண்றேன்!'' என்றார்.

''ஆகா... அப்படியே!'' என்றார் பாகவதர்.

இப்படியாக அபயத்தை, சிவாவுக்கு பாணிக்கிரகணம் செய்து கொடுத்து அவர்கள் இதுவரை அறிந்திராத கஷ்ட நஷ்டங்களையும், சுகபோகங்களையும் அனுபவிக்க ஏற்பாடு செய்யப்பட்டது.

இனி?

ஆனந்தி.

அவளுடைய வாழ்க்கை எப்படி அமையப் போகிறது?

அன்று இரவு எட்டு மணிக்கு கிட்டாமணி ஜோசியரும், அவருடைய மனைவி ருக்குவும் வந்தார்கள்.

"வாங்கோ ஜோஸ்யர்வாள், வாங்கோ!" என்று நவநீத பாகவதர் வரவேற்றார். பிறகு, "இங்கே வந்து பாரு, யாரு வந்திருக்காங்கன்னு" என்றார்.

"என்னால உங்களுக்கு ரொம்ப சிரமமாப் போயிடுத்து, இல்லியா பாகவதர் சார்?"

"சிரமமா... எங்களுக்கா... கிடையவே கிடையாது கிட்டாமணி! சொல்லப்போனா இன்னிக்கு நடந்த ரெண்டு டிராமாவும் ரொம்ப நன்னாவே இருந்தது. நான் ரொம்ப ரசிச்சேன்..."

பாகவதர் பேசி முடிக்கவும், குஞ்சரம் வரவும் சரியாக இருந்தது.

"வா ருக்கு... நாம ஒரு திட்டம் போடறோம், பகவான் வேறொரு திட்டத்தை ஏற்கனவே போட்டு வைச்சுடறார் பார்த்தியா... முதல் கேசை அபயம் ஓட ஓட விரட்டினா. ரெண்டாம் கேஸ் வந்தப்ப அவளாவே பட்டுப் புடவை கட்டிண்டு வந்து நமஸ்காரம் பண்ணரெடின்னா."

"இவா ரெண்டுபேரும் ரொம்ப நாளாப் பழகிட்டு வர்றது எனக்குத் தெரியவே தெரியாது குஞ்சு!" என்றாள் ருக்கு.

"எனக்குத் தெரிஞ்சிருந்தா நான் ஆனந்தியோட ஜாதகத்தை எடுத்துட்டு ராமாமிர்தம் வீட்டுப் பக்கம்



எட்டிப் பார்த்திருக்கமாட்டேன். அந்தப் பிள்ளை பெரிய கல்லுளிமங்கன்... வாயையே தொறக்கலே" என்றார் கிட்டாமணி.

"சிவா எங்க வீட்டு மாப்பிள்ளை அவனைப்பற்றி இனிமே ஒரு வார்த்தை தப்பாப் பேசப்படாது! பேசினீங்க, அபயம் சொரூபத்தைக் காட்டிடுவா..."

"சரி, சரி... இனிமே நான் என்ன செய்யணும் பாகவதர்."

"ஆனந்திக்கு ஒரு நல்ல இடமா உடனடியா பார்க்கணும். முதல் ரெண்டு பெண்கள் கல்யாணத்தையும் ஒரே நாள்ல, ஒரே பந்தல்ல நடத்தறதுன்னு மனசுக்குள்ளே வைராக்கியமா இருக்கேன்... நல்ல குடும்பத்திலேர்ந்து ஒரு நல்ல பிள்ளை வேணும்! உம்ம ஞாபகத்தில யாராவும் தென்படறானா கிட்டாமணி!"

"கொஞ்சம் இருங்கோ பாகவதர் யோசிக்கிறேன்!"

திடீரென்று ஈசுவரியின் குரல் கேட்டது.

"ஜோசியரே சிரமப்படாதீங்க. அப்பா, ஆனந்திக்கு இவர் பிள்ளை தேட வேண்டாம்!"

"என்ன ஈஸ்வரி சொல்றே?"

"இப்ப ஒண்ணும் சொல்லலே, அப்புறம் தனியா உங்ககிட்டேயும், அம்மாகிட்டேயும் சொல்றேன்!"

"அபயம் கதை மாதிரி ஆனந்தி கதை ஒண்ணு இருக்கா ஈஸ்வரி?"

"நான் இப்ப எதுவும் பேசத் தயாரில்லை!"—சொன்ன ஈசுவரி தடதடவென்று மாடிக்கு ஓடினாள்.

அங்கே அவளுக்காக ஆனந்தி காத்திருந்தாள்.

# 11

நாடு நலம் பெறவும், சான்றோர்கள் நல்ல முறையில் வாழவும், மக்கள் புராண இதிகாசங்களைப் படித்து அவை அள்ளித் தெளிக்கும் தர்மங்களை கடைப்பிடிக்கவும். நண்பர்களுக்கும், நல்லவர்களுக்கும் அசல் நெய்யில் தயாராகும் இனிப்பு வகைகள் மற்றும் அசல் எண்ணையில் தயாராகும் கார தினுசுகளை வழங்க என்றே ஒரு மிகவும் பிரபலமான மிட்டாய்க் கடை சென்னை அடையாறில் இருக்கிறது.

ஆனந்திக்கு நாடு பிடிக்கிறதோ, சான்றோர்கள் நல்ல முறையில் வாழவேண்டும் என்ற எண்ணம் இருக்கிறதோ இல்லையோ, இந்த மிட்டாய்க் கடை மிகவும் பிடித்திருக்கிறது. இனிப்புகள் மூலமாக தன் உடம்பின் எடை அதிகமானாலும் கவலையில்லை என்ற பிடிவாதத்துடன், தவறாமல் வாரத்துக்கு நான்கு நாட்கள் கடைக்கு விஜயம் செய்வாள். ஒவ்வொரு தடவையும் தனக்கு மிகவும் பிடித்த ஆங்கூர் பாசந்தி, ரசமலாய் மற்றும் பாம்பே ஜிலேபியை வாங்கி ஒரு ஓரமாக உட்கார்ந்து சாப்பிடுவாள். பிறகு இலவசமாகக் கிடைக்கும் பொங்கல் அல்லது சாம்பார் சாதம் அல்லது புளியோதரையை சிறு மரக் கரண்டி (ஸ்பூன்தான்) மூலம் உள்ளே தள்ளுவாள். எல்லாவற்றையும் முடித்த பிறகு ஒரு லேசான வருத்தம் பிடிக்கும். அவள் மட்டும் இப்படி தின்றால் எப்படி? அம்மாவுக்கு பக்கோடா பிடிக்கும். அப்பாவுக்கு வாழைக்காய் வறுவல் என்றால் உயிர். அபயம் நெய்யில் வறுத்த முந்திரிப் பருப்பைக் கண்டால் உலகத்தையே மறந்துவிடுவாள்.



தங்கைகள் ஈசுவரி மற்றும் உத்யா (உத்ரா என்ற பெயரை உத்யா உத்யா என்று வீட்டிலும் வெளியிலும் கூப்பிட்டுக் கூப்பிட்டு அதுவே நிலைத்துப் போய்விட்டது) இருவருக்கும் எல்லாமே பிடிக்கும். வாரத்துக்கு நான்கு தடவை தன் நாக்கைக் கட்டிப்போட முடியாமல் அவள் சென்றால், இரு முறைகளாவது, வீட்டில் உள்ளவர்களையும் ஆனந்தி கவனித்துக் கொள்ளுவாள்.

ஆறு மாதங்களுக்கு முன்னால் கைனடிக் ஹோண்டாவிலிருந்து இறங்கிய ஆனந்தியை ஒருவன் நெருங்கினான்.

''நீங்க மிஸ், ஆனந்திதானே?'' என்று வலிய வந்து கேட்டான்.

ஆனந்தி ஒரு நீண்ட நிமிடம் அவனை ஏற இறங்கப் பார்த்தாள். உயரம், சிகப்பு, அழகாக திருத்தப்பட்ட சீரான அகலமில்லாத மீசை, பற்கள் வெள்ளைவெளேர். யார் இவன்?

'ஆமாம்!''

''அபயம்— ஆனந்தி எக்ஸ்போர்ட்ஸ்ல ஜி. எம். தானே?''

''ஆமாம!''

''நான் யார்னு நீங்க கேட்கலே.''

''அவசியம்னு படலே.''

''ஆனா சொல்றது அவசியம்னு எனக்குப் படறது. என் பேரு ஜெயராமன். ஜெய்ஹூன்னு கூப்பிடுவாங்க.

''ரொம்ப சந்தோஷம். ஜெய்ப்பூர்ல பிறந்திருப்பீங்க. அதான் இப்படிக் கூப்பிடறாப் போலிருக்கு.''

''ஜோக் நன்னாயில்லே... நீங்க அபயத்துக்கு தங்கைன்னா, நான் சிவாவுக்கு சொந்தக்காரன். பெரியப்பா சித்தப்பா பிள்ளைகள்...

18601
3514168

"அபயத்துகிட்டே சொல்றேன்."

"நீங்க அடிக்கடி இங்கே வர்றதைப் பார்த்திருக்கிறேன்."

"நீங்க இங்கேதான் குடியிருக்கீங்களா இல்லே வேலை பார்க்கறீங்களா?"

"நீங்க டெய்லி வர்றதுன்னு உறுதி அளித்தா இங்கே சுவரோரமா குடியிருக்கிறதில் ஆட்சேபணை இல்லை. என் அப்பா பெயர் சுந்தரேசன். பெரியப்பா ராமாமிர்தத்துக்கு அப்புறம் பிறந்தவர்...

"நீங்க பாபர், ஹுமாயூன், அக்பர்னு வம்சாவளி ஆரம்பிக்கறீங்க... அது முடியறதுக்குள்ளே கடையை மூடிடுவாங்க..."

"நீங்க இங்கேயே உட்காருங்க மிஸ் ஆனந்தி. நான் போய் பாம்பே ஜிலேபி, ஆங்கூர் பாசந்தி, ரசமலாய் எல்லாம் வாங்கிட்டு வரேன். எனக்கும் இந்த அயிட்டங்கள் தான் பிடிக்கும்."

சொன்னவன் மின்னலாக ஓடினான்... ஐந்தாவது நிமிடம் இரண்டு பெரிய பிளேட்டுகளில் இனிப்புகளைக் கொண்டு வந்தான். பெரிய வட்டவடிவமான இரண்டு எவர்சில்வர் தட்டுகள்.

"ஏது பிளேட்டு?"

"நான் எப்பவும் கையோட கொண்டுவர்றது."

"ரெண்டா?"

"ஆமாம் மிஸ் ஆனந்தி. இன்னிக்குத்தான் ரெண்டாவது தட்டை யூஸ் பண்ண தைரியம் வந்தது."

"அப்படீன்னா?"



"ரொம்ப நாளா உங்ககிட்ட வந்து என்னை அறிமுகம் செய்து ரெண்டு வார்த்தை பேசணும்னு ஆசை. ஆனா, ஏதோ ஒருவித பயம் தடுத்துக்கிட்டே இருந்தது."

"ரெண்டு வார்த்தைக்கு மேலே பேசியாச்சு போலிருக்கே... அது சரி, எப்படி இன்னிக்கு தைரியம் வந்தது? யாராவது வஸ்தாது, இல்லாமப்போனா மந்திரவாதியைப் பார்த்து வாங்கினீங்களா?"

"சொல்றேன், மொதல்ல இந்தத் தட்டை வாங்கிக்குங்க. கை வலிக்கிறது!"

"சாப்பிட்டப்புறம் பணம் தந்தால் போதும் இல்லையா?"

"அந்த உத்தேசம் இருந்தா நான் இப்பவே இடத்தை காலி பண்ணிடறேன். நல்லவர்களுக்கு இனிப்பு வாங்கி வழங்க வேண்டும்னு சொல்வாங்க..."

"என்னை மாதிரி எத்தனை நல்லவங்களுக்கு இந்த மாதிரி தட்டை நீட்டியிருக்கீங்க..."

"சத்தியமா நீங்கதான் முதல். ஏன் முதலும் கடைசியும்! ப்ளீஸ், தட்டை வாங்கிக்குங்க... கை தளர்ந்து போறது!"

அவனைப் பார்த்து சிரிக்காமல் தட்டை வாங்கிக் கொண்டாள்.

"நீங்க உங்க வண்டி மேலேயே உட்கார்ந்து மெதுவா ருசிச்சு சாப்பிடுங்க. நான் இங்கேயே நின்னுக்கறேன்."

"கை வலிச்ச மாதிரி கால் வலிக்காது போலிருக்கு."

ஆனந்தி பாம்பே ஜிலேபியை விண்டு ஒரு துண்டை வாயில் போட்டுக்கொண்டாள்.

"நான் என் அப்பாவுக்கு ஒரே பிள்ளை. அவர் தன்னோட துணிக்கடையைப் பார்த்துக்குறார். நான் எம். ஏ. படிச்சுட்டு மார்க்கடிங்க்ல டிப்ளமா வாங்கினேன். தி. நகர்

பாண்டி பஜார்ல என்னோட நாவல்டி ஷாப்பும், ரெடி மேட் கார்மென்ட்ஸ் ஷாப்பும் இருக்கு. நீங்க வெளி நாட்டுக்கு அனுப்பறீங்க. நான் உள்நாட்லேயே கொள்ளை அடிக்கிறேன்.''

''பேரு?''

''பூரணி நாவல்டீஸ். பூரணி ரெடிமேட்ஸ். அம்மா பேரு அன்னபூரணி.''

''ஓ, அது உங்களுடையதுதானா?''

''ஆமாம், ஆனா, அங்கே நான் ரெண்டு மணி நேரம் தான், அதுவும் கடைமூடற சமயத்திலதான் இருப்பேன்.''

''மத்த நேரமெல்லாம் இங்கேயாக்கும்?''

''தினசரி இங்கே ஒரு மணி நேரம். தியாசபிகள் சொசையிட்டி லைப்ரரியில நாலு மணி நேரம்...''

''தியாசபியில ரொம்ப ஈடுபாடு போலிருக்கு.''

''ரொம்ப! ஜே கிருஷ்ணமூர்த்தியோட புஸ்தகங் கள்னா தனி ஆசை... உங்களுக்கு இந்த ஸ்வீட்ஸ்மேல உள்ளது போல.''

''இத நிறைய தின்னா வயத்தில மந்தம் தட்டிப் போகும். அங்கே அளவுக்கு மீறி படிச்சா...''

''நிச்சயம் புத்தி மந்தம் தட்டிப்போகாது.''

''யார் கடைகளைப் பார்த்துக்கறாங்க?''

''ஒண்ணை என் மாமா பார்த்துக்கிறார். இன் னொண்ணை என்னுடைய பரமானந்த சிநேகிதன் பார்த்துக்கொள்கிறான். ஒண்ணாங் கிளாஸ்லேர்ந்து பி. யு. சி. வரை என்னோட படிச்சவன். நேர்மையோட ரெண்டாம் எடிஷன்.''

ஆனந்தி பாம்பே ஜிலேபியை எப்போதோ முடித்து விட்டு, ரசமலாய்க்கு வந்தாகிவிட்டது.



''கொஞ்சம் இருங்க, மிஸ் ஆனந்தி! நான் போய் தொன்னைகளை வாங்கிட்டு வரேன். வெண் பொங்கல் தளதளன்னு இருக்கு.''

''பாவம் ரொம்பவும்தான் சிரமப்படறீங்க.''

''இட் இஸ் எப்ளெஷர்.''

பொங்கலை சாப்பிட்டுவிட்டு, இரண்டு தம்ளர் தண்ணீரையும் குடித்த ஆனந்தி, ''அப்ப நீங்க புறப்படுங்க சார். எனக்கு பார்சல் வாங்கிட்டுப் போகணும்!'' என்றாள்.

''லிஸ்டைக் கொடுங்க, நான் எதுக்கு இருக்கேன்?''

''ரொம்ப தாங்க்ஸ். அளவுக்கு மீறினா உபசாரமும் இம்சையாப் போயிடும்.''

''அப்ப சரி மறுபடியும் சந்திப்போம்...''

''அவசியமா?''

''என் வரையில் ரொம்ப அவசியம்.''

''காரணம்?''

''சொன்னா கன்னத்தில் அடிக்கமாட்டீங்களே?''

''காரண்டி கொடுக்க முடியாது.''

''அப்ப நான் சொல்லலை.''

''சரி காரணத்தைச் சொல்லிட்டுப் போங்க சார்! லைப்ரரிக்கு நேரமாகப் போறது. இங்கிருந்து கொஞ்ச தூரம் நடந்தாத்தான் பஸ் ஸ்டாண்ட் வரும்.''

''அதனாலதான் வேகமாப் போக ஒரு மாருதி வைச் சிருக்கேன். அதோ ரத்தச் சிகப்புல நிக்கறதே அதுதான்.''

''ஓகே உங்க இஷ்டப்படிெ மதுவாவே சொல்லுங்க.''

''நான் உங்களைக் கல்யாணம் பண்ணிக்கறதுன்னு எனக்குள்ளே முடிவு எடுத்திருக்கேன்.''

''வாட்?''

''திருட்டுத்தனமா இல்லே! முறைப்படி, அம்மா, அப்பா, தாத்தா, பெரியப்பா எல்லாருடைய ஆசீர்வாதங்களோட.''

''நீங்க முடிவு எடுத்துட்டாப் போதுமா மிஸ்டர்?''

''நிச்சயமா போதாது. நீங்களும் மனசு வைக்கணும். சிவா-அபயம் கல்யாணமானப்புறம் முடிவைச் சொன்னால் போதும். அதுவரையில் நாம பாட்டுக்கு இங்கே சந்திச்சுக்கலாம். நம்முடைய பலங்கள், பலவீனங்கள் எல்லாத்தையும் தெரிஞ்சுக்கலாம், புரிஞ்சுக்கலாம்.''

''என்னுடைய முடிவு வேறுவிதமா இருந்தால்?''

''என்னை மாதிரி ஒரு நல்லவனோட வாழ்க்கை நடத்த நீங்க கொடுத்து வைக்கலேன்னு நான் வருத்தப் பட்டுக்கறேன். வேறு என்ன செய்ய?''

''இன்னொருத்திக்கு ஸ்வீட்ஸ் வாங்கிக் கொடுத்து ட்ரை பண்றது!''

''நீங்க இல்லைன்னு ஆயிட்டா நான் இந்தக் கடைப் பக்கமே தலைகாட்டமாட்டேன். இது சத்தியம், பீஷ்ம சத்தியம்.''

''யோசிக்கறேன்... எதுக்கும் நீங்க தயாரா இருங்க.''

சொன்ன ஆனந்தி, கடைசியாக அவனைப் பார்த்தாள் அவனுடைய கண்கள் மனத்தைப் படம் போட்டுக் காட்டியது.

அன்று இரவு நீண்ட நேரம் ஆனந்தி தூங்கவில்லை.

நல்ல இடம்.

நல்ல பிள்ளை.

உயரம், சிசப்பு.



நன்றாகப் படித்தவன்.

இரு பெரிய கடைகளுக்கு உரிமையாளன்

அவன் அவளை விரும்புவது மிகவும் தெளிவாகத் தெரிகிறது.

ஆனால் அவள்?

இந்த காதல் கீதல் இதிலெல்லாம் அவளுக்கு நம்பிக்கை இல்லை. அம்மா—அப்பா நல்ல குடும்பத்து வரனைக் கொண்டு வருவார்கள். அவன் பெண் பார்க்க வருவான். இருவருக்கும் பிடித்திருந்தால் அவள் மணமேடை ஏறுவாள்.

திடீரென்று நிலைமை மாறிவிட்டது. அம்மா—அப்பா சிபாரிசு இல்லாமல் தானாக ஒரு வரன் அவளிடம் நேரடியாக வந்திருக்கிறது.

என்ன செய்ய?

அவனுடைய வார்த்தைகள் மனத்தில் மோதின.

''நாமபாட்டுக்கு இங்கே சந்திச்சுக்கலாம். நம்முடைய பலங்கள் பலவீனங்கள் எல்லாத்தையும் தெரிஞ்சுக்கலாம், புரிஞ்சுக்கலாம்''

வார்த்தைகள் திரும்பத் திரும்ப நெஞ்சில் மோத மோத அவனுடைய யோசனையில் அர்த்தமும், நியாயமும் இருப்பதாகப் பட்டது. சந்தித்துக் கொண்டால் என்ன தப்பு? பரஸ்பரம் பேசிக்கொண்டால் என்ன தப்பு?

அவள் நிச்சயமாக உடனடியாக எந்த முடிவையும் சொல்லமாட்டாள். இதுபற்றி அபயத்திடம் மூச்சு விடக் கூடாது. தந்திகூட இப்போதெல்லாம் தபால்களை விட மெதுவாகப் போகிறது. ஆனால் அபயத்தின் குரல் மின்னல் வேகத்தில் சிவாவின் காதுகளை எட்டும்.

ஆனால் அவளுடைய அந்தரங்கங்களை யாரிடமாவது சொல்லியே தீர வேண்டும். ஆனால் இப்போதே அல்ல. கதையின் முன்னுரைதான் எழுதப்பட்டிருக்கிறது. நான்கு அல்லது ஐந்து அத்தியாயங்களாவது முடிந்த பிறகுதான் சொல்லலாம்.

யாரிடம்?

நிச்சயமாக அம்மாவிடம் சொல்லக்கூடாது.

அப்பாவுக்குப் புரியாது.

உத்ரா(யா) அலட்சியப்படுத்துவாள். அவள் இரண்டு பேரை காதலிப்பதாக பாசாங்கு செய்பவள்.

ஈசுவரி!

அவள் ஒருத்திதான் காது கொடுத்துக் கேட்பாள். மனப்பெட்டியிலேயே பூட்டி வைப்பாள். வெளியிட வேண்டிய தருணம் வரும்போது மட்டுமே, ஆனந்தியின் அனுமதியுடன் எல்லாரிடமும் கூறுவாள்.

அன்று இரவு நீண்ட நேரத்துக்குப் பிறகு ஆனந்தி கண் அயர்ந்தாள்.

சந்திப்புகள் தொடர்ந்தன.

பலங்களும் பலவீனங்களும் தெரியலாயின.

மெல்ல மெல்ல—

மெல்ல மெல்ல ஆனந்திக்கு ஜெய்ப்பூரில் அவதாரம் செய்யாத ஜெய்பூ என்கிற ஜெயராமனை பிடித்துப் போயிற்று.

வேறு எந்த இடத்திலும்—மெரினா, தியேட்டர், ஓட்டல் உட்பட—அவர்கள் சந்தித்துக் கொள்ளவில்லை

நாளடைவில் அந்த இனிப்பு வழங்கும் நிறுவனத்தில் வேலை பார்க்கும் சிப்பந்திகளுக்கு ஜெயராமன்—ஆனந்தி ஒரு லட்சிய தம்பதிகளாகவே காட்சி அளித்தார்கள்.



அவர்களுடைய முன்னேற்றத்தைத் தங்கை ஈசுவரி உன்னிப்பாகக் கவனித்து வந்தாள்.

இதை எல்லாருக்கும் அறிவிக்க வேண்டிய நேரமும் கட்டாயமும் வந்தன.

ஆனந்தியும் அபயமும் மாடியில் நின்று கவனிக்க—

கீழே, ஹாலில் ஈசுவரி, ''நான் இப்ப எதுவும் பேசத் தயாரில்லை!'' என்று கூறிவிட்டு மாடிக்கு ஓடி வந்தாள்.

''சின்ன அக்கா, சரியா?''

''தாங்க்ஸ் ஈஸ்வரி. ராத்திரி மொதல்ல அம்மாட்ட சொல்லு. அம்மா அப்பாட்ட சொல்லுவா. அவளுடைய ஒரே நாள்—ஒரே பந்தல் ஆசையும் நிறைவேறும்,'' என்றாள் ஆனந்தி.

## 12

குஞ்சரத்தை ஊரார் வெகுளி என்பார்கள். யார் வந்து தன் துக்கத்தைக் கொட்டி நீலிக் கண்ணீர் வடித்தால் என்ன, குஞ்சரம் உண்மையாகவே அவர்களுடன் சேர்ந்து அழுது. அவர்கள் கேட்கும் உதவியை மறுக்காமல் கொடுத்துவிடுவாள். எத்தனையோபேர் அவளை ஏமாற்றி இருக்கிறார்கள். அதுபற்றி கணவர் நவநீத பாகவதரும், பெண் அபயமும் பலமுறை குத்திக் காட்டிப் பேசி எச்சரித்திருக்கிறார்கள்.

அவளைத் தொடர்ந்து ஏமாற்றி வருகிறவள் ருக்குவும் அவளுடைய கணவர் கிட்டாமணி ஜோசியரும் என்பதை பாகவதர் சுட்டிக்காட்டியும் அவள் இதுவரை நம்ப வில்லை. ஆனால், ரவி என்கிற பிள்ளை ரங்கராஜன்

என்கிற ஒரு ப்ராடை அழைத்துக்கொண்டு மனைவியுடன் அபயத்தைப் பெண் பார்க்க வந்தது ருக்கு—கிட்டாமணி மூலமாகத்தான் என்று வெட்ட வெளிச்சமாகத் தெரிந்த போது, குஞ்சரம் தான் ஏமாந்து போய்விட்டதை முதன் முறையாக உணர்ந்தாள். கணவரும் ஏமாந்து போய் விட்டார் என்ற எண்ணம் திருப்தியை அளிக்கவில்லை. குஞ்சரம் சிபாரிசு செய்யவில்லை என்றால் ருக்கு—கிட்டா மணி ரவியையே இங்கே அழைத்து வந்திருக்க மாட் டார்கள்.

அன்று மத்தியானம் மூன்று மணிக்கு ஒரு பூகம்பம் உண்டாகி எந்த சேதத்தையும் விளைவிக்கவில்லை என்றா லும், அதன்பிறகு தென்றல் போல சிவா வந்து அபயம்—சிவா கலியாணம் நிச்சயமாகியது திருப்தியை அளித் தாலும் குஞ்சரத்தின் மனம் வேறு திசையில் சென்று தவித்தது.

ஆனந்திக்கு யாரும் எந்தக் கல்யாண ஏற்பாடும் செய்ய வேண்டாம் என்று மூன்றாவது பெண் ஈசுவரி சவால் விடுகிறாள். அவளிடமும் கணவர் பாகவதரிடமும் தனி யாக விவரங்களைக் கூறுவதாக வாக்களிக்கிறாள். என்ன இது புதுக்கதை?

கடைசிப் பெண் உத்ரா இரண்டு கல்லூரித் தோழர் களுடன் சில நாட்கள் பழகினதும் அவர்களை வீடு வரை அழைத்து வந்து, 'இவர்தான் என் வருங்கால கணவன்' என்று பகிரங்கமாக அறிவித்ததும், அதன் பின்னர் மீண்டும் அவர்களை அழைத்து வந்து, 'இவர் எனக்கு லாயக்கில்லாதவர்... என் என்கேஜ்மென்ட் கான்சல்டு' என்று நட்ட நடு ஹாலில் இரைந்ததும் இப்போது நினை வுக்கு வந்தது. இருவருடன் மும்மூன்று மாதங்கள் தனித் தனியே (ஒருவர் பின் ஒருவராய்) பழகினாலும், தான் எந்தவித தப்புத்தண்டா செய்யவில்லை என்றும்,



எல்லைக் கோட்டை கால் கட்டைவிரலாலும் தொட்டுப் பார்க்கவில்லை என்றும் உத்ரா சத்தியப் பிரமானம் செய் திருந்தாள். குஞ்சரமும் அதை நம்பி இருந்தாள்.

அவள் பெற்ற நான்கு பெண்களில் உத்ரா ஒருத்தி தான் மற்ற மூன்று பெண்களிலிருந்து மாறுபட்டவள் என்று குஞ்சரம் இதுவரை நினைத்திருந்தாள். ஆனால், இன்று அபயமும், ஆனந்தியும் வெளியே ஒரு மாதிரியாக வும், உள்ளே ஒரு மாதிரியாகவும் இதுவரை நடந்துகொண் டிருக்கிறார்கள் என்பதை குஞ்சரம் தெரிந்துகொண்ட போது, அவளால் தன் ஏமாற்றத்தையும், வேதனையையும் தாங்கிக்கொள்ள முடியவில்லை. அவர்கள் தங்களுக்குப் பிடித்த யாரை வேண்டுமானாலும் கல்யாணம் செய்து கொள்ளட்டும். அமோகமாக வாழட்டும் ஆனால், இன்று சிவா வரும்வரை அவனுடன் தான் ஏற்கனவே ஓரிரு வருடங்களாகப் பழகி வருவது குஞ்சரத்துக்கு தெரியாதே. தெரியாதபடி அபயம் மூடி மறைத்து வைத்திருந்தாளே?

ஆனந்தியிடமும் ஏதோ ஒரு ரகசியம் இருக்கிறது. அவளும் இதுநாள் வரை அதுபற்றி மூச்சு விட்டதில்லை. எந்த இரண்டு பெண்களைப்பற்றி ரொம்பவும் பெருமைப் பட்டு வந்தாளோ எந்த இரண்டு பெண்களும் பெற்றோர் பார்த்து வைக்கும் பிள்ளைகளுக்கு கழுத்தை நீட்டுவார்கள் என்று அசையாத நம்பிக்கை வைத்திருந்தாளோ அவர்கள் இருவருமே அவளை, பெற்ற தாயை ஏமாற்றி விட்டார்கள்.

மூன்றாவது மனிதர்களிடம் ஏமாந்து போனால் ஏமாளி என்ற பட்டம் மட்டும்தான் கிடைக்கும். கணவர் அன்பின் காரணமாக வெகுளி என்று கூறலாம். ஆனால், பெற்ற பெண்களிடமே ஏமாந்து போனால் அவளுக்கு என்ன பெயர் சூட்டுவது?

"குஞ்சு!"

சுவரின்மீது சாய்ந்து கண்மூடி உட்கார்ந்து வேதனைப் பட்டுக்கொண்டிருந்த குஞ்சரம் கணவருடைய குரல் கேட்டுக் கண் விழித்துப் பார்த்தாள்.

''இப்படி ஏமாத்திட்டா, பார்த்தேளா?''

''என்ன குஞ்சு சொல்றே, யார் புதுசா உன்னை ஏமாத்தியிருக்கா?''

''நம்ப பெண்கள்தான்.''

''யாரைச் சொல்றே?''

''அபியும் ஆனந்தியும்...'

''ஏமாத்திட்டாளா... எப்படி?''

''அபியும், சிவாவும் எத்தனை நாளாப் பழகிட்டு வந்திருக்கான்னு இன்னிக்குத்தானே தெரிய வந்தது.''

''சேச்சே, என்ன நீ அசடு மாதிரி பேசறே? சமய சந்தர்ப்பம் வர்றப்ப சொல்லிக்கலாம்னு அபயம் நம்ப கிட்ட சொல்லாம இருந்திருக்கா அவ்வளவுதான்...கடைசி பொண்ணு ஊருக்கு முன்னாடி டமாரம் அடிச்சு தன் நெத்தியிலேயே நாமத்தைப் போட்டுக்கிட்டா... அபயம் அப்படி இல்லையே? பல மாசங்களா சிவாவோட பழகி, அவனுடைய நல்லது பொல்லாததுகளைத் தெரிஞ்சு வைச்சுட்டு, அப்புறம் தானே ஒரு முடிவை எடுத்தா...அபி புத்திசாலி. எல்லாத்தையும் ஆற அமர யோசிச்சு ஒரு காரியத்தைப்பத்தி தீர்மானிக்கிறவ.''

''எங்கிட்ட மூச்சுகூட விடலே.''

''உங்கிட்டேயும் எங்கிட்டேயும் தினசரி, ரன்னிங் காமென்ட்ரி மாதிரி சொல்லலேன்னு நீ தாபப்படறியா குஞ்சு? நான் கொஞ்சம்கூட அவமேல கோபமோ ஆத்திரமோப் படலே. படிச்சவ. ஒரு நல்ல எக்ஸ்போர்ட் பிசினஸ்ல தீவிரமா ஈடுபடறவ. அவ மனசில சிவாவும்



சிவா மனசில அவளும் இத்தனை காலமா குடியிருந்து வந்திருக்காங்க... இப்ப ரெண்டுபேரும் மனசைத் திறந்து சொல்லிட்டாங்க... விசயம் அவ்வளவுதான் குஞ்சு. நீ போய் மனசை அலட்டிக்கறது முட்டாள்தனம்.''

''ஆனந்தியைப் பத்தியும் ஏதோ சொல்லப்போறதா ஈசுவரி பேசினாளே.''

''அவளும் யாரையோ மனசில வைச்சுட்டிருக்கா போலிருக்கு... அது யாரு என்னன்னு தெரியட்டுமே...''

''ஈசுவரி இன்னும் வரலே.''

''நான் கொஞ்சம் முன்னாடி கேட்டேன்... எல்லாரும் சாப்பிட்டப்புறம் ராத்திரி கரெக்டா பத்து மணிக்கு வந்து சொல்றதா ப்ராமிஸ் பண்ணினா.''

''சாப்பிட உட்கார்றேளா?''

''எல்லாருமே உட்காருவோம். குழந்தைகளையும் கூப்பிடு...''

''எனக்கு வாய்க்கு ஒண்ணுமே பிடிக்கலே...''

''எல்லாத்துக்கும் மனசுதான் காரணம் குஞ்சு!
எதிலேயும் ஒரு அளவுக்குமேல ஆசை, பாசம் வைச்சுக்கப்
படாது. பொண்களைப் பெத்துட்டா அதுகள் ஒருநா
நம்மை விட்டு இன்னொரு வீட்டுக்குப் போயிடும்னு
மொதல்லேயே மனசை தயார்பண்ணி வைச்சுக்கணும்.
அப்பத்தான் அதுகள் நிஜமாவே போறப்ப மனசில துக்கம்
இராது. சொல்லப்போனா மனசு திடமா போயிருக்கும்.
பிள்ளைகளானாலும் அவங்க பேர்ல எந்த நம்பிக்கையும்
வைச்சுக்கப்படாது. படிப்பு முடியற வரைதான் நம்
கையை எதிர்பார்க்கும். அப்புறம்? சிறகு முளைச்ச பட்சி
கள்தான்... சரிசரி, பிடிச்சதோ பிடிக்கலையோ என்னோடு
உட்கார்ந்து சாப்பிடு... என்னன்னிக்கும் உனக்கு நான்,

எனக்கு நீ... இதை மறந்துடாதே... நாம பெத்த நாலும் ஒவ்வொண்ணா வெளியேர்ற சொந்தங்கள்தான்... அபி, ஆனந்தி, ஈசுவரி...''

பாகவதருடைய குரல் உடனடியாகப் பலன் அளித்தது.

''உத்ராவைக் கூப்பிடலியே?''

''அவ தானா வருவா,'' என்றார் பாகவதர்.

சாப்பிடும்போது என்றுமில்லாத ஆச்சரியமாக ஒரே அமைதி. நான்கு பெண்களும் மாறி மாறி ஒருவரை ஒருவர் பார்த்துக்கொண்டார்களே தவிர, ஒரு வார்த்தைகூட உதிர்க்கவில்லை.

சாப்பாடு முடிந்தபோது மணி ஒன்பதரை.

நவநீத பாகவதர் 'டிவி'யில் ஆங்கில செய்தியை கேட்கப் போய்விட்டார்.

அபயம் மவுனமாக மாடிக்குச் சென்றாள். ஆனந்தி அர்த்தபுஷ்டியுடன் தங்கை ஈசுவரியைப் பார்த்துவிட்டு அக்காவைப் பின்தொடர்ந்தாள்.

குஞ்சரம் மேஜைமீது இருந்த பாத்திரங்களை ஒழித்து வைக்க ஒவ்வொன்றாக எடுத்து சமையல் அறைக்குச் சென்று அங்கேயே ஒடுங்கிப்போனாள்.

''டீ சின்னச் சின்ன அக்கா!'' என்றாள் உத்ரா.

''என்னடீ நாக்கு நீள்றது?'' என்றாள் ஈசுவரி.

''அபயம் அக்கா, ஆனந்தி, சின்ன அக்கா... நீ? அவளுக்கும் சின்னவள் இல்லியா? அதான் சின்னச் சின்ன அக்கா...''

''சரி சரி, ரொம்ப புத்திசாலின்னு நினைச்சுக்காதே... என்ன வேணும்?''



''நீ இன்னிக்கு அம்மா அப்பாவுக்கு ஒரு கதை சொல்லப்போறே இல்லே...''

''நீ உன் வேலையைப் பாரு உத்ரா.''

''என்ன கதைன்னு எனக்கும் தெரியும்''

''அப்ப நீ சொல்லு... நான் நிம்மதியா தூங்கப் போறேன்...''

கலகலப்பாய் சிரித்துக்கொண்டே உத்ரா வெளியேறினாள்.

மணி பத்து—

நவநீத பாகவதர், செய்தி ஆரம்பிக்கையில் போட்ட வெற்றிலை சீவல் புகையிலையை இன்னும் வெளியேற்றாமல், மேலும் மேலும் கொஞ்சம் கொஞ்சம் பன்னீர் புகையிலையை வாயினுள் செருகி செருகி புது ரசனையில் ஆழ்ந்து போயிருந்தார்.

''நீயும் இப்படி என் பக்கத்திலேயே உட்கார்ம்மா ஈசுவரி!'' என்றார் அவர்.

''அம்மா!''

''நான் இங்கே நின்னுக்கிறேன்.''

''சுருக்கமா சொல்றதா இல்லே விரிவா விவரமா சொல்லணுமா?''

''சுருக்கமாவே சொல்லு... எனக்கு இன்னும் நிறைய வேலை பாக்கி இருக்கு.'' என்றாள் குஞ்சரம்

''அப்புறம் என்கிட்ட நீ விவரமா சொல்லிக்கலாம்மா!'' என்றார் பாகவதர்.

''ஓகே... நோ ப்ராப்ளம்,'' என்ற ஈசுவரி, ''சாம்பு என்கிற சாம்பசிவத்தின் இரண்டாவது பிள்ளை சுந்தரேசனுடைய ஒரே பிள்ளை ஜெய்யூங்கற ஜெயராமன்,

தி. நகர்ல பூரணி நாவல்ட்டீஸ், பூரணி ரெடிமேட்ஸ்னு ரெண்டு கடைக்கு சொந்தக்காரனா இருக்கான். தினசரி மூணு நாலு மணி நேரம் அடையாறு தியாசாபிகல் சொஸைட்டி லைப்ரரியிலும், குறைஞ்சது அரைமணி நேரம் அடையாறு காந்தி நகரில் பிரபலமா இருக்கிற ஒரு ஸ்வீட்—காரம் விக்கற கடையிலும் இருப்பான். நம்ப ஆனந்தியும் வாரத்துக்கு மூணு நாலு நாளாவது அந்த கடைக்குப் போறவள்னு உங்க ரெண்டுபேருக்கும் தெரியும்...''

''கதை புரிஞ்சாச்சு, கதை புரிஞ்சாச்சு, ஈசுவரி... இனிமே நீ போகலாம்.''

''அப்பா நான் இன்னும் முடிக்கலே.''

''முடிக்கறதுக்கு என்ன பாக்கி இருக்கு ஈசுவரி... நாளைக்கே நாளும் செவ்வாய் சனி இல்லை—வியாழன் தான். நானும் உன் அம்மாவுமா சுந்தரேசனுடைய வீட்டுக்குப் போறோம். பேசறோம். ஒரே நாள்ளே ஒரே பந்தல்ல...''

''அடத் தெய்வமே!'' என்றாள் குஞ்சரம்

''பழம் நழுவி பால்ல விழுந்ததுன்னு சந்தோஷப்படு குஞ்சு! 'அடத் தெய்வமேன்னு அலுத்துக்காதே...ஆனந்தி யால நமக்கு எவ்வளவு செலவு மிச்சம்னு கொஞ்சம் யோசனை பண்ணிப் பாரு நம்ம சொந்தக்காரங்க, நம்ம வீட்டு கல்யாணமாகாத ரெண்டு பெண்கள், உனக்கு, என் அம்மாவுக்கு ரெண்டு பட்டுப் புடவை எடுக்க வேண்டாம். ஆண்களுக்கு ஒரு ஜரிகை வேஷ்டி டவல் எடுத்தால் போதும். ஒரே நாதஸ்வரம. ஒரே சமையல்காரன்...ஒரே மண்டபத்தில...ஒரே நாள்ள ரெண்டு கல்யாணம்ங்கற தாலே, ரெட்டை வாடகை இல்லே...இன்விடேஷன் கூட தனித்தனியா பிரிண்ட் பண்ணினா போதும்...இன்னொரு பெரிய விசேஷத்தைப் பாரு. சாம்பசிவத்தின் முதல்



ரெண்டு பிள்ளைகளின் மாட்டுப் பொண்களா நம்ப ரெண்டு பொண்கள் போறா... சிஸ்டர்ஸ் மாரியிங் கசின்ஸ்!''

நவநீத பாகவதர் பரவச நிலையை எய்தினார். சிதம்பரம் நடராஜனைக் கண்ட நந்தன் போல ஆடினார், பாடினார்.

ஆனால் மறுநாள் காலை பத்தரை மணிக்கு சுந்தரேசன் வீட்டில் அவருடைய ஆட்டமும், பாட்டமும், பேச்சும் திடீரென்று நின்றன.

சுந்தரேசனுடைய மனைவி அன்னபூரணி 'சாமி' வந்தவளைப் போல கோர தாண்டவம் ஆடினாள்.

குஞ்சரத்துக்கு உடம்பெல்லாம் முதலில் வியர்த்து கடைசியில் தீராத பயத்தில் சில்லிட்டது

ஆனால் பாகவதர், அவருடைய பேச்சு தற்காலிகமாக நின்றுபோனாலும், சமாளித்துக்கொண்டார்.

அவருக்கு பக்கபலமாக இரண்டு நபர்கள் வந்தார்கள்.

## 13

**சா**ம்பு என்கிற சாம்பசிவத்தின் இரண்டாவது பிள்ளை சுந்தரேசன். மூத்த பிள்ளை ராமாமிர்தத்தை விட இரண்டு வயது சிறியவன். கடைசி தம்பி ஜெயராமன். இதே பெயரைத்தான் சுந்தரேசனுடைய சீமந்த புத்திர னுக்கும் சூட்டியிருந்தார்கள். நாமகரணத்துக்கு முன்னரே இது பற்றிய பெரிய சர்ச்சை ஒன்று எழுந்தது. சித்தப்பா வின் பெயரை சூட்டுவது ஆகாது என்று சாம்புவும் அவருடைய மனைவியும் கூறினார்கள். அப்பா—அம்மா

சொல்லுவதுதான் சரி என்று எல்லா பிள்ளைகளும் ஏகோபித்த அபிப்பிராயத்தை வெளியிட்டார்கள். பரம்பரை வழக்கப்படி, மூத்தது பிள்ளையாக இருந்தால் தாத்தா பெயரையும் பெண்ணாக இருந்தால் பாட்டியின் பெயரையும் சூட்டுவதுதான் நியாயம். இரண்டாவது பிள்ளைக்கு தாய்வழி தாத்தாவின் பெயர் வந்துவிடும்.

ஆனால், கல்லிடைக்குறிச்சியிலிருந்து வந்த அன்னபூரணி, குழந்தையைப் பெற்றெடுத்தவளுக்குத்தான் எல்லா உரிமைகளும் உண்டு என்று முழங்கினாள். அவளுக்கு ராமன் என்றால் உயிராம். ராமனுக்கு ஆயிரம் பெயர்கள் உண்டு. தசரதராமனிலிருந்து கோதண்டராமன் வரை எத்தனை எத்தனையோ. ஆனால், அவளுக்கு மிகவும் பிடித்தது ஜெயராமன் என்ற பெயர்.

புண்ணியாவசனம் பிறந்த ஊரில் நடந்திருக்க வேண்டும். ஆனால் நடக்கவில்லை. காரணம் அந்த சமயம் திருநெல்வேலி மாவட்டத்தில் ஒரு புது வகையான விஷ ஜுரம் பரவி வந்து எல்லாரையும் பயமுறுத்தியது. பிரசவிக்கும் பொருட்டு அன்னபூரணி சென்றால் அவளை ஜுரம் தாக்கக்கூடும். அதனால் அவள் பிறந்த வீடு செல்லக்கூடாது என்று மிகவும் கண்டிப்பாகக் கூறி, மருமகள் இது காரணமாக வேதனைப்படாமலிருக்க அவளுடைய தாயாரை சென்னைக்கு வரவழைத்து அப்போதுதான் கட்டி முடித்த ஒரு வீட்டிலும் குடியேற்றி விட்டார். நல்லவேளையாக தாயார் கோமதி கூடவே விஷ ஜுரத்தையும் கொண்டு வரவில்லை.

குழந்தை பிறந்தது.

புண்ணியாவசனம் நடந்த கையோடு ஜாதகரணமும் நாமகரணமும் நடந்தன.

அப்போதுதான் இந்த சச்சரவு பிறந்தது.



''பெயர் வைச்சா ஜெயராமன்னு பேர் வைக்கணும்!'' என்றாள் அன்னபூரணி.

''அன்னம்! அசட்டுப் பிடிவாதம் பிடிக்காதே...உன் அப்பா உம் பேர்ல ரொம்ப கோபமா இருக்கார்!'' என்றாள் அம்மா கோமதி.

''கோபமா இருந்தா இன்னிக்கே ஊருக்கு போகட்டும்.''

''நம்ப குழந்தைக்கு என் அப்பா பேரைத்தான் வைக்கணும். அதான் முறை'' என்றான் சுந்தரேசன்.

''உங்களை அப்பா துரும்பு போல மதிக்கிறார். மூத்த பிள்ளை மேலதான் அவருக்கு உசிர்... அவர் பெயர் அவரோடவே இருக்கட்டும்!'' என்றாள் குழந்தையைப் பெற்றவள்.

''இதப் பாரும்மா... நாமகரணம் ஒரு வைதீக காரியம். வைதீகத்துக்கு உன் மாமனார் பெயர் இருக்கட்டும் ஆனா எப்படியும் அவர் இருக்கறப்ப அவர் பேரைச் சொல்லி நாம குழந்தையை கொஞ்சப் போறதில்லே... தைலா பிள்ளையை சிவான்னு கூப்பிடற மாதிரி உன் பிள்ளையை ஜெயராமன்னு கூப்பிடுவோம்...எல்லாருக்கும் இதில திருப்தி இருக்கும்!'' என்றாள் மாமியார்.

''ரொம்ப வாஸ்தவமான பேச்சு அன்னம், உன் மாமியார் சொல்றபடி நடந்துகொள்... மாப்பிளே, நீங்களும் ஒரு வார்த்தை சொல்லுங்களேன்!'' என்றாள் கோமதி.

''நான் என்ன சொன்னாலும் உங்க பெண் கேட்க மாட்டா மாமி... அவ பிடிவாதம்தான் உங்களுக்குத் தெரியுமே...''

''நம்ப குடும்ப மானத்தைக் காத்தில பறக்க விடாதடீ!'' என்றாள் அன்னத்தின் தாயார்.

''ஒரு கண்டிஷன்,'' என்றாள் அன்னபூரணி.

''சொல்லு, கேட்டுத் தொலைக்கிறோம்.''

''இன்னிக்கு என்ன பேரை வேணும்னாலும் வைச்சுத் தொலையுங்கோ...ஆனா, ஸ்கூல்ல சேர்க்கறப்ப இவன் பேரு ஜெயராமனாத்தான் இருக்கணும். இவனை நான் வாய் நிறைய 'ஜெயராமா'ன்னு கொஞ்சணும்.''

''ஒரு தடவை 'ஜெயராமா'ன்னு கூப்பிடறதுக்குள்ளே அது தூங்கிப் போயிடும். ஏன் உங்க திருநெல்வேலி பெயர் ஏதேனும் யோசிச்சுப் பாரேன். ரகுபதி ராமசுப்ரமணியன், பூரண சங்கரலிங்கம், ஹரிஹர நாராயணன், அனந்தராம கிருஷ்ணன்...'' என்றான் சுந்தரேசன்.

''உங்க லால்குடி நையாண்டியை எங்க ஜில்லாமேலே காட்டாதீங்கோ... சாம்பசிவம், மகாலிங்கம், சீனிவாசன், சங்கரன், ராமாமிர்தம், ராமபத்ரன், தியாகராஜன் இதெல்லாம்தானே உங்க திருச்சி தஞ்சாவூர் ஜில்லா பேர்கள்?'' என்று அன்னபூரணி சாடினாள்.

கடைசியாக சாம்பசிவம் நீதிபதியாக வந்தார்.

''நம்ப குடும்பத்தில வாதம் எதிர்வாதத்துக்கே இடமில்லை. இப்ப என்ன பிரச்னை? என் பெயரை வைக்கக் கூடாது அவ்வளவுதானே...? நான் என்ன மகாத்மா காந்தியா, நேருவா இல்லே தாகூரா, இல்லே உங்க ஜில்லா பாரதியாரா, என் பெயர் கொடி கட்டிப் பறக்க...அன்னத்தின் மனசில என்ன பேரு உறுதியா இருக்கோ அதுவேதான் என்னுடைய இந்தப் பேரனுடைய பெயரும்!''

அன்னபூரணி திடீரென்று தோல்வியில் வெக்கிப் போனாள்.



''என்னை மன்னிச்சுடுங்க மாமா. உங்க பெயரே வைதீக முறையில இருக்கட்டும். நான் ஆசைப்படற பெயரைச் சொல்லி கூப்பிட்டுக்கறேன்...''

''தில்யமா செய்... என் பேரு சாம்பசிவம். எவன் அப்படி கூப்பிடறான்...? சாம்புங்கறான்...சில பேர் சாம்பூன ஊன்னு ஒரே பூவாக்கிடறா... சரி சரி, மேற்கொண்டு காரியத்தைப் பார்ப்போம்...''

ஜட்ஜ்மென்ட் இரண்டுங்கெட்டானாகத் தோன்றினாலும் அதுவே நிலைத்தது.

பள்ளிக்கூடத்தில் சேர்க்கும்போது அன்னபூரணி வெற்றி பெற்றாள். ஜெய்யூன்னு வீட்டில் செல்லமாக அழைக்கப்பட்ட அவளுடைய பிள்ளை, 'எஸ். ஜெயராமன்' என்ற பெயரில் பதிவு செய்யப்பட்டான்.

எவ்வளவுக்கு எவ்வளவு தகப்பனார் அடங்கிப் போகிறாரோ அவ்வளவுக்கு அவ்வளவு அம்மா வீங்குகிறாள் என்பதை சிறு வயதிலிருந்தே உணர ஆரம்பித்த ஜெய்யூ, அப்பாமீது பரிதாபம் காரணமாக அளவற்ற அன்பும், அம்மாமீது எரிச்சல் காரணமாக அலட்சியமும் கொண்டிருந்தான்.

ஆனாலும் அவனால் அம்மாவின் தூய்மையான அன்பை அலட்சியம் செய்ய முடியவில்லை. வயது ஏறஏற, அறிவு முதிர முதிர, அன்னபூரணி வெளியே என்னதான் இறைந்தாலும் அவளுடைய தாய்ப்பாசத்துக்கு இணையே கிடையாது என்று நினைக்க ஆரம்பித்தான். அப்பாவின் போக்கை ஆராய்ந்து பார்க்க பார்க்க, அம்மா அவரிடம் சுத்தாமலிருந்தால்தான் அதிசயம் என்று தோன்றலாயிற்று.

காலை எட்டு மணிக்கு பல் துலக்குவது, காபி குடித்த பிறகு சாய்வு நாற்காலியில் அன்றைய பேப்பரைப் படிக்க ஆரம்பித்து அப்படியே கண் அயர்வது; காலை பத்து

மணிக்கு மீண்டும் கண்விழித்து மீண்டும் காபியை குடித்து குளியல் அறைக்குச் செல்வது, அங்கே தோடி, பைரவி, கல்யாணிகளின் மென்னிகளை முறித்து அலங்கோலப் படுத்திவிட்டு, மங்களம் பாடாமலேயே சொட்டச் சொட்ட வெளியே வந்து, நேற்று கட்டின வேட்டியை மாற்றாமலே சாப்பிட உட்காருவது; ஒரு கறி, கூட்டு, பச்சடி இதெல்லாம் இல்லாமற் போனால் சாப்பிட மறுப்பது; சாப்பிடும்போதே இதில உப்பு தூக்கல், அதில புளி ஓவர், ரசம் ரசமா இல்லை, சப்னு இருக்கு என்று விமர்சனம் செய்வது; இத்தனைக்குப் பிறகும் வயிற்று கனத்தில் ஜனித்துப் போய் சாய்வு நாற்காலியில் கிடப்பது; இதெல்லாம் ஜெய்யூவுக்கு பிடிக்கவே இல்லை. தாத்தா அமைத்துக் கொடுத்த துணிக்கடைப் பக்கம் வாரத்தில் ஒருநாள் எட்டிப் பார்த்தால் அதிசயம். எல்லா நாட்களுமே தாத்தா தான் கவனித்துக்கொள்கிறார்.

தன்னுடைய தகப்பனார் பிறவிச சோம்பேறியா அல்லது நடுவிலே வந்த சோம்பேறித்தனமா என்பது பற்றி ஜெய்யூ ஆராய்ச்சி நடத்தவில்லை. ஆனால் ஒன்றை மட்டும் மிகவும் உறுதியாக மனதில் நிலைநாட்டிக் கொண்டான். அவன் அப்பாவைப்போல என்றுமே இருக்க மாட்டான். அம்மாவைப்போல எப்பொழுதும் தேனீயாக உற்சாகமாக இருப்பான், அதே சமயத்தில் அறிவையும் வளர்த்துக் கொள்வான்.

இந்த லட்சியத்தின் அடிப்படையில்தான் அம்மாவின் உதவியுடன் தாத்தாவின் ஆதரவுடன் இரண்டு கடைகளை அவனால் ஆரம்பித்து நடத்த முடிந்தது.

அன்று காலை 'ஜாகிங்'கை முடித்து அவன் வீடு திரும்பியபோது மணி ஏழு. திடீரென்று போன் அடித்தது.

"இதுவரை ரெண்டு வாட்டி அடிச்சு நின்னாச்சு?" என்றார் தகப்பனார் சுந்தரேசன், காலைத் தூக்கம் கலைந்த எரிச்சலுடன்.



"யார்னு விசாரிக்கலாம் இல்லியா?"

"விசாரிச்சிருக்கலாம்டா... ஆனா அம்மா உள்ளேந்து வந்து எடுப்பாள்னு நான் இருந்தேன். நான் எடுப்பேன்னு அவ உள்ளேயே..."

"நான் ஒண்ணும் உள்ளேயே இருக்கலே, பத்து அடிக்கறதுக்கு முன்னாடி டேபிள்ல வந்து வயிறு பாடறது வயிறு பாடறதுன்னு கத்துவீங்களே...மிக்சியிலே தேங்காய் அரைச்சுட்டிருந்தேன்..."

ஏற்கனவே ஜெய்யூ டெலிபோனை எடுத்து 'அலோ, ஜெயராமன் ஹியர் என்று சொல்லியாகிவிட்டது.

"ஒரு எச்சரிக்கை."

ஆயிரம் அடி ஆழமான கிணற்றிலிருந்து ஆனந்தி பேசினாலும் குரலை அவனால் அடையாளம் கண்டு கொள்ள முடியும்.

"என்ன?"

"யாரானும் பக்கத்தில இருக்காங்களா?"

"அப்ப நீங்க பதில் பேசாம வெறுமனே கேட்டுட்டு வாங்கோ போதும்."

"ஓகே."

"இன்னிக்கு பத்தரை மணி சுமாருக்கு என் அம்மா—அப்பா ரெண்டுபேரும் உன்னோட அம்மா—அப்பா ரெண்டுபேரையும் நம்ப ரெண்டுபேர் விசயமாப் பார்த்துப் பேச வரப்போறாங்க... உஷார்...முன்கூட்டியே சொல்றது உங்களுக்கு ஒரு எச்சரிக்கையா இருக்கட்டும். உங்க அம்மாவை தயார் பண்ணிவையுங்க...அபயம்—சிவா கல்யாணம் நடக்கற அன்னிக்கே இதுவும் நடந்தாகணும்னு என் அப்பா ரொம்பப் பிடிவாதமா இருக்கார்."

"ஓகே... ஓகே..."

டெலிபோனை டக்னு வைத்துவிட்டுத் திரும்பிப் பார்த்தான். அப்பா மிகவும் சவுகரியமாக, அன்றைய இந்து பேப்பரால் முகத்தை மூடிக்கொண்டு லேசான குறட்டை ஒலியில் உலகத்தையே மறந்திருந்தார்.

அவன் நகர்ந்து உள்ளே சென்று சமையல் அறை யினுள் எட்டிப் பார்த்தான்.

''இந்த அரை டிராயர் அலலட்சணத்தை ஜாகிங் போறப்ப வைச்சுக்க போதும், ஜெய்யு... போய் முதல்ல கை கால் அலம்பிட்டு வேட்டி கட்டிட்டு வா. காபி கலந்து வைக்கிறேன்.''

பாதி காபியை முடித்துவிட்டு, ''அம்மா!'' என்றான்.

''என்னடா, டிகாஷன் போறாதா?''

''அதில்லே...''

''பின்ன எது?''

மீதி காபியையும் குடித்தான்.

''ஏம்மா இதுவரையில் என்னால உனக்கு ஒரு தொந்தரவு, ஒரு இம்சை, ஒரு அவமானம்னு ஏதாவது நேர்ந்திருக்கா?''

''எதுக்கு அஸ்திவாரம்?''

''நீ மனசு வைச்சா இந்த அஸ்திவாரம் இல்லாமலே நான் பெரிசா ஒரு கோட்டை கட்டிடுவேன்!''

''மொதல்ல விசயத்தைச் சொல்லுடா ஜெய்யூ!''

''ஒரு தப்புத் தண்டா செய்யாம, சுண்டு விரலாலும் தொடாம—ஒரு படிச்ச, உன்னை மாதிரியில்லேன்னாலும், கொஞ்சம் அழகான பெண்ணோட அஞ்சாறு மாசமாப் பழகிட்டு வர்றேன் அம்மா!''

''அடி ராஸ்கல்...இத்தனை நாளா மூடிமறைச்சுட்டு இப்பத்தான் மூச்சு விடறியா?''



''இன்னிக்குத்தான் சந்தர்ப்பம் வர்றது அம்மா.''

''என்ன வயசு?''

''என்னை விட மூணு வயசு சின்னவ. இப்ப என் வயசு இருபத்தேழு.''

''அல்லாவா, ஜீசசா, மகாவிஷ்ணுவா, இல்லே பூணூல் போடாத வேற...''

''சேச்சே... அதெல்லாம் இல்லைம்மா. சரியான வடமன்...''

''எந்த ஊரு?''

''இந்த மெட்ராஸ்தாம்மா.''

''எவனுக்கும் மெட்ராஸ் சொந்த ஊர் இல்லைடா... பிழைக்க வந்த ஊர்தான்.''

''அப்படிப் பார்த்தா கும்பகோணம் ''

''மறந்துடு.''

''என்னம்மா சொல்றே?''

''என் பெரியப்பா புள்ளை அமெரிக்காவிலிருந்து இந்த மாசக் கடைசியில வர்றான். கல்லிடைக்குறிச்சிக்குப் போறதுக்கு முன்னால பெண்டாட்டி, பெண் ரெண்டு பேரையும் அழைச்சுண்டு வரேன்னு சொல்லியிருக்கான்... அந்தப் பெண் பேரு மாலதி. அவதான் என் மாட்டுப் பொண்...''

''உன் மாட்டுப் பொண்ணுன்னா?''

''மடையா, உன் ஒய்ப்.''

''முடியாது. நிச்சயமா முடியாது.''

''முடியும். நிச்சயமா முடியும்.''

''அம்மா!''

''என்னடா கத்தறே?''

''நானும் அண்ணா சிவாவும் மயிலாப்பூர் கபாலி சுவரர் சந்நிதியில, கைகோர்த்து நின்னு ஒரு சத்தியம் பண்ணியிருக்கோம்.''

''என்னன்னு?''

''ரெண்டுபேரும் ஒரே குடும்பத்திலேர்ந்து அக்கா, தங்கைகளை கல்யாணம் பண்ணிக்கிறதுன்னு...''

''அட ராஸ்கல்! சிவாவுக்குத்தான் நிச்சயதார்த்தம் நடக்கப்போறதே... நவநீத பாகவதரோட பொண்ணு. பேர் என்ன...ஹங்...அபயம்...''

''அவ தங்கை ஆனந்தி...''

''இந்த சத்தியம் எல்லாம் எப்ப பண்ணுனீங்க...''

''சின்ன வயசிலேயே...''

''அப்ப அது செல்லுபடியாகாது அறிவு முதிராத வயசில பண்ணின சத்தியம். எதுக்கும் நான் இப்பவே சிவாவுக்கு போன் பண்ணிக் கேட்கிறேன்...''

அன்னபூரணி நகர்ந்தாள்.

''வேண்டாம்மா... சிரமப்படாதே... சத்தியத்தைப் பத்தி மறந்துடு...''

''அப்பப் பொய்தானே சொன்னே?''

''கல்யாணம்னு வர்றப்ப பொய்தாம்மா சொல்லணும்... அம்மா ப்ளீஸ்... ஆனந்தி நல்ல பொண்... எக்ஸ்போர்ட் பிசினஸ்ல இருக்கா... அவ சிங்கப்பூர் போறப்ப உன்னையும் அழைச்சுட்டுப் போவா...எங்களுக்கு குறுக்கே நீ வராதேம்மா, ப்ளீஸ்... நவநீத பாகவதரும் அவரோட ஒய்ப் குஞ்சரம் உன்கிட்ட இது பத்திப் பேச பத்தரை மணிக்கு வரப்போறா...''

''வரட்டும் ஒரு ஆரஞ்சு ஜூஸ் கொடுத்து அனுப்பிச்சுடறேன்...''



''அப்புறம் என்னை நீ உசிரோட பார்க்க முடியாது... இது சத்தியம்... அம்மா உன் மீது ஆணை!''

''முதல்ல இடத்தைக் காலி பண்ணு. உங்க அப்பா சாப்பிட பறப்பார்.'' என்றாள் அன்னபூரணி.

# 14

**த**ன் ஓரகத்தி தைலாவுக்கு பெரிய பணக்காரக் குடும்பத்திலிருந்து பெண் வருவதை அன்னபூரணி வெளியே சிரித்துக்கொண்டாலும் உள்ளூரச் சகித்துக்கொள்ள முடியாமல் தவித்தாள். வீட்டின் எல்லா அங்கத்தினர்களும், ஒருவர்கூட விடாமல் அபயத்தைப் புகழ்ந்தார்கள்; பாராட்டினார்கள். கோடிக்கணக்கான ரூபாய்க்கு அப்பளமும், ரெடிமேட் உடுப்புகளும் ஏற்றுமதி செய்யும் அளவுக்கு சாமர்த்தியம் படைத்தவள் என்று சுவரொட்டிகளில்தான் எழுதி பிரபலமடையச் செய்யவில்லை.

இப்படிப்பட்ட இடத்திலிருந்து தைலாவுக்கு மருமகள் வருகிறாள் என்றால் அன்னபூரணிக்கு நியாயமாக வயிற்றெரிச்சலும், பொறாமையும் இருந்தாக வேண்டுமே? இருந்தது. அபயமும், சிவாவும் கடந்த சில வருடங்களாக பழகியவர்கள் என்றும், இருதரப்பாரின் சம்மதத்தோடுதான் கல்யாணம் நிச்சயமாகி இருக்கிறது என்ற இன்னொரு செய்தி கிடைத்தபோது அன்னபூரணி மேலும் துவண்டு போனாள்.

அவளுக்கும் கருவேப்பிலை கொழுந்துபோல ஒரு பிள்ளை இருக்கிறான். நல்ல சிகப்பு திறம். ஆஜானுபாகுவான தோற்றம். நல்ல படிப்பு. இரண்டு பெரிய கடைகளுக்கு முதலாளி. ஆனால், என்ன புண்ணியம்?

பகலில் பாதி நேரம் அடையாறு தியசாபிகல் சொசைட்டி லைப்ரரியிலும், இரண்டுமணி நேரம் இனிப்பு கடையிலும் நேரத்தை வீணடிக்கிறான். அப்பன்காரன் சோம்பேறியாக வீட்டில் சாப்பிட்டு சாப்பிட்டு தூங்கி வழிகிறான் என்றால், பிள்ளை ஒரு அழகான பெண்ணை காதலிக்கவும் வக்கு இல்லாமல் ஜெ. கிருஷ்ணமூர்த்தியின் புத்தகங்களில் மனத்தைப் பறிகொடுக்கிறான்.

அவளுடைய பிள்ளை ஜெய்யூவுக்கு நல்ல கதியே கிடையாதா?

இவ்வாறு அன்னபூரணி தன்னுள் புலம்பிக்கொண்டிருக்கையில்தான், இன்ப அதிர்ச்சி தரும் இனிப்பான குண்டைத் தூக்கி ஜெயராமன் போட்டான். அபயத்தின் தங்கை ஆனந்தியுடன் கடந்த சில மாதங்களாகப் பழகுவதாயும், அவளுடைய தாய், தந்தையர் அன்று பத்தரை மணிக்கு கல்யாண சம்பந்தம் பேச வர இருக்கிறார்கள் என்ற செய்திகளை பிள்ளை ஜெய்யூ கூறியபோது, அன்னபூரணிக்கு சந்தன மற்றும் இளநீர் அபிஷேகங்கள் செய்தது போல உள்ளமெல்லாம் குளிர்ந்தது. ஆனால், அவள் அன்னபூரணி ஆயிற்றே! உடனே சரி என்று சம்மதம் கொடுத்துவிட்டால் அவளுடைய கவுரவம் என்னவாகிறது. அமெரிக்காவிலிருந்து துபாய் வழியாக வரப்போகிற அவளுடைய பெரியப்பா பிள்ளையை இழுத்தாள். அவனுடைய பெண் மாலதிதான் தனக்கு மருமகள் என்று பயம் காட்டினாள். இதற்கெல்லாம் பிள்ளை அயரவில்லை என்பதை அறிந்ததும், ஆரஞ்சு ஜூஸ் உபசாரம் செய்து ஆனந்தியின் பெற்றோர்களை வெளியேற்றுவதாக வாக்களித்தாள்.

எவ்வளவுக்கு எவ்வளவு வெளியே கடுமையாக அன்னபூரணி பேசினாளோ அவ்வளவுக்கும் மேலாக மன மகிழ்ச்சியுடன் துள்ளினாள்.



அபயம் போன்ற பெண் தனக்கும் மருமகளாக வர வேண்டும் என்று எண்ணினாள். அவளுடைய தங்கையே வந்துவிட்டாள்.

தன் பிள்ளை பகல் நேரத்தை லைப்ரரியில் வீணடிக்கிறானே என்று நொந்துகொண்டிருந்தாள். அவன் வீணடிக்கவில்லை என்று இப்போது தெரிந்தபோது திருப்தியாக இருந்தது.

கணவன் சுந்தரேசன் அன்று குளியலறையில் கரகரப்ரியாவின் கழுத்தைத் திருகிக்கொண்டிருந்தார். ஆலாபனை நினைத்த திசையில் போகாதது ஒரு விதத்துக்கு சவுகரியமாகப் போயிற்று. சாகித்தியத்தை எடுத்தார். சக்கனி ராஜாவா அல்லது பக்கல நிலபடியா என்ற சந்தேகம் வந்தது.

அதேசமயம் குளியல் அறைக் கதவை அன்னபூரணி தடதடவெனத் தட்டினாள்.

''சீக்கிரம் வெளியே வாங்க... கத்தல் போதும்...''

என்றைக்குமே கணவனுடைய குரல் வளத்தை ராகத்தோடு இணைத்துப் பார்த்தது இல்லை அன்னபூரணியைப் பொறுத்தமட்டில் ஒரு கத்தல்தான் அது.

''இதோ வரேன்.''

''டைனிங் டேபிள்மேல எல்லாம் எடுத்து வைச்சிருக்கேன். எடுத்துப் போட்டுச் சாப்பிடுங்கோ... நான் ஒரு முக்கிய வேலையா அப்பாலைப் பார்த்துட்டு வந்துடறேன்... என்ன, காதில விழுந்ததா?'' என்றாள் அன்னம்.

''நவநீத பாகவதர் வரப்போற விசயம்தானே?'' என்றார் சுந்தரேசன்.

''உங்களுக்குத் தெரியுமா?''

''ஜெய்யூ சொன்னான்.''

சுந்தரேசன் வெளியே ஈரத் துண்டைக் கட்டிக் கொண்டு வந்தார்.

''ஜெய்யூ சொன்னானா?''

''ஆமாம். ஏன் சொல்லப்படாதா? 'அப்பா, எல்லாம் அம்மாவும், தாத்தாவும் பார்த்துப்பா... நீங்க வாயைத் திறக்காம இருந்தாலே போதும்னு சொன்னான்!''

அன்னபூரணி சிரிக்க ஆசைப்பட்டாள். ஆனால், சிரிக்கவில்லை. ஓரிரு நிமிடங்களுக்கு அவரைப் பார்த்த போது பரிதாபமாக இருந்தது. இவ்வளவு வெகுளியாக இருக்கிறாரே.

''நீங்க சீக்கிரம் சாப்பிட்டுடுங்கோ... அவங்க வந்தா லேசில கிளம்பமாட்டா... அப்புறம் உங்களுக்கு சாப்பிட உட்கார பன்னண்டு ஆயிடும். உங்களால தாங்கிக்க முடியாது.''

''எதுக்கு அப்பாவைப் பார்க்கப்போறே அன்னம்?''

''அவர் இருந்தாத்தான் சபை நிறைஞ்சு இருக்கும்... நான் இதோ வந்துடறேன்... மணி பத்து அடிக்கப் போறது!

''சரி... ஜெய்யுவும் வெளியே போயாச்சு!'' என்றார் சுந்தரேசன்.

''எங்கிட்ட சொல்லிக்காமலே போயிருக்கான் ராஸ்கல்!''

''உனக்கு இந்தக் கல்யாணத்திலே இஷ்டமில்லேன்னு சொன்னாயாமே? மனசு இடிஞ்சு போயிருக்கான்...''

''மொதல்ல நீங்க சாப்பிட உட்காருங்கோ... இப்ப உட்கார்ந்தாத்தான் பாகவதரும், குஞ்சரமும் வர்றதுக்குள்ளே ஏப்பம் விட்டுட்டு எழுந்திருக்கலாம்!'' சொல்லி விட்டு அன்னபூரணி விரைந்தாள்.



அவள் சாம்புவின் வீட்டை அடைந்தபோது மணி பத்து அடித்து ஐந்து நிமிடங்கள்.

''என்னம்மா அன்னம்... என்ன பறபறக்க வர்றே... யாருக்கும் உடம்புக்கு ஏதும் இல்லியே...''

''அப்பா...இன்னிக்கு கார்த்தால பத்தரை மணிக்கு பாகவதரும், அவர் சம்சாரமும் வர்றா...''

''தெரியுமே... நானே இப்ப அங்கதான் வந்துட்டிருக்கேன்...''

''உங்களுக்கு ஏற்கனவே தெரியுமா அப்பா?''

''தெரியாமலா, தெரியும்னேன். ஜெய்யூ, ஜாகிங் முடிச்சுட்டு திரும்பி வர்றப்ப எங்கிட்டதான் வந்தான். விசயத்தைச் சொன்னான். ஜமாய்டான்னேன்... அது சரி, வீட்ல இன்னிக்கு என்ன சமையல்?''

''கத்தரிக்கா சாம்பார். வாழைக்காய் பொரியல்.

''தைலா வீட்லதான் சாப்பாடு. அதை முடிச்சுட்டு அங்கே வரேன் அன்னம்!'' என்றார் சாம்பு. பிறகு, ''அபயத்தைவிட இந்த ஆனந்தி மகா கெட்டிக்காரி. வெட்டிண்டு வான்னா கட்டிண்டு வந்து நிப்பா...சரி, நீ புறப்படு... நான் அஞ்சு நிமிசத்திலே சாப்பிட்டுட்டு வரேன்.''

''அண்ணா, மன்னி எல்லாரையும் வரச்சொல்ல வேண்டாமா?''

''ராமாமிர்தம் கடைக்குப் போயாச்சு...தைலா வந்து என்ன செய்யப்போறா? உன்னை மாதிரி விவரமாப் பேசக்கூடத் தெரியாது. எதுக்கும் அவளை நானே வரச் சொல்றேன்...நீ போய் கவனிக்க வேண்டியதை எல்லாம் கவனி அன்னம்!''

''சரி, அப்பா!''

அன்னபூரணி வீடு திரும்பியபோது, சுந்தரேசன் தக்காளி எலுமிச்சம்பழ ரசத்துக்காக, வெள்ளை வெளேரென்ற பொன்னி அரிசியால் அனை கட்டிக்கொண்டிருந்தார். வெள்ளித் தட்டின் மேல் நான்கு அப்பளங்கள் அணிவகுத்து நின்றன.

''இன்னுமா சாப்பிட்டாகலை?'' என்று கேட்டுக் கொண்டே வந்தாள் அன்னம்.

''இப்பத்தான் சாம்பார் முடிஞ்சுது... வாழைக்காய் பொடி சூப்பர்...ஏ கிளாஸ்...கார்த்தால கொத்தவரங்காய் உசிலி செய்யப்போறதா சொன்னே போலிருக்கே...''

''சீக்கிரம் சாப்பிட்டுவிட்டு எழுந்திருங்கோ... உங்க அப்பா இன்னும் கொஞ்ச நேரத்தில வந்துடுவார்... நீங்களும் கொஞ்சம் நீட்டா டிரஸ் பண்ணிட்டு பாகவதரை ரிசீவ் பண்ணுங்கோ.''

''ஏன் இந்த டிரஸ்சுக்கு என்ன குறைச்சல்?''

''பனியன்ல அங்கங்க ஓட்டை. கும்பகோணம் காசித் துண்டு. பார்க்கச் சகிக்கலே...சலவையிலிருந்த வேட்டியும், ஷர்ட்டும் போட்டுட்டு வாங்கோ...பரம்பரை துணிக்கடை பரம்பரைன்னு பேரு... உம் சீக்கிரம்!''

எல்லா பேச்சுக்களையும் கேட்டவனாய் ஜெயராமன் ஹாலை ஒட்டினாற் போன்ற அறையில் உட்கார்ந்திருந்தான். அந்த அறை தகப்பனார் சுந்தரேசனுடைய பிரத்யேகமான அறை. அம்மா அதனுள் கால் வைப்பதே அபூர்வம். 'அவன் அங்கே ஒளிந்துகொண்டு, ஆனந்தியின் தாயாரிடம் அம்மா என்ன பேசப் போகிறாள் என்பதை அறிந்துகொண்டே ஆக வேண்டும்.

சரியாக பத்தேகாலுக்கு அன்னபூரணி பட்டுப்புடவை கட்டிக்கொண்டு ஒரு தடவைக்கு இரு தடவையாக கண்ணாடியைப் பார்த்துத் திருப்தி அடைந்தாள். சுந்தரேசன்



மனைவியின் சொல்லை மீற முடியாமல் ஜரிகைக் கரை வேட்டி கட்டிக்கொண்டு, ஜிப்பாவும் அணிந்து காத்திருந்தார்.

பத்து இருபத்தைந்துக்கு சாம்பு என்கிற சாம்பசிவம். குடும்பத் தலைவர் வந்து சேர்ந்தார்.

சரியாக பத்தரை மணிக்கு ஒரு கார் வந்து நின்றது, காரை யார் ஓட்டிக்கொண்டு வருகிறார்கள் என்பதை அறியும் பொருட்டு அன்னபூரணி ஜன்னல் வழியாக எட்டிப் பார்த்தாள். கண்கள் ஆச்சரியத்தில் பன்மடங்காக விரிந்தன.

மூத்த பெண் அபயம் காரை ஓட்டி வந்திருக்கிறாள்.

அவள் அருகே இருப்பது யார்? தங்க விக்ரகம் போல இருக்கிறாளே!

அன்னபூரணி தன் திகைப்பிலிருந்து வெளிவருவதற்கு முன்பே பாகவதர் வீட்டினுள் புகுந்துவிட்டார்.

''இது இரண்டாவது சம்பந்தம்!'' என்று சொல்லி சாம்பு சிரித்தார்.

''எல்லாம் நல்லபடியாக நடந்தால் சரி!'' என்றார் நவநீத பாகவதர்.

அவர் சொல்லி வாய் மூடவும், சுந்தரேசனுடைய அறையிலிருந்து, அதிர்வெடிச் சத்தம் போல் தும்மல் சத்தம் கேட்பதற்கும் சரியாக இருந்தது.

''என்னது இது அபசகுனம் மாதிரி...'' மறுகணம் இன்னொரு பெரிய தும்மல்.

''ரெட்டைத் தும்மல்! நல்ல சகுனம்தான்!''

''ஜெய்யுதான் இப்படித் தும்முவான்...அவன் அந்த ரூம்ல இருக்கான் போலிருக்கு!'' என்று சொன்ன அன்னபூரணி குஞ்சரத்தைப் பார்த்து, ''உங்க பெண்கள்தானே காரில் உட்கார்ந்திருக்கா... இறங்கி வரச்சொல்லுங்களேன்!'' என்றாள்.

குஞ்சரம் பாகவதரைப் பார்த்தான்.

''இதில் என்ன தப்பு குஞ்சு. அதுகள் ரெண்டையும் உள்ளே வரச்சொல்லு... எத்தனை நேரம்தான் கார்லேயே உட்கார்ந்திருக்கும், பாவங்கள்!'' என்றார் பாகவதர்.

மறு நிமிஷம் அபயமும், ஆனந்தியும் படி ஏறி வந்தார்கள்.

மூன்றாவது தும்மல் அணுகுண்டு போல வெடித்தது.

''நீயும் வாடா, ஜெய்பூ வெளியில!'' என்றாள் அன்னபூரணி.

# 15

ஜெய்பூ என்கிற ஜெயராமனுடைய தாயார் அன்னபூரணிக்கு ஒரு சுபாவம். சிறுவயதிலிருந்தே தோன்றி வளர்ந்துவிட்ட சுபாவம். நான்குபேர் முன்னிலையில் தான் மற்ற எல்லாரையும்விட பிரதானமாக விளங்க வேண்டும்; தான்தான் கெட்டிக்காரி, புத்திசாலி என்றெல்லாம் காட்டிக்கொள்ள வேண்டும் என்பது போன்ற நப்பாசைகள் அவளுக்கு உண்டு. கணவர் சுந்தரேசன் இதை ஒரு பொருட்டாக மதிக்காத காரணத்தால் அன்னபூரணியை சரியான சமயத்தில் அடக்கவில்லை. எல்லாம் நாளாவட்டத்தில் சரியாகிவிடும் என்று சாம்புவும் வாளாவிருந்துவிட்டார். பிள்ளை ஜெயராமனுக்கு நாமகரணம் சூட்டும் விழாவின்போதுதான் முதன்முதலாக இந்த குணம் அவளிடம் வெளிப்பட்டது. அதன்பிறகு எத்தனையோ சந்தர்ப்பங்களில் வெளியாயின. ஜெயராமனுடைய அக்ஷர அப்பியாசம், உபநயனம், கல்லூரிப் படிப்பு போன்ற விசயங்களில் அவள் தன்னுடைய கருத்துக்களை விரமுழக்கம் செய்தாள். என்னதான் கடைசியில் சாம்பு



லாவகமாக அவளை வெற்றிகொண்டு தம் கருத்தை நிலைநாட்டினாலும் அன்னபூரணியின் இந்த குணம் மறையவில்லை.

இப்போது ஒரு அரிய வாய்ப்பு பிறந்திருக்கிறது. அவளுடைய பிள்ளைக்கு சம்பந்தம் பேச வந்திருக்கிறார்கள். என்றைக்குமே பிள்ளை வீட்டுக்காரர்கள் உயர்ந்தவர்கள். அன்னபூரணி பிள்ளையின் தாயார் இத்தருணம் விட்டால் தன் முக்கியத்துவத்தை நிலைநாட்ட வேறு எத்தருணம் வாய்க்குமோ? உள்ளூர தன் பிள்ளைக்கும், ஆனந்திக்கும் திருமணம் நிச்சயமாகி நடக்க வேண்டும் என்ற ஆசைதான். ஆனால், அதை உடனடியாக வெளியிட்டால் அன்னபூரணியின் மதிப்பு என்னாகிறது?

சபை நிறைந்தது.

சுந்தரேசன் ஜன்னல் அருகே ஒரு பிரம்பு நாற்காலியில் உட்கார்ந்துகொண்டார். மனைவி அன்னமும், தந்தை சாம்புவும் இருக்கும்போது அவருக்கு பேச என்ன இருக்கிறது.

தான் ஒளிந்துகொண்டிருந்த அறையிலிருந்து வெளிவந்த ஜெய்பூ, அபயம் மற்றும் ஆனந்தியை அழைத்துக்கொண்டு மாடிக்குச் சென்றுவிட்டான்.

நவநீத பாகவதர் ஒரு சோபாவில் உட்கார, அருகே சாம்பு அமர்ந்தார்.

''என்னோட ரெண்டு பேரன்களுக்கு நீங்க உங்க ரெண்டு பெண்களைக் கொடுக்கப் போறீங்க...ரொம்ப சந்தோஷமா இருக்கு...''

''ஒரு பெண்ணை நான் தாரை வார்த்துக் கொடுப்பேன். இன்னொருத்தியை என் அப்பா கொடுப்பார்'' என்றார் நவநீத பாகவதர்.

''எனக்கு ஒரு வார்த்தை பேசணும்... பிள்ளையைப் பெத்தவள் என்கிற முறையில...''

''ஒரு வார்த்தை என்ன, நிறைய பேசும்மா...'' என்றார் சாம்பு.

''எங்க திருநெல்வேலி பக்கத்தில அக்கா, தங்கைகளை... அண்ணன், தம்பிகளுக்கு கொடுக்கமாட்டா'' என்று அன்னபூரணி ஆரம்பித்தாள்.

சாம்பு சிரித்தார்.

''நீங்க சொல்றது நூத்துக்கு நூறு கரெக்ட்... எங்க திருச்சி ஜில்லாவிலும் சரி, பாகவதரோட தஞ்சாவூர் ஜில்லாவிலும் சரி, இப்படிப்பட்ட சம்பந்தங்களை நினைச்சும் பார்க்கமாட்டா; எடுத்த எடுப்பிலேயே நிராகரிப்பா... என்ன பாகவதர்வாள், நீங்க என்ன சொல்றேள்?''

'சாம்பு சார்... இதை நீங்களோ நானோ ஏற்பாடு செய்யலே... என் பொண்ணும், உங்க பேரனும் ஆசைப்படறா. அவங்க ஆசையை நிறைவேத்தறது நம்ப கடமைன்னு நாங்க வந்தோம்... பிள்ளையோட அம்மாவுக்கு இதில அவ்வளவு இஷ்டமில்லேன்னு தெரியறது... அதனால் என்ன பாதகம் இல்லே. எங்களோட ஒரு பொண்ணாவது உங்க குடும்பத்துக்கு வர்றாளேன்னு சந்தோஷப்பட்டுக் கொள்றோம்'' என்றார் நவநீத பாகவதர்.

அவர் இப்படிப் பேசுவார் என்று அன்னபூரணி துளியும் எதிர்பார்க்கவில்லை. அவள் ஆட்சேபம் தெரிவிப்பாள், அவளை சமாதானப்படுத்த மாமனார் சாம்பு முன் வருவார், அவருடைய பேச்சுக்கு மதிப்பு கொடுப்பது போலக் கொடுத்து, கடைசியில் இசைவாள் என்றெல்லாம் அன்னபூரணி கோட்டை கட்டியிருந்தாள். அதை பாகவதர் தகர்த்துவிட்டார். எப்படி சமாளிப்பது? கல்யாண பேச்சுக்கே இது முற்றுப்புள்ளியாக அமைந்து விட்டால் என்ன செய்வது?



''ஆனா, இன்னொரு விதத்தில பார்க்கறப்ப என் ஆட்சேபம் சரியில்லையோன்னு படறது...''

''அது என்னவோ?'' என்றார் பாகவதர்.

''சிவாவும், ஜெய்யூவும் ஒரே தாய் வயிற்றில் பிறந்த பிள்ளைகள் அல்ல. அதனால பரவாயில்லையோன்னு படறது...'' என்றாள் அன்னபூரணி.

பாகவதர் தம் பிடியை தளர விடவில்லை.

''நீங்க ஒரு சாதாரண பாயின்ட்டை எடுத்து பேசினீங்க, மிசர்ஸ் சுந்தரேசன். உங்க பிள்ளை ஜெயராமனுக்கு என்ன நட்சத்திரம்னுகூட எனக்குத் தெரியாது. என் பொண்ணு ஆனந்தியோட நட்சத்திரம் என்னன்னு தெரிஞ்சா நீங்க மயக்கம் போட்டு விழுந்தாலும் விழுந்துடுவீங்க...''

''அப்படி என்ன நட்சத்திரமோ?''

''பூராடம்!'' என்றாள் குஞ்சரம். முதன் முறையாக அவள் வாய் திறந்து பேசினாள்.

''பூ, அதுதானா... என் அம்மாவுக்கு பூராடம், என் பாட்டிக்கு பூராடம், என் அத்தைக்கு பூராடம். அறுபது எழுபது எழுபத்தஞ்சு வயசு வரை இன்னும் சுமங்கலியா அமோகமா இருக்கா... நான்கூட ஒரு ஜோசியர்ட்ட கேட்டேன், 'பூராடம்னா நூலாடாது'ன்னு சொல்றாளே, அதுக்கு என்ன அர்த்தம்னு. அவர் என்ன சொன்னார் தெரியுமா? 'பூராடம்னா நூல் ஆடாது. அது கரெக்ட் தான். பருத்தி நூல் ஆடாது... தங்க நூல்தான் ஆடும். பெண்களுக்கு பூராடம் ரொம்ப விசேஷமான நட்சத்திரம்.' அப்படீன்னார். ஆனந்தியோட நட்சத்திரம் பூராடம்னு தெரியறப்ப ரொம்ப சந்தோஷமா இருக்கு.'' என்றாள்

''எங்க பொண் ஆனந்தி உங்க புள்ளை ஜெய்யூவோட பழகறது பத்தி இப்பத்தான் தெரிஞ்சுது!'' என்று ஆரம்பித்த பாகவதர், ''இதற்கு முன்னமே தெரிஞ் சிருந்தா, ஒரு எச்சரிக்கை தந்திருப்பேன்'' என்றார்.

''என்ன அது?''

''என் பெண் ஒரு தனி ரகம். அவ போக்கிலதான் போவா... வீட்டுக் காரியம் ஒண்ணும் செய்யமாட்டா... யாரும் ஒரு வார்த்தை அவளை குத்தமாச் சொல்லப் படாது. வார்த்தைக்கு வார்த்தை வாயாடுவா... உங்களுக்கு இருக்கிறது ஒரே பிள்ளை! வரப்போறது ஒரே ஒரு மருமகள்! அவள் இப்படியெல்லாம் இருக்க லாமா? நன்னா யோசனை செய்து ஒரு முடிவுக்கு வாருங்கோ.''

அன்னபூரணி திகைத்துப்போய் கணவர் சுந்த ரேசனைப் பார்த்தாள். அவர் இந்த உலகத்து சிந்தனையே அற்றவரைப் போல, வேட்டியின் ஜரிகையிலிருந்து ஒரு இழையைப் பிரித்து எடுத்து அதைத் தீவிரமாக ஆராய்ந்து கொண்டிருந்தார்.

சாம்பு ஒரு களைப்புடன் திடீரென்று பேச ஆரம்பித் தார்: ''நவநீத பாகவதர்... உங்க பரம்பரையே பரம் பரை... உள்ளதை ஒளிக்காம எல்லாத்தையும் சொல் லிட்டீங்க... என் மூத்த பிள்ளை ராமாமிர்தம் சொன் னான், உங்க ரெண்டாவது பொண் ஆனந்தி ரொம்ப கெட்டிக்காரப் பொண் அப்படீன்னு. ஆனா, உங்க பேச் சைக் கேட்ட போதுதான் இவ்வளவு கெட்டிக்காரியான்னு மலைப்பு ஏற்பட்டது. எங்க குடும்பத்தில எல்லா மருமகள் களுமே தங்கக் கட்டிகள். இப்படிப்பட்ட கட்டிகளுக்கு நடுவே ஆனந்தி மாதிரி ஒரு மருமகள்...''

''நான் கொண்டு வந்து தள்ளணும்னு ஓடி வரலியே சாம்பு சார்... என் பொண்ணும் உங்க பேரனும் தற் செயலா சந்திச்சிருக்கா... பரிச்சயம் ஏற்பட்டிருக்கு. என்



மூத்த பொண் அபயத்துக்கும், உங்க மூத்த பேரன் சிவா வுக்கும் கல்யாணம் நடக்கப் போறதுன்னு தெரிஞ்சும், இந்த ரெண்டுபேருக்கும் ஒரு தைரியம் வந்துட்டுது போலிருக்கு. என் பொண் ஆனந்தி தன் மனசில இருக் கிறதை ஒளிக்காம சொன்னா. அதான் வந்தேன்...'' என்றார் பாகவதர்.

அன்னபூரணி வெல வெலத்துப்போனாள். பரம்பரை பரம்பரையாக எக்கச்சக்கமான சொத்துக்களை ஆண்டு அனுபவிக்கும் குடும்பத்திலிருந்து ஒரு பெண் வராமலே போயிடுவாளோ? ஏற்றுமதி வியாபாரத்தில் பணம் கொழிக்கும் இரு பெண்களில் ஒரு பெண் அவனுக்கு மருமகளாக வாய்க்காமல் போய்விடுவாளோ?

இப்போது என்ன செய்ய?

குஞ்சரத்தை பாகவதர் அர்த்தபுஷ்டியுடன் பார்ப்பதை அன்னபூரணி கவனிக்கவில்லை. அவள் இன்னும் கணவர் சுந்தரேசனுடைய கண் சந்திப்புக்காகக் காத்திருந்தாள். சுந்தரேசன் வேட்டியின் ஜரிகை இழையை விட்டு வர மன மில்லாமல் உட்கார்ந்திருந்தார்.

''அப்ப நாங்க புறப்படறோம் அன்னபூரணி!'' என்றாள் குஞ்சரம்.

அன்னபூரணி திடுக்கிட்டாள். ''என்ன சொல்றீங்க குஞ்சரம்? அதுக்குள்ளே புறப்படறதா?'' என்றாள்.

''வேறு என்ன செய்யறது, நீங்களே சொல்லுங்க.. அக்கா, தங்கைகளை... அண்ணன், தம்பிகளுக்கு கொடு கறது உங்க திருநெல்வேலி ஜில்லாவில வழக்கமில்லேன்னு எடுத்த எடுப்பிலேயே சொல்லிட்டீங்க... எங்க வீட்டு காரரும் எங்க பொண் ஆனந்தி எப்படிப்பட்டவள்னு கோடி காட்டிட்டார்... இதுவரையில் வந்திருக்கிற எல்ல மருமகள்களும்— உங்களையும் சேர்த்துத்தான்— தங்க

கட்டிகள்னு உங்க குடும்பத்துப் பெரியவர் சொல்லிட்டார்... இவ்வளவுக்கு அப்புறமும் நான் உட்கார்ந்திருக்கிறது அழகா, நீங்களே சொல்லுங்கோ அன்னபூரணி!''

''என்னை எல்லாரும் மன்னிச்சுடுங்கோ... நான்தான் குதர்க்கமா ஆரம்பிச்சேன்... சிவாவோட கல்யாணம் நிச்சயமானதுமே, இதே குடும்பத்திலேர்ந்து நம்ம ஜெய்யூவுக்கும் பெண் வரப்படாதான்னு உள்ளூர ஏங்கினவ நான். ரெண்டுபேரும் ஏற்கனவே பழகிட்டு வர்றான்னு தெரிஞ்சதும் எனக்கு தேன் அபிஷேகம் செஞ்ச மாதிரி இருந்தது. நீங்க இப்ப திடீர்னு புறப்படறேன்னு சொன்னப்ப என் தலையே சுத்தித்து...''

அன்னபூரணியின் பேச்சு முடிந்ததும் ஒரு நீண்ட நிமிடம் நிசப்தம் நிலவியது

சாம்பு சிரித்தார்.

''அன்னம், உன் சுபாவம் எனக்குத் தெரியாதா? உன் வழியில நாங்க வரணும்னு எதிர்பார்ப்பே. ஒரு கட்டத்தில அது முடியாத காரியம்னு உனக்கே படும். உடனே எங்க வழிக்கே வருவே... சரி, போனது எல்லாம் போகட்டும்... முடிவா என்ன சொல்றே, அதைச் சொல்லு...'' என்றார் சாம்பு

''பெரியவங்க நீங்க என்ன முடிவெடுத்தாலும் எனக்கு சம்மதம்தான். என் பிள்ளையும், மருமகளும் சந்தோஷமா, அமோகமா வாழணும். அதுதான் எனக்கு வேணும்!'' என்றாள் அன்னம்.

''பாகவதர் இப்ப ஆனந்தியோட குணாதிசயங்களைப் பத்தியெல்லாம் சொன்னாரே கேட்டியா?''

''கேட்டேன்... எந்தத் தகப்பனாரும் கல்யாணத்துக்கு நிக்கற பொண்ணை பத்தித் தாழ்வா, தரக்குறைவாப் பேசமாட்டார். அவர் என் மனசை தெரிஞ்சுக்க ஒரு



உபாயம் தேடினார். அவ்வளவுதான்... இருங்கோ... பாதம் அல்வா ஸ்பெசலாப் பண்ணியிருக்கேன்... நானே வீட்ல தயார் செஞ்ச பைனாப்பிள் ஜூசு இருக்கு கொண்டு வரேன்!''

''நான் காபிதான் சாப்பிடுவேன்!'' என்றார் பாகவதர்.

''ஆகா... அப்படியே!'' என்று சொல்லி அன்னம் நகரவும்—

திடீரென்று இரு பெண்களின் குரல்கள் கேட்டன.

''நான் ஹெல்ப் பண்ணட்டுமா??'' என்று கேட்டுக் கொண்டு வந்தாள் அபயம்.

''நானும் ஹெல்ப் பண்றேன்!'' என்றாள் ஆனந்தி.

அன்னபூரணி சிரித்தாள்.

''ரெண்டு பேரும் சமர்த்தா ஒரு இடத்தில உட்காருங்கோ... நீங்க இந்தக் குடும்பத்துக்கு மாட்டுப் பொண்களா வந்தப்புறம்கூட இங்கே வேலை இல்லை உங்களுக்கு; உங்க ஏற்றுமதி வியாபாரத்தில கைவரிசையைக் காட்டிக் கொண்டு ஜமாய்ங்கோ... ஏண்டா ஜெய்யூ, நீ ஏண்டா அங்கேயே நிக்கறே... வா... வந்து எனக்கு ஹெல்ப் பண்ணு!'' என்றாள்,

அல்வா வந்தது.

பக்கோடா வந்தது.

நவநீத பாகவதருக்கு காபியும், மற்றவர்களுக்கு ஜூசும் வந்தன.

திடீரென்று சாம்பு ஒரு கேள்வி கேட்டார்.

''உங்க மூணாவது பொண்ணு பேரு ஈசுவரிதானே?''

'ஆமாம்...'' என்றார் பாகவதர்.

''அவ இன்னிக்குக் கார்த்தால அஞ்சரை மணிக்கு என்னைப் பார்க்க வந்திருந்தாள்.''

''தெரியும் என்னோட அனுமதி கேட்டுட்டுதான் அவ இங்கே வந்தா.''

''எனக்கு ஈசுவரியை ரொம்பப் பிடிச்சிருக்கு!'' என்றார் சாம்பு.

அவருடைய வார்த்தைகளில் விசேஷ அர்த்தம் தொனிப்பதாகத் தோன்றியது. நவநீத பாகவதருக்கு.

# 16

அன்னபூரணி ஒரு பெரிய தட்டில் சிறு சிறு தட்டுக்களை அழகாக அடுக்கி வைத்து வர, சற்று பின்னால் பிள்ளை ஒரு எவர்சில்வர் பாத்திரத்தைத் தூக்கிக்கொண்டு வந்தான்.

''எங்க அண்ணா ஸ்டேட்ஸ்ல இருக்காண். ஆறு மாசத்துக்கு ஒரு தடவை எங்க அம்மா, அப்பாவைப் பார்க்காம இருக்க அவனால முடியாது. அப்படி வர்றப்ப, எதை மறந்தாலும் இந்த கலிபோர்னியா பாதம் பருப்பைக் கொண்டுவர மறக்கமாட்டான். அதில செஞ்சதுதான் இது'' என்றாள் அன்னபூரணி.

''தம்ப ஊர்ல இப்ப கிலோ கிட்டத்தட்ட முன்னூறு ரூபாய் இருக்கும்.'' என்றார் நவநீத பாகவதர்.

''என்னடா ஜெய்யூ உன் கையில?'' என்றார் சாம்பு.

''மிக்சர்.''

''க்ராண்ட் ஸ்வீட்சா?''

''ஆமாம் தாத்தா!''



''மொதல்ல ஆனந்திக்குக் கொடு அங்கேதானே நீ அவளை சந்திச்சு இந்தக் கட்டத்துக்குக் கொண்டு வந்திருக்கே!'' என்றார் சாம்பு.

திடீரென்று பாகவதர், ''சாம்பு சார்... சித்த முன்னாடி ''உங்க பொண் ஈசுவரியை எனக்குப் பிடிச்சிருக்கு'ன்னு சொன்னீங்களே! எதை மனசில வைச்சுட்டு அப்படிச் சொன்னீங்க?'' என்று கேட்டார்.

''நல்ல காரியங்களை மனசில வைச்சுட்டுத்தான்!'' என்றார் சாம்பு.

''புரியலையே?''

''மூத்த பிள்ளை ராமாமிர்தம். அவன் புள்ளை சிவா. உங்க மூத்த பொண்ணை கல்யாணம் பண்ணிக்கப் போறவன். ரெண்டாவது இவன், சுந்தரேசன். இவனோட புள்ளைதான் அதோ நிக்கறானே ஜெய்யூ! என் மூணாவது புள்ளை மார்க்கபந்து...''

''புரியறது சாம்பு சார்!'' என்று நவநீத பாகவதர் இடைமறித்தார்.

''என்ன புரியறது?'' சாம்பு சிரித்துக்கொண்டே கேட்டார்.

''நீங்க லால்குடி. நான் கும்பகோணம். எனக்குப் புரியாததா? மார்க்கபந்துவுக்கு ஒரு புள்ளை இருக்கான். அவனுக்கு ஈசுவரியைப் பார்த்தா என்னன்னு உங்களுக்குத் தோணியிருக்கு!''

''சபாஷ்!'' என்ற சாம்பு, ''ஓய், நீர் ரியலாவே கும்பகோணம்தான் ஐயா! மார்க்கபந்துவும் துணிக்கடை தான் நடத்தறான். ஆனா, ஷர்ட்—பாண்ட் இதெல்லாம் இல்லை. ஹோல்சேல்ல படுக்கை விரிப்பு, ஜமக்காளம், போர்வை வகையறாக்கள், உல்லன் பிளாங்கட் இதெல்லாம்...'' என்றார்.

''மார்க்கபந்து பிள்ளை விசயம்பத்தி நாம ஏன் இன்னொரு நாள் பேசப்படாது சாம்பு சார்?''

''எனக்கு ஆட்சேபணையே இல்லை பாகவதர். நல்ல பரம்பரையும், நல்ல குடும்பமுமா இருந்தா எனக்கு ஒரு சுவாரசியம் உண்டாகும். இப்ப அப்படி உண்டாச்சு... அவ்வளவுதான்! அதோ உங்க காபி வந்தாச்சு, சாப்பிடுங்கோ!'' என்றார் சாம்பு.

எல்லாரும் விடை பெற்றுக்கொண்டு சென்றபோது பன்னிரண்டு அடித்துவிட்டது.

''என்னடா சுந்தரேசா, நீ ஏன் அப்படி வாயைத் திறக்காமலே உட்கார்ந்திட்டிருந்தே?'' என்றார் சாம்பு.

''நான் பேசறதுக்கு எதுவுமே இருக்கலியே அப்பா! ஜெய்யூ இந்தப் பெண்ணைப் பார்த்து ஒரு முடிவுக்கு வந்தாயிடுத்து. அன்னம் மழை கொட்ற மாதிரிப் பேசித் தீர்த்தாச்சு. நடு நடுவே நீங்களும் புகுந்து புகுந்து அந்த பாகவதரோட பேசினீங்க... அப்புறம் எனக்கு என்ன இருக்குபேச?''

''நீ சொல்றதிலேயும் அர்த்தம் இருக்குடா சுந்து,'' என்ற சாம்பு, ''அப்ப நான் போய் சாப்பிடறேன்,'' என்றார்.

''நீங்க இன்னும் சாப்பிடலியா?'' என்று அன்னம் கேட்டாள்.

''முழுக்க இல்லை!''

''அப்படீன்னா?''

''இங்கே வர்றதுக்கு முன்னாடி இளம் பசியா இருந்தது. மார்க்கன் பெண்டாட்டி லலிதா அங்கே சாப்பிடணும்னு நேத்தே சொல்லியிருந்தா. சரின்னு அங்கே



போனேன்... ஒரு கிண்ணத்தில சாம்பார் சாதம் மட்டும் பிசைஞ்சு சாப்பிட்டேன்.'' சொல்லிவிட்டு சாம்பு எழுந்தார்

''ஒரு குடும்பத்திலேர்ந்து ரெண்டு பெண்கள் போதாதா?'' என்றாள் அன்னம்.

''ஏன் சாஸ்திரம் தடை விதிக்கிறதோ?''

''அதுக்கில்லே...''

''பின்னே எதுக்கு?''

''இந்த சிவாவும், ஜெய்யூவும் நம்ப கையைக் கட்டிப் போட்டுட்டாங்க... ஆனா, மணி அப்படியில்லையே தானுண்டு தன் பிசினஸ் உண்டுன்னு இருக்கான்... அவனுக்கு வேறு இடத்தில பார்க்கலாமேன்னு பட்டது.''

''உன் கருத்தையும் மனசில வைச்சுக்கறேன் அன்னம். ஆனா, நீ ஒரு விசயத்தை மறந்துடக்கூடாது. பாகவத ரோட குடும்ப சொத்தோட மதிப்பு என்னன்னு உனக்குத் தெரியுமா? இந்த அபயமும் ஆனந்தியும் வருசத்துக்கு எத்தனை லட்சம் எக்ஸ்போர்ட் பிசினஸ்ல சம்பாதிக்கி றாங்கன்னு உனக்குத் தெரியுமா...''

''எனக்குத் தெரியாது அப்பா...''

''இந்தப் பொண்ணு ஈசுவரி வேற குடும்பத்தில கல்யாணமாகிப் போறான்னு வைச்சுக்கோ, அந்தக் குடும்பத்தோட கன்னு பாகவதரோட சொத்து மேல விழலாம் இல்லியா?''

''ஓ, நீங்க இவ்வளவு தூரம் தீர்க்கமா யோசனை பண்ணி வைச்சிருக்கீங்களா... இது தெரியாதே எனக்கு?'' என்றாள் அன்னபூரணி.

இன்னும் சுவரோரமாய் உட்கார்ந்திருந்த சுந்தரேசன் வாய் திறக்கவில்லை. அவனுடைய தகப்பனாரும், மனைவியும், தனக்கு சம்பந்தமே இல்லாத விசயம் பற்றிப் பேசுவதாக அவனுக்குப் பட்டது. யார் யாரை கல்யாணம் செய்துகொண்டால் அவனுக்கு என்ன? காபி, சாப்பாடு, டிபன், தூக்கம் இதெல்லாம் வேளா வேளைக்கு கிடைத்துக் கொண்டிருந்தால் சுந்தரேசனுக்குப் போதும்

லலிதா பூஜை அறையில் உட்கார்ந்து விஷ்ணு சகஸ்ரநாமம் பாடிக்கொண்டிருந்தாள். எம். எஸ்சின் பாணியில் பாட வேண்டும் என்ற ஆசையில் பல வருடங்களாக முயற்சியும், பயிற்சியும் செய்ததில், ஓரளவு வெற்றி பெற்றுவிட்டாள். சாரீர வளம்தான் திருப்தி அடையும் அளவுக்கு இல்லாமல் போய்விட்டது. ஆனால் என்ன? தினசரி விஷ்ணுவின் ஆயிரம் நாமங்களைப் பக்தி சிரத்தையோடு சொல்ல வேண்டும் என்று தோன்றுகிறதே?

ஒருவாறு பூஜை முடிந்தது. எழுந்தாள்.

''சாப்பிட உட்காரலாமா?'' கணவன் மார்க்கபந்துவின் குரல் கேட்கவே, லலிதா திரும்பிப் பார்த்தாள்.

''மணி ஒன்பதுகூட அடிக்கலே?''

''அப்ப சரி, நான் கிளம்பறேன்.'' என்றான் மார்க்கபந்து.

''இல்லே வழக்கமா ஒன்பதரைக்கு சாப்பிட உட்காருவீங்களே, இன்னிக்கு என்ன இப்பவேன்னு கேட்டேன் அவ்வளவுதான்... உட்காருங்கோ... எல்லாம் ரெடி. அப்பளம் மட்டும்தான் பொரிக்கணும், பொரிச்சுடறேன்...''

''ஒருநாள் அப்பளம் இல்லைன்னா என்ன லல்லி...? நான் கடைக்குப் போய் ஒரு மணி நேரம் இருந்தாகணும். அப்புறம் வெஸ்ட் கோஸ்ட் எக்ஸ்பிரஸ்ல சேலம் போகணும்.''



''சேலமா?''

''மொதல்ல சேலம்... அப்புறம் நாளைக்கு ஈரோடு பவானி... வடக்கே இருந்து ஒரு பெரிய ஆர்டர் கிடைச்சிருக்கு...''

''ஏன் நீங்க போகணும்? மணியை அனுப்பலாமே?''

''மணி நாளைக்கு பெங்களூர் போறான். நாலாயிரம் உல்லன் பிளாங்கட் உடனடியா வாங்கி, நம்ப கம்பெனிக்கு லேபல் தைச்சு போபாலுக்கு அனுப்பணும்.''

''அஞ்சு நிமிசத்துல அப்பளம் ரெடி. நீங்க உட்காருங்கோ...''

லலிதா சமையல் அறைக்கு ஓட, மார்க்கபந்து தன் மனைவியின் அப்பள அங்கலாய்ப்பைக் கண்டு அனுதாபப் பட்டான்.

கணவன் சாப்பிட்டு விட்டுச் சென்றதும் மணி வந்தான்.

''வாடா மணி...இப்பத்தான் அப்பா சாப்பிட்டுட்டுப் போனார். நீயும் உட்கார்ந்துடு...''

''சாப்பாடு இருக்கட்டும்மா, நான் கேக்கற கேள்விக்கு மொதல்ல பதில் சொல்லு...''

''என்னடா கேள்வி கேட்கப் போறே மணி?''

''யாரு இந்த நவநீத பாகவதர். அரியக்குடி செம்மங்குடி மாதிரி பாட்டு வித்வானா...இல்லே மெலட்டூர் பாகவத மேளத்தைச் சேர்ந்தவரா? யாரு? அவரோட ரெண்டு டாட்டர்ஸ் அபயம்—ஆனந்தி இவங்களெல்லாம் யாரு... அவங்களோட தங்கை ஈசுவரியாமே...அவ யாரு?''

''பதில் சொல்றேன் மணி. இந்த பெயர்களெல்லாம் எப்படி உனக்கு தெரிய வந்தது?''

"தாத்தாவுக்கு பொழுது போகலே போலிருக்கு. இன்னிக்கு காலங்கார்த்தால என்னைக் கூப்பிட்டு அனுப்பினார். போனா, டூரிஸ்ட் கெஸ்ட் ஸ்தல புராணம் பாடற மாதிரி இவர் பாகவதர் புராணம் பாடறார்!"

"அபயமும் ஆனந்தியும்தான் நம்ப சிவா, ஜெய்யூவுக்கு வரப்போற பெண்கள். அவ்வளவுதான் எனக்கும் தெரியும்."

"ஈசுவரி?"

"தெரியாது."

"ஏன் தாத்தா அவளைப்பத்தி ஸ்பெசலா என்கிட்ட பேசணும்?"

"இன்னிக்கு நம்ப வீட்ல சாப்பிட வரச்சொல்லி இருக்கேன். விசாரிக்கிறேன்..."

"ஆனா எனக்கு ஒரு விசயம் புரிஞ்சுது அம்மா..."

"என்னடா மணி?"

"இந்தப் பெண் ஈசுவரியைப்பத்தி தாத்தா ஆகாசம் வரை புகழ்ந்து பேசினதைக் கேட்டப்ப கிழவன் மனசில ஏதோ திட்டம் இருக்கிற மாதிரித் தோணித்து."

"தாத்தாவைக் கிழவன்னு எகத்தாளமா சொல்லப்படாது மணி."

"தாத்தாவுக்கு இப்ப வயசு எழுபத்தஞ்சு இல்லே?"

"ஆமாம்."

"அப்ப அவர் கிழவன்தான். உனக்காக வேணும்னா கிழவர்னு மரியாதையா சொல்றேன்..."

"சரி, இப்ப சாப்பிட உட்காரு. நாளைக்கு நீ பெங்களூர் போறியாமே?"

"ஆமாம், போறேன்."



"வர்றப்ப கொஞ்சம் இங்கிலீஷ் வெஜிடபிள்ஸ் வாங்கிட்டு வாயேன்."

"பொடெடோ, டொமெடோ, நூல்கோல், டர்னிப், ராடிஷ், காலிபினவர் எல்லாம் இங்கிலீஷ் வெஜிடபிள்ஸ் தான். இதெல்லாம் இங்கேயே ஏராளமாக் கிடைக்கிறது அம்மா."

"இல்லேடா டபிள் பீன்ஸ் பெங்களூர்லதான் பிரமாதமா இருக்கும் ரெண்டு மூணு கிலோ வாங்கிட்டு வாயேன்."

"சரி, வாங்கிட்டு வரேன். இப்ப சாதம் போடு."

சாதம் பரிமாறுகையில், "மணி, எத்தனை நாள்டா நானே உனக்கு பரிமாறுவேன்?" என்று லலிதா கேட்டாள்.

"வேண்டாம்மா. இனிமே நீ பரிமாற வேண்டாம். சமையல் அறையிலிருந்து நானே எல்லாத்தையும் கொண்டு வந்து போட்டுக்கறேன்..."

"நானே எத்தனை நாள்டா உனக்கு சமைச்சுப் போட்டுட்டிருப்பேன்?"

"அப்பாவுக்கு தினமும் சமையல் வேலை செய்யறியே, கூட எனக்கும் சேர்த்துக் கொஞ்சம் செய்யறது கஷ்டமாம்மா...?"

"ஏண்டா நான் என்ன சொல்றேன், எதுக்குச் சொல்றேன்னு உனக்கு இன்னுமா புரியலே?"

"புரியலே...இன்னும் கொஞ்சம் கறி போடு..."

"சிவாவும் ஜெய்யூவும் மூணு முடிச்சுப் போடற மாதிரி நீ எப்படா ஒரு பொண்ணு கழுத்தில..."

"அவங்களுக்கு ஈசியா ரெண்டு பொண்ணு கிடைச்சுது. எனக்குக் கிடைக்கலியே?"

''இதுக்கு என்னடா அர்த்தம் மணி? ஒரு நல்ல குடும்பத்திலேர்ந்து ஒரு நல்ல அழகான பொண்ணு வந்தா நீ சம்மதிப்பியா?''

''மாட்டேன்.''

''ஏண்டா?''

''இப்ப பிசினஸ்தான் முக்கியம். கல்யாணம் முக்கியமில்லே அம்மா... தாத்தா பாகவதர் குடும்பம் பத்திப் பேசினப்பவே சந்தேகப்பட்டேன். ஈசுவரி என்கிற ஒரு பொண்ணைப்பத்தி ஆகா ஓகோன்னு பேசினார்...இப்ப நீயும் என் கல்யாணம் பத்தி என்னை அறு அறுன்னு அறுக்கறே...''

''உனக்கு இப்ப வயசு இருபத்தெட்டுடா...லா படிச்சுட்டு வியாபாரத்திலே மூழ்கிட்டே... அப்பாவுக்கே ஐடியா கொடுக்கிற அளவுக்கு சாமர்த்தியமுள்ளவன்னு பேர் வாங்கிட்டே...எனக்கும் ஒரு மருமகள் வேணும்டா மணி.''

''பெங்களூர்லேந்து டபிள் பீன்ஸ் வேணுமா வேண்டாமா?'

''வேணும்டா மணி.''

''அப்ப கல்யாணப் பேச்சை எடுக்காதே...'' என்றான் மணி.

திடீரென்று ஒரு புதுக்குரல் கேட்டது.

''ஏண்டா மணி, ஏன் கல்யாணம் வேண்டாம்?''

தாத்தா சாம்பு புன்முறுவலித்தபடி அவனைப் பார்த்து நின்று கொண்டிருந்தார்.

மணியால் பதில் கூற முடியவில்லை.

18601
351468

# 17

நவநீத பாகவதர் மனம் நிறைய மகிழ்ச்சி வெள்ளத்திலும், வாய் நிறைய பன்னீர் புகையிலையின் ரச வெள்ளத்திலும் மிதந்துகொண்டிருந்தார்.

இரண்டு பெண்களுடைய திருமணங்கள் மிகவும் சுலபமாக நிச்சயிக்கப்பட்டுவிட்டன. லால்குடி சாம்பசிவம் மூன்றாவது பெண்ணான ஈசுவரியை தமக்கு மிகவும் பிடித்திருக்கிறது என்று கூறியவுடன் அவருடைய வார்த்தைகளில் விசேஷ அர்த்தம் தொனிப்பதாக பாகவதர் நினைத்தார். இந்த நினைப்பை ஊர்ஜிதம் செய்து கொள்ளும் பொருட்டு, ஆனந்தியின் கல்யாணப் பேச்சு முடிந்து வெளியே வரும்போது சாம்புவை தனியாக அழைத்தார்.

''என் பொண்ணு ஈசுவரியைப்பத்தி நீங்க ஸ்பெசலாக குறிப்பிட்டதுக்கு நிச்சயமா ஒரு காரணம் இருக்கணும் சாம்பு சார்!''

'யார் இல்லேன்னா பாகவதர்? இருக்கு! காரணம் இருக்கு!''

''என்னன்னு தெரிஞ்சுக்கலாமா?''

''தெரிஞ்சுக்கலாமே!''

''அப்பக் கொஞ்சம் சொல்லுங்களேன்.''

''மூத்த பிள்ளை ராமாமிர்தம், அவன் பிள்ளை சிவா. இரண்டாவது பிள்ளை சுந்தரேசன், இவனோட பிள்ளை ஜெய்யூ... இதுகள் ரெண்டும் உங்களோட ரெண்டு மாப்பிள்ளைகளா வரப்போறவங்க... மார்க்க பந்து என்னோட மூணாவது பிள்ளை. ஹோல்சேல்

பிசினஸ், ஜமக்காளம், பெட்ஷீட், டவல், பிளாங்கட், கார்ப்பெட் எல்லாம் வாங்கி விக்கிறான். தேனியைவிட சுறுசுறுப்பு. மூத்தவன் ஏனோ தானோன்னு இருப்பான். ஆனா அவன் பிள்ளை சிவா ஈடு கட்டிடுவான். ரெண்டாவது சுந்தரேசன் முழுச் சோம்பேறி... அவன் கடையை ஒரு மானேஜர் பார்த்துக்கறான். தன்னுடைய ரெண்டு கடைகளை ஜெய்யூ ரொம்பப் பிரமாதமா நடத்திட்டு வர்றான். ஆனா இந்த மூணாவது மார்க்கன் இருக்கானே அவன் சூரன். அவனோட புள்ளை மணி சூராதி சூரன். அப்பா பத்து சதவீத லாபத்தோட நின்னா இவன் குறைஞ்சது இருபதாவது வரணும்னு அடம் பிடிப்பான் படிப்பு என்ன தெரியுமோ? எம்.ஏ.பி.எல்., லாயராப் போக வேண்டியவன் ஜமக்காளம் விக்கறான்!''

''பரம்பரைத் தொழிலை அவ்வளவு சீக்கிரம் விட்டுட முடியுமா சாம்பு சார்?''

''வாஸ்தவமான பேச்சு. உங்க பரம்பரையில தலைமுறை தலைமுறையா மயில்கண் வேஷ்டி கட்டிட்டு உடம்பெல்லாம் ஜவ்வாதை அப்பிக்கிட்டு ரெட்டைக் காளை வண்டியில ராத்திரி வேளையில திருட்டுத்தனமாப் போயிட்டு விடியறதுக்குள்ளே திருட்டுத்தனமா வீடு திரும்புவாங்க... மத்த நேரங்கள்ள ஒண்ணு ஊஞ்சல்ல உட்கார்ந்து தூங்கறது... இல்லாமப் போனா, மடி நிறைய கரன்சி நோட்டை வைச்சுட்டு ரங்காட்டம் ஆடறது... எங்க பரம்பரையில இப்படியெல்லாம் குஷியா இருக்க சாத்தியமில்லாமப் போச்சு... அதான் துணிக் கடையில இறங்கினேன்.'' என்றார் சாம்பு.

''அட ஈசுவரா! நீங்க என்னை தப்பா எடுத்துக்கிட்டீங்க போலிருக்கு, சாம்பு சார்... துணி வியாபாரம் ஈனமான தொழில்னு நான் மனசாலேயும் நினைப்பானேன்? என் ரெண்டு பெண்களும் ரெடிமேட் துணி வியாபாரத்தில்தானே இருக்காங்க?''



''சரி சரி... நம்ப பரம்பரைகள் கிடக்கட்டும்... உங்க மூணாவது பொண்ணு ஈசுவரியை எனக்கும் பிடிச்சிருக்கு, என்ன சொல்றீர் பாகவதர்?''

''உங்களுக்குப் பிடிச்சிருக்கு ஓகே... உங்க பேரனுக்குப் பிடிக்கணும். அதுமட்டும் போதுமா... என் பொண் ஈசுவரிக்கும் பிடிக்கணும்... அவளுக்கு அவ்வளவு சீக்கிரம் யாரையும் பிடிக்காது. கேட்டுப் பாக்கறேன்...''

''பாருங்கோ!''

''அப்ப நான் உத்தரவு வாங்கிக்கறேன் சாம்பு சார்!'' என்றார் பாகவதர்.

''ஆகா... ரெண்டு பொண்களோட கல்யாண நிச்சயதார்த்தத்தோட இதுவும் நடந்தா நான் ரொம்ப சந்தோஷப்படுவேன். என் பேரன் மணிக்கு தெரியாமலே உங்க பெண் அவனை வியாபார நிமித்தமா சந்திக்கிற மாதிரி சந்திச்சா எப்படி?''

''நல்ல ஐடியா தான். எதுக்கும் கேட்டுப் பாக்கறேன்... அவன் கடையோட விலாசம் கொடுங்கோ!''

''என் கடைகள் தான் வரிசையா பாய்க்கடை தாண்டியதும் இருக்கே... 'சாம்பு அண்ட் மார்க்க'ன்னு பெரிசா போர்டு போட்டிருக்கும். அப்புறம் இன்னொரு விசயம்...''

''என்னவோ?''

''என் புள்ளை மார்க்கன் இன்னிக்கு வெஸ்ட் கோஸ்ட்ல சேலம் போறான். திரும்பி வர ரெண்டு மூணு நாள் ஆகும். உல்லன் பிளாங்கட் வியாபார விசயமா என் பேரன் மணி நாளைக்கு பிருந்தாவன்ல பெங்களூர், மைசூர் எல்லாம் போறான்... அதுனாலே...''

''அதனால?''

''மத்தியானம் என் பேரன் மட்டும்தான் கடையில இருப்பான்... ஒரு நல்ல காரியத்தை மனசில வைச்சுட்டிருக்கறப்ப இப்படி ஒரு ஏற்பாடு செய்யறதில தப்பு இல்லேன்னு தோண்றது...''

''நீங்க சொல்லிட்டீங்க சாம்பு சார்... என் பொண் என்ன அபிப்பிராயத்தை வைச்சுட்டிருக்காளோ, யார் கண்டா... எதுக்கும் நான் ட்ரை பண்றேன்... ஏன்னா, ஒரே பந்தல்ல மூணு பெண்களோட கல்யாணம் நடக்கறதுன்னா, என்னைவிட அதிகமா சந்தோஷப்படறவன் யாரும் இருக்க முடியாது.'' சொல்லிவிட்டு பாகவதர் காரில் உட்கார்ந்தார்.

''என்ன வளவளன்னு அவரோட பேச்சு... கார்ல எத்தனை நேரமா நான் உட்கார்ந்திருக்கேன் தெரியுமா?'' என்று குஞ்சரம் கேட்டாள்.

''நீ அபயம் ஆனந்தியோட போக வேண்டியது தானே?''

''அதுகள் ரெண்டும் ஜெய்யூவை கார்ல வாரிப் போட்டுகிட்டு சிவாவைப் பார்க்கப் போனா!''

''ஈசுவரி?''

''அது எங்கே இங்கே வந்தது? அது வீட்லதான் இருக்கும்.'' என்றாள் குஞ்சரம்.

மேற்கொண்டு பாகவதர் எதுவும் பேசவில்லை.

**வீ**ட்டை அடைந்ததும் பாகவதர், ஈசுவரியை தனியே அழைத்து சாம்புவின் ஆசையை அவளிடம் கூறினார்.

''எனக்கு இப்போதைக்கு கல்யாணம் வேண்டாம்ப்பா ''

''எப்போதைக்கு பண்ணிக்கலாம்னு உத்தேசம் ஈசுவரி?''



''ரெண்டு அக்காகாரிகளும் கல்யாணம் ஆகிப்போனா வீட்ல நான் கொஞ்சநாள் மகாராணி மாதிரி இருப்பேன். உத்யா பாதி நேரம் வீட்ல இருக்கமாட்டா. நீங்களும் அம்மாவும் என் வழிக்கு வராம இருப்பீங்க... இந்த சுகத்தை அனுபவிச்சு ஓய்ஞ்சப்புறம் நான் கல்யாணத்துக்கு ரெடியாவேன்...''

''சரிம்மா உன் இஷ்டம். ஆனா, ஆனா...''

''என்னப்பா ஆனா?''

''ஒரு பயம்.''

''என்ன பயம்?''

''இந்த சாம்பு ஒரு மாதிரி.''

''எந்த மாதிரி?''

''அபயம் ஆனந்தி கல்யாணங்களை நிறுத்தமாட்டான்... ஆனா தள்ளிப்போடுவான்.''

''ஏன்?''

''உன் முடிவு தெரிஞ்சப்புறம் பார்த்துக்கலாம்னு சொல்லுவான்.''

''ஓகே அப்பா... நீங்களும் அவரும் பார்த்து வைச்சிருக்கிற பையனை அவன் பேர் என்ன மணி! நான் இன்னிக்கே மீட் பண்ணிப் பேசிவிட்டு, நாளைக்கு என் தீர்மானமான முடிவைச் சொல்லிடறேன். எப்படிப்பட்ட முடிவாக இருந்தாலும் நீங்களும் சரி, இந்த சாம்புவும் சரி ஏத்துக்கணும். அதனால அக்காக்கள் கல்யாணம் தடைபடக்கூடாது.''

''சரிம்மா!'' என்ற பாகவதர், ''இன்னிக்கு காலங்கார்த்தால அஞ்சரை மணிக்கு ஆனந்தி—ஜெய்யூ விசயமா நீ போய் அவர்ட்ட பேசினே இல்லியா அதுதான் அம்மா இதுக்கெல்லாம் மூல காரணம். உனக்கு ஒண்ணு தெரியுமோ?''

''என்னப்பா?''

''ஊர் சொல்றது, நான் சொல்லலே... இந்த வீட்டு நாலு பெண்கள்ளே, நீதான் அழகாம், உனக்குதான் பொன்னிறமாம், உன் கெட்டிக்காரத்தனம் யாருக்கும் வராதாம்... நான் சொல்லலே ஈசுவரி...''

''ஊர் சொல்றது!'' என்று ஈசுவரி சொல்லி சிரித்து வெளியேறினாள்.

அன்று பிற்பகல் மூன்றரை மணிக்கு சாம்பு அண்ட் மார்க்கன்ஸ்' என்ற விசாலமான கடைக்குள் ஈசுவரி பிரவேசித்தபோது, பெரிய சினிமா கொட்டகை போல இருந்த கடைக்கூடம் வெறிச்சோடுவதாகப்பட்டது. கடை மொத்த வியாபாரத்தில் ஈடுபட்டிருக்கறது, சில்லறை வியாபாரம் இல்லை என்று ஈசுவரிக்குத் தெரியும். இருந்தாலும் ஓரிரு சிப்பந்திகளைத் தவிர வேறு யாருமே இல்லாதது ஆச்சரியமாக இருந்தது

இந்த ஆச்சரியத்துடன் ஈசுவரி மெல்ல நடந்தாள்.

திடீரென்று இடப்புறத்திலிருந்து, ''எஸ் மேடம்!'' என்ற குரல் கேட்டது. ஈசுவரி நின்றாள். இடது பக்கமாகத் திரும்பிப் பார்த்தாள்.

ஐந்தே முக்கால் அடிக்குக் குறையாத உயரம். சிகப்பு நிறம். புருவங்கள் அளவுக்குமீறிய அடர்த்தியுடன் வளர, இரு கரிய கம்பளிப் பூச்சிகளை நினைவுக்குக் கொண்டு வந்தது. ஆனால் கண்களில் கடுமை இல்லை. ஏன், ஒரு விதமான சாந்தம்கூட பிரதிபலித்தது.

''மிஸ்டர் மார்க்கபந்து இருக்காரா சார்?'' என்று கேட்டவாறே அவனை நோக்கி ஈசுவரி நடந்தாள்.

''இல்லை.''

''எப்ப வருவார்?''



''ரெண்டு மூணு நாளுக்கு வரமாட்டார்... நீங்க யாரு, உங்களுக்கு என்ன வேணும் மேடம்?''

''பவானி கார்பெட்ஸ் சென்னிமலை பெட்ஷீட், உல்லன் பிளாங்கட்ஸ் இதெல்லாம் எக்ஸ்போர்ட் க்வாலிட்டியில வேணும். அதுபத்திப் பேச வந்தேன்...''

''அவர் இல்லே... ரெண்டு மூணுநாள் பொறுத்து போன் பண்ணிட்டு வாங்க...''

''நான் இப்ப கேட்ட கேள்விகளுக்கு பொறுப்பா பதில் சொல்ல இங்கே வேற யாரும் இல்லியா சார்?'

'இல்லேன்னே வைச்சுக்கலாம்...''

''தாங்க்யூ சார்... நான் வரேன்...''

''குட் டே மேடம்''

ஓரிரு அடி நடந்தவள் நின்றாள்.

''ஏன் சார் இவ்வளவு பெரிய கடையில ஷெல்புகள் எல்லாம் காலியா இருக்கு... வந்த சரக்கெல்லாம் வித்துப் போயிடுத்தா, இல்லே சரக்கே ஏதும் வரலியா?''

''நீங்க வந்த காரியம் முடிஞ்சுட்டுது. பேசாமப் போக வேண்டியதுதானே. இந்தக் கடை ஷெல்பு நிறைஞ்சிருந்தா என்ன, காலியா இருந்தா உங்களுக்கு என்ன, நடையைக் கட்டுங்க...''

''ஏன் சார் சள்ளு விழறீங்க? கடை முதலாளியும் இல்லே, அவர் மகனும் இல்லே... நீங்க என்னமோ கடைக்குச் சொந்தக்காரர் மாதிரி கோபப்படறீங்க... அப்பாக்காரன் இல்லேன்னா பிள்ளையாலது இருப்பான். அவன்ட்ட கேளுன்னு என் பாஸ் சொன்னாரு...''

''நீங்க யாரு, உங்க பாஸ் யாருன்னு எதுவும் எனக்குத் தெரிஞ்சுக்க ஆசையோ, ஆர்வமோ இல்லை. எங்க கடைச்

சரக்கு உங்களுக்குத் தேவைப்பட்டா முன்னேயே சொன்னேனே, அதுமாதிரி போன் பண்ணிட்டு நீங்களோ உங்க பாசோ வாங்க...''

ஈசுவரி ஒரு நிமிடம் அவனைக் கூர்ந்து பார்த்தாள். பிறகு, ''கஸ்டமர்ஸ் வந்தா பொறுமையோட பேசணும்னு எங்க பாஸ் சொல்லுவாங்க உங்க பாஸ் உங்களுக்கு இந்த உபதேசம் செய்து வைக்கல்லே போலிருக்கு. நான் வரேன்...'' என்று சொல்லிவிட்டு நகர்ந்தாள்

''உங்களோட இந்த அபிப்பிராயத்தை என் பாஸ் வந்ததும் சொல்லி இந்தக் கடையில அவ்வளவு சிப்பந்திகளையும் உங்க பாஸ்ட்ட ஸ்பெசல் ட்ரெயினிங் அனுப்பச் சொல்றேன் மேடம்.''

''தாங்க்யூ... அப்படியே உங்க பாசோட பிள்ளையும் வரட்டும். நாங்க கொடுக்கற ட்ரெயினிங் அவருக்கும் பிரயோசனப்படும்.'

''ஷ்யூர்... நானும் நிச்சயமாக வரேன் மிஸ் ஈசுவரி!''

''தாங்க்யூ மிஸ்டர் மணி''. என்ற ஈசுவரி, ''இப்பவாவது உட்காரலாமா?'' என்று கேட்டுச் சிரித்தாள்.

''நீங்கதான் கஸ்டமர் இல்லியே, தாராளமா உட்காரலாம்!'' என்றான் மணி.

இருவரும் முதன் முறையாக சேர்ந்து சிரித்தார்கள்.

## 18

மணியும், ஈசுவரியும் நீண்டநேரம் மவுனமாய் ஒருவரை ஒருவர் பார்த்து ஒருவழியாய் ஓய்ந்து போனார்கள்,



''நீங்க நாளைக்கு கார்த்தால பெங்களூர் போறதாச் சொன்னாங்க...அதான்...'' என்று ஈசுவரி இழுத்தாள்.

''அதனால என்னோட அப்பா வெஸ்ட்கோஸ்ட் எக்ஸ்பிரசில ஏறி, அவர் தலை மறைஞ்சப்புறம் என்னை சந்திக்கும்படி என் தாத்தாவும், உன் அப்பாவும் உன்னை அனுப்பத் திட்டம் போட்டாங்க.''

''அப்ப நான் வர்றது ஏற்கனவே உங்களுக்குத் தெரியுமாக்கும்!''

''நீ வீட்லேர்ந்து புறப்பட்டதும் உன் அப்பா பாகவதர்வாள் என் தாத்தாவுக்கு போன் பண்ணியிருக்கார், என் தாத்தா எனக்கு...''

''ரெண்டு பேருக்கும் பேராசை!'' என்றாள் ஈசுவரி.

''என்ன அது?''

''மூணு பெண்களோட கல்யாணங்களும் ஒரே நாளில் நடக்கணும்னு அப்பா வெறியா அலையறார்...தன்னோட மூணு பேரப் பிள்ளைகளுக்கும் பெரிய பரம்பரை பணக்காரக் குடும்பத்திலிருந்து பெண்கள் வரணும்னு உங்க தாத்தா துடிக்கிறார்.''

''என் தாத்தாவுக்கு எப்பவும் பணத்தாசை உண்டு. ஆனா, தான் அனுபவிக்கணும்ங்கிறதுக்காக இல்லை. அஞ்சு கடைகள், அஞ்சு வீடுகள் இதெல்லாம் எப்படி வந்தது? அவருடைய பேராசையும், அதை எப்படியாவது நிறைவேத்திக்கணும்ங்கிற பிடிவாதமும்தான்.''

''இந்த ரெண்டுக்கும் மேலே இன்னொரு காரணமும் இருக்கு மிஸ்டர் மணி!''

''மிஸ்டர் வேண்டாமே!''

''சரி, மணி!'' என்று சொல்லிச் சிரித்த ஈசுவரி, ''அவருடைய அயராத உழைப்பு, உழைப்பில இருக்கிற நம்பிக்கை இதெல்லாம்தான்.'' என்றாள்.

''இப்ப அவர் முழுக்க முழுக்க பிசினஸ்லேந்து விலகி நிக்கறார்னுதான் பேரு. எல்லா கடைகளும் ஒழுங்கா ஓடறதான்னு அப்பப்ப வேவு பார்க்கிற மாதிரி பார்ப்பார்.''

''இதுவும் நல்லதுக்குத்தானே, மணி கடையை நடத்தறவங்களுக்கு பயமும், பொறுப்புணர்ச்சியும் இருக்குமே!''

''இந்த குடும்பத்தின்மேல எங்க தாத்தாவுக்கு எவ்வளவு அக்கறை தெரியுமா?''

''தெரியுமே! மூணு பேரப்பிள்ளைகளின் கல்யாணம் வரை அவரோட அக்கறை பாய்ஞ்சிருக்கு... இப்ப பைசா செலவு இல்லாம என்னைப் பெண் பார்க்கவும் அவர் ஏற்பாடு செய்திருக்கிறாரே!''

''யாருக்கு பைசா செலவு இல்லை? உன் அப்பாவுக்கு சொஜ்ஜி, பஜ்ஜி, காபி செலவு இல்லை! ஆனா, எனக்கு.''

''உங்களுக்கு என்ன செலவு?''

''என்ன செலவா... இரு... மாணிக்கம்... மாணிக்கம்!''

மினி சினிமா தியேட்டர்போல நீள அகலமான கடையின் வாயிற்பக்க எல்லையில் நின்றுகொண்டிருந்த ஒரு சிப்பந்தி, ''இதோ சார்!'' என்று கூறி ஓடோடி வந்தான்.

''மாணிக்கம்!''

''சொல்லுங்க சின்ன ஐயா!''

''ஆரிய பவனுக்குப் போ...''

''போறேன் சார்!'' அவன் நகர்ந்தான்

''நில்லு, மாணிக்கம். எங்கே போறே?''

''அதான் ஆரிய பவன்.''

''எதுக்கு போகச் சொல்றேன்னு தெரிஞ்சுக்க வேண்டாம்? ஓட்டலைப் பார்த்துட்டு வரவா அனுப்பறேன்!''



''காபிதானே சார்?''

''வெறும் காபி இல்லே...''

''அப்ப லிஸ்டு கொடுங்க சார்!''

''நாலு பிளேட் பாதம் அல்வா, நாலு வடை, நாலு.''

''போதும், போதும்...'' என்றாள் ஈசுவரி.

''மூணு கப் காபி, சூடா இருக்கணும். பிளாஸ்க்கை நல்லாக் கழுவி எடுத்துட்டுப் போ!''

''சரி சார்!''

அவன் போனதும், ''எதுக்கு நாலு பிளேட் பாதம் அல்வா?'' என்று ஈசுவரி கேட்டாள்.

''ஒரு பிளேட்ல எவ்வளவு இருக்கும்னு நினைக்கிறே... சாதாரணமா நானும், அப்பாவும் ஆளுக்கு நாலு பிளேட் சாப்பிடுவோம். ஒரு பிளேட் அல்வாவை ஒரே வாயில போட்டா, அது முன் வரிசைப் பல்லோட நின்னுடும்.''

''உங்க கடை லாபம் பாதம் அல்வா செலவாலேயே கணிசமாக் குறைஞ்சுடும் போலிருக்கு...''

''அடுத்த வருடம் எவ்வளவு குறையறதுன்னு நீயே பார்த்துக்கோ!''

''இதுக்கு என்ன அர்த்தம்?''

''புரியலியா?''

''புரியறது, இருந்தாலும் உங்க வாய் வழியாகவே தெரிஞ்சுக்கணும்னு ஒரு அற்ப ஆசை...''

''புரிஞ்சப்புறம் சொல்லிட்டா அதில சுவாரசியம் இருக்காது...''

''நீங்க உங்க முடிவை சொல்லிட்டீங்க... நான் என் முடிவை இன்னமும் சொல்லலே!''

''ஏன்? அவசியமில்லை.''

''உன் மனசில என்ன இருக்குன்னு உன் கண் சொல்றது. உன் முகபாவம் சொல்றது. நீ பேசற விதம் சொல்றது.''

ஈசுவரி சிரித்தாள்.

''இப்ப உன் சிரிப்பும் சொல்லியாச்சு...''

''எல்லாம் சரிதான். ஆனா, எங்க வீட்ல இருக்கிற எல்லாப் பெண்களுக்கும் ஒரு பெரிய பிரச்னை இருக்கு... எங்க கழுத்துகள்ளே நா மூணு பன்னண்டு முடிச்சுக்கள் விழுந்துட்டாலும், பிரச்னையை நாங்கதான் கவனிச்சு தீர்த்துக்கணும். இதுக்கு பிள்ளை வீட்டுக்காரங்க ஒத்துக்கலேன்னா, இதுவரை நடந்திருக்கிற ஏற்பாடுகளும் சரி, நமக்குள்ளே பரஸ்பரம் ஏற்பட்டிருக்கிற பிடிப்பு எல்லாம் வீணாய் போயிடும்.''

''என்ன பிரச்னைன்னு நான் தெரிஞ்சுக்கலாமா?''

''தெரிஞ்சுக்கலாம்.''

''அப்ப சொல்லிடு.''

''அபயம் அப்பளம்ஸ் என்கிற நிறுவனத்தை அக்கா கல்யாணம் ஆனதும் மூடமாட்டா. 'அபயம்—ஆனந்தி எக்ஸ்போர்ட்ஸ்' கம்பெனியும் தொடர்ந்து ஓடும். நான் ரெண்டுலேயும் இருக்கேன், பார்ட்னராக...''

''பூ. இவ்வளவுதானா?''

''இவ்வளவுதானான்னு அலட்சியமா வார்த்தையை உதிர்க்காதீங்க மணி. நாங்க நாலுபேரும்—உத்ராவும் கூடிய சீக்கிரம் வியாபாரத்துல சேர்ந்துடுவா— பிசினஸ், பிசினஸ்னு அலைவோம்!''

''அதனால என்ன ஈசுவரி?''

''என்னவா? கார்த்தால காபி டிகாக்ஷன் போடவும், பாலைக் காய்ச்சவும்தான் நேரம் இருக்கும். அரிசியை



களைஞ்சு குக்கர்ல போடற வேலை, கறிகாய் நறுக்குவது, புளி கரைக்கிறது, இதெல்லாம் முடியாத காரியங்கள்... ஞாயித்துக்கிழமைகள்ல மட்டும் வேணும்னா சமையல் செய்வோம்.''

''இது பத்தி யாரும் குறை சொல்லமாட்டாங்க!''

''கரெக்ட். கட்டின புருசன்கள் சொல்லமாட்டா. ஆனா, மாமியார்கள்? மொதல்ல முணு முணுப்பாங்க. அப்புறம் கோபமா பார்ப்பாங்க... அப்புறம்? வாய் வார்த்தையாலேயே இடிச்சுப் பேசுவாங்க.''

''எல்லா மாமியார்களின் வாய்களையும் அடைக்க ஒரு வழி இருக்கு.''

''என்ன அது?''

''ஒவ்வொரு வீட்லேயும் ஒரு சமையற்காரி அல்லது சமையற்காரன்... அப்புறம் மூணு மாசத்துக்கு ஒரு தடவை மாமியாருக்கு ஒரு பட்டுப்புடவை. வருசத்துக்கு ஒரு நெக்லசோ, ரெண்டு ஜோடி வளையல்களோ...''

''இதெல்லாம் தைலா மாமி, அன்னபூரணி மாமி அப்புறம் உங்க வீட்டு...''

''லலிதா மாமி.''

''ஆங், லலிதா மாமி இவர்களெல்லாரும் மயங்கிட மாட்டா. அவங்க ஏற்கனவே பணத்தைக் கண்டவர்கள்.''

''இருக்கலாம். பணத்தைக் கண்டிருக்கலாம், ஆனா இதுவரை என் பெரியப்பாக்களோ, சித்தப்பாக்களோ இல்லே என் அப்பாவோ ஒரு குந்துமணி தங்கம் வாங்கிக் கொடுத்து கிடையாது. தீபாவளி, பொங்கல்னு வர்றப்ப நாலு ஓரகத்திகளும் ஒரே காரில் ஒரே கடைக்குப் போய் தங்களுக்குப் பிடிச்ச புடவைகளை எடுத்துப்பா... தாத்தா ஆளுக்கு ரெண்டாயிரம், மூவாயிரம்னு கொடுப்பா...

அதனால, மருமகள்கள் நெக்லசும், பட்டுப்புடவையும் பரிசாக் கொடுத்தா மாமியார்கள் நெகிழ்ந்து போயிடுவாங்க...''

''நீங்க சொல்றபடி நெகிழ்ந்து போகலேன்னா...''

''நீங்க மூணுபேரும் புக்ககம் வர வேண்டாம். நாங்க மூணுபேரும் வேட்டகம் வர்றோம்.''

''போகாத ஊருக்கு வழி தேடாதீங்க மணி... அதோ மாணிக்கம் வர்றான்... டிபனை சாப்பிடலாம்!'' என்றாள் ஈசுவரி.

நவநீத பாகவதர் வழக்கமாக குளியல் அறையில்தான் தம் ராக தானத்தை பரிசோதித்துப் பார்ப்பார் ஒருநாள் மகாராஜபுரத்தின் மோகனம், இன்னொரு நாள் அரியக்குடியின் காம்போதி. மற்றும் ஒருநாள் செம்மங்குடியின் கல்யாணி.

அன்று வாயினுள் இன்னும் சீவலோ, வெற்றிலையோ, புகையிலையோ செல்லவில்லை. ஊஞ்சலில் அமர்ந்து கண்களை மூடி எந்த ராகத்தை இழுக்கலாம் என்று யோசித்தார்.

அதே சமயம் தடங்கல் ஏற்பட்டது.

ஈசுவரி அவர் முன் வந்து நின்றாள்.

''வா, வா... நல்லவேளை முசிரி பிழைச்சுகிட்டார். நகுமோம இழுக்கலாம்னு இருந்தேன். நீ வந்துட்டே!''

''சரி, சோகத்தை நான் கெடுப்பானேன்... சும்மா சோகமா இருக்கணும்னு உங்களுக்கு ஒரு வேண்டுதல். நான் அப்புறமா வர்றேன் அப்பா!''

''ப்ளீஸ், ஈசுவரி... உட்கார். போன காரியம் என்னாச்சு?''



''சாப்டர் க்ளோஸ்!''

''ஏன், ஏன் என்னாச்சு, ஈசுவரி... ஏன் சாப்டர் க்ளோஸ்?''

''இனிமே என் கல்யாண விசயம் கிடையாதுன்னு அர்த்தம்!''

''அடத் தெய்வமே!''

''ஏம்ப்பா நொந்துக்கறீங்க? அந்த ஆளுக்கு இந்தப் பெண்ணைப் பிடிச்சாச்சு. இந்தப் பெண்ணுக்கும் அந்த ஆளைப் பிடிச்சாச்சு. வேறு இடத்தில கல்யாணம்ங்கற சாப்டர் க்ளோஸ்தானே?''—சொல்லிவிட்டு ஈசுவரி சிரித்தாள்.

''என்னை ஒரு விநாடி கலங்க வைச்சுட்டேம்மா. பிள்ளை எப்படி இருக்கான்?''

''நீங்க அவரோட அப்பா மார்க்கபந்துகிட்டே பேசிக்கலாம்.''

''நான் சாம்பசிவத்திடம்தான் பேசுவேன். அவர் மணியின் அம்மா லலிதாவிடம்தான் பேசுவார்... நீ இப்ப என்ன செய்யறே...''

''எங்கேடீ போயிருந்தே?'' என்று கேட்டுக்கொண்டே குஞ்சரம் வந்தாள்.

''தெரியாதவளை மாதிரி கேட்கறியே அம்மா?''

''தெரியும்டீ ஈசுவரி! அப்பாவும் அந்த சாம்பசிவமும் ஒரு நாடகம் நடத்தினா. நீ ஹீரோயின்... அவரோட மூணாவது பிள்ளையோட ஒரே பிள்ளை ஹீரோ... உன் ரெண்டு அக்காக்களும் அவங்களாகவே யாருக்கும் தெரியாம ரெண்டு பிள்ளைகளை இழுத்து வளைச்சுப் போட்டுக்கிட்டாங்க... ஆனா நீ? இந்த ரெண்டுபேர் பேச்சைக் கேட்டு, அதே குடும்பத்திலுள்ள இன்னொரு பிள்ளையை இழுத்து வளைச்சுக்க...''

''ஷட் அப்!''

''என்னடீ சொன்னே?''

''ஷட் அப்னா மூடுன்னு அர்த்தம்... நான் எந்தக் கழுதையையும், குதிரையையும் வளைச்சு இழுத்துக்கப் போகலே... நான் எங்கே போறேன், எதுக்குப் போறேன்னு முன்னாடியே உனக்குத் தெரியும்! அப்ப, ஏன் அம்மா வாயில கொழுக்கட்டை அடைச்சமாதிரி நின்னுட்டிருந்தே! நீ போக வேண்டாம்டீ ஈசுவரின்னு ஏன் ஒரு வார்த்தை சொல்லலே?''

''என் மானமே போறது! இந்த ஜோசியர் கிட்டாமணியின் வாய் சும்மா இருக்காது. ஊர் பூரா தம்பட்டம் அடிப்பார்!''

''என்னன்னு குஞ்சு?'' என்று கேட்டார் நவநீத பாகவதர்.

''அப்பா!'' என்றாள் ஈசுவரி.

''இனிமே என் கல்யாணப் பேச்சை எடுக்காதீங்க...''

''ஏண்டீ, ஏன்? மணிமேகலையா வாழப்போறியா?'' என்றாள் குஞ்சரம்.

''இல்லை!'' என்று சொன்ன ஈசுவரி நகர்ந்தாள்.

# 19

குஞ்சரம் இயல்பாக சாந்த சுபாவமுடையவள் தான். இரக்க குணத்துக்கும் குறைவில்லை. பிறர் கஷ்டப் பட்டால் அவர்களோடு சேர்ந்து கண்ணீர் வடிக்கும் மனதும் உண்டு. ஆனால் அவளுக்கு துயரம் என்று வரும் போது, ஒன்று வீட்டுக்காரரிடம் சொல்லி அழுவாள்



இரண்டு அன்ன ஆகாரமில்லாமல் தன்னுடைய அறையில் முடங்கிக் கிடப்பாள்; மூன்று, துயரம் மனத்தில் உறைந்து போய் கோபமாக மாறும். தன்னுடைய கையாலாகத் தன்மையால்தான் துக்கம், துயரம், ஏமாற்றம் எல்லாம் உண்டாகின்றன என்ற ஞானோதயம் பிறந்து அது எரிமலையை விசிறிவிடும்.

இப்போது தன் மூன்று பெண்களிடமும் தோற்றுப் போய்விட்டதான எண்ணம் அவளுள் புகுந்துவிட்டது. இந்தப் பூனையும் பாலைக் குடிக்குமா என்பது போல அபயம் நடந்துகொண்டிருக்கிறாள். இரண்டு ஆண்டு காலமாக சிவா என்கிற ஒரு பிள்ளையிடம் பழகி வருவது பற்றி அவள் தன் பெற்ற தாயாரிடம் மூச்சுகூட விட்டதில்லை. ஏன் அவள் அப்படி நடந்துகொண்டாள்? அந்தரங்கமாக ஒரு வார்த்தை சொல்லியிருந்தாலும் குஞ்சரம் திருப்தி அடைந்திருப்பாளே?

அபயம் ஒரு அடி பாய்ந்தால், ஆனந்தி நாலு அடி பாய்ந்துவிட்டாள். தனக்கு வரவேண்டிய மணாளனை ஒரு பெண், உப்பு, இனிப்பு, புளிப்பு பண்டங்கள் விற்கும் கடையிலா தேர்ந்தெடுப்பது? சரி, அப்படியே தேர்ந்தெடுத்துத் தொலைக்கட்டும். பெற்றவள் ஒருத்தி வீட்டில் குத்துக்கல் போல இருக்கிறாளே, அவளிடம் சொல்ல வேண்டாம்? இருவரும் ஒரு நாடகம் ஆடி, பிற்பகல் மூன்று மணிக்கு பார்க்க வந்த மாப்பிள்ளையை விரட்டி அடித்து (இதில் குஞ்சரத்துக்கு திருப்திதான்) அதன்பிறகு ஆறு மணிக்கு, ஆனந்தியைப் பார்க்க வந்த பிள்ளை வீட்டார் முன் அபயம் வந்தாளே? இதுபற்றி முன்கூட்டியே ஒரு வார்த்தையாவது, அம்மா என்ற ஸ்தானத்துக்கு மதிப்பு கொடுத்து அவளிடம் கூறினாளோ?

ஜோசியர் கிட்டாமணியும், அவருடைய மனைவி குஞ்சுவும் மேற்பூச்சாக அவளைப் பாராட்டினாலும், ஊரில்

பலவிதமாக பேசி சிரிக்க வைப்பார்களே? ஆனந்தியை பார்க்கத்தான் சிவா வருகிறான் என்று கடைசி வரை நம்பியிருந்த குஞ்சரத்தை இரு பெண்களும் ஏமாற்றி அல்லவா அழ வைத்து விட்டார்கள்? பெண்கள் இருவரும் தங்களுக்குப் பிடித்தவர்களுடன் சேர்ந்து, வாழ்க்கையில் குப்பை கொட்டப் போகிறார்கள் என்கிற மகிழ்ச்சி ஒரு பக்கம் இருந்தாலும், இந்த முடிவை தெரிவிக்க அவர்கள் வகுத்த பாதை குஞ்சரத்துக்கு வருத்தம், துயரம், ஏமாற்றம் எல்லாவற்றையும் அள்ளிக்கொட்டி, மனதைப் புண்படுத்தி விட்டதே!

இப்போது ஈசுவரி!

அவன் எங்கே போயிருந்தாள் என்று திரும்பி வரும் வரை குஞ்சரத்துக்குத் தெரியாது. தாலி கட்டிய கணவர் கூட அவளிடம் கூறவில்லை. சாம்பசிவத்தின் பிள்ளை சுந்தரேசனுடைய வீட்டிலிருந்து திரும்புவதற்கு முன்னால் அவரும் கணவர் பாகவதரும் ஒரு ஓரமாக நின்று தனித்துப் பேசினார்கள். குஞ்சரத்தை காரில் நீண்டநேரம் காத்திருக்கச் செய்தார்கள். அவர்களுடைய பேச்சில் ஒரு ரகசியத் திட்டம் புதைந்து கிடந்திருக்கிறது என்று இப்போதுதானே குஞ்சரத்துக்குப் புரிகிறது? இந்த திட்டம் பற்றிக் கணவர் அவளிடம் சொல்லவில்லை. இதற்கு என்ன அர்த்தம்? குஞ்சரம் தகுதியில்லாதவள் என்றா? கட்டின மனைவிக்கும் மதிப்பு இல்லை என்றால் அவள் வாழ்ந்துதான் என்ன புண்ணியம்?

குஞ்சரம் வேறு விதமாக எண்ணிப் பார்த்தும் தன்னைத்தானே சமாதானப்படுத்திக் கொண்டாள். பாகவதர் திட்டத்தின் முடிவு வெற்றிகரமாக இருந்தால் மட்டும் மனைவியிடம் சொன்னால் போதும் என்று இருந்திருப்பார். முன்கூட்டியே சொல்லி அது தோல்வியில் முடிந்திருந்தால் குஞ்சரத்தின் மனம் வேதனைப்படக்கூடும் என்கிற கரிசனம் காரணமாகத்தான் கூறாமல் இருந்திருக்



கிறார். அவரை குஞ்சரம் மன்னிக்கவும் தயார். ஆனால் ஈசுவரியை அவளால் மன்னிக்க முடியாது. அவள் சின்னஞ் சிறிய, அற்பமான விசயங்களைக்கூட அம்மாவிடம் சொல்லுகிறவள். என்ன செய்ய வேண்டும், எப்படி செய்ய வேண்டும் என்று அம்மாவிடம் யோசனை கேட்கிறவள். அப்படிப்பட்ட ஈசிவரி, எப்படி இவ்வளவு முக்கியமான விசயம் பற்றி, லேசான மூச்சுகூட விடவில்லை?

எல்லா விதமான எண்ணங்களும், சிந்தனைகளும் பிரவாகமாக கண நேரத்தில் அவளுடைய மனதில் பெருக்கெடுத்து ஓடிக்கொண்டிருக்கையில், ஈசுவரி அலட்சியமாக அவளை ஒரு பார்வை பார்த்துவிட்டு நகர்ந்ததை, குஞ்சரத்தால் தாங்கிக்கொள்ள முடியவில்லை.

''நில்லுடீ!'' என்றாள்.

''என்ன?''

''நீ கல்யாணம் பண்ணிக்கிட்டு எட்டு குழந்தைகளைப் பெத்து வீட்ல நாயா கிடக்கறியோ, இல்லே கழுத்தில தாலி இல்லாம ஜென்மம் பூரா தெருவில பேயா அலையறியோ எனக்குக் கவலை இல்லை...''

''கொஞ்சம் நிறுத்து அம்மா!''

''என்னடீ?''

''இப்படி என்னைப்பற்றி எந்தக் கவலையுமே இல்லாத உனக்கு என்னை நிறுத்திக் கேள்வி கேட்க என்ன உரிமை இருக்கு, தகுதி இருக்கு, யோக்கியதை இருக்கு?''

''சபாஷ்! என்றார் நவநீத பாகவதர்.

''என்ன பெரிய சபாஷ்...? என்ன சபாஷைக் கண்டுட்டுங்க நீங்க...? வீட்ல யாரும் என்னை ஒரு மனுஷியாகவே மதிக்கலேன்னா என்ன அர்த்தம்? மூத்தது ரெண்டும் காதும் காதும் வெச்சாப்ல மாப்பிள்ளைகளை வலை போட்டு பிடிச்சதுகள். மூணாவதும் அவ அப்பனுமா

ரகசியமா ஏதோ பேசி ஏதோ ஒரு பிள்ளையை முடிக்க பார்க்கறீங்க... நாலாவதைப்பத்தி கேட்கவே வேண்டாம். மாசத்துக்கு ஒரு சினேகிதனை நிறுத்தி, 'இவன்தான் என் ஹஸ்பண்ட்'னு சொல்ல வேண்டியது. அடுத்த மாசமே அவன் எனக்கு லாயக்கு இல்லாதவன்னு கத்த வேண்டியது. சீ, நான் என்ன பாவம் பண்ணினேனோ? ஆண்டி பெத்தது அஞ்சும் குரங்குங்கற கதையாயிட்டது!''

குஞ்சரம் 'ஓ'வென்று கத்திவிட்டு, திடீரென்று கேவ ஆரம்பித்தாள்.

கண் சமிக்ஞையால் பெண் ஈசுவரியை வெளியேற்றி விட்டு. நவநீத பாகவதர், தமக்குக் கைவந்த பாசாங்கோடு உணர்ச்சி ததும்ப குஞ்சரத்தை சமாதானப்படுத்த ஆரம்பித்தார்.

''குஞ்சு...''

''.........''

''குஞ்சு... சே, உன்னை இத்தனை வருசமா நான் என்னமோ நினைச்சேன். இவ்வளவுதானா?''

''இவ்வளவு வருசமா என்ன நினைச்சீங்க? நான் ஒரு மண்டு, மண்டூகம், என்ன சொன்னாலும் எளிதா நம்பிடற வெகுளின்னுதானே?''

''இப்படியெல்லாம் நான் என்னிக்காவது ஒரு வினாடி நேரம் எண்ணியிருந்தா, அந்த விநாடியே உன்னை தள்ளி வைச்சு, உன் ஜீவனாம்சத்துக்கு ஏற்பாடு பண்ணி, கும்பகோணம் துக்காம்பாளையத்திலிருந்து பாகீரதியை இந்த ஊஞ்சல்லே என் பக்கத்தில உட்கார வைச்சிருப் பேன்...என்னைக் கல்யாணம் பண்ணிக்கணும்னு துடியாத் துடிச்சு ஏமாந்துபோய், வாழ்க்கையில வெறுப்பு அடைஞ்சு எலிமெண்டரி ஸ்கூல்லே டீச்சராப் போனா. இன்னும் ஒருத்தனுக்கு அவ தன் கழுத்தை நீட்டலே.''



''ஓ... இப்படி ஒரு கதை வேறு இருக்கா...?''

''என் வரையில அது ஒரு முடிஞ்ச கதை. அதை எதுக்கு இப்ப சொன்னேன்னா, உன் கழுத்திலதான் தாலி கட்டுவேன்னு நான் பிடிவாதம் பிடிச்சவன்! அப்ப எங்க வீட்ல ரகளையும் யுத்தமும் எத்தனை மாசம் நடந்ததுன்னு உனக்கு எப்படித் தெரியும்...''

ஒருகணம் வாயடைத்துப்போன குஞ்சரம், ''நமக்குக் கல்யாணம் ஆகி முப்பது வருசமாறது... இதுவரையில் இந்த ஸ்கூல் டீச்சரைப் பத்தி சொல்லவே இல்லை!'' என்றாள்.

''நான்தான் அவளை மறந்துபோயிட்டேனே... இப்ப நீ ஞாபகப்படுத்த வைச்சே... எப்ப நான் உன்னை மண்டுன்னு சொல்லியிருக்கேன்? வெகுளின்னு சிரிச்சிருக் கேன்...மதிப்பு கொடுக்காம உன்னை அலட்சியப்படுத்தி யிருக்கேன்? சொல்லு...சொல்லு குஞ்சு!''

''அபயம் ஆனந்தி ரெண்டும் என் கண்ல மண்ணை தூவித்துகள்...''

''என் கண்லேயும்தான்... அதுகள் அவங்களோட ஓடிப்போகலையே அதுகள் சமயம் வர்றப்ப சொல்லிக்க லாம்னு இருந்தா... சமயம் வந்தது, சொன்னா...இதில என்ன தப்பு? நாமும் இந்த காலத்துக்கு ஏத்தாப்ல நடந்து கொள்ளணும்.''

''இப்ப என்னடான்னா இந்த ஈசுவரி என் கண்ல மிளகாய் தூவறா!''

''அதான் இல்லை...உன் கண் மட்டுமில்லே...எல்லார் கண்லேயும் மிளகாய் தூவினது நானும், சாம்பசிவமும் தான்!''

''என்ன சொல்றீங்க?''

''அபயமும் ஆனந்தியும் சிவா, ஜெய்யுலை தாங்களாகவே விரும்பி கொண்டு வர்றா இல்லியா?''

''ஆமாம்.''

''இதுக்கு நேர் எதிரா கதை நடந்திருக்கு!''

''என்ன அது?''

''சாம்பசிவத்துக்கு நம்ப ஈசுவரியை தன்னோட மூணாவது பேரனுக்கு வாங்கிக் கொள்ளணும்னு கொள்ளை ஆசை. நீ கார்ல காத்துக்கிட்டிருந்தபோது எங்கிட்ட காதோடு காதா சொன்னார். நான் சொன்னேன், 'என் பொண் ஈசுவரி மத்தது மாதிரி இல்லை, உறுதியான மனசு உள்ளவள், பிள்ளையைப் பிடிக்கலேன்னா மூஞ்சியில அடிக்கிற மாதிரி பட்டுன்னு சொல்லிடுவா.' அப்படீன்னேன். அப்ப அவர் ஒரு யுக்தியை வெளியிட்டார். தம் பிள்ளை—மூணாவது பிள்ளை மார்க்கபந்து இல்லாத சமயத்தில், அவனோட பிள்ளை மணியை யாரோ வியாபார விசயமா சந்திக்கிற மாதிரி ஈசுவரி சந்திக்கலாம்னார். எனக்கும் இது பிடிச்சிருந்தது. நாம பிள்ளையைத் தேடிப் போகலே... பிள்ளை வீட்டார் தான் நம்மவீட்டுப் பெண்ணின் லட்சணத்தையும், சாமர்த்தியத்தையும் பார்த்து முன்வர்றான்னு பெருமைப்பட்டேன்...இந்த விசயம் கொஞ்சம் ரகசியமா இருக்கட்டும்னு சாம்பு கேட்டுக்கிட்டார்!''

''அப்புறம்?''

''ஈசுவரிகிட்டே விசயத்தை சொன்னேன்...அவ மொதல்ல முணு முணுத்தாள். அப்புறம் போனாப் போறதுங்கற மாதிரி தலை அசைச்சா.''

''ரெண்டுபேரும் பார்த்துக்கிட்டாச்சா?''

''ஆச்சு. ரெண்டுபேருக்கும் ஒருத்தரை ஒருத்தருக்கு பிடிச்சுப் போயாச்சு...''

''அப்ப அத்தியாயம் இதோட முடிஞ்சுடுத்தா...?''



''இல்லை.''

''அப்படீன்னா?''

''என்ன செய்யணும்னு நீயே சொல்லு.''

''பிள்ளை தன்னோட அம்மா அப்பாவோட பெண் பார்க்க இங்கே வரணும். நானும் பிள்ளையைப் பார்க்கணும்.''

''பிள்ளை ராஜா மாதிரி இருப்பானாம். சாம்பு சொன்னார்!''

''அவன் ராஜாவா கூஜாவான்னு நான் பார்த்துத் தெரிஞ்சுக்கறேன்!''

''திவ்யமா!''

''என்ன செய்யறான்...?''

''பெரிசா ஒண்ணுமில்லே... வருசத்துக்கு ரெண்டு மூணு கோடி ரூபாய்க்கு வியாபாரம்... லாபம் நாலஞ்சு லட்சம்தான்...''

''இவ்வளவு லாபம்னா, அது என்ன வியாபாரம்? சாராயமா இல்லே கடத்தலா இல்லே அரசியலா?''

நவநீத பாகவதர் கலகலவென்று சிரித்தார்.

''குஞ்சு, நீ ரொம்ப குசும்பா பேசறே...எந்தெந்த வியாபாரங்கள்ளே எக்கச்சக்கமா லாபம் வரும்னு நல்லா தெரிஞ்சு வைச்சுருக்கே...''

''அப்ப என்னன்னுதான் சொல்லுங்களேன்!''

''உல்லன் பிளாங்கட், பவானி ஜமுக்காளம், சென்னிமலை படுக்கை விரிப்புகள், தரையை அலங்காரம் பண்ற கார்பெட்ஸ்... இதெல்லாம் மொத்த வியாபாரம்... அப்பனும் பிள்ளையும் பம்பரமா சுத்தறாங்க...பாய்க் கடை தாண்டி பூக்கடை வர்றதுக்கு கொஞ்சம் முன்னாடி இருக்கு கடை...''

''நான் ஹோல்சேல்ல ஜமுக்காளமோ, பெட்ஷீட்டோ வாங்கற உத்தேசம் இல்லை. மெட்ராஸ் குளிருக்கு உல்லனும் தேவை இல்லை ஆனா, இதெல்லாம் எனக்கு முன்னமே தெரிஞ்சிருந்தா நானும் சந்தோஷப்பட்டிருப் பேன்...அநியாயமா ஈசுவரிட்டேயும் எரிஞ்சு விழுந்திருக்க மாட்டேன்!'' என்றாள் குஞ்சரம்.

''அப்பாடீ...பால் பாயசம் குடிச்ச மாதிரி இருக்கு...'' என்ற நவநீத பாகவதர், ''ஈசுவரி!'' என்று கத்தினார்.

மறு நிமிடம் ஈசுவரி வந்தாள்.

''என்ன அப்பா?'' என்று கேட்டாள் ஈசுவரி.

''ஒண்ணுமில்லேம்மா. சும்மாத்தான் கூப்பிட்டேன்!'' என்றார் பாகவதர். அவருடைய கண்களில் வீசிய விஷமப் புன்னகையை ஈசுவரி புரிந்துகொண்டாள்.

''ஈசுவரி...என்னை மன்னிச்சுடும்மா. அவசரப்பட்டு உன்னைக் குதறிட்டேன்...''

''நீ என் அம்மாதானே பரவாயில்லே.''

''குஞ்சு...''

''என்ன?''

''மூணு பெண்களுக்கும் ஒரே நாள்ல ஒரே மண்டபத் தில கல்யாணம்! கல்யாண செலவு என்னமா குறைஞ் சுட்டே போறது பார்த்தியா?''

''யார் கண்டா, உங்க அதிர்ஷ்டம் உத்ராவும் யாரை யாவது திடீர்னு ஒருத்தனை இழுத்துட்டு வந்து, 'என்னை இவனோட மணையில உட்கார்த்துன்னு' பிடிவாதம் பிடிச்சாலும் பிடிப்பா.'' என்ற குஞ்சரம், திடீரென்று போர்டிகோவில் ஸ்கூட்டர் நிற்பதைக் கண்டாள்.''

உத்ரா சல்வார்கமீசில் வாயெல்லாம் பல்லாக வந்து கொண்டிருந்தாள்.



''உன் வாய் முகூர்த்தம் பலிச்சுடும் போலிருக்கு குஞ்சு!'' என்றார் பாகவதர்.

''நான் ஏற்கனவே சொன்னபடி, மொதல்ல பெண் பார்க்க அவங்களை நாள் பார்த்து வரச்சொல்லுங்க...'' என்றாள் குஞ்சரம்.

''யாருக்கு என்னக்கா?'' என்று கேட்ட உத்ரா, ஈசுவரியைப் பார்த்தாள்.

அவளுடைய பார்வையில் ஒரு புது அர்த்தம் இருப் பதை ஈசுவரி புரிந்துகொண்டாள்.

# 20

**சா**ம்பு என்கிற சாம்பசிவத்தின் நாலாவது பிள்ளை கணேசன். சிறு வயதிலிருந்தே அவனை கணு என்று தான் செல்லமாகக் கூப்பிடுவார்கள்.

இந்த கணுவுக்கு உலகில் ஏதாவது ஒன்று வரவில்லை என்றால் அது படிப்புதான். அளவுக்குமீறி மந்திர கோஷம் செய்து வித்யாரம்பம் மற்றும் அட்டர அப்பி யாசம் செய்தும் கணுவை பள்ளிக்கூடம் அனுப்புவதே ஒரு தினசரி அவஸ்தையாக இருந்தது. அவனுடைய அம்மா அப்பா இருவருக்கும் எந்தக் குழந்தையையும் கை நீட்டி அடித்துப் பழக்கமில்லை. இப்படிப்பட்ட பழக்கம் இரு வருக்கும் இருக்கக்கூடாது என்று கணு சின்ன வயதிலேயே தீர்மானம் செய்தான்.

பள்ளி செல்ல தினசரி முரண்டு பண்ணுவதை அம்மா எத்தனை நாள்தான் பொறுத்துக்கொள்ளுவாள்? மற்ற எல்லா குழந்தைகளும் வரிந்து கட்டிக்கொண்டு ஊருக்கு

முன்னால் புறப்படும்போது, பிறவி சோம்பேறியான இரண்டாவது பிள்ளை சுந்தரேசனோ ஏழே முக்கால் மணிக்குத் தூங்கி எழுந்து எட்டேமுக்காலுக்குள் தோளில் பையைத் தொங்க விட்டுக்கொண்டு தயாராகும்போது, இந்த கணு மட்டும் மூலையில் உட்கார்ந்து அடம்பிடித்தால் என்ன செய்வது? நாளைக்கு அவனை குடும்பத்துத் துணிக்கடைகளில் உட்கார வைக்கும்போது மீட்டர், சென்டிமீட்டர் எல்லாம் தெரிந்தாகணுமே!

முதலில் அம்மா மிரட்டினாள்.

பிள்ளை மசியவில்லை.

முதுகில் லேசாக இரண்டு தட்டு தட்டினாள். கணுவுக்கு எறும்பு கடியாக உறுத்தியது.

பாரீஸ் பெப்பர்மின்ட், காட்பரீஸ் சாக்லேட், வீட்டில் செய்த அதிரசம் இதெல்லாம் லஞ்சமாகக் கொடுத்தாள். எல்லாவற்றையும தின்று முடித்தபின் கணு மீண்டும் அறையின் மூலைக்கே திரும்பினான்.

கெஞ்சியும், கொஞ்சியும் லேசான தட்டல்களும் பயனற்றவையாகப் போவதைக் கண்ட தாயாருக்கு மெல்ல மெல்ல ஆத்திரம் வந்தது. பெற்ற பிள்ளையை கையால் அடிப்பது பாவகரமான செயல் எனக் கருதி, விசிறிக் காம்பை ஆயுதமாக உபயோகிக்க ஆரம்பித்தாள்.

முழங்காலுக்குக் கீழே கணுக்காலுக்கு மேலே சதையில் விளாசினாள். கணு அழுதான், புரண்டான், பள்ளிக் கூடம் மட்டும் செல்லவில்லை.

எத்தனை நாட்கள் இப்படியே இருக்க முடியும்? கணவர் சாம்புவிடம் தன் இயலாமையைத் தெரிவித்தாள்.

சாம்பு எதிலும் தோல்வி கண்டவர் அல்ல. ஆனால், இந்த கணு அந்த அனுபவத்தை ஏற்படுத்துவான் போலப் பட்டது. அவர் அவனை அடிக்கவில்லை. கோழிக்குஞ்சை



தூக்குவதுபோலத் தூக்கிக் காரில் உட்கார வைத்தார். கணு கார் என்றும் தெருவென்றும் பாராமல் வீரிட்டான். காருக்கு வெளியே தலையை நீட்டி நீட்டி வேறு ஓலமிட்டான்.

யாரோ ஒரு பையனை யாரோ ஒருவன் கடத்திச் செல்வதாக நினைத்து தெரு மக்கள் நின்று வேடிக்கை பார்த்தார்கள்.

பள்ளிக்கூட வகுப்பை அடைந்ததும், 'டீச்சர், இவன் என் பிள்ளை... இங்கே வர அடம் பிடிக்கிறான். வீட்ல நான் கவனிச்சுக்கறேன். இங்கே கவனிக்க வேண்டியது உங்க பொறுப்பு'' என்றார் சாம்பு.

ஆசிரியர் சிரித்தார். ''இவனை மாதிரி ஆயிரம்பேரை நான் பார்த்திருக்கேன். கவலையை விடுங்க சாம்பசிவம்!'' என்றார் அவர்.

இப்படி ஆரம்பித்த பள்ளிக்கூட பிரவேசம் ஏதோ ஒரு மாதிரியாக முன்னேறி முன்னேறி எஸ்.எஸ்.எல்.சி. வரை வந்து, அதன்பின் அங்கேயே நின்றது.

பள்ளிக்கூடத்தில கணு கால்பந்து வீரன்; வாலிபால் வீரன்; பாட்மின்டன் சாம்பியன். படிப்பு ஒன்றுதான் வரவில்லை.

பதினெட்டு வயது ஆகியது.

பள்ளிக்கூட படிப்புதான் தம் பிள்ளைக்கு ஒத்து வரவில்லை. வியாபாரத்திலாவது நாட்டத்தை ஏற்படுத்தலாம் என்று சாம்புவுக்குத் தோன்றியது. அவர் அவனை தம் துணிக்கடைக்கே இழுத்துச் சென்று பயிற்சி அளித்தார். என்ன ஆச்சரியம்! ஆறே மாதங்களில் ஆறு வருட அனுபவம் உள்ளவனைப் போல கணு திகழ்ந்தான்.

மழையின் காரணமாக கடையினுள் ஒதுங்குபவர்களைக்கூட கணு விடவில்லை. அவர்களை வரவேற்று, ஊர் வம்பெல்லாம் பேசி, அவர்களுக்கு பிடித்த நடிகை நடிகர்களைத் தெரிந்துகொண்டு, அவர்கள் கடைக்கு அண்மையில் வந்துபோன கதையைக் கூறி, குறைந்தது நான்கு மீட்டர் துணியாவது தலையில் சுமத்தினான். இப்படிப்பட்ட திறமையை கணுவிடம் கண்ட சாம்பு உள்ளூர அயர்ந்துபோனார். துணி வியாபாரத்தில் எல்லா பிள்ளைகளையும்விட இவன்தான் சூரன் என்று நிர்ணயம் செய்தார்.

இருபத்தமூன்றாவது வயதில் கணுவுக்குக் கல்யாணம் நடந்தது. மனைவியாக வந்தவள் சுசிலா. ஒரு பி.ஏ., ஆனால் என்றும் கணவனைவிட தான் உயர்ந்தவள் என்று காட்டிக்கொள்ளவில்லை ஆங்கிலத்தில் ஒரு வார்த்தை கூட கணுவின் முன்னால் நின்று பேசமாட்டாள். இவ்வளவுக்கும் கணு வெறும் எஸ்.எஸ்.எல்.சி யே (பெயில்) ஆனாலும் நன்றாக ஆங்கிலம் பேசுவான்.

கணுவின் இருபத்தைந்தாவது வயதில் ஒரு பிள்ளை பிறந்தான். நாமகரண விழாவின்போது தாத்தா சாம்பசிவத்தின் பெயரை, நெல் பரப்பில் எழுதிவிட்டு, சத்யகீர்த்தி என்று பள்ளிக்கூடத்தில் பதிவு செய்தார்கள். வீட்டில் சத்யா என்று அழைத்தார்கள்.

'அப்பனுக்கு பிள்ளை தப்பாமல் பிறந்துவிட்டான்' என்ற அவச்சொல்லுக்கு தன்னை ஆளாக்கிக்கொள்ளாமல் சத்யா, அம்மா 'ப' என்று சொல்லுவதற்குமுன் பள்ளி செல்லத் தயாரானான்.

மாதங்கள் வருசங்களாகி ஓட ஓட சத்யாவும் படிப்பில் முன்னேறி ஓடிக்கொண்டே போனான்.



ஐ.ஐ.டி.யில் தங்க மெடல். அதன்பிறகு ஆமதாபாத்தில் எம்.பி.ஏ.,

ஒவ்வொரு பரிட்சையில் தேர்வு பெற்றதும் அம்மா—அப்பாவுக்கு நமஸ்காரம் செய்வான் சத்யா. அதன்பிறகு தாத்தா பாட்டி

எம்.பி.ஏ.,யில் நாலாவது ராங்க். அப்போது பாட்டி இல்லை. காலமாகி மூன்று மாதங்களாகி இருந்தது.

சாம்புத் தாத்தாவை அவன் நமஸ்கரித்துச் சென்றபோது, ''உன் பாட்டி இப்ப இல்லாமப் போயிட்டாளே'' என்று அவர் கண் கலங்கக் கூறிவிட்டு, ''இனிமே என்ன செய்வதா உத்தேசம்?'' என்றார்.

''அப்பாவின் துணிக்கடை!'' என்றான் கணு.

''பி.டெக் படிச்சுட்டு, எம்.பி.ஏ., பாஸ் செய்துட்டு துணிக்கடையா?''

''துணிக்கடையிலும் எம்.பி.ஏ., உபயோகப்படும் தாத்தா... ஜெய்ப்பு ரெடிமேட் கடைகள் ரெண்டு நடத்தற மாதிரி நானும் ஆரம்பிக்கலாம்னு இருக்கேன்... ஆனா, எல்லாம் புது மோஸ்தர்லே இருக்கும்.''

''அப்படீன்னா?''

''ரெண்டு செக்ஷன். ஒரு செக்ஷன்ல பாண்ட், ஷர்ட், டி ஷர்ட், ஸ்போர்ட்ஸ் ஷர்ட் போன்றவை. இன்னொரு செக்ஷன் முழுக்க முழுக்க பெண்களுக்கு. சல்வார்கமீஸ், சூடிதார், மிடி, அண்டர் கார்மெண்ட்ஸ் நைட் டிரஸ் எல்லாம். ஒரு பிரமாதமான டெய்லரும் கடையில் இருப்பான்...''

''கடைக்கு என்ன பேரு?''

''சாம்பூஸ்...''

"என் பேரா?"

"என் பேரும் அதுதானே, தாத்தா?"

தாத்தா சிரித்தார்.

"பணம்!"

"நீங்க உங்க கையால இருபதாயிரம் தர்றீங்க... அப்பா இருபதாயிரம் தர்றார்... அம்மா பத்தாயிரம்... பாக்கி பாங்க் கடனா தரும்!"

"ஜமாய்!"

"ஒரு கண்டிஷன் தாத்தா."

"என்னடா சத்யா?"

"லாபத்தில நாலுல ஒரு பங்கு உங்களுடையது!"

"அப்ப நான் பணம் தரலே..."

"என்ன தாத்தா... நீங்க இல்லாம போனா எப்படி... நீங்கதானே இந்த ஆலமரத்தோட தண்டு... நாங்களெல்லாம் விழுதுகள்தானே..."

"சரி, பத்தில ஒரு பங்கு!"

"ஓகே தாத்தா!"

"இப்ப உன் வயசு என்ன?"

"இருபத்து மூணு நிறைஞ்சுட்டுது!"

"இன்னும் ரெண்டு வருசத்தில நீ கல்யாணம் பண்ணிக்கணும், என்ன?"

"இப்ப பிசினஸ்!" சொல்லிவிட்டு அவன் விரைந்தான்.

இப்போது 'சாம்பூஸ்' சாம்பசிவத்தின் நான்காவது கடையில் அமர்க்களமாக இயங்கிக்கொண்டிருந்தது 'டிவி'யில் விளம்பரம்; ரேடியோ விவிதபாரதியில் விளம்பரம். வெள்ளிக்கிழமை ஹிந்துவில் விளம்பரம்.



கல்லூரி மாணவ மாணவிகளிலிருந்து, உத்தியோகம் பார்க்கும் இளைஞர்களும், யுவதிகளும் கடைக்கு தவறாமல் வருகை தந்தார்கள்.

முதல் மாடியில் பெண்களின் பகுதி. இருபது இளம் பெண்கள் பணிபுரிந்தார்கள் கீழ்த்தளத்தில் ஆண்களுக்கான உடைகள். பதினைந்து ஆண்கள் பணிபுரிந்தார்கள். எல்லாருமே நீலநிறத்தில் பான்ட்டும், வெள்ளை ஷர்ட்டும், டையும் அணிந்திருந்தார்கள். பெண் சிப்பந்திகள் எல்லாருமே நீல நிற சில்க் புடவைகளில் காட்சி அளித்தார்கள்

அண்மையில் கட்டிய இரண்டாவது மாடியில் ஒரு ஏசி அறையில் சத்யமூர்த்தி உட்கார்ந்திருக்க, வெளியே நான்குபேர் கடை சம்பந்தமான நிர்வாக வேலையில் ஈடுபட்டிருந்தார்கள்.

இரண்டாவது மாடியில் இருந்துகொண்டே, 'டிவி' பெட்டி மூலமாக கீழ்த்தளம் மற்றும் முதல் மாடியில் என்ன நடக்கிறது, யார் யார் எப்படி எப்படி வாடிக்கையாளர்களிடம் பேசுகிறார்கள் என்பதை அறிய வசதியை ஏற்படுத்திக் கொண்டிருந்தான் சத்யா. யாரேனும் ஒரு சிப்பந்தி வாடிக்கையாளிடம் முறை தவறி நடந்துகொண்டாலோ விரைப்பாகப் பேசினாலோ அந்த சிப்பந்தியின் ஆயுட்காலம் முடியப் போகிறது என்று அர்த்தம். முதல் தடவை எச்சரிக்கை. இரண்டாவது தடவை மூன்று நாள் சம்பளம் அபராதம். மூன்றாவது தடவை பேச்சுக்கு இடமில்லை. அபராதத்துக்கு அவசியம் இல்லை. சம்பள பாக்கியை வாங்கிக்கொண்டு சிப்பந்தி வெளியேற வேண்டியதுதான்.

ஒருநாள் மாலை ஐந்து மணி இருக்கும்.

சத்யா 'டிவி'யைப் பார்த்தான். முகமெல்லாம் கோபமாக ஒரு அழகான பெண் ஒரு சிப்பந்தியை அணுகி, தன் கையிலிருந்த பையிலிருந்து சல்வார்கமீசை எடுத்தாள். அலட்சியமாக மேஜைமீது எறிந்தாள்.

''இதை உங்ககிட்ட வாங்கினேன்... பளபளன்னு ரத்தச் சிகப்பா இருந்தது... இப்ப ஒரே ஒருவாட்டி தண்ணியில போட்டதும் பல் இளிச்சுட்டுது... முன்னூத்து முப்பது ரூபா தண்டம் அழ நான் தயாரில்லை.''

''உட்காருங்க மேடம் ப்ளீஸ்...''

''சரி உட்கார்றேன். என் பணத்தைத் திருப்பிக் கொடுங்க...''

''பில்லை தர்றீங்களா?''— சொன்ன சிப்பந்தி அந்தப் பெண் வீசியெறிந்த சல்வாரை ஆராய்ந்தாள்.

''உங்க கடை பில் என்ன பாங்க் தர்ற பிக்சட் டெபாசிட் ரசீதா... பத்திரமா வைச்சுக்க...''

மேலும் ஆராய்ந்துகொண்டே, ''என்னிக்கு இதை வாங்கினீங்கன்னு சொல்ல முடியுமா?'' என்றாள்.

''சில்லி கொஸ்டியன்ஸ் எல்லாம் கேட்டு போர் அடிக்காதீங்க... இதை இங்கேதான் பத்து பதினஞ்சு நாள் முன்னாடி வாங்கினேன்.''

''சாரி மேடம்.''

''என்ன சாரி? எதுக்கு சாரி?''

''இதை நீங்க எங்க கடையில வாங்கியிருக்க முடியாது.''

''நான்சென்ஸ்!''



''நான் பேசறது சென்ஸ்தான் மேடம்... இவ்வளவு மட்டமான ரெடிமேட் சல்வார்கமீசை நாங்க இந்தக் கடையில விக்கறதில்லே!''

''ஸ்டுபிட்! அப்ப நான் என்ன மடச்சியா?''

''தெரியாது மேடம்.''

''நான் கன்ஸ்யூமர் கோர்ட்டுக்குப் போவேன்.''

அந்தப் பெண் சிப்பந்தி பதில் சொல்ல வாயெடுக்கவும், நாற்பது வயது மதிக்கத் தகுந்த சூப்பர்வைசர் அங்கே வந்தாள்.

''மேடம்... உங்க ப்ராப்ளத்தை எங்க முதலாளியே தீர்த்து வைப்பார்... கொஞ்சம் என்கூட வர்றீங்களா?'' சொல்லிவிட்டு அவள் மேஜைமீது இருந்த சல்வார்கமீசை கையில் எடுத்துக்கொண்டாள். அவள் முன்னால் நடக்க, தலைநிமிர்ந்து அலட்சியப் பாவனையுடன் அந்தப் பெண் பின்தொடர்ந்தாள்.

இந்தக் காட்சியை 'டிவி'யில் பார்த்து ரசித்த சத்யா தன் அறைக்குத் திரும்பினான். அவன்தான் சூப்சர்வைசருக்கு போன் மூலமாக உத்தரவு போட்டிருந்தான்... அப்பெண்ணை தன் அறைக்கு அழைத்து வரும்படி.

இருவரும் அவனுடைய அறைக்குள் பிரவேசித்தார்கள்.

''தாங்க்யூ மிசர்ஸ் ரேகா நீங்க போகலாம்!''

சூப்பர்வைசர் ரேகா வெளியேறினாள்.

''ப்ளீஸ் டேக் யுவர் சீட் மேடம்!'' என்றான் சத்யா.

அவள் உட்கார்ந்தாள்.

''என்ன பிரச்னை?'' என்று சத்யா கேட்டான். ஒன்றுமே தெரியாதவனைப்போல.

"இது சாயம் போயிருக்கு. உங்க கடைக்கு வந்து சொன்னா, இந்த மாதிரி மட்டமான சல்வார்கமீசை எங்க கடையில வியாபாரம் செய்யறதில்லேன்னு அந்தப் பெண் சொல்றா... ஐ டோன்ட்கேர் அபவுட் தி மணி... பணத்தைப்பத்தி நான் கவலைப்படலே... ஆனா, இப்படிப்பட்ட புகழ்வாய்ந்த கடையில எப்படி இந்த மாதிரி ரெடிமேட் ஆடைகளை விக்கலாம்?"

அவளையும் தன் கையிலிருந்த சல்வார்கமீசையும் மாறி மாறிப் பார்த்த சத்யா, மேஜைப் பித்தானை அழுத்தினான்.

ஒரு பையன் உள்ளே வந்தான்.

"ப்ரிஜ்லேர்ந்து ரெண்டு ஆப்பிள் ஜூஸ், அப்புறம் காஷியர்ட்டேர்ந்து முன்னூத்து முப்பது ரூபாய்...ஜல்தி."

"எஸ் சார்"

"ரொம்ப தாங்க்ஸ் சார்."

அன்று பணத்துடன் வெற்றிவாகை சூடிக்கொண்டு வீடு திரும்பிய அந்தப் பெண், மறுநாள் காலை பத்து மணிக்கு பரபரக்க சத்யாவின் அறைக்குள் நுழைந்தாள்.

சத்யா ஆச்சரியப்பட்டான்.

# 21

உத்ரா என்ற பெயர் நிலைக்காமல் அது நாளடைவில் உதயா என்று மாறிவிட்டது. அம்மா குஞ்சரமும், அப்பா பாகவதரும்தான் நாமகரணப் பெயரையே இன்னும் உச்சரித்துக் கொண்டிருந்தார்கள். பள்ளிக்கூடத்திலும் இந்த பெயர் மாற்றம் தெரிந்தோ தெரியாமலோ ஏற்பட்டு விடவே பள்ளிக்கூடத்தின் தலைமை ஆசிரியர் உத்யா என்று பெயரையே மாற்றும்படி கேட்டுக்கொண்டார். அதிகாரபூர்வமாக பெயரும மாறியது.

இந்த உத்யா 'சாம்பூஸ்' நிறுவனத்தின் அதிபரிடமிருந்து முன்னூத்து முப்பது ரூபாயை மிகவும் எளிதாக வாங்கிவிட்டதாக நினைத்து பூரித்துப்போய் இரவு ஏழே காலுக்கு வீடு திரும்பினாள்.

ஹாலில் அவள் கண்ட காட்சி அவளை நிலைகுலைய வைத்தது. ஈசுவரி ஒரு ரத்தச் சிகப்பில் சல்வார் கமீசுடன் நின்று டெலிபோனில் பேசிக்கொண்டிருந்தாள்.

ஏது இந்த சல்வார்?

ஈசுவரியும் வாங்கினாளா?

"ஈசுவரி!" உத்யா வீரிட்டாள். ஆனால், அவளுடைய அலறல் டெலிபோனில் சுவாரசியமாக பேசிக்கொண்டிருக்கும் ஈசுவரியின் காதில் விழவில்லை.

"டீ, ஈசுவரி!" என்று உத்யா மீண்டும் அலறினாள்.

சிரித்துப் பேசிக்கொண்டிருந்த ஈசுவரி தங்கையை லட்சியம் செய்யாமல் தொடர்ந்து பேசி ஒரு வழியாய் ரிசீவரை வைத்தாள். பிறகு, ''ஏண்டீ இடியட், உனக்கு மானேர்ஸ் இருக்கா... நான்தான் போன்ல பேசிட்டிருந்தேனே, ஏன் வீடு அதிர்றமாதிரி கத்தினே... என்ன வேணும்?'' என்றாள்.

''நீ போட்டிருக்கிற சல்வார் கமீஸ்...''

''ஏன் அதுக்கென்ன... எங்கானும் தேளோ, பூரானோ ஒடறதா?''

''இதை எப்ப எங்கே வாங்கினே?''

''பாம்பே போயிருந்தப்ப சாம்பிளாக் கிடைச்சுது...''

''அது உன்னுடையது இல்லே.''

''அப்ப உன்னுடையதா?''

''ஆமாம்.''

ஈசுவரி சிரித்தாள். ''இன்னொருவாட்டி பீரோவை பாருடீ உத்யா!''

''பார்க்கவே தேவையில்லே... நீ கை தவறி என் தட்லேர்ந்து எடுத்திருக்கே. நம்ப ரெண்டுபேருக்கும் ஒரே சைசு. அதனாலதான் என்னோடதுன்னுகூட உனக்கு தெரியலே!''

''எப்படிச் சொல்றே?''

''நீ பாம்பேயிலிருந்து கொண்டு வந்ததை நான் தவறிப்போய் எடுத்துட்டேன்.''

''போன வாரம் இதே கலரில் போட்டுட்டுப் போனே, ஞாபகம் இருக்கு.''

''அதான் உன்னோடது.''

''அப்படீன்னா அது இப்ப எங்கே? அம்மாட்டே கொடுத்து எவர்சில்வர் வாங்கச் சொன்னியா?''



''அது சாயம் போயிடுத்து.''

''பாம்பே சாம்ப்ளா?''

''அது பாம்பேயோ, கல்கத்தாவோ, ஒரேவாட்டி தண்ணியில முக்கி எடுத்ததும் பல்லைக் காட்டிடுத்து.''

''அதைக் கொண்டா இப்ப!''

''நாளைக்கு தரேன்!''

''நீ சொல்றது நிஜம்னா இன்னிக்கே போன் பண்ணி நான் கொடுத்த ஆர்டரை கான்சல் பண்ணணும்... இதே மாதிரி துணி இரண்டாயிரம் மீட்டர் பலப்பல கலர்ல வாங்க ஆர்டர் கொடுத்திருக்கேன்.''

''மொதல்ல அதைச் செய்!'' என்ற உத்யா ஈசுவரி அருகே சென்றாள். கழுத்துப் பக்கமாக இருந்த அரை அங்குல சதுரத்தைப் பார்த்தாள்.

''இப்ப நல்லாவே ஊர்ஜிதமாயிட்டுது. ஈசுவரி... இது நான் வாங்கினதுதான்.''

''சரி சரி... இதே மாதிரி ஒன்று நான் வாங்கி தந்துடறேன், போதுமா...''

உத்யா... உள்ளூர தன்னைத்தானே நொந்து கொண்டே மாடிக்குச் சென்றாள்.

**ம**றுநாள் காலை பத்து மணிக்கு உத்யா, 'சாம்பூஸ்' கடையின் அதிபருடைய அறைக்குள் நுழைந்தாள்.

சத்யா ஆச்சரியத்தில் கண்கள் மலரப் பார்த்தான். அவளுடைய கையில் ஒரு பிளாஸ்டிக் பை இருப்பது சிரிப்பையும் வரவழைத்தது.

''வாங்க... இந்த கடையில வாங்கின மத்த துணிகளும் சாயம் போய் உங்களை இங்கே கொண்டு வந்துதா?''

''ஐ'ம் சாரி சார்... ரியலி வெரி வெரி சாரி... இதோ நேத்து நீங்க கொடுத்த முன்னூத்து முப்பது ரூபா...''

சத்யா தன் உணர்ச்சிகளை வெளிக்காட்டாமல், ''ஏன் என்ன ஆச்சு? நான் கொடுத்த கரன்சி நோட்டையும் கண்ணியில போட்டுப் பார்த்திங்களா?'' என்று கேட்டான்.

''நான்தான் மன்னிப்பு கேட்டுட்டேனே, அப்புறமும் நீங்க...''

''மொதல்ல உட்காருங்க... இப்ப நான் என்ன செய்யணும்?''

''மொதல்ல இந்தப் பணத்தை வாங்கிக்குங்க சார்.''

''ஏன்?''

உத்யா நடந்ததை விளக்கிவிட்டு, பிளாஸ்டிக் பையிலிருந்த ரத்தச் சிகப்பு சல்வார்கமீசை மேஜை மீது வைத்தாள்.

''இதான் சார் நான் இங்கே வாங்கினது.''

' சரி, தாங்க்ஸ்.''

''சார், நீங்க சாம்பசிவத்தின் பேரன்தானே?''

''சல்வார்கமீசுக்கும் என் தாத்தாவுக்கும் என்ன சம்பந்தம்னு எனக்குத் தெரியலே... அவர் இதெல்லாம் அணியமாட்டார்...''

''அவரோட மூணு பேரன்களுக்கும் என்னோட மூணு சகோதரிக்கும்தான் கல்யாணம் நடக்கப்போறது சார்... நான் நவநீத பாகவதரோட நாலாவது பெண். என் பெயர் உத்யா.''

''ரொம்ப சந்தோஷம். நாம கல்யாணத்தில் சந்திப்போம்.''



இந்த வார்த்தைகள் 'சுருக்'கென்று தைக்கவே உத்யா எழுந்தாள்.

''நான் பணத்தை கொடுத்துட்டேன். நீங்க நான் தந்த சல்வாரை இன்னும் திருப்பித் தர முயற்சிகூட செய்யவில்லை.''

''அதை நான் தர்றதா இல்லை''

''ஏன்?''

''இந்தப் பணத்தை வேணும்னா அதனோட மதிப்பா நினைச்சு எடுத்துக்குங்க, மிஸ் உத்யா.''

''நோ... எனக்கு பணம் வேண்டாம். அதே சல்வார்தான் வேண்டும்.''

''அதை நான் நினைவுப் பொருளா வைச்சுட்டிருக்கேன்.''

''நான்சென்ஸ்!''

''எனக்கு சென்சாத்தான் படறது!''

''கொஞ்சம் இடம் கொடுத்தா என் போட்டோவைக்கூட கேட்பீங்க போலிருக்கு, நினைவுப் பொருளா வைச்சுக்க?''

''இப்ப கைவசம் இருக்கா?''

''இல்லே... ஆனா, இப்பவே ஸ்டுடியோவுக்குப் போய் எடுத்துக்கறேன்... எந்த சைஸ்ல, எந்த போஸ்ல இருக்கணும் சார்?''

''என் பெயர் சத்யகீர்த்தி. நிக்கற போஸ்ல, இதோ இந்த சிகப்பு சல்வார்கமீஸ்ல பன்னண்டுக்குப் பத்து சைஸ்ல போட்டோ இருந்தாப் போதும்!''

''ப்ரேம் பண்ணி தரணுமா, இல்லே கவர்ல போட்டு தந்தாப் போதுமா?''

''சிரமம் இல்லேன்னா ப்ரேம் போட்டே கொடுங்களேன்.''

மேஜைமீது இருந்த சல்வாரை எடுத்து பையில் போட்டுக்கொண்ட உத்யா, ''ஒரே ஒரு கேள்வி மிஸ்டர் சத்யகீர்த்தி'' என்று இழுத்தாள்.

''பதில் சொல்ல நான் ரெடி.''

''தேத்து நான் கொண்டுவந்தது உங்க கடை சரக்கு இல்லேன்னு தெரிஞ்சும் எதுக்காக முன்னூத்து முப்பது ரூபா கொடுத்தீங்க?''

''சாதாரணமாகவே வாடிக்கையாளர் சொல்றதுதான் கரெக்ட்னு ஒரு கொள்கையை வைச்சிருக்கேன். ஆனா இந்த உடுப்பை வேறு யாரேனும் கொண்டு வந்திருந்தா பணம் கொடுத்திருக்கமாட்டேன். ஆனா, நீங்க வாடிக்கையாளரா தெரியலே. ஸ்பெசல் வி.ஐ.பி.யா தோணித்து.''

''அதான் போட்டோ வரையிலும் போறீங்களாக்கும்'' என்ற உத்யா, ''என்னாலேயும் திருப்பிக் கேட்க முடியும்!'' என்றாள்.

''என்ன அது?''

''போட்டோ...''

''சத்யா சிரித்தான்.''

''எதுக்கு ரெண்டு போட்டோ தனித்தனியா எடுக்கணும்...''

''புரியறது... நான் வரேன்!''

''ஒன் மினிட்.''

''என்ன?''



''என் தாத்தா உங்களைப் பார்க்க ஆசைப்படுவார்... அவர் சொல்லி அனுப்பினா அவரை சந்திக்க வர முடியுமா?''

''யார் மூலமா சொல்லி அனுப்புவார்?''

''பாவம், அவருக்கு உதவி செய்ய யார் இருக்கா... என் மூலமாத்தான்...''

''யோசிக்கிறேன்.''

மறுநாள்—

''தாத்தா!''

''என்னடா சத்யா?''

''ஒரு செய்தி.''

''சொல்லு.''

''இந்தக் கடையை ஆரம்பிக்கறதுக்கு முன்னாடி உங்களை நான் சாஸ்டாங்கமா நமஸ்காரம் பண்ணினேன் தாத்தா!''

''நானும் ஆசிர்வாதம் பண்ணினேன் போலிருக்கே!''

''நீங்க அத்தோட நிக்கலே... ஒரு உத்தரவும் போட்டீங்க...''

''உத்தரவு போட்டேனா, என்ன உத்தரவு?''

''அப்ப எனக்கு இருபத்துமூணு வயசு. 'இன்னும் ரெண்டு வருசத்திலே நீ கல்யாணம் பண்ணிக்கணும்'னு உத்தரவு போட்டீங்க...''

''அது உத்தரவு இல்லேடா... ஒரு யோசனைதான்.''

''உங்க யோசனை எதுவா இருந்தாலும் அதை உத்தரவா மதிச்சு நடக்கிறவன் நான்.''

"ரொம்ப சந்தோஷம்டா சத்யா. இப்ப உனக்கு வயசு இருபத்தஞ்சு. ஏதோ அன்னிக்கு நான் சொன்னேன் என்கிறதுக்காக, நீ அவசரப்பட வேண்டாம். உன் இஷ்டம் போல..."

"இல்லே தாத்தா... அது... சாத்தியம் இல்லே..."

"ஏண்டா?"

"உங்க உத்தரவை நான் நிறைவேத்தியே தீருவேன்."

"அட படவா... யார்டா அவள்?"

"ஒரு எம்.எஸ்.சி.,"

"படிப்பை விடுடா..."

"பேரு உத்யா."

"பேர்ல என்னடா இருக்கு..."

"என் மனசுக்கு பிடிச்சிருக்கு"

"குலம் கோத்திரமெல்லாம் தெரியாம நான் சம்மதம் தரமாட்டேன்."

"நீங்க ஏற்கனவே அங்கீகாரம் செய்த குலமும் கோத்திரமும்தான் தாத்தா!"

"ஊரைச் சுத்தாதே!"

"நவநீத பாகவதருடைய நாலாவது பெண்..."

"என்னடா சொல்றே?"

சத்யா நடந்ததையெல்லாம் சாம்புவிடம் கூறினான்.

"நான் அவளைப் பார்க்கணும்" என்ற அவர், "ஈசுவரியைப் பெண் பார்க்க அடுத்த ஞாயித்துக்கிழமை போறதா ஏற்பாடு. ஆனா அதுக்கு முன்னாடி நான் இந்த உத்யாவைப் பார்க்கணும். பாகவதரையும் பார்க்கணும்."



"நான் எதுக்கு தாத்தா உங்களுக்குப் பேரனா பிறந்திருக்கேன்? ஏற்பாடு செய்துடறேன்!"

"ராஸ்கல்! ரெடிமேட் ஆடை கடை வைச்சிருக்கியோ இல்லியோ, அதான் ரெடிமேடா ஒரு பெண்ணையும் இழுத்துட்டு வர்றே... உம், எல்லாருக்கும் சந்தோஷமா இருந்தா அதுவே எனக்கு திருப்தி!" என்றார் சாம்பு.

இது நடந்த மூன்றாம் நாள் மாலை நான்கு மணிக்கு ஸ்கூட்டரில் ஒரு பெண் வந்து இறங்கினாள். நீல நிறத்தில் புடவை. அதற்கேற்ப சோளியும் அணிந்திருந்த அவள், புடவைத் தலைப்பால் இழுத்துப் போர்த்திக்கொண்டு ஹாலில் சாய்வு நாற்காலியில் அமர்ந்திருந்த சாம்பசிவம் முன் வந்து நின்றாள்.

"நமஸ்காரம் மாமா."

"தாத்தான்னு கூப்பிடு."

"நமஸ்காரம் தாத்தா!"

"நீதானே உத்யா, பாகவதரோட கடைசிப் பெண்?"

"ஆமாம் தாத்தா."

"சத்யா எல்லாம் சொன்னான். இதில நான் எதுவும் சொல்றதுக்கோ தலையிடறதுக்கோ ஒண்ணுமில்லை உத்யா... நாலு அக்கா தங்கைகளுக்குள்ளே ஈசுவரி ஒருத்தியைத்தான் நானா வலிய வந்து என் பேரன் மணிக்கு கேட்டேன்."

"தெரியும் தாத்தா."

"உன் அப்பாகிட்ட பேசறேன்... சந்தோஷமா போ."

"நமஸ்காரம் பண்றேன் தாத்தா."

"இரு நிக்கறேன்."

அவர் எழுந்து நின்று ஆசிர்வாதம் செய்தார்.

அன்று குஞ்சரம் பாகவதரிடம் ஈசுவரியைப் பெண் பார்க்க வரும்படி ஏற்பாடு செய்யக் கூறியபோது வீட்டினுள் பிரவேசித்த உத்யா, ''யாருக்கு எனக்கா?'' என்று கேட்டாள். அவளுடைய பார்வையில் ஒரு புது அர்த்தம் இருப்பதையும் ஈசுவரி புரிந்துகொண்டாள்.

நவநீத பாகவதர் சிரித்தார்.

''ஆமாம் உன்னையும்தான்!'' என்றார்.

''என்ன சொல்றீங்க நீங்க?'' என்று குஞ்சரம் கேட்டாள்.

''சாம்புவின் மூத்த பிள்ளை ராமாமிர்தம், அவனோட பிள்ளை சிவா. மூத்த மாப்பிள்ளை. இரண்டாவது மாப்பிள்ளையின் பெயர் ஜெய்யூங்கற ஜெயராமன். ரெண்டாவதாச்சா? மூணாவது மணி. ஈசுவரிக்கு. நாலாவது, சாம்புவோட நாலாவது பிள்ளை பேரு கணுங்கற கணேசன். அவனுடைய ஒரே பிள்ளை சத்யகீர்த்தி. பி.டெக்., எம்.பி.ஏ., நமக்கு நாலாவது மாப்பிள்ளை... நம்ப நாலாவது பெண்ணே தேர்ந்தெடுத்த பிள்ளை! அவனும் அம்மா அப்பாவோட ஞாயித்துக்கிழமை பெண் பார்க்க வர்றாங்க!''

''இது என்ன கூத்து? இதுபத்தி நீங்க மூச்சுகூட விடலியே?''

''நானும் சாம்புவும் பேசி முடிச்சாச்சு. ஆனா அதுக்கு முன்னாடியே, பெண்ணும் பிள்ளையும் பார்த்துப் பேசி முடிவுக்கு வந்தாச்சு!''

''நம்ப நாலு பொண்களும் ஒரே குடும்பத்துக்கா போகணும?''

''இதை நீ விதின்னு நினைச்சுக்கோ. நான் அதிர்ஷ்டம்னு கொண்டாடுறேன்! அப்பப்பா, ஒரே நாள்ல நாலு கல்யாணங்கள். ஒரே மண்டபத்தில். செலவு என்னமா குறையறது!'' என்றார் பாகவதர்.

# 22

அந்த ஞாயிற்றுக்கிழமை காலை பத்து மணிக்கு ஈசுவரி மற்றும் உத்யாவை சாம்புவின் இரு பேரன்களான மணியும், சத்யாவும், தத்தம் பெற்றோர்களுடன் பெண் பார்க்க வர இருந்தனர்.

மூன்றாவது அரை தம்ளர் டிகிரி காபியைக் குடித்து விட்டு கும்பகோணம் வெற்றிலையை மடித்து சீவலுடன் சங்கமமாக்கி பன்னீர் புகையிலையை எடுத்துக்கொண்ட நவநீத பாகவதர் ஆனந்த பரவசத்தில் திளைத்துப் போயிருந்தார். இரண்டாவது மகா யுத்தத்தில் ஹிட்லர் கண் இமைக்கும் நேரத்தில் அக்கம் பக்கத்து நாடுகளை கபளீகரம் செய்ததுபோல, அவர் இப்போது அவரே அறியாமல், அவருடைய நான்கு பெண்களையும் கரை சேர்க்கப் போகிறார். இந்த எண்ணம் எழுந்தபோது வேறு ஒரு எண்ணமும் மனத்தை இதமாகத் தாக்கியது.

ஆரம்பத்தில் ஜோசியர் கிட்டாமணியைத் தவிர வேறு யாரையும் அவர் தம் பெண்களின் கல்யாண விசயமாக அணுகியதில்லை. கிட்டாமணி கண்ட கண்ட இடங்களிலிருந்து கண்ட கண்ட வரன்களைக் கொண்டுவந்து ஆட்டோ செலவு என்கிற பெயரில் ஐம்பதும், நூறுமாக கறந்துகொண்டிருந்தார். அவர் கொண்டுவநத ஒரே நல்ல வரன் சிவாதான். ஆனால், அவனும் ஆனந்திக்காக வந்தவன் நடந்தது என்ன? அபயம் சிவாவுக்கு தலை நீட்டப் போகிறான். சிவா—அபயம் காதல் கடைசி நிமிடத்தில்தான் தெரியவந்தது. ஆனந்தி ஜெய்யூவைக்

கொண்டு வந்தாள். சாம்புவே வலிய வந்து ஈசுவரியைக் கேட்டு வந்தார். உத்யா, இரண்டு மூன்று பிள்ளைகளுடன் ஐஸ்க்ரீம் சாப்பிட்டுவிட்டு, அதன் ஜில் உணர்ச்சி தொண்டையிலிருந்து மறையும் முன்னரே அவர்களைத் தூக்கி எறிந்தவள். அவள் இப்போது உடும்புப் பிடியாக சத்யகீர்த்திதான் தன் வாழ்க்கைத் துணைவன் என்று கோபுர உச்சியின் மேல் நின்று குரல் கொடுக்கிறாள்.

மொத்தத்தில் நான்கு பெண்களின் வாழ்க்கைப் பிரவேசத்துக்கு நவநீத பாகவதர் ஒரு துரும்பைக்கூட எடுத்துப் போடவில்லை. அவருடைய அதிர்ஷ்டம் இதோடு நிற்கவில்லை. தன்னுடைய மற்றும் உத்யாவின் கல்யாண செலவை அபயம் ஏற்றுக்கொள்ளப் போவதாக அறிக்கை விட்டுவிட்டாள். அக்காவுக்கு தான் சளைத்தவள் அல்ல என்று நிரூபிக்க, ஆனந்தி தன் கல்யாண செலவோடு ஈசுவரியையும் கவனித்துக்கொண்டாள்.

விசயம் இப்படி இருக்கையில் அவருடைய பங்குதான் என்ன? நாமகிரிப்பேட்டை கிருஷ்ணன்தான் நாதசுரம் என்று ஈசுவரி பிடிவாதம் பிடித்தாள். பல ருசி மன்னன் என்று யாரும் கொடுக்காத பட்டத்தை ஊர் முழுக்க முழக்கும் ராஜாமணி அய்யர்தான் கல்யாண சாப்பாட்டை தயார் செய்வார் என்று ஆனந்தி சொல்லிவிட்டு, சீர் முறுக்கு, அதிரசம், லட்டு மற்றும் ஜாங்கிரி போன்ற சீர் வரிசைகளுக்கு ஆர்டர் கொடுக்க அவளுக்கு 'ராசியான' கடைக்கு ஓடப்போவதாகக் கூறினாள். சேஷகோபாலன் சங்கீதம்தான் சங்கீதம் என்று பிடிவாதம் பிடித்த உத்யா, மாலை வரவேற்புக்கு அவரை ஏற்பாடு செய்ய முனைந்தாள். அபயம் கல்யாண மண்டபம் பற்றி யோசிக்கவில்லை. எல்லாருக்கும் சவுகரியமாகவும், அதே சமயத்தில் இரு பக்கத்தாரின் வீடுகளுக்கு அருகாமையிலும் இருக்கும் பிரபல கல்யாண மண்டபத்துக்கு அட்வான்ஸ் கொடுக்கத் தயாரானாள்.



நவநீத பாகவதர் இது பற்றியெல்லாம் சந்தோஷப்பட்டாலும் உள்ளூர வேதனை புரையோடியது. அவர் தம் பங்குக்கு எதுவும் செய்யவில்லையே? இதுபற்றி மனைவி குஞ்சரத்திடம் யோசனை கேட்டார். அவளும் 'ஒண்ணும் தெரியலே' என்று கை விரிக்கிறாள்.

என்ன செய்ய?

திடீரென்று ஒரு கார் வந்து நிற்கும் சத்தம் கேட்டது. ஹால் கடிகாரத்தைப் பார்த்தார். ஒன்பது பத்து. பத்து மணிக்குதானே பிள்ளை வீட்டார் வரவேண்டும்?

ஊஞ்சலில் அமர்ந்தபடியே பார்த்தார்.

சாம்பசிவம், வேட்டியும், ஜிப்பாவும் அணிந்து, அவருடைய எழுபதுக்கு அப்பார்ப்பட்ட வயதிலும் ஊன்று கோல் உதவி இல்லாமல், தலை நிமிர்ந்து நடந்து வந்து கொண்டிருந்தார்.

சாம்பு ஹாலுக்குள் நுழைவதற்குள் பாகவதர் மெய் சிலிர்த்துப்போய், எழுந்து நின்றார்.

''வாங்கோ, வாங்கோ...''

''என்ன பாகவதர். வாய் குளர்றது. வெத்தலை, பாக்கு, புகையிலையா? மொதல்ல வாயை சுத்தம் பண்ணிட்டு வாங்கோ!''

''இதோ!''

பாகவதர் விரைந்து சென்று, விரைந்து திரும்பினார்.

''சொல்லுங்கோ சாம்பு சார்...''

''பத்து மணிக்கு அஞ்சு கார்ல என்னோட அஞ்சு புள்ளைகள் பெண்டாட்டி பிள்ளைகளோட வரப்போறா. அவ காலமானப்புறம் நான் இந்த மாதிரி விழாக்கள்லே கலந்து கொள்றதில்லேன்னு முடிவு எடுத்திருந்தேன்.

ஆனா, இன்னிக்கு விதிவிலக்கு. இப்ப ஏன் நான் ஊருக்கு முன்னால உன்னைப் பார்க்க வந்திருக்கேன்னு உனக்குத் தெரியாது.''

''தெரியாது சாம்பு சார்.''

''இந்த சார் பூர் எல்லாம் தேவையில்லாத மரியாதை... நாம சம்பந்திகள்.''

''சரி, சாம்பு.''

''நான் இப்ப வந்த விசயம் நடக்கப்போற கல்யாணம் பத்தி.''

''சொல்லுங்கோ.''

''நாம பணத்தை செலவு செய்யறப்போ அது நிறக்க இருக்கணும். தண்டச் செலவு எனக்குப் பிடிக்காது.''

''எங்கெங்கே எதை எதை குறைக்கணும்னு சொல் லுங்கோ, அப்படியே செய்யச் சொல்றேன்.''

''செய்யச் சொல்றேன்னா என்ன அர்த்தம் பாகவதர்.'

''எல்லா செலவுகளையும் என் ரெண்டு பெண்கள் அபயம், ஆனந்திதான் பார்த்துக்கப் போறதா பிடிவாதம் பிடிக்கறா. என்னால அவங்களைத் தடுக்க முடியலே...''

''யார் செலவு செய்தா என்ன...ஹஸ்...எங்கெங்கே எதை எதை குறைக்கணும்னு கேட்டீங்க இல்லே?''

''ஆமாம்!''

''வேண்டப்பட்டவர்களையும், சிநேகிதர்களையும், தவிர்க்க முடியாதவர்களையும், நிச்சயதார்த்தத்துக்கு மட்டும் கூப்பிட்டா போதும். நாங்க அப்படித்தான் செய்யப் போறோம்.''

''ரிசப்ஷனுக்கு சேஷகோபாலனை அரேஞ்ச் பண்ண ணும்னு இருக்காம...''



''சேஷகோபாலன் மகாவித்வான். அவரை நாம அவ மானப்படுத்தப்படாது. நான் ஆயிரம் கல்யாணங்கள்லே பார்த்திருக்கேன், அந்த காலத்திலிருந்து மகாராஜபுரம், முசிறி அரியக்குடியிலிருந்து மதுரை மணி ஜி. என். பி. வழியா சந்தானம் நாராயணசுவாமி சேஷகோபாலன் வரை எத்தனை எத்தனையோ மகாவித்வான்களை கல்யாண ரிசப்ஷன்ல அவமானப்படுத்தறாங்க. வித்வான் பிரமாதமான தோடி, கல்யாணியை ஆலாபனை செய்ய றப்ப, டைனிங் ஹால்ல இலை போட்டாச்சுன்னு குரல் வரும். அவ்வளவுதான், சபை முக்காலே மூணுவீசம் காலி ...அதனால யார் கச்சேரியும் வேண்டாம்.''

''அப்ப ரிசப்ஷனே வேண்டாமா?''

''வேண்டாம்.''

''எல்லாரையும் நிச்சயதார்த்தத்துக்கு கூப்பிட்டுட்டா, முகூர்த்தத்துக்கு?''

''நம்ப ரெண்டு பக்கத்து சொந்தக்காரங்களை எண்ணி பார்த்தா நிச்சயம் ஐநூறு வரும். லால்குடி நாதிகளே நூறுபேர் இருக்கா. அப்புறம் என்னுடைய சம்பந்திகள், அஞ்சு சம்பந்திகள் தனியாகவா வருவா? அவர்களுடைய பிள்ளைகள், பெண்கள் எல்லாம் குடும்பத்தோட வரும். அப்புறம், உங்க மனுஷாள். உன் அப்பா அம்மாவை விடு. உன் நாதிகள், அத்தை, சித்திகள், மாமா மாமிகள்...''

''வாஸ்தவம்தான்.''

''முகூர்த்தத்தில் நாம உறவுக்காரங்க மட்டும்தான் இருக்கணும்.''

''அப்படியே.''

''என் துரதிர்ஷ்டம் உனக்கு நாலு பெண்கள்தான். அஞ்சா இருந்தா கடைசி பிள்ளை ஜெயராமனுடைய ஒரே புத்திரன் சீனுவும் உன் மாப்பிள்ளையாயிருப்பான்.''

''அவனோட வயசு பதினஞ்சோ பதினாறோ தானே...''

''உனக்கு பத்து பன்னண்டு வயசுல பெண் இருந்தா லும் போதுமே. கல்யாணத்தை நிச்சயம் பண்ணி ஏழெட்டு வருசம் காத்திருக்கலாமே... சரி, அதை விடு. இனிமே உனக்குக் குழந்தை பிறக்காது...''

பாகவதர் சிரித்தார்.

''நம்ப ரெண்டு குடும்பங்கள் மட்டும் இந்த கல்யாணங் களினால் இணையலே...''

''அப்படீன்னா?''

''வியாபாரம் மூலமாகவும்...''

''புரியலையே?''

''அபயம் அப்ளம்சை சிவாவும் கவனிச்சுக்கப் போறான் சிவாவோட வியாபாரத்தில அபயம் ஈடுபடுவா. இதேமாதிரி ஆனந்தியும் ஜெய்யுவும்... ஈசுவரி மணிக்கு ஒத்தாசை செய்வா...உத்யா பராமரிக்க மயிலாப்பூர்ல இன்னொரு லேடீஸ் வேர் கடை வைக்கறதா சத்யா இருக்கான்...''

''கேட்கவே சந்தோஷமா இருக்கு சாம்பு!''

''நாளைக்கு உன் நாலு பெண்களும் என்னோட கடைக்கு வரப்போறாங்க. அவங்களுக்கு பிடிச்ச மாதிரி வைர நெக்லஸ் வாங்கிக் கொடுக்கப்போறேன்.''

''மன்னிக்கணும்.''

''என்ன பாகவதர்?''

''இப்பத்தான் தண்டச் செலவு கூடாதுன்னு சொன்னீங்க.''



''வைர நெக்லஸ் தண்டம் இல்லே...என்னென்னிக்கும் மதிப்பு இருக்கும். பணத்தோட மதிப்பு குறைஞ்சாலும் தங்கம், வெள்ளி, வைரத்தோட மதிப்பு குறையாது, என்ற சாம்பு, ''எனக்கு ஒரு சந்தோஷம்.'' என்றார்.

''தெரிஞ்சுக்கலாமா?''

''நாம ஒரு கின்னஸ் புக்ல பெயர் வர்றமாதிரி ஒரு சாதனை புரிஞ்சிருக்கோம். ஒருத்தரோட நாலு பெண் களும் இன்னொருத்தரோட நாலு பேரன்களை கல்யாணம் செய்து கொள்றா...''

''என்ன சாதனைன்னு எனக்கு புரியலே...''

''உனக்கு புரியாது சாம்பு! ஏன்னா சதாசர்வகாலமும் அப்பப்ப காபியை குடிச்சுட்டு, வாய் நிறைய வெற்றிலை யைக் குதப்பிட்டு, ஊஞ்சல்லே ஹாய்யா ஆடறே நீ...உன் காரியஸ்தன் லேவாதேவியைப் பார்த்துக்கறான்...என்ன சாதனைன்னு கொஸ்டின் கேளு. மொதல் மொதலா சிவா அபயத்தை சந்தித்தபுறம் நேரே என்கிட்டதான் வந்தான். உன்னை அறியாம உன் பாரம்பரியத்தை விசாரிச்சேன். கும்பகோணம் போய் உன் அப்பா பரசுராம பாகவதர்ட்ட பேசினேன்.''

''தெரியவே தெரியாது! அவர் சொல்லவே இல்லையே. வாரா வாரம் போன்ல பொறுப்பில்லாத பிள்ளைன்னு திட்டுவார்...''

''இரு. ஒருநாள் ஜெய்யு வந்தான். ஆனந்தியைப் பத்தி பேசினான். அவளும் உன் பொண்ணுன்னு தெரிஞ் சதும் நான் பச்சைக்கொடி காட்டினேன். நான் சிகப்பை காட்டியிருந்தா என் பேரன் ஜெய்யு மேற்கொண்டு ஆனந்தியோட பழகியே இருக்கமாட்டான். இவங்க ரெண்டுபேர் விசயமா ஒருநா விடியக்கார்த்தால உன்

மூணாவது பொண் ஈசுவரி வந்தா. அம்பாள் தரிசனம் மாதிரி பட்டது. உடனே பேரன் மணி கண்முன் வந்தான். நானே உன்கிட்ட வந்து அவனைக் கேட்டேன். அப்புறம் உத்யா. அவ என் புள்ளை கடைக்கு வந்திருக்கா. அன்னிக்கு ராத்திரியே என்கிட்ட வந்தான். அவளும் உன் பொண்ணுன்னு தெரிஞ்சப்ப, எட்டாவது அதிசயமே பிறந்துட்டது. நான் என் பேரன்கள் எல்லாருக்கும், கொடுத்த அனுமதியும் அங்கீகாரமும் என்னுடைய சாதனைதானே?''

''ஒத்துக்கறேன். ஆனா நான் ஒரு சாதனைகூட செய்யலே!''

''யார் சொன்னா? மணி மணியா நாலு அழகான, சாமர்த்தியமும், கெட்டிக்காரத்தனமும், குணமும் உள்ள பெண்களைப் பெத்து வளர்த்திருக்கியே?''

திடீரென்று குஞ்சரம் நுரை ததும்பும் காபியுடன் பிரவேசித்தாள்.

''பெத்ததும் நான், வளர்த்ததும் நான்...!'' என்று சொல்லி சிரித்தாள்.

''அதுக்கு இடைஞ்சலா நான் இல்லாம இருந்தேனே, அதுவாவது என் சாதனையா இருக்கட்டும். குஞ்சு, சாம்புவுக்கு இப்ப காபி கொடு. அப்புறம் பாயசத்தோட எல்லாருமா உட்கார்ந்து சாப்பிடலாம். அது சரி, உதவிக்கு யாரைக் கூப்பிட்டிருந்தே... ஜோசியர் பெண்டாட்டி ருக்குவைத்தானே?''

''அதான் இல்லே... பச்சடி, அவியல் அப்புறம் சாம்பார்—அபயம், ரசம், பருப்பு உசிலி, மாங்காய் ஊறுகாய்—ஆனந்தி. பகாளாபாத், உருளைக்கிழங்கு கறி அப்புறம் அப்பளம்—ஈசுவரி. உத்யா பாயசம், ப்ரூட்ஸ் பச்சடி ரெண்டும் பண்ணினா. நேத்து ராத்திரியே பாதம் அல்வாவையும் அவ பண்ணி முடிச்சா.''



''அப்ப, குஞ்சு நீ ஒண்ணுமே செய்யலையா?''

''யார் சொன்னா? நான்தான் அரிசியைக் களைஞ்சு குக்கர்ல போட்டேன்.''

கடிகாரம் பத்து அடித்தது. வாசலில் திடீரென ஒரு சலசலப்பு. பல கார்கள் திறந்து மூடப்படும் சத்தம்.

குஞ்சு, ''அவங்க எல்லாரும் வந்தாச்சு. மொதல்ல ஈசுவரியையும உத்யாவையும் ரெடியா இருக்கச் சொல்லு.''

''நாளுமே ரெடிகள்.''

ஹால் ஒரு மினி தியேட்டராக மாற, ஐந்து தம்பதிகளும் நான்கு பிள்ளைகளும், நவநீத பாகவதருடைய பெண்களுக்காகக் காத்திருந்தார்கள்.

நவநீத பாகவதர் ஊஞ்சலை விட்டு அசையவில்லை. சாம்புமீது உள்ள மரியாதை காரணமாக அவர் கால்மேல் கால் போட்டு உட்காராமல் தொங்கவிட்டுக் கொண்டிருந்தார்.

உத்யா ரத்தச் சிவப்பு நிறத்தில் சல்வார்கமீசில் துப்பட்டா அணிந்தவளாய் புன்முறுவலுடன் மாடிப்படியில் இறங்கி வந்தாள்.

ஈசுவரி கிளிப்பச்சை புடவையில் மின்னிக்கொண்டே மெதுவாக நடந்து வந்தாள்.

சாதாரண நைலக்ஸ் புடவையில் அபயமும், ஆனந்தியும் கைகோர்த்த வண்ணம் இறங்கி வந்தார்கள்.

திடீரென்று ஒருவித அமைதியும் நிசப்தமும் உண்டாயின.

சில விநாடிகளுக்கு மேல் சாம்புவால் பொறுமையாக இருக்க முடியவில்லை.

''ஏன் வாய் மூடியா இருக்கீங்க...பேசுங்க எல்லாரும்... பேசுங்க...''

''மொதல்ல ப்ரேயர் பாட்டு!'' என்றார் பாகவதர்.

சிவா, ஜெய்பூ, மணி மற்றும் சத்யா நால்வரும் எழுந்து நின்றார்கள்.

''நல்ல ராகத்தில அமைஞ்ச பாட்டா இருக்கணும்டா!'' என்றார்.

நான்கு பேரன்களுமே ஒரே கோரசாக—

''எல்லாம் இன்பமயம்...'' என்ற பாட்டைப் பாட ஆரம்பித்தார்கள்.

ஹாலே கலகலப்பில் திளைத்துப் போயிற்று.

18601
3514168